மனித சாதி இரட்சிக்கப்படுதற்காகச் சருவலோக
தயாபரரான யெகோவா அருளிச்செய்த

# சத்திய வேதம் என்கிற

பழைய

# ஏற்பாட்டின்

ஏசாயாவின் தீர்க்கதரிசனம்.

---

THE

# BOOK OF ISAIAH.

---

PUBLISHED BY THE JAFFNA AUXILIARY BIBLE SOCIETY.

American Mission Press, Jaffna.
1841.

Digitized by Google

# வேதாகமங்களின் பெயர்.

## பழைய ஏற்பாடு.

| | |
|---|---|
| மோசேயின் ௫. ஆகமம் | யெரேமியாவின் தீர்க்க. |
| யோசுவாவின் புத்தகம் | யெரேமியாவின் புலம்பல் |
| நியாயாதிபதிகளின் புத்தகம் | எசேக்கியேலின் தீர்க்கத |
| உரூத்தின் சரித்திரம் | ரிசனம் |
| ௧. ௨. சாமுவேல் | தானியேலின் " |
| ௧. ௨. இராசாக்கள் | ஓசேயாவின் " |
| ௧. ௨. நாளாகமம் | யோவேலின் " |
| எஸ்றாவின் புஸ்தகம் | ஆமோசின் " |
| நெகேமியாவின் " | ஒபதியாவின் " |
| எஸ்தரின் " | யோனாவின் " |
| யோப்புடைய சரித்திரம் | மீகாவின் " |
| வேத சங்கீதம் | நாகூமின் " |
| நீதிமொழி | ஆபகூக்கின் " |
| பிரசங்கியின் புத்தகம் | செப்பனியாவின் " |
| சாலோமோனின் உன்ன | ஆகாயின் " |
| த பாட்டுக்கள் [னம் | சகரியாவின் " |
| ஏசாயாவின் தீர்க்கதரிச | மல்கியாவின் " |

---

## புதிய ஏற்பாடு.

| | |
|---|---|
| மத்தேயுவின் சுவிசேஷம் | ௧. ௨. தெசலோனிக்கே |
| மாற்கு " | யர் |
| லூக்கா " | ௧. ௨. தீமோத்தேயு |
| யோவான் " | தீத்து |
| அப்போஸ்தலர் நடபடி | பிலேமோன் |
| உரோமர் | எபிரேயர் |
| ௧. ௨. கொரிந்தர் | இயாக்கோபு |
| கலாத்தியர் | ௧. ௨. பேதுரு |
| எபேசர் | ௧. ௨. ௩. யோவான் |
| பிலிப்பியர் | யூதா [ம் |
| கொலோசர் | வெளிப்படுத்தின விசேஷ |

Digitized by Google

31,550

# ஏசாயாவின்

## தீர்க்கதரிசனம்.

---

### க. அதிகாரம்.

சனத்தினுடைய துற்சீரின்மேலுங் கள்ள ஆ
ராதனையின்மேலும் யெகோவா மிகவும்முறை
யிட்டுக் குணப்பட அவர்களை நயமும் பயமு
மாய் எழுப்பினது.

1 ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூ
தாவின் இராசாக்களாகிய உசியா யோ
த்தாம் ஆகாஸ் எசேக்கியா என்றவர்களி
ன் நாட்களில் யூதாவின்மேலும் எருச
2 லேமின்மேலுங் கண்ட தரிசனம்.—வா
னங்களே, கேளுங்கள். பூமியே, செவி
கொடு. ஏனெனில் யெகோவா பேசுகி
றார். பிள்ளைகளை வளர்த்து உயர்த்தினே
ம்,ஆனாலும் அவர்கள் நம்மை விட்டு ம
3 ருள விழுந்தார்கள்.—மாடு தன் எசமா
னையுங் கழுதை தன் ஆண்டவனின் முன்
னணையையும் அறியும். ஆனாலும் இஸ்ரா

Digitized by Google

வேல் அறிவில்லாமலும் நம்முடைய சன
ம் உணர்வில்லாமலும் இருக்கின்றதென்
கிறார்.-ஐயோ! பாவச்சாதியும் அக்கிரமத் 4
தால் பாரஞ் சுமந்த சனமும், பொல்லா
தவர்களின் வித்துங் கேடுண்டாக்கிறபுத்
திரருமாய் இருக்கிறார்கள். யெகோவா
வை விட்டு இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு
க் கோபமுண்டாக்கிப் பின்வாங்கிப் போ
றார்கள்.
இனி ஏன் அடிக்கப்படுவீர்கள்? பின் 5
னையும் அதிகமாய் விலகிப் போகிறீர்கள்.
தலை எல்லாம் வியாதியும் இருதயம் எல்லா
ம் பலட்சயமுமாய் இருக்கின்றன.—உள் 6
ளங்கால் துவக்கித் தலைமட்டுக்கும் அவ
னில் சீழ்ப்பிதுக்கப்படாமலுங் கட்டப்
படாமலும் எண்ணெய்யால் ஆற்றப்ப
டாமலும் இருக்கிற காயமும், வீக்கமும்
நொதிக்கிற இரணமுமே அல்லாமல் ஒரு
ஆரோக்கியமும் இல்லை -உங்கள் தேசம் 7
பாழாயிருக்கின்றன. உங்கள் பட்டணங்
கள் அக்கினியாற் சுட்டுப்போடப்பட்ட
ன. உங்கள் சீமையை மறுசாதியார் உங்க
ள்முகத்துக்கு முன்பாக அனுபவிக்கிறார்

Digitized by Google

கள். அது மறுசாதியாரால் கவிழ்க்கப்பட்
8 டாற்போலே பாழாயிருக்கின்றது.— சீ
யோன் குமாரத்தி திராட்சத் தோட்டத்
திலுள்ள ஒருகுச்சுப்போலேயும் வெள்ள
ரித் தோட்டத்திலுள்ள ஒரு குடிசையை
ப் போலேயும் முத்திக்கைபோடப்பட்
டபட்டணத்தைப்போலேயும் மீந்திருக்
9 கிறாள்.—சேனைகளின் யெகோவா நமக்
குக் கொஞ்ச மீதியை வையாதிருந்தாரா
ல் நாம் சோதோமைப் போலாகிக்
கொமோறாவுக்கு ஒத்திருப்போம்.
10 சோதோமின் தலைவர்களே, யெகோ
வாவுடைய வார்த்தையைக் கேளுங்கள்.
கொமோறாவின் சனமே நமது தேவனின்
11 வேதத்துக்குச் செவிகொடுங்கள்.-உங்க
ள்பலிகளின் திரள் நமக்கென்னத்துக்கெ
ன்று யெகோவாசொல்லுகிறார். ஆட்டுக்
கடாக்களின் தகனங்களுங் கொழுத்த மி
ருகங்களின் நெய்யும், நமக்கு அரோசிக
மாய் இருக்கின்றன. காளைகள் ஆட்டுக்கு
ட்டிகள் கடாக்களுடைய இரத்தத்தின்மே
12 ல் நமக்குப் பிரியமில்லை.- நீங்கள் நமது
சன்னிதியிலே காணப்பட வரும்போது


Digitized by Google

நம்முடைய பிரகாரங்களை இப்படி மிதிக்
கவேண்டுமென்று உங்கள் கைகளிற் கே
ட்கிறதார்.--வீண் காணிக்கை இனிக்கொ 13
ண்டுவராதேயுங்கள். தூபங்காட்டுதல் ந
மக்கு அருவருப்பாயிருக்கின்றது. சபை
கூடிவர அழைக்கப்படுகிற மாதப்பிறப்
பிலும் ஓய்வுநாளிலும் அக்கிரமத்தோ
டேகூடிய ஆசரிப்பை இனிச் சயிக்கமா
ட்டோம்.—உங்கள் மாதப்பிறப்புகளையு 14
ம் உங்கள் பண்டிகைகளையும் நம்முடை
ய ஆத்துமம் பகைக்கின்றது. அவைகள் ந
மக்கு வருத்தமாயிருக்கின்றது. அவைக
ளைச் சுமக்கவே சாறியிருக்கிறோம்.—நீங் 15
கள் உங்கள் கைகளை விரித்தாலும், நம
து கண்களை உங்களை விட்டு மறைக்கிறோ
ம். நீங்கள் மிகுதியாய்ச் செபம்பண்ணினா
லுங் கேளோம். ஏனெனில் உங்கள் கை
கள் இரத்தத்தாலே நிறைந்திருக்கின்றன.
உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள். உ 16
ங்கள் கிரியைகளின் பொல்லாங்கை நம
து கண்களுக்கு மறைவாக அகற்றிப்போ
ட்டுத் தீங்குசெய்தலைவிட்டோயுங்கள்.—
நன்மைசெய்யப் படியுங்கள். நியாயத் 17

Digitized by Google

மைத் தேடுங்கள். ஒடுக்கப்பட்டவனைச்
சீர்ப்படுத்தி, திக்கற்றவன் நியாயத்தையு
ம் விதவையின் வழக்கையும் விசாரியுங்க
18 ள்.—அப்போது வழக்காடுவோம் வாரு
ங்கள். உங்கள் பாவங்கள் சிவேரென்றி
ருந்தாலும், உறைந்த மழையைப்போல
வெண்மையாகும். அவைகள் இரத்தாம்ப
ரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போ
லாகுமென்று யெகோவா சொல்லுகிறார்.
19 —நீங்கள் மனம்பொருந்திக் கேள்விகொ
டுத்தால் தேசத்தின் நன்மையைப் பு
20 சிப்பீர்கள்.—மாட்டோமென்று எதிர்த்
து நின்றீர்களேயாகில் பட்டயத்துக்கு
இரையாவீர்கள். ஏனெனில் யெகோவா
வின் வாய் இதைச் சொல்லிற்று.
21 உண்மையுள்ள பட்டணம் எப்படிவே
சியாய்ப் போயிற்று. நியாயத்தால் நிறை
ந்திருந்தது. நீதி அதிலே வாசமாயிருந்த
து. இப்போதோ அதின் குடிகள் கொ
22 லைபாதகர்.—உன் வெள்ளி களிம்பாயிற்
று. உன் திராட்சப் பழ இரசந் தண்ணீர்
23 கலப்பாயிற்று.—உன் பிரபுக்கள் முரட
ருந் திருடரின் தோழருமாய் இருக்கிறார்

Digitized by Google

கள். அவர்களில் எவனும் பரிதானத்தை
ச் சிநேகித்துக் கைக்கூலிகளை நாடித்
தொடருகிறான். திக்கற்றவனின் நியாயத்
தை விசாரியார்கள். விதவையின் வழக்கு
அவர்களிடத்தில் ஏறுகிறதுமில்லை.— ஆ 24
கையால் சேனைகளின் யெகோவாவும் இ
ஸ்ரவேலரின் வல்லவருமாகிய ஆண்டவர்
சொல்லுகிறது, ஓகோ! நாம் நம்முடை
ய சத்துருக்களிற் கோபம் மாறி, நம்மு
டைய பகைஞருக்கு நீதியைச் சரிக்கட்டு
வோம்.

நாம் உனக்கு விரோதமாக நம்முடை 25
ய கையைத் திருப்பி உன் களிம்பைச் சு
த்தமாய்ப் புடமிட்டு உன் ஈயத்தை எ
ல்லாம் நீக்கி,— இப்படியே உன் நீதிக் 26
காரரை முன் இருந்ததுபோலேயும் உன்
ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்தது
போலேயுந் திரும்பக் கட்டளையிடுவோ
ம். அதின் பிறகு நீ நீதியின் ஊரார் உண்
மையுள்ள பட்டணமும் என்னப்படுவா
ய்.—சீயோன் நியாயத்தாலும் அதிலே 27
திரும்புகிறவர்கள் நீதியாலும் மீட்கப்ப
ட வேண்டும்.

Digitized by Google

28 ஆனாலும் பாதகரும் பாவிகளும் ஏக
மாய் நொறுங்குண்டு யெகோவாவை வி
29 ட்டவர்கள் நிர்மூலமாவார்கள். — ஏனெ
னில் நீங்கள் விரும்பின கருவாலியுமரங்க
ளின் நிமித்தம் வெட்கப்படுவீர்கள். நீ
ங்கள் தெரிந்துகொண்ட தோப்புகளின்
30 நிமித்தம் நாணமடைவீர்கள். — ஏனென்
றால் இலையுதிர்ந்த கருவாலியு மரத்தைப்
போலுந் தண்ணீரில்லாத தோப்பைப்
31 போலும் இருப்பீர்கள். — பராக்கிரமன்
சணற்கூளமும் அவன் கிரியை அக்கினிப்
பொறியுமாகி, அவனும் இதுவும் ஏகமா
ய் அவிப்பாரில்லாமல் வெந்து போவது
ண்டு.

---

## ௨. அதிகாரம்.

புறச்சாதிகள் யெகோவாவண்டைக்குமனந்தி
ரும்புவதும், யூதரைத் தேவன் நெகிழ்வதும்,
அவர் விக்கிரக ஆராதனையின் மேலும் எல்லாப்
பெருமையின் மேலும் பயங்கரமான ஆக்கினை
கூட்டுவதும்.

1 ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூ
தாவின் மேலும் எருசலேமின் மேலும்

Digitized by Google

வாக்கண்ட வருத்தமானம்.—கடைசி நா 2
ட்களிற் சம்பவிப்பதேதெனில், யெ
கோவாவுடைய வீட்டின் பருவதம் பரு
வதங்களின் கொடுமுடியாய்த் திடப்பட்
டு, மேடுகளிலும் உயரும். எல்லாச் சா
திகளும் அதற்கோடி,-திரளான சனசத 3
ளங்கள் நடந்து வந்து,யெகோவாவின் ப
ருவதத்துக்கும்யாக்கோபுடையதேவனி
ன் வீட்டுக்கும் நாம் போய், அவர் தம
து வழிகளை நமக்குப் போதிப்பிக்கவும்,
நாம் போய் அவர் பாதைகளில் நடக்கவு
ம் ஏறுவோம் வாருங்கள் என்பார்கள். ஏ
னெனில் வேதஞ் சீயோனிலும் யெகோ
வாவின் வசனம் எருசலேமிலும் இருந்து
புறப்படும்.—அவர் சாதிகளுக்குள் நியா 4
யந் தீர்த்துத், திரளான சனசதளங்களை
க் கடிந்துகொள்ளுவார். அப்பொழுது த
ங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளா
கவுந் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களா
கவும் அடிப்பார்கள். சாதிக்கு விரோத
மாய்ச் சாதி பட்டயம் எடுப்பதில்லை.
இனி யுத்தத்தைக் காப்பதுமில்லை.—யா 5
க்கோபின் வீட்டாரே, யெகோவாவின்

Digitized by Google

வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள்.
6 ஆனாலும் யாக்கோபின் வீட்டாராகிய
உம்முடைய சனத்தைக் கைநெகிழ்த்தீர்.
ஏனெனில், கிழக்கத்தியாரின் போதகத்
தால் நிறைந்து பெலிஸ்தரைப்போல நா
ட்பார்க்கிறவர்களாயிருந்து, அன்னிய
ரின் புத்திரர்மேல் பிரியப்படுகிறார்கள்.-
7 அவர்கள் தேசம் வெள்ளியினாலும், பொ
ன்னினாலும் நிறைந்தது. அவர்கள் பொ
க்கிஷங்களுக்கு முடிவில்லை. அவர்கள்தே
சங் குதிரைகளாலும் நிறைந்தது. அவர்க
8 ள் இரதங்களுக்கு முடிவில்லை- அவர்கள்
தேசம் விக்கிரகங்களாலும் நிறைந்திரு
க்குது. தங்கள் கைகளின் கிரியையையுந்,
தங்கள் விரல்கள் உண்டுபண்ணினதையு
9 ம் பணிந்துகொள்ளுகிறார்கள்.— சிறியவ
னுங் குனிகிறான். பெரியவனும் பணிகி
றான். ஆகையால் அவர்களுக்கு மன்னி
யாதிருப்பீர்.
10 யெகோவாவின் பயங்கரத்தினாலும், அ
வர் முக்கியத்தின் மகத்துவத்தினாலும், நீ
கன்மலையில் ஒதுங்கி மண்ணில் ஒளித்து
க்கொள்.- நரரின் மேட்டிமையான கண்

கள் தாழ்ந்து மனுஷரின் வீறாப்புத்தணி
யும் ஆனாலும் யெகோவா ஒருத்தரே
அந்நாளிலே உயர்ந்திருப்பார்.—ஏனெ 12
னில் தாழ்மையுண்டாகச் சேனைகளுடை
ய யெகோவாவின் நாள் பெருமையும்,
மேட்டிமையுமானதெல்லாவற்றின் மே
லும், உயர்ந்ததெல்லாவற்றின்மேலும்,- 13
லீபனோனிலுள்ள உயரமும் ஓங்கலுமான
வெல்லாக் கேதுருகளின்மேலும், பாசானி
லுள்ள எல்லாக் கருவாலிமரங்களின்
மேலும்,—உயரமான எல்லாப் பருவத 14
ங்களின்மேலும், மேட்டிமையான எல்
லாக் குன்றுகளின்மேலும்,—உயர்ந்த எ 15
ல்லாக் கோபுரத்தின்மேலும், அரணான
எல்லா மதிலின்மேலும்,-தர்சீசின் கப்ப 16
ல்களெல்லாவற்றின்மேலும், அருமையா
ன எல்லாச் சித்திரங்களின்மேலும் வரு
ம்-அப்போது நரரின் மேட்டிமை தாழ் 17
ந்து, மனுஷரின் வீறாப்புத்தணியும். ஆ
னாலும், யெகோவா ஒருத்தரே அந்நா
ளில் உயர்ந்திருப்பார்- விக்கிரகங்களோ 18
கட்டோடே ஒழிந்துபோம்.—பூமியைத் 19
தத்தளிக்கப்பண்ண யெகோவா எழும்

Digitized by Google

பும்போது அவர் பயங்கரத்தினாலும்,
அவர் முக்கியத்தின் மகத்துவத்தினாலுங்
கன்மலைகளின் கெபிகளிலும், மண்ணின்
குகைகளிலும் புகுந்துகொள்ளுவார்கள்.
20 —பூமியைத் தத்தளிக்கப்பண்ணயெகோ
வா எழும்பும் அந்நாளிலே அவர் பயங்
கரத்தினாலும், அவர் முக்கியத்தின் மகத்
துவத்தினாலுங் கன்மலைகளின் வெடிப்பு
களிலுங், குன்றுகளின் சந்துகளிலும் பு
21 குந்துகொள்ளும்படிக்கு,—மனுஷன் ப
ணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியி
ருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையுந், த
ன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறு
களுக்குந், துரிஞ்சில்களுக்கும், எறிந்து
22 விடுவான்.—மூக்கிலே சுவாசமுள்ள மனு
ஷனை நம்புவதை விட்டு ஓயுங்கள். ஏனெ
ன்றால் அவன் எம்மாத்திரமென்று எண்
ணப்படலாம்.

---

## ௩. அதிகாரம்.

யூதர்மேல்வரும் ஆக்கினைகளின் பாரமும் அநியா
யமும்.

1 ஏனெனில் இதோ சேனைகளின் யெ

Digitized by Google

கோவாவாகிய ஆண்டவர் ஆதரவு கோலை
யுந் தடியையும் அப்பமென்ற எல்லா ஆ
தரவுகோலையுந், தண்ணீரென்ற எல்லா
ஆதரவுகோலையும்,— பராக்கிரமசாலியை 2
யும், யுத்த ஆளையும், நியாயாதிபதியை
யுந், தீர்க்கதரிசியையுஞ், சாஸ்திரியையு
யும், மூப்பனையும்,—ஐம்பதுக்குச் சே 3
ர்வைக்காரனையுங், கனமுகமானவனையுங்,
ஆலோசனைசொல்லுகிறவனையுந், தொழி
லாளிகளில் ஞானமுள்ளவனையுஞ், சாது
ரியக்காரனையும், எருசலேமிலும், யூதா
விலும் இருந்து விலக்குவார்.—அவர்களு 4
க்கு இளைஞரைப் பிரபுக்களாகத் தரு
வோமென்கிறார். பிள்ளைகள் அவர்களை
ஆளுவார்கள்.—சனம் ஒடுக்கப்படும் ஒ 5
ருத்தருக்கொருத்தரும் அடுத்தவருக்கடு
த்தவரும் விரோதமாயிருப்பார்கள். கிழ
வனுக்கு இளைஞனும், கனமுடையவனுக்
குக் கனவீனனும் இடும்பு செய்வான்.—உ 6
னக்கு வஸ்திரம் இருக்கின்றது. எங்கள் த
லைவனாயிரு கேட்டுக்கினமான இக்காரிய
ம் உன் கையின் கீழாகாதாகவென்று அப்
போதொருத்தன் தன் தகப்பன் வீட்டா

Digitized by Google

ளாகிய தன் சகோதரனைப் பிடித்தால்,—
7 இவன் அந்நாளிலே கையை உயர எடுத்
து நான் இரணவயித்தியனாய் இருக்க மா
ட்டேன். என் வீட்டிலே அப்பமும் இல்
லை, வஸ்திரமும் இல்லை. என்னைச் சனத்
தின் தலைவனாக வையாதேயுங்களென்பா
8 ன்.—ஏனெனில் எருசலேம் இடறி யூதா
விழுந்துபோம். அதேனென்றால் அவர்
கள் நாவும், அவர்கள் கிரியைகளும், யெ
கோவாவுடைய மகிமையின் கண்களுக்கு
எரிச்சல் உண்டாக்குந்தக்சதாய் அவருக்
கு விரோதமாய் இருக்கின்றது.
9 அவர்கள் முகங்களின் ஒட்டாரம் அவ
ர்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிடும்.
அவர்கள் சோதோம் ஊராரைப்போலே
தங்கள் பாவத்தை மறையாமற் கூறுகிறா
ர்கள். அவர்கள் ஆத்துமத்துக்கு ஐயோ!
ஏனெனில் தங்களுக்கே தீமையைக் கட்
10 டிக்கொள்ளுகிறார்கள்.—நன்றாய் இருப்
பீர்களென்று நீதிமான்களுக்குச் சொல்
லுங்கள். ஏனெனில் தங்கள் கிரியைக
11 ளின் கனியைப் புசிப்பார்கள்.—பொல்
லா ஆகாமியக்காரனுக்கு ஐயோ! ஏனெ

Digitized by Google

னில் அவன் கைகளின்பலன் அவனுக்கு
உண்டாகும்.
பிள்ளைகள் நமது சனத்தின் வாதக்கா 12
ரராய் இருக்கிறார்கள். ஸ்திரிகள் அதை ஆ
ளுகிறார்கள். நமது சனமே உன்னை நட
த்துகிறவர்கள் உன்னை மோசம்போக்கி நீ
நடக்கவேண்டின வழியை முழுங்குகிறா
ர்கள்.—யெகோவா வழக்காட எழுந்திரு 13
ந்து சனசதளங்களை நியாயந்தீர்க்க நிற்கி
றார்.—யெகோவா தமது சனத்தின் மூப் 14
பரோடும், அதின் பிரபுக்களோடும், நி
யாயத்துக்குட் பிரவேசிப்பார். ஏனெனி
ல் நீங்களே இந்தத் திராட்சத்தோட்டத்
தை மேய்ந்து போட்டீர்கள். சிறுமையா
னவனின் கொள்ளை உங்கள் வீடுகளில் இரு
க்கின்றது.- நீங்கள் நமது சனத்தை நொ 15
ருக்கிச் சிறுமையானவர்களின் முகத்தை
நெரித்துப்போடுகிறது என்னவென்று
சேனைகளின் யெகோவாவாகிய ஆண்டவ
ர் உரைக்கிறார்.
பின்னையும் யெகோவா சொல்லுகிற 16
தாவது, சீயோனுடைய குமாரத்திகள் அ
கந்தையாய் இருந்து கழுத்தை நெரித்து

Digitized by Google

நடந்து கண்களால் பிரட்டிப் பார்த்து
த், தத்தித்தத்தி நடந்து தங்கள் கால்களி
ல் பாடகங்களைப்போட்டுத்திரிகிறபடியி
17 னாலே,-ஆண்டவர் சீயோன் குமாரத்திக
ளின் உச்சந்தலையை மொட்டையாக்குவா
ர். யெகோவா அவர்கள் மானத்தை அ
18 ம்பலமாக்குவார்.—அந்நாளிலே ஆண்
டவர் பாடகங்களின் சிங்காரத்தையுஞ், சு
ட்டிகளையும், பிறைச்சிந்தாக்குகளையும்,
19 —ஆரங்களையுஞ், சரிகளையும், மினுக்கு
20 வஸ்திரங்களையும்,—தலையின் ஆபரணதி
களையும், அஸ்தகடையங்களையுஞ், சறுக
களையும், மாற் கச்சைகளையும், உருவல்க
21 ளையும்,—மோதிரங்களையும், மூக்குத்தி
22 களையும்,—மாற்றுடைகளையுஞ், சால்வை
களையும், போர்வைகளையுங், குப்பிகளையு
23 ம்,—கண்ணாடிகளையும், மெல்லிய புடை
வைகளையுங், குல்லாவுகளையும், முக்காட்
24 டுச் சல்லாக்களையும் விலக்குவார்.—சம்
பவிப்பதேதென்றால் சுகந்தவருக்கத்துக்
குப்பதிலாகத் துற்கந்தமுங், கச்சைக்குப்
பதிலாகப் பீறலும், மயிர்சுருளுக்குப்ப
திலாகமொட்டையுந், தளதளப்பானவஸ்

 Digitized by Google

திரங்களுக்குப்பதிலாக இரட்டுடுக்குதலு
ம் அழகுக்குப்பதிலாகக்கருகிப்போகுத
லும் இருக்கும். உன் மனுஷர் யுத்தவெட் 25
டினாலும், உன் பலசாலிகள் படையிலும்
விழுவார்கள். அவளுடைய வாசல்கள்ச 26
ஞ்சலமும் துக்கமுமாய் இருக்கும். அவ
ள் வெறுமையாய்த் தரையில் உளுக்காரு
வாளென்கிறார்.

---

## ௪. அதிகாரம்.

*ஆக்கினைக்குத் தப்பினவர்கள் யெகோவாவின் கீழ்ப் பாக்கியமான நற்சீரை அடைவது.*

ஏழு ஸ்திரிகள் ஒரே புருஷனை அந் 1
நாளிலே பிடித்து, நாங்கள் எங்கள் அப்ப
த் தையே புசித்து எங்கள் வஸ்திரங்களை
யே உடுப்போம். எங்கள் நிந்தையை நீ
க்க உன் பேர் மாத்திரம் எங்கள் மேல் வி
ளங்கட்டுமென்பார்கள். இஸ்ரவேலில் த 2
ப்பினவர்களுக்கு அக்காலத்திலே யெ
கோவாவுடைய முளை சிங்காரமும், மகி
மையும் பூமியின் கனி முக்கியமும் அலங்
காரமுமாய் இருக்கின்றன. அப்போது 3

Digitized by Google

சம்பவித்தபோதெனில், ஆண்டவர் நியா
யத்தின் ஆவியினாலுஞ் சுத்திகரிப்பின் ஆ
வியினாலுஞ் சீயோன் குமாரத்திகளின்
மலத்தையைக் கழுவி, எருசலேமின் இ
ரத்தப்பழிகளை அதின் நடுவில் இருந்து
4 நீக்கிப்போட்டபோது,—சீயோனில் மீ
ந்து எருசலேமில் பின்வைக்கப்பட்டிரு
க்கிறவன் பரிசுத்தனென்று அழைக்கப்
படுவான். எருசலேமில் சீவனுக்கென்
5 று எழுதப்பட்டவனெல்லாந்தானே.—அ
ப்போது யெகோவா சீயோன் பருவ
தத்தினுடைய எல்லா வாசஸ்தலத்தின்மே
லும் அதினுடைய சபைகளின் மேலு
ம் பகலில் இருக்கும் மேகத்தையும் புகை
யையும், இரவிலே கொளுந்துவிட்டெரி
யும் அக்கினியின் பிரகாசத்தையுஞ் சிஷ்
டிப்பார். ஏனெனில் மகிமையானதின்
மேல் எல்லாம் மறைவுண்டாயிருக்கும்.—
6 பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெ
ருவெள்ளத்துக்கும் மழைக்கும் அடைக்
கலமாகவும், மறைவிடமாகவும் ஒரு கூ
டாரம் உண்டாயிருக்கும்.

Digitized by Google

---

## ௫. அதிகாரம்.

கசப்பான கனிதந்த திராட்சத் தோட்டத்துக்கு யூதரை ஒப்பிட்டு, அவர்கள் கெட்ட சீரையும் அவர்கள் மேல்வரும் ஆக்கினைகளையுங்காண்பித்தது.

என் நேசருடைய திராட்சத் தோட்ட 1
த்தின் பேரிலே எனக்குப்பிரியமாய் இரு
க்கிற அவருக்காக அவருடைய பாட்டை
ப் பாடுவேனாக. என் பிரியருக்கு மகா
செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்
தோட்டம் இருக்கின்றது.—அவர் அதை 2
வேலியடைத்து, அதைக் கல் பொறுக்கி
அதிலே நற்குல திராட்சச் செடிகளை நட்
டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக் க
ட்டி, அதிலே ஆலையையும் நாட்டி, அது
நல்ல திராட்சப் பழங்களைத் தருமென்று
காத்திருந்தார். ஆனாலும் அது கசப்பா
ன பழங்களைத் தந்தது.— இப்போதும் 3
எருசலேமின் குடிகளே, யூதாவின் மனு
ஷரே, நமக்கும் நமது திராட்சத் தோ
ட்டத்துக்கும் நியாயந் தீருங்களேன்.—
நாம் நமது திராட்சத்தோட்டத்துக்கா 4
ச் செய்யாத எந்த வேலையை அதற்கினி

Digitized by Google

ச் செய்யலாம். பின்னை நல்ல திராட்சப்
பழங்களைத் தருமென்று நாங் காத்திருக்
கும்போது, அது கசப்பான பழங்களை
5 த் தந்ததென்ன?—இப்போதும் நாம் ந
மது திராட்சத் தோட்டத்துக்குச் செய்
வதை உங்களுக்கு அறிவிப்போமே. அ
து மேய்ந்துபோடப்படுவதற்காக அதி
ன் வேலியை வாங்கிப்போடுவோம். அது
மிதியுண்பதற்காக அதின் அடைப்பைத்
6 தகர்ப்போம்.-அதைப் பாழாக்கிப்போ
டுவோம். அதின் கிளை நறுக்கப்படாம
லும், களை கொத்தி எடுக்கப்படாமலும்
போவதினால் முட்செடியும் நெருஞ்சியு
ம் முளைக்கும். அதின் மேல் மழையை
வருஷிக்கப்பண்ணாதபடிக்கு மேகங்களு
7 க்குக் கற்பிப்போமென்கிறார்.-ஆனாலுஞ்
சேனைகளுடைய யெகோவாவின் திராட்
சத்தோட்டம் இஸ்ரவேலின் வீடும், அவ
ர் மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் ம
னுஷருந்தானே. அவர் நியாயத்துக்குக்
காத்திருந்தார். ஆனாலும் இதோ, சீர்கே
டு நீதிக்குங் காத்திருந்தார். ஆனாலும் இ
தோ, அலறுதல்.

Digitized by Google

நீங்கள் மாத்திரந் தேசத்தின் நடுவில் 8
வாசமாய் இருக்கும்படிக்கு, இனி இடம்
இல்லாமற் போகுமட்டும், வீட்டோடே
வீட்டைச் சேர்த்து வயலோடே வயலைச்
சேரப்பண்ணுகிற உங்களுக்கு ஐயோ!-
அது சேனைகளின் யெகோவாவாயிருக்கி 9
ற நம்முடைய செவிகளுக்குட்பட்டது.
மெய்யாகவே அந்தத் திரளான வீடுகள்
பாழாகிப், பெரியவைகளும், நேர்த்தியான
வைகளுங் குடியில்லாமல் இருக்கும்.—ப 10
த்தேர் நிலமாகிய திராட்சத் தோட்டம்
ஒரே குறுணிதரும். ஒரு கலவிரை ஒரு
குறுணிதரும்.

யெகோவாவின் கிரியையை நோக்காம 11
லும் அவர் கரங்களின் செய்கையைப் பா
ராமலும், லொட்டியை நத்த அதிகால
மே எழுந்து, இருட்டிப்போகுமளவும்
மதுபானந் தங்களைச் சூடாக்கும்படியா
யித் தரித்திருந்து,—தங்கள் விருந்துகளி 12
ல் சுரமண்டலத்தையுந், தம்புரையும்,
மேளத்தையும், நாகசுரத்தையும், மது
பானத்தையும் வைத்திருக்கிறவர்களுக்கு
ஐயோ!

Digitized by Google

13 ஆனதுகொண்டு நமது சனம் அறிவி
ல்லாமையினாலே சிறைப்பட்டுப்போகு
ம். அதில் கனமுள்ளவர்கள் பட்டினியி
னாலே தொய்வார்கள். அதின் திரளானகு
ம்பு தவனத்தால் நாவரண்டுபோகும்.—
14 ஆனதுகொண்டு அவர்கள் மகிமையும்,
அவர்கள் திரள்களும், அவர்கள் சந்தடியு
ம், அவர்களிற் களிகூருகிறவர்களும் பா
தாளத்தில் இறங்கிப்போக, அது தன் நெ
ஞ்சை விரிவாக்கித் தன் வாயை ஆவென்
15 று மட்டில்லாமல் திறந்தது.—அப்படி
யே சிறியவனுங் குனியப்பண்ணப்பட்டு
ப் பெரியவனுந் தாழ்ந்துபோவான். மே
ட்டிமையானவர்களின் கண்கள் தாழும்.
16 —ஆனாலுஞ் சேனைகளின் யெகோவா நி
யாயத்தீர்ப்பினால் உயர்ந்து பரிசுத்த தே
வன் நீதியினாலே பரிசுத்தமுள்ளவராய் வி
17 ளங்குவார்.—அப்போது ஆட்டுக்குட்டி
கள் தங்கள் வாடிக்கையாய்த் தொழுவத்தி
ல் மேயும். கொழுப்பானவர்களுக்கிருந்
து பாழாய்ப் போனவைகளைப் பரதேசி
18 கள் அநுபவிப்பார்கள்.—மாயையின் க
யிறுகளால் அக்கிரமத்தையும், பண்டி வ

Digitized by Google

டங்களால் பாவத்தையும் இழுத்துவந்து,
—அவர் தீவிரித்துச் சீக்கிரமாய் நாம் பா 19
ர்க்கத் தமது கிரியையை நடப்பிக்கட்டு
மென்றும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரி
ன் ஆலோசனை நாம் அறியும்படிக்குச்
சேர்ந்துவரட்டுமென்றுஞ் சொல்லுகிற
வர்களுக்கு ஐயோ!
தின்மையை நன்மை என்றும் நன்மை 20
யைத் தின்மையென்றுஞ் சொல்லி, இரு
ளை வெளிச்சமும் வெளிச்சத்தை இருளு
மாக்கிக், கசப்பைத் தித்திப்புந் தித்திப்
பைக் கசப்புமாக்குகிறவர்களுக்கு ஐ
யோ!—தங்கள் பார்வைக்கு ஞானிகளுந் 21
தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களு
மாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ!—ம 22
துபானத்தைக் குடிக்கப் பராக்கிரமரும்
லொட்டியைக் கலந்துவைக்கப் பலசா
லிகளுமாய் இருந்து,—குற்றவாளியைப் 23
பரிதானத்தின் நிமித்தியங் குற்றமற்றவ
னாக்கி, நீதிமான்களின் நியாயத்தை அ
வர்களை விட்டு விலக்குகிறவர்களுக்கு ஐ
யோ!— இதின் நிமித்தியமாக அக்கினிச் 24
சுவாலை வைக்கோலைப் பட்சிக்குமாப்

Digitized by Google

போலேயுஞ், செத்தை நெருப்புக்கிரை
யாகித் தணியுமாப்போலேயும் அவர்க
ள் வேர் வாடி, அவர்கள் துளிர் தூசியை
ப் போலப் பறந்துபோம். ஏனெனில்
சேனைகளுடைய யெகோவாவின் வேதத்
தை வெறுத்து இஸ்ரவேலுடைய பரிசுத்
தரின் வசனத்தை அசட்டைபண்ணினார்
25 கள்.--ஆகையால் யெகோவாவுடையகோ
பந் தமது சனத்துக்கு விரோதமாய் மூ
ண்டது. அவர் தமது கையை அதற்கு
விரோதமாக நீட்டிப், பருவதங்கள் அதி
ரத்தக்கதாகவும் அவர்கள் பிணங்கள் நடு
வீதிகளில் குப்பைபோலாகத்தக்கதாகவு
ம் அதை அடித்துப்போடுவார். இதிலே
எல்லாம் அவருடைய கோபம் ஆறாமல்
அவருடைய கை இன்னம் நீட்டினதாய்
இருக்கின்றது.
26 அவர் தூரத்திலுள்ளசாதியாருக்கு ஒ
ரு கொடியையேற்றி அவர்களைப் பூமியி
ன் கடையாந்தரங்களில் இருந்து அவர்
பயில் காட்டிஅழைப்பார். அப்போது இ
தோ தீவரமும் வேகமுமாய் வருவார்கள்.
27 —அவர்களில் விடாய்த்தவனும் இடறு

Digitized by Google

கிறவனுமில்லை அவர்களில் ஒருத்தனுடை
ய இடுப்பின் கச்சை அவிழுவதும் பாதர
ட்சைகளின்வார் அறுந்து போவதுமில்
லை.—அவர்கள் அம்புகள் கூர்மையும் அ 28
வர்கள் வில்லுகளெல்லாம் நாணேற்றின
வைகளும், அவர்கள் குதிரைகளின் குளம்
புகள் கற்பாறையாக எண்ணப்பட்டவைக
ளும், அவர்கள் உருளைகள் புசலுக்கொ
த்தவைகளுமாயிருக்கும்.—அவர்கள் கரு 29
ச்சிப்பு துஷ்டசிங்கத்தினுடையது. சிங்
கக் குட்டிகளைப்போலக் கருச்சித்து உ
றுமி இரையைப் பிடித்து, அதைத் த
ப்புவிக்கிறவன் இல்லாமல் எடுத்துப்போ
ய் விடுவார்கள்.—அவர்கள் அந்நாளிலே 30
சமுத்திர இரைச்சலுக்குச் சரியாய் அதி
ன்மேல் இரைவார்கள். அப்போது தே
சத்தைப் பார்த்தால், இதோ அந்தகார
மும் வியாகுலமும் உண்டு. அதின் பாழ்
க்கடிப்பின்மேல் வெளிச்சம் இருண்டி
ருக்கும்.

Digitized by Google

## ௬. அதிகாரம்.

யெகோவா ஏசாயாவுக்குத் தரிசனையாகி, அவனை ம
னக்கடினப்பட்டயூதர் அண்டைக்கு அனுப்பினது.

1 உசியா இராசா மரணமடைந்தவருஷத்
திலே ஆண்டவர் உயரமும் உன்னதமுமா
ன ஆசனத்தின்மேல் உளுக்காந்திருக்கக்
கண்டேன். அவருடைய வஸ்திரத்தொங்
கல்கள் தேவாலயத்தை நிரப்பின.—சே
2 ராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்க
ள். அவர்களில் ஒவ்வொருத்தனுக்கு அ
வ்வாறு செட்டைகள் இருந்தன. அவனவ
ன் இரண்டு செட்டைகளால் தன் தன் மு
கத்தை மூடி, இரண்டுசெட்டைகளால்த
ங்கள் கால்களை மூடி இரண்டு செட்டை
3 களாற் பறந்து,—சேனைகளுடைய யெ
கோவா பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்த
ர், பூமி அனைத்தும் அவர் மகிமையால் நி
றைந்திருக்கிறதென்று ஒருத்தரோடொ
4 ருத்தர் கூப்பிட்டுச் சொன்னார்கள்.—வா
சல்களின் நிலைகள் கூப்பிடுகிறவர்களின்
சத்தத்தால் அசைந்து வீடு புகையினால்
நிறைந்தது.

Digitized by Google

அப்போது நான் எனக்கு-ஐயோ! ஏ 5
னென்றால் நான் அசுத்த உதடுகளுள்ள
மனுஷனும், அசுத்த உதடுகளுள்ள சனத்
தின் நடுவில் வாசமாயிருக்கிறவனுமாகை
யால் அதமாவேனே. ஏனெனில் சேனை
களுடைய யெகோவாவாகிய இராசாவை
என் கண்கள் கண்டதென்றேன்.— ஆனா 6
லுங் கேராபீன்களில் ஒருத்தன் பலிபீ
டத்தில் குறட்டால் எடுத்த ஒரு கட்டை
நெருப்பைத் தன் கையிலே பிடித்திருந்
து, என்னண்டைக்குப் பறந்துவந்து,
—அத்தால் என் வாயைத் தொட்டு, இ 7
தோ, இது உன் உதடுகளைத் தொட்டதி
னால் உன் அக்கிரமம் நீங்கி, உன்பாவம்
நிவர்த்தியாயிற்றென்றான்.- அதின்பிறகு 8
ஆரை அனுப்புவோம்? ஆர் எங்கள் காரி
யமாய்ப் போவாரென்று உரைக்கிற ஆ
ண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்.
அதற்கு நான், இதோ, அடியேன் இருக்
கிறேன், என்னை அனுப்புமென்றேன்.
அப்போதவர் சொன்னதாவது நீ போ 9
ய் இந்தச் சனத்துக்கு, நீங்கள் காதாரக்
கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்

Digitized by Google

டும் அறியாமலும் இருங்களென்று சொ
10 ல்லு.—இந்தச் சனந் தங்கள் கண்களினு
ற் காணாமலுந், தங்கள் காதுகளினுற் கே
ளாமலுந், தங்கள் இருதயத்தினுல் உணர்
ந்து மனந்திரும்பாமலும், நாம் அதை ஆ
ரோக்கியமாக்காமலும் இருக்க நீ அதின்
இருதயத்தை நிணத்ததாக்கி அதின் காது
களை அழுத்தப்படுத்தி, அதின் கண்களை
11 மூடிப்போடென்றார்.—அப்போது ஆ
ண்டவரே, எந்தமட்டும் என்றேன். அவ
ர் சொன்னதாவது பட்டணங்கள் குடியி
ல்லாமலும் வீடுகள் மனுஷசஞ்சாரமில்
லாமலும் பாழாகிப் பூமி அவாந்தர வெ
12 ளியாகுமட்டுந்தானே.—ஏனெனில் யெ
கோவா மனுஷரைத் தூரமாக விலக்கு
வதினுலே தேசத்தின் நடுமையம் மகா
வெறுமையாக்கி விடப்படும்.

13 ஆகிலும் அதிலே இன்னம் பத்திலொ
ரு பங்கிருந்தும், அது திரும்ப நிர்மூல
மாக்கப்படுங் கருவாலியு மரமும் இச்சில்
மரமும் இலையற்றுப்போன பிறகு அதின்
அடிமரம் இருக்கிறது போலே, அதைக


Digitized by Google

ளின் அடிமரமும் இருந்து பரிசுத்த வித்தாயிருக்குமென்றார்.

---

## ௭. அதிகாரம்.

*யெகோவாவை நம்பாமல் அசூரியாவின் இராசாவைச் சார்ந்து கொள்ள நினைத்த ஆகாசு இராசாவுக்கு நயமும் பயமுமாகப் பிரசங்கித்தது.*

உசியாவினுடைய குமாரனாகிய யோத் 1
தாமின் குமாரன் ஆகாசென்ற யூதாவு
டைய இராசாவின் நாட்களிற் சம்பவித்
ததேதென்றால் ரேத்சீன் என்ற சூரியாவி
ன் இராசாவும் ரெமலியாவின் குமாரனா
கிய பெக்காவென்ற இஸ்ரவேலுடைய இ
ராசாவும் எருசலேமின்மேல் யுத்தம்
பண்ண வந்தேறி, அதைப் பிடிக்க மாட்
டாதேபோனார்கள்.—சூரியர் எப்பிராயீ ௨
மைச்சார்ந்து இருக்கிறார்களென்று தாவீ
தின்வீட்டுக்கு அறிவிக்கப்பட்டபோது அ
வன் இருதயமும் அவன்சனத்தின் இருத
யமும் காட்டிலே மரங்கள் காற்றினால் த
த்தளிக்குமாப்போலே தத்தளித்தது.—
அப்போது யெகோவா எசாயாவுடனே 3
சொன்னதாவது, இப்போது நீயும் உன்

Digitized by Google

மகன் சேயார்யாசூபுமாய் வண்ணுன் து
றைவழியிலுள்ள மேன்குளத்து மதகின்
கடைசிமட்டும் ஆகாசுக்கெதிர்கொண்டு
4 போய், - நீ அவனுடனே சொல்லவேண்
டியதேதெனில், நாம் யூதாவுக்கு விரோத
மாய்ப் போயேறி, அதை இறுகப் பிடித்
து அதை நமக்குட் பங்கிட்டுக்கொண்டு,
தபேயாலின் குமாரனை அதில் இராசாவா
க்கி அரசாளப்பண்ணுவோமென்று,—
5 சூரியன் எப்பிருயீமோடும் ரெமலியாவி
ன் மகனோடும் உனக்கு விரோதமா
ய்ப் பொல்லாத ஆலோசனைபண்ணின
6 தின் நிமித்தியம்,—நீ பயப்படாமல் அ
மர்ந்திருக்கப்பார். புகைக்கிற இந்த இ
ரண்டு அடிக்கொள்ளிகளாகிய சூரியரோ
டே வந்த ரேத்சீனும் ரெமலியாவின் ம
கனும் எரிகிற கோபத்தின் நிமித்தியம் உ
7 ன் இருதயந் துவளவேண்டாம்.—அது
நிலைநிற்பதுமில்லை அது அப்படியாவ
துமில்லையென்று தேவனாகிய ஆண்ட
8 வர் சொல்லுகிருர்.— ஏனென்ருல் சூரி
யாவின் தலைப்பட்டணந் தமஸ்குவுந் த
மஸ்குவின் தலைவன் ரேத்சீனுந்தானே.

Digitized by Google

இன்னம் அறுபத்தைந்து வருஷங்களிலே
எப்பிராயீம் சனமாயிராதபடிக்கு நொ
றுக்கப்படும்.—இப்போதோ எப்பிராயீ 9
மின் தலைப் பட்டணஞ் சமாரியாவுஞ் ச
மாரியாவின் தலைவன் ரெமலியாவின் மக
னுந்தானே. நீங்கள் விசுவாசியாதேபோ
னால் நிலைப்படமாட்டீர்களென்று சொ
ல்லென்றார்.
அப்புறம் யெகோவர் ஆகாசைப்பார் 10
த்துப்பேசி,—உன் தேவனாகிய யெகோ 11
வாவிடத்தில் ஒரு அடையாளத்தை உன
க்குக் கேள். அந்தப்பாதாளத்திலே ஆகு
லும் உயர உன்னதத்திலேயாகிலும் இ
ருந்து உண்டாகக் கேளென்று சொன்னா
ர்.—ஆகாசோ அதை நான் கேளேன். 12
நாம் யெகோவாவைப் பரீட்சைபாராதிரு
ப்பேனென்றான்.— அப்போது ஏசாயா 13
சொன்னதாவது இப்போதுந் தாவீதின்
வீட்டாரே, கேளுங்கள். மனுஷரை விசன
ப்படுத்துகிறது உங்களுக்குக் கொஞ்சக்
காரியமாய்க் காணுகின்றதென்றா என்தே
வனையும் விசனப்படுத்துகிறீர்களோ!— 14
ஆனதுகொண்டு ஆண்டவர்தாமாய் உங்

Digitized by Google

களுக்கொரு அடையாளத்தைக் கொடுப்
பார், இதோ ஒரு கன்னியாஸ்திரி கருப்ப
வதியாகி ஒருகுமாரனைப் பெறுவாள். அவ
ருக்கு இம்மானுவேலென்று பேரிடுவா
15 ள்.—தின்மையை வெறுத்து நன்மையை
த்தெரிந்துகொள்ள அறியும் வயது மட்
டாக அவர் வெண்ணெய்யுந் தேனுஞ் சா
16 ப்பிடுவார்.—இந்த இளுமே தின்மை
யைவெறுக்கவும் நன்மையைத் தெரிந்து
கொள்ளவும் அறிகிறதற்குமுன்னே நீர்
அருவருக்கிற தேசம் அதின் இரண்டு இ
ராசாக்களால் விடப்பட்டதாயிருக்கும்.
17 ஆனாலும் எப்பிராயீம் யூதாவை விட்
டுப் பிரிந்த நாள் துவக்கி வராதிருக்கி
ற நாட்களை யெகோவா உம்முடையமே
லும், உம்முடைய சனத்தின்மேலும், உ
ம்முடைய பிதாவுடைய வீட்டின்மேலு
ம், அசூரியாவின் இராசாவினாலே வரப்
18 பண்ணுவார்.—பின்னையுஞ் சம்பவிப்ப
தாவது, யெகோவா எகிப்த்தினுடைய ந
திகளின் கடையாந்தரத்தில் இக்களையும்,
அசூரியாதேசத்திலிருக்குந் தேன்பூச்சிக
19 ளையும் பயில்போட்டழைப்பார்.—அவை

கள்வந்து ஏகமாய் வனாந்தரங்களின் பள்
ளத்தாக்குகளிலும், கன்மலைகளின் வெடி
ப்புகளிலும், எல்லா முட்காடுகளிலும்,
எல்லாச் சாலைகளிலுந் தங்கும்.—அக்கா 20
லத்திலே ஆண்டவர் கூலிக்குவாங்கின ச
வரகன் கத்தியாகிய நதிக்கரையான அசு
ரியாவின் இராசாவினாலே சிரசையும்,
கால்களின் மயிரையுஞ் சிரைத்துத் தா
டியையும் வாங்கிப்போடுவிப்பார்.—அ 21
க்காலத்தில் ஒருத்தன் கிடாரியையும், இ
ரண்டு ஆடுகளையும் வளர்த்தால்,—அவ 22
ன் அவைகள் பரிபூரணமாய்ப் பால்கறக்
கிறபடியினாலே வெண்ணெய்யைச் சாப்
பிடுவதுண்டு. தேசத்தின் நடுவில் மீதியா
ய் இருப்பவனெல்லாம் வெண்ணெய்யு
ம்,தேனையுமே சாப்பிடுவான்.—பின்னை 23
யுஞ் சம்பவிப்பதேதெனில், ஆயிரம்வெ
ள்ளிக்காசுபெறும் ஆயிரந் திராட்சச்செ
டியிருந்த நிலம் எல்லாம் முட்செடியும்
நெரிஞ்சிலுமாம்.—அம்புகளையும், வில் 24
லையும்பிடித்து அங்கே போகவேண்டிய
தாயிருக்கும். ஏனெனில் தேசமனைத்து
ம் முட்செடியும் நெரிஞ்சிலுமாயிருக்

25 கும்.—குந்தாளியாலே கொத்தப்படுகிற
எல்லா மலைகளுமுண்டே அங்கே முட்
செடிகளுக்கும், நெரிஞ்சில்களுக்கும்
பயப்படுவதினால் போகக் கூடாதபடியி
னாலே அது மாடுகளை ஒட்டிவிடுவதற்கு
ம். ஆடுகளை மிதிப்பதற்குமான இடமா
ய் இருக்குமென்றான்.

---

## ௮. அதிகாரம்.

தமஸ்ஸுவும், சமாரியாவும், சீக்கிரத்துக்குள்ளே அசூரியராற் கொள்ளையாய்ப் போகுமென்பது.

1 பின்னையும் யெகோவா என்னுடனே
ஒரு பெரிய கடுதாசிச் சுருளை எடுத்துக்
கொண்டு மனுஷன் எழுதுகிற பிரகார
மாய் அதிலே கொள்ளைக்குக் கடுகிச் சூ
றைக்குத் தீவரிப்பானென்று எழுதென்
2 றார்.—அப்போது நான் உண்மையுள்ள
சாட்சி மனுஷராயிருக்கிற ஆசாரியனாகி
ய உரியாவையும், யெபெரெகியாவின் கு
மாரனாகிய சகரியாவையும் அதற்குச் சா
3 ட்சியாக வைத்துக்கொண்டேன்.—நான்
தீர்க்கதரிசியானவளண்டைக்குச் சேர்ந்
தபோது, அவள் கருப்பவதியாகி ஒரு கு

Digitized by Google

மாரனைப் பெற்றாள். அப்போது யெ
கோவா என்னுடனே கொள்ளைக்குக் க
டுகிச் சூறைக்குத் தீவரிப்பானென்ற பே
ரை அவனுக்கு இடு.—ஏனெனில் இந்த 4
ப்பாலகன் என் அப்பா, என் அம்மா,
என்று கூப்பிட அறிகிறதற்குமுன்னே த
தமஸ்குவின் ஆஸ்தியுஞ், சமாரியாவின்
கொள்ளையும், அசூரியாவின் இராசாவுக்
கு முன்பாகக் கொண்டுபோகப்படுமெ
ன்றார்.

யூதரில் துன்மார்க்கர் அழிவதுஞ் சன்மார்க்கர் காக்கப்படுவதும்.

யெகோவா அப்புறம் என்னோடே 5
பேசத்தொடர்ந்து சொன்னதாவது,—
இந்தச் சனம் மெதுவாய் ஓடுகிற சீலோ 6
வாவின் தண்ணீர்களை அசட்டைபண்ணி
ரேத்சீனையும், ரெமலியாவின் குமாரனை
யுங் குறித்துச் சந்தோஷிக்கிறபடியினா
லே,—இதோ ஆண்டவர் அசூரியாவின் 7
இராசாவும் அவனுடைய சகல ஆடம்பர
முமாகிய ஆற்றினுடைய வலுவுந் திரளு
மான தண்ணீர்களை அவர்கள்மேற் புரள
ப்பண்ணுவார். அது அவர்களுடைய ஓ

Digitized by Google

டைகள் எல்லாவற்றின்மேலும் புரண்டு
வர்களுடைய எல்லாக் கரைகள் மேலும்
8 போய்,—யூதாவுக்குட்புகுந்து புரண்டு
கடந்து கழுத்துமட்டும் வருமென்றார்.
இம்மானுவேலே அவன்செட்டைகளின்
விரிவு உமது தேசத்தின் அகலத்தை நிர
ப்பும்.
9 சனசதளங்களே ஏகக்கூட்டமாகி முறி
யுங்கள்: சகல தூரதேசத்தாரே, செவி
கொடுங்கள். இடைக்கட்டிக்கொண்டு மு
10 றியுங்கள்.—யோசனையை யோசியுங்கள்.
அது அபத்தமாகும். வார்த்தையை வச
னியுங்கள் அது நில்லாது. ஏனெனில் எ
ங்களுடனே தேவன் இருக்கிறார்.—ஏ
11 னெனில் யெகோவா என்னுடனே பே
சி என் கையைத்திடப்படுத்தி நான் இ
ந்தச் சனத்தின் வழியிலே நடவாதபடி
க்கு எனக்குப் புத்திசொல்லி விளம்பின
12 தாவது,—இந்தச் சனம் ஒப்பந்தமென்
றுசொல்லுகிறதை எல்லாம் நீங்கள் ஒப்
பந்தமென்றுசொல்லாமலும், அது பய
ப்படுகிற பயமாய் நீங்கள் பயப்படாமலு
13 ம், தத்தளியாமலும்,—சேனைகளின் யெ

கோவாவையே பரிசுத்தம்பண்ணுங்கள்.
அவரே உங்கள் பயமும் அவரே உங்கள்
தத்தளிப்புமாயிருப்பதாக.—அவர் உங் 14
களுக்குப் பரிசுத்தஸ்தலமும், இஸ்ரவே
லின் இரண்டு வீடுகளுக்கோ தடுக்கலின்
கல்லும், இடறுதலின் கன்மலையும் எருச
லேமின் குடிகளுக்குச் சுருக்குங் கண்ணி
யுமாக இருப்பார்.—அவர்களில் அநேக 15
ர் இடறி விழுந்து நொருங்கிச் சிக்குண்
டு பிடிபடுவார்கள்.—சாட்சியைக் கட்டி 16
ப்போடு, நம்முடைய சீஷருக்குள் இருக்
கிற வேதத்தை முத்திரியென்றார்.—யா 17
க்கோபின் வீட்டுக்குத் தமது முகத்தை
மறைக்க யெகோவாவுக்கு நான் காத்து
அவருக்கு எதிர்ப்பார்த்திருப்பேன்.-இ 18
தோ நானும், யெகோவா எனக்குக்கொ
டுத்த பிள்ளைகளுஞ் சீயோன்பருவதத்தில்
வாசமான சேனைகளுடைய யெகோவா
வாலே இஸ்ரவேலின் அடையாளங்களா
கவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம்.
ஆனாலும் அவர்கள் உங்களுடனே அ 19
ஞ்சனம் பார்க்கிறவர்களையும், முணுமு
ணென்று சத்தமிடுகிற குறிகாரரையுங்

கேளுங்களென்பார்கள். சனந் தன் தேவ
னைக் கேட்கவேண்டாமோ? உயிருள்ள
வர்களுக்காகச் செத்தவர்களைக் கேட்க
20 லாமோ?—வேதத்தையுஞ், சாட்சியையு
ங் கவனிக்கவேணும். இந்த வார்த்தையி
ன்படியே அவர்கள் சொல்லாவிட்டால்
அவர்களுக்கு விடியற்காலவெளுப்பில்லை.
21 —இடுக்கம் அடைந்தவர்களும், பட்டினி
யாய்த் தேசத்தைத் தாண்டுவார்கள். அ
வர்கள் பட்டினியாய் இருக்கும்போது,
மூர்க்கவெறியாகித் தங்கள் இராசாவையு
ந் தங்கள் தேவனையுந் தூஷிணிக்கிறவர்க
22 ளாய் அண்ணாருவார்கள்.—தேசத்தைநோ
க்கிப்பார்ப்பார்கள். ஆனாலும் இதோ இ
க்கட்டும் இருட்டுமாம். இடுக்கத்தால் இ
ருளடைந்து அந்தகாரத்திலே தள்ளுண்
டு அலைவார்கள்.

---

## ௯. அதிகாரம்.

கிறிஸ்துவினுடைய பிறப்பின் சுவிசேஷமான தீர்க்கதரிசனம்.

1 ஆகிலும் அவர் செபுலோன் தேசத்தை
யும் நவ்தலி தேசத்தையும் இளப்படுத்தி

Digitized by Google

ன முந்தின காலத்து இடுக்கமாய் அது
இருண்டிருப்பதில்லை. ஏனென்றால் அவ
ர் கடற்கரைவழியும் யோர்தான் நதியோ
ரமுமான புறச்சாதியாருடைய கலிலே
யாவாகிய அத்தேசத்தைப் பிற்காலத்தி
லே மகிமைப்படுத்துவார்.—இருளில் ந 2
டக்கிற சனம் பெரிய வெளிச்சத்தைக் கா
ணும். மரண நிழலின் தேசத்திற் குடி
யிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிர
காசிக்கும்.-அந்தச் சாதியைத் திரளாக்கி, 3
அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப்பண்
ணுவீர். அறுப்பில் மகிழுகிறதுபோலவும்,
கொள்ளையைப் பங்கிட்டுக்கொள்ளுகை
யிற் களிகூருகிறதுபோலவும் உமக்கு மு
ன்பாக மகிழ்வார்கள்.—ஏனெனில் அவர் 4
கள் சுமையான நுகத்தடியையும் அவர்
கள் தோளின் மிலாறையும் அவர்கள் ஆ
ளோட்டியின் கோலையும், மீதியானியரி
ன் நாள் நடபடிக்குச் சரியாய் முறித்து
ப்போட்டீர்.— அதேதென்றால் அமளி 5
யாய் யுத்தம்பண்ணுகிற எல்லாப் படை
முஸ்தீதும் இரத்தங்களில் புரண்ட உடுப்
பும் சுட்டெரிக்கப்பட்ட அக்கினிக்கிரை

Digitized by Google

6 யாகும்.—ஏனெனில் நமக்கு ஒரு பாலக
ன் பிறந்தார். நமக்கொரு குமாரன் கொ
டுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர்
தோளின்மேல் இருக்கும். அவர் நாமம்
அதிசயமானவர், ஆலோசனைக்காரர், வல்
லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமா
தானப்பிரபு என்னப்படும்.—தாவீதின்
ஆசனத்தையும் அவனுடைய இராச்சிய
த்தையும் அவர் திடப்படுத்தி, அதை இ
துமுதற்கொண்டு என்றென்றைக்கும் நி
யாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படு
த்தும்படிக்கு, அதை அவர் ஆளுங்கர்த்த
தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின்
மேல் உள்ள சமாதானத்துக்கும் முடிவி
ல்லை. சேனைகளுடைய யெகோவாவின் வ
யிராக்கியம் அதைச் செய்யும்.

இஸ்ரவேல் இராச்சியத்தின் மேலே சங்காரம் வருவது.

8 யெகோவா யாக்கோபிலே ஒரு வார்
த்தையை அனுப்பினார். அது இஸ்ரவே
லின் மேல் இறங்கிறதாய் இருக்குது.—
10 செங்கல்கள் இடிந்து போயிற்று. வெட்
டின கல்லுகளால் திரும்பக் கட்டுவோம்.



Digitized by Google

காட்டத்தி மரங்கள் வெட்டிப்போடப்ப
ட்டன. கேதுரு மரங்களை அவைகளுக்
குமாற்றிவைப்போமென்று,- அகந்தையு 10
ம் மனப்பெருமையுமாய்ச் சொல்லுகிற
எப்பிராயீமருஞ் சமாரியாவின் குடிகளு
மாகிய எல்லாச் சனத்திற்கும் அதுதெரி
யவரும்.— என்னவெனில், யெகோவா 11
ரேத்சீனுடைய சத்துருக்களை அவர்கள்
மேல் உயர்த்தி, அவர்களுடைய மற்றச்
சத்துருக்களை அவர்களோடே கூட்டிக்க
லப்பார்.—சூரியர் முற்புறத்திலும் பெலி 12
ஸ்தர் பிற்புறத்திலும் இருந்து வந்து
இஸ்ரவேலை முழுவாயாலும் பட்சிப்பா
ர்கள். இதிலெல்லாம் அவருடைய கோ
பம் ஆறாமல் அவருடைய கை இன்னம்
நீட்டினதாய் இருக்கின்றது.— ஏனெனி
ல் இந்தச் சனந் தன்னை அடிக்கிறவர் 13
அண்டைக்குத் திரும்பாது. சேனைக
ளுடைய யெகோவாவைத் தேடாதே
போகிறார்கள்.— ஆகையால் யெகோவா 14
இஸ்ரவேலிலே தலையையும், வாலையுங்
கிளையையும், நாணலையும் ஒரே நாளிலே
அறுப்பார்.— மூப்பனும், கனமுகமா 15

Digitized by Google

னவனுந்தலை, பொய்ப்போதகம்பண்ணு
16 கிற தீர்க்கதரிசியால்,—ஏனென்றால் இந்
தச் சனத்தை நடத்துகிறவர்கள் எத்தரு
ம், அவர்களால் நடத்தப்படுகிறவர்கள் மு
ழுங்கப்படுகிறவர்களுமாய் இருக்கிறார்க
17 ள்.—ஆனபடியால் ஆண்டவர் அதின் இ
ளைஞர் மேற் பிரியமாயிருப்பதுமில்லை.
அதில்இருக்கிற தாய் தகப்பன் இல்லாதவ
ர்கள் மேலும் விதவைகள் மேலும் இரங்
குவதுமில்லை. ஏனெனில் அவர்கள் அனை
வரும், மாயக்காரரும், பொல்லாதவர்க
ளுமாய் இருக்கிறார்கள். எல்லா வாயும்ப
யித்தியம் பேசும். இதிலெல்லாம் அவரு
டைய கோபம் ஆறாமல் அவருடைய கை
18 இன்னம் நீட்டினதாய் இருக்கின்றது.-ஆ
காமியமானது அக்கினியைப் போல் எரி
கிறபடியினாலே, அது முட்செடியையும்
நெரிஞ்சிலையும் பட்சித்துச், சன்னல்பின்
னலான காட்டைப் புகைதிரண்டெழும்
19 பத்தக்கனையாகக் கொளுத்தும்.— சே
னைகளுடைய யெகோவாவின் சினத்தால்
தேசம் மந்தாரப்பட்டுச், சனம் அக்கினி
க்கிரையாய்ப்போம். ஒருவனுந் தன் ச

Digitized by Google

கோத்ரனைத் தப்பவிடான்.—வலது புற 20
த்தில் அறுத்தாலும் பசித்திருப்பார்கள்.
இடது புறத்தில் தின்றாலுந் திருத்தியாவ
தில்லை. தன் தன் புயத்தின் மாங்கிஷத்
தை அவனவன் தின்பான்.-எப்பிராயீமை 21
மனாசேயும், மனாசேயை எப்பிராயீமுந்
தானே. இவர்கள் ஏகமாய் யூதாவுக்கும் வி
ரோதமாய் இருப்பார்கள். இதிலெல்லா
ம் அவருடைய கோபம் ஆறாமல் அவரு
டைய கை இன்னம் நீட்டினதாயிருக்கும்.

---

## ௰. அதிகாரம்.

இஸ்ரவேலிலே தலைமையானவர்களுக்கு ஐயோ!
என்று கூறினது.

ஏழைகளை வழக்கிலே தோற்கப்பண் 1
ணவும் நம்முடைய சனத்திற் சிறுமையா
னவர்களின் நியாயத்தைப் பறிக்கவும் வி
தவைகளைச் சூறையாடவும், திக்கற்றவர்க
ளைத் தாங்கள் கொள்ளையிடவுமாக,—அக் 2
கிரமப் பிரமாணங்களை தீர்மானிக்கிறவ
ர்களுக்கும், பாரமானவைகளை எழுதுகிற
வேதபாரகருக்கும் ஐயோ!—விசாரிப்பி 3

Digitized by Google

ன் நாளிலும், தூரத்தில் இருந்து வருகி
ற பாழ்க்கடிப்பின் நாளிலும் நீங்கள் என்
ன செய்வீர்கள்? ஆரண்டையிலே ஒத்தா
சை தேட ஓடுவீர்கள்? உங்கள் மகிமை க
ட்டுண்டவர்களின் கீழ் முடங்கி விழாதப
டிக்கு அதை எங்கே வைத்துப் போவீர்க
4 ள்?—கொலைசெய்யப்பட்டவர்களுக்குள்
ளும் விழுவார்கள். இதிலெல்லாம் அவரு
டைய கோபம் ஆறாமல், அவருடையகை
இன்னம் நீட்டினதாய் இருக்கும்.

எருசலேமையும் பிடிக்க நினைவுகொள்ளும்பெருமையான அசூரியரை யெகோவா அழிப்பது.

5 நம்முடைய கோபத்தின் கோலாகிய அ
சூரியருக்கு ஐயோ! அவர்கையிலிருக்கிற
6 து நம்முடைய சினத்தின் மிலாறு.—நாம்
அமார்க்கமான சாதிக்கு விரோதமாய் அ
வனை அனுப்பி நம்முடைய கோபம் மூ
ண்டிருக்கிற சனத்தின்மேல் அதைக்கொ
ள்ளையிடவும், சூறையாடவும், அதை வீ
திகளின் சேற்றைப்போல் மிதித்துப்
போடவும், அவனுக்குக் கட்டளை கொ
7 டுப்போம்.—அவனோ அப்படிக் கொ
ந்த எண்ணமும் அவன் இருதயம் அப்ப

Digitized by Google

டிக்கொத்த நினைவுமாயிராமற் கொஞ்ச
மாயிராத சாதிகளை அழிக்கவுஞ் சங்கரிக்
கவுந் தன் மனதிலே நினைவாயிருக்கிறான்.
—ஏனெனில் என் பிரபுக்கள் அனைவரு 8
ம் இராசாக்களல்லவோ?—கலனே பட்ட 9
ணம் கரகேமிசைப்போலானதில்லையோ?
ஆமாத் அற்பாத்தைப்போலுமானதில்லை
யோ? சமாரியா தமஸ்குவைப்போலான
தில்லையோவென்றும்,— எருசலேமையு 10
ஞ் சமாரியாவையும் பார்க்க விசேஷித்த
சொரூபங்களுள்ள விக்கிரக இராச்சியங்
களை என் கை கண்டுபிடித்ததுபோலேயு
ம்,—நான் சமாரியாவுக்கும் அதின் விக் 11
கிரகங்களுக்குஞ் செய்ததுபோலேயும்,
எருசலேமுக்கும் அதின் விக்கிரகங்களு
க்குஞ் செய்யேனோவென்றுஞ் சொல்லு
கிறான்.—ஆனாலுஞ் சம்பவிப்பதேதெனி 12
ல் ஆண்டவர் சீயோன்பருவதத்திலும் எ
ருசலேமிலுந் தமது செயலையெல்லாம்
முடித்திருக்கும்போது அசூரிய இராசா
சாவினுடைய பெருமையான நெஞ்சின்
கனியையும், அவன் மேட்டிமையான க
ண்களின் சிறப்பையும் நாம் விசாரிப்போ

Digitized by Google

13 மென்கிறார்.—ஏனென்றால் அவன்சொல்
லுகிறது என் கையின் பலனாலும், என்
ஞானத்தினாலும், இதைச் செய்தேன். ஏ
னெனில் உணர்வுள்ளவனாய் இருக்கிறே
ன். அத்தால் நான் சனசதளங்களின் எ
ல்லைகளை வாங்கிப்போட்டு அவர்கள் உக்கி
ராணங்களைக் கொள்ளையிட்டு, வல்லவனை
ப்போலக் குடியானவர்களைத் தாழ்த்தி
14 னேன்.—என் கை சனசதளங்களின் ஆஸ்
தியை ஒரு குருவிக் கூட்டைப்போலக் க
ண்டுபிடித்துத் தனித்துவிடப்பட்ட மு
ட்டைகள் வாரிக்கொள்ளப்படுமாப்போ
லே பூமியையெல்லாம் நான் வாரிக்கொ
ண்டேன். செட்டையை அசைத்தவர்களு
ம், வாயைத்திறந்தவர்களும், கசுகுசென்
று சீறினவர்களும் இல்லையென்கிறார்.—
15 கோடாலி தன்னால் வெட்டுகிறவனுக்கு வி
ரோதமாய் மேன்மைபாராட்டலாமோ?
அல்லது வாள் தன்னை இழுக்கிறவனுக்கு வி
ரோதமாய்ப் பெருமைபாராட்டலாமா?
தடி தன்னையெடுக்கிறவர்களை அசைக்கு
மாப்போலேயும் மிலாறு நான் மரம் அ
ல்லவென்று எழும்புமாப்போலேயுந் தா

Digitized by Google

னே.—ஆகையால் சேனைகளுடைய ஆ 16
ண்டவராகிய கர்த்தர் அவனுடைய கொ
ழுத்தவர்களில் இளைப்பை அனுப்பி வே
கிற அக்கினிக்கொத்த நெருப்பை அவன்
மகிமையின் கீழ்க் கொளுத்துவார்.-இஸ் 17
ரவேலின் வெளிச்சமானவர் அக்கினியும்
அதின் பரிசுத்தர் அக்கினிச் சுவாலையுமா
கி எரிந்து ஒரேநாளிலே அவனுடைய மு
ட் செடிகளையும் நெரிஞ்சில்களையும் ப
ட்சித்து.-அவனுடைய காட்டின் மகிமை 18
மையும், அவனுடைய பயிர்நிலத்தின் மகி
மையையும் ஆத்துமந்துவங்கிச் சதைபரி
யந்தமும் அழியப்பண்ணுவார். கொடிபி
டிக்கிறவன் களைத்து விழுந்த வண்ணமா
ய் அது இருக்கும்.-அவனுடைய காட்டி 19
ன் மீதியான மரங்கள் மட்டாயிருக்கும்.
ஒரு பயல் அவைகளை எண்ணி எழுதலாம்.
அக்காலத்திலே சம்பவிப்பதேதெனி 20
ல் இஸ்ரவேலில் மீதியானவர்களும் யாக்
கோபுடைய வீட்டில் தப்பினவர்களுந்
தங்களை அடித்தவனை இனிச் சார்ந்துகொ
ள்ளாமல், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய
யெகோவாவை உண்மையாகச் சார்ந்து

Digitized by Google

21 கொள்ளுவார்கள்.— மீதியாயிருப்பவர்க
ள், யாக்கோபிலே மீதியாயிருப்பவர்க
ளே, வல்லமையுள்ள தேவனண்டைக்குத்
22 திரும்புவார்கள்.—ஏனெனில் இஸ்ரவே
லே, உன்னுடைய சனஞ் சமுத்திரத்தின்
மணலத்தனையாய் இருந்தாலும் அதில் மீ
தியாய் இருப்பவர்களே திரும்புவார்கள்.
அழிக்குதல் அறுதியாய்த் தீர்ந்திருக்கும்
23 போது நீதி புரண்டு வரும்.—ஏனென்
ருல் சேனைகளுடைய தேவனாகிய ஆண்
டவர் தேசத்துக்குள் எங்கும் அறுதியா
ன அழிக்குதலைச் செய்வார்.
24 ஆகையாற் சீயோனிலே வாசமாகிய ந
மது சனமே உன்னைக் கோலால் அடித்
துத் தன் தடியை எகிப்த்தியரைப் போ
ல உன் மேல் ஓங்குகிற அசூரியனுக்குப்
25 பயப்படாதே.— ஏனெனில் இன்னம்
மெத்தக்கொஞ்சப்போதிலே சினந் தீர்
ந்திருக்கும். அப்பொழுது நம்முடைய
கோபம் அவர்களைச் சங்கரிக்கப்போகு
தென்று சேனைகளுடைய யெகோவாவா
26 கிய ஆண்டவர் விளம்புகிருர்.—ஒரேபக
ல். மலையண்டையிலே மீதியானியர் வெ

Digitized by Google

ட்டுண்ட வண்ணமாய்ச் சேனைகளுடைய
யெகோவா அவன்மேல் ஒரு சவுக்கை எ
ழுப்பித் தமது கோலை எகிப்த்திலே சட
லின்மேல் ஓங்கினதுபோலே ஓங்குவார்.
—அந்நாளிலே அவன் சுமை உன் தோளி 27
லும் அவன் நுகத்தடி உன் கழுத்திலும்
இருந்து நீங்கும் தயிலத்தால் நுகத்தடி
கெட்டுப்போம்.-அவன் ஆயாத்துக்கு வ 28
ந்து, மிக்ரோனைக் கடந்து மிக்மாசிலே
தன்படை மூஸிதீதுகளை வைத்துவைப்
பான்.—கனவாயைத்தாண்டிக் கேபாவி 29
லே பாளயம் இறங்குகிறார்கள். ரமா அ
திருது. சவுலுவின் ஊராகிய கிபேயா ஓடி
ப்போகின்றது.—கல்லிம் குமாரத்தியே 30
உரத்துக்கூப்பிடு. சிறுமையான ஆனத்
தோத்தே, லாயீசூர்பிரமாக உன் சத்தத்
தை நீட்டிக் கூப்பிடு.—மத்மேனா வல 31
சைவாங்கும். கேபீமின் குடிகள் கூட்டங்
கூடுகிறார்கள்.—இன்னம் ஒருநாள் நோ 32
பிலே நிற்கிறதற்கிருந்து தன் கையைச்
சீயோன் குமாரத்தியின் பருவதத்துக்கு
ம் எருசலேமின் மேட்டுக்கும் விரோத
மாய் அசைப்பான்.—ஆனாலும் இதோ 33

Digitized by Google

சேனைகளின் யெகோவாவாகிய ஆண்ட
வர் தோப்புகளை வலுமையாய்த்தறிப்பா
ர். ஓங்கிவளர்ந்தவைகள் வெட்டுண்டுமே
ட்டிமையானவைகள் தாழ்த்தப்படும்.
34 —அவர் காட்டின அடர்த்தியைக் கோ
டாலியினாலே துணிப்பார். மகத்துவமா
னவராலே அந்தலீபனோன் விழும்.

---

## ௰க. அதிகாரம்.

மேசியாவினுடைய இராச்சியத்தின் பாக்கியம்.

1 வெட்டப்பட்ட ஈசாயின் அடிமரத்தி
ல் இருந்து ஒரு துளிர் புறப்பட்டு அவ
ன் வேர்களில் இருந்து ஒரு கிளை எழும்
௨ பிக் கனிதரும்.—இவர்மேலே யெகோ
வாவுடைய ஆவியாகிய ஞானம் உணர்வெ
ன்றவைகளின் ஆவியும் ஆலோசனை பெல
னென்றவைகளின் ஆவியும் அறிவும் யெ
கோவாவுக்குப்பயப்படுதலும் என்றவை
3 களின் ஆவியுந் தங்கியிருப்பார்.-அவர் மு
கந்தணருதல் யெகோவாவுக்குப் பயப்
படுதலோடே இருக்கும். அவர் தமது
கண்களுடைய பார்வையின்படி நியாயந்

Digitized by Google

தீராமலும், தமது காதுகளுடைய கே
ள்வியின்படி கடிந்துகொள்ளாமலும்,—
ஏழைகளை நீதியாய் நியாயம் விசாரித்து 4
ப் பூமியிற் சிறுமையானவர்களைச் செம்
மையாய்க் கடிந்துகொண்டு பூமியைத்
தமது வாக்கின் கோலால் அடித்துத் த
மது உதடுகளின் ஆவியால் ஆகாதவனைக்
கொல்லுவார்.—நீதி அவர் அரையின் கட் 5
டுஞ் சத்தியம் அவர் இடுப்பின் கச்சையு
மாயிருக்கும்.—அப்போது ஓனாய் ஆட்டு 6
க்குட்டியோடே தங்கிச் சிவிங்கி வெள்ளா
ட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளு
ம். கன்றுக்குட்டியும் வாலசிங்கமுங் கா
ளையும் ஒரு சின்னப்பயல் அவைகளை ஓட்
டத்தக்கதாய் ஒருமித்திருக்கும்.—பசு 7
மாடுங்கரடியுங்கூடமேய்ந்து அவைகளி
ன் குட்டிகள் ஒருமித்துப் படுத்திருக்கு
ம். சிங்கம் மாட்டைப்போல வைக்கோ
லைத் தின்கும்.—முலை உண்கிற குழந்தை 8
விரியன்பாம்பு வளையின்மேல் விளையாடி
ப் பாலகன் கட்டு விரியனின் புற்றிலே த
ன் கையைப் பாச்சும்.—நமது பரிசுத்த 9
பருவதமெங்குந் தீமைபண்ணுவாரும் இ

Digitized by Google

ல்லை. கேடுசெய்வாரும் இல்லை. ஏனெனி
ல் தண்ணீர்கள் கடல் ஆழத்தை மூடும்
போலப் பூமி யெகோவாவை அறிகிற அ
றிவினால் நிறைந்திருக்கும்.
10 அக்காலத்திலே சம்பவிப்பதேதெனி
ற் சனசதளங்களுக்குக் கொடியாக நிற்கி
ற இசாயின் வேருக்காகச் சாதிகள் விசாரி
த்துக் கேட்பார்கள். அவருடைய தாபர
11 ஸ்தலம் மகிமையாயிருக்கும்.— அக்காலத்
திலே சம்பவிப்பதேதெனில் ஆண்டவர்
அசூரியாவிலும், எகிப்திலும், பதரோசி
லும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவி
லுஞ், சிநெயாரிலும், ஆமாத்திலுஞ் சமுத்
திரத்தில் தீவுகளிலுந் தம்முடைய சனத்
தில் மீதியானவர்களை வசப்படுத்திக்கொ
ள்ளத் திரும்ப இரண்டாம்விசை தமது
12 கரத்தை நீட்டி,— சாதிகளுக்குக்கொடி
யேற்றி இஸ்ரேவேலில் துரத்துண்டவர்க
ளைச் சேர்த்து யூதாவிற் சிதறவடிக்கப்ப
ட்டவர்களைப் பூமியின் நாலுதிசைகளிலு
13 மிருந்துகூட்டுவார்.- எப்பிராயீமின் பொ
றாமையும் நீங்கும் யூதாவின் சத்துருக்க
ளோசங்கரிக்கப்படுவார்கள்.- எப்பிராயீ


Digitized by Google

ம் யூதாவின்மேல் பொறாமையாய் இரா
மலும் யூதா எப்பிராயீமை இறுகப்பிடி
யாமலும்,—அவர்கள் மேற்கேயிருக்கிற 14
பெலிஸ்தருடைய தோளின்மேற் பாய்ந்
து இருவரும் ஏகமாய்க் கிழக்கத்தியாரை
யுங் கொள்ளையிட்டுத் தங்கள் கைகளை
ஏதோமின்மேலும் மோவாபின்மேலும்
போடுவார்கள். அம்மோன் புத்திரரும்
அவர்களுக்குக் கீழ்ப்படுவார்கள்.—எகி 15
ப்த்தின் சமுத்திர முனையையும் யெகோ
வாச் சாபமிட்டு நதியின்மேல் தமது கை
யைத் தம்முடைய காற்றின் சத்துவத்தி
னாலே அசைத்து அதைப்பாதரட்சைகள்
நனையாமற் கடக்கப்பண்ணத் தக்கனையா
யி ஏழு ஆறுகளாக அடிப்பார்.—அப்ப 16
டியே இஸ்ரவேலர் எகிப்துத் தேசத்தி
லிருந்து வந்தேறுகிற நாளில் அவர்க
ளுக்குச் சம்பவித்ததுபோலே அவரு
டைய சனத்தில் அசூரியாவிலே மீதியா
னவர்களுக்கு நடக்கத்தக்க வழி உண்டா
யிருக்கும்.

Digitized by Google

---

## ௰௨. அதிகாரம்.

*மேசியாவின்உபகாரங்களைத் துதித்துப்பாடினது.*

1 அக்காலத்திலேநீ சொல்வதாவது யெ
கோவாவே, என்மேற் கோபமாயிருந்தீர்.
ஆனாலும் உம்முடைய கோபந்திரும்பிற்
று. என்னைத் தேற்றரவும் பண்ணுகிறீர் எ
ன்கிறதின் நிமித்தியந் தேவரீரைத் துதி
2 க்கிறேன்.— இதோ என் இரட்சிப்பின்
தேவன் நான் அவரை நம்பிப் பயப்படா
திருப்பேன் ஏனெனில் என் பலனும் எ
ன் கீதமும் யெகோவாவாகிய தேவன் அ
வர் எனக்கு இரட்சிப்பானவரென்பாய்.
3 -நீங்கள் மகிழ்ச்சியோடே இரட்சிப்பின்
ஊற்றுகளில் தண்ணீர்களை மெண்டு,—
4 அக்காலத்திலே சொல்வதாவது யெகோ
வாவைத் துதியுங்கள் அவர் நாமத்தைத்
தொழுதுகொள்ளுங்கள். சனசதளங்களுக்
குள்ளே அவர் செய்கைகளை அறிவியுங்க
ள். அவருடைய நாமம் உயர்ந்ததென்று
5 பிரஸ்தாபம் பண்ணுங்கள்.—யெகோவா
வைக் கீர்த்தனம்பண்ணுங்கள் ஏனெனி
ல் மகத்துவமானதைச் செய்தார். இது

Digitized by Google

பூமியெங்கும் அறியப்படக் கடவதென்
பீர்கள்.—சீயோனில் வாசமாயிருக்கிறவ 6
ளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி. ஏனெனில்
இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவிலே
பெரியவராய் இருக்கிறார்.

---

## ௰௩. அதிகாரம்.

பாபேலுக்கு வரும் அழிவு.

ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா 1
பாபேலின் மேலிறங்கக் கண்ட பாரம்.
—ஓங்கியிருக்கிற பருவதத்தின்மேற் கொ ௨
டியேற்றுங்கள். சனங்கள் வர உரத்த சத்
தமிடுங்கள். அவர்கள் பிரபுகளின் வாசல்
களுக்குட் பிரவேசிப்பதற்குச் சாடை கா
ட்டுங்கள்.— நாம் பரிசுத்தமாக்கினவர் 3
களுக்கு நாங் கட்டளை கொடுத்தோம்.
நமது கோபத்தை நிறைவேற்ற நம்மு
டைய பராக்கிரமசாலிகளை அழைத்தும்
இருக்கிறோம். அவர்கள் நமது மகத்து
வத்தினாலே களிகூருகிறவர்களென்கிறார்.
—வெகு சனத்தின் சத்தத்துக்கு ஒத்த 4
திரளானவர்களின் இரைச்சலும், கூட்டப்

Digitized by Google

பட்டசாதிகளுடைய இராச்சியங்களின் அ
மளியான இரைச்சலும் மலைகளிற் கேட்
கப்படுகின்றது. சேனைகளின் யெகோவா
யுத்த இராணுவத்தை இலக்கம்பார்க்கிறு
5 ர்.—தேசத்தை எல்லாம் அழிக்க, வான
த்தின் அடியிலுள்ள தூரதேசத்தில் இரு
ந்து வருகிறுர்கள். யெகோவாவும் அவ
ருடைய சினத்தின் பணிமுட்டுகளுந்தா
னே.

6 அலறுங்கள், ஏனெனில் யெகோவாவி
ன் நாள் சமீபமாய் இருக்கிறது. சருவவ
ல்லமையுள்ளவராலே அது பாழ்க்கடிப்
7 பாய் வரும்.—ஆனதினுல் எல்லாக் கைக
ளும் நெகிழ்ந்து, எல்லா மனுஷரின் இ
8 ருதயமுங் கரைந்துபோம்.—திகிலாய்
இருப்பார்கள். வேதனைகளும் வாதைக
ளும் அவர்களைப் பிடிக்கும். பெறுகிறவ
ளைப்போல வேதனைப்படுவார்கள். ஒருத்
தரை யொருத்தர் விறுமித்துப் பார்ப்பா
ர்கள். அவர்கள் முகங்கள் நெருப்பான
9 முகங்களாயிருக்கின்றன.- இதோ தேசத்
தைப் பாழ்க்கடித்துப் போட்டு, அதின்
பாவிகளை அதில் இருந்து அழிப்பதற்கா

Digitized by Google

௯ யெகோவாவுடைய நாட் கடூரமும் மூ
ர்க்கமுங் கோப உக்கிரமுமாய் வருகின்
றது.-ஏனெனில் வானங்களின் நட்சத்தி 10
ரங்களும் அவைகளின் கிரகங்களுந் தங்க
ள் ஒளியை விளங்கப்பண்ணாதிருக்கும். சூ
ரியன் தன் உதயத்தில் இருண்டதாய்,
சந்திரன் தன் ஒளியைக் காட்டாததுமா
யிருக்கும்.—நாம் பூச்சக்கரத்திலே அதி 11
ன் பொல்லாங்கையும் ஆகாதவர்களிடத்
திலே அவர்கள் அக்கிரமத்தையும் விசாரி
த்து அகந்தைக்காரரின் பெருமையை ஓ
யப்பண்ணிப் பலவந்தரின் இடும்பைத்
தாழ்த்தி,—புருஷனை அபரஞ்சியிலும் ம 12
னுஷரை ஒப்பீரின் தங்கத்திலும் அபரூ
பமாக்குவோம்.—ஆகையாற் சேனைகளு 13
டைய யெகோவா மூர்க்கத்தினால், அ
வருடைய கோப உக்கிரத்தின் நாளிலே
பூமி தன்னிடத்தை விட்டசையும்படிக்கு
வானத்தை அதிரப்பண்ணுவோம்.—து ர 14
த்தப்பட்ட வெளிமானைப் போலேயும்
ஆருஞ் சேராத ஆட்டைப்போலேயும்
இருப்பார்கள். அவரவர் தங்கள் சனத்த
ண்டைக்குப் போக முகத்தைத் திருப்பி

Digitized by Google

அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்
15 போவார்கள்.—அகப்பட்டவன் எல்லா
ங் குத்துண்டு சேர்ந்திருந்தவனெல்லாம்
16 பட்டயத்தால் விழுவான்.— அவர்கள்
குழந்தைகள், அவர்கள் கண்களுக்கு முன்
பாகச் சிதைக்கப்படும். அவர்கள் வீடுக
ள் கொள்ளையாய்ப் போம். அவர்கள் பெ
17 ண்சாதிகள் அவமானப்படுவார்கள்.—இ
தோ, நாம் அவர்கள்மேல் மேதியரை எ
ழுப்புவோம். அவர்கள் வெள்ளியை எண்
ணாமலும் பொன்னின்மேற் பிரியம் வை
18 யாமலும்,— வில்லுகளால் இளைஞரைச்
சிதைத்துப்போடுவார்கள். அவர்கள் கரு
ப்பக்கனியின் மேல் இரங்குவதுமில்லை.
அவர்கள் கண் பிள்ளைகளைத் தப்பவிடுவ
துமில்லை.

19 அப்படியே இராச்சியங்களின் அலங்
காரமுங் கல்தேயருடைய பெருமையின்
முக்கியமுமாகிய பாபேல் தேவன் சோ
தோமையுங் கொமோராவையுங் கவிழ்த்
20 ததுபோலே கவிழ்ந்துகிடக்கும்.—என்
றென்றைக்கும் அதிலே தங்கித் தரிப்பா
ருமில்லை. அங்கே அராபியன் கூடாரம்

Digitized by Google

போடுவதும் இல்லை. அங்கே மேய்ப்பர்
மந்தையை மறிப்பதுமில்லை.—வனாந்த 21
ரச்சீவன்கள் அங்கே தங்கி அவர்கள் வீடு
களை பூளையிடுதலாலே நிரப்பும். கோட்
டான்கள் அங்கே தாபரிக்கும். பேய்கள்
அங்கே துள்ளும்.—அவர்கள் பாழான 22
மாளிகைகளில் ஓரிகள் ஒன்றுக்கொன்று
மறுவுத்தரவு கொடுக்கும். வலு சருப்பங்
கள் அவர்கள் செல்விக்கையான அரண்
மனைகளிற் கூடும். அதின் காலஞ் சமீபித்
துவரும். அதின் நாட்கள் நீடித்திராதெ
ன்கிறார்.

---

## ௰௪. அதிகாரம்.

அப்பாலும் பாபேலுக்கு வரும் அழிவின் பிரஸ்
தாபம் முன் அறிவிக்கப்பட்டது.

ஏனெனில் யெகோவா யாக்கோபுக்கி 1
ரங்கி இஸ்ரவேலை இன்னந்தெரிந்து கொ
ண்டு, அவர்களை அவர்கள் தேசத்திலே
தாபரிக்கப்பண்ணுவார். மறுதேசத்தாரு
ம் அவர்களுக்குச் சேர்த்திக்கையாகி, யா
க்கோபின் வீட்டோடே கூடிக்கொள்ளு
வார்கள்.— சனசதளங்கள் அவர்களைக் 2

Digitized by Google

சேர்த்துக்கொண்டு, அவர்களை அவர்கள்
தானத்துக்கு அழைத்துவருவார்கள். இ
ஸ்ரவேல் வீட்டார் அவர்களை யெகோவா
வுடைய தேசத்திலே வேலைக்காரரும் வே
லைக்காரிகளுமாகச் சுதந்தரித்துக்கொண்
டு தங்களைச் சிறையாக்கினவர்களைச் சிறை
யாக்கித் தங்களையொடுக்கினவர்களை ஆ
3 ளுவார்கள்.—யெகோவா உன் வாதையை
யும் உன் தத்தளிப்பையும் நீ அடிமையா
க்கப்பட்டிருந்த கடின அடிமைத்தனத்
தையும் நீக்கி உன்னை இளைப்பாறப்பண்
ணும். அக்காலத்திலே சம்பவிப்பதென
4 ன்றால்,—நீ பாபேலுடைய இராசாவின்
பேரிலே ஏற்றிச் சொல்லும் வாக்கிய
மொழியாவது ஒடுக்கினவன் என்னமாய்
ஓய்ந்தான். பொற்கோல் என்னமாய் ஒழி
5 ந்துபோயிற்று.—யெகோவா ஆகாதவர்
களின் மிலாறையும் ஆண்டிருந்தவர்களி
ன் செங்கோலையும் முறித்துப்போட்டா
6 ர்.—ஓயாத அடியாய்ச் சனசதளங்களை
உக்கிரமாய் அடித்துச் சாதிகளைக் கோ
பமாய் ஆண்டிருந்தவன் தடுப்பாரில்லா
7 மல் துன்பப்படுத்தப்படுகிறான்.—பூமி

Digitized by Google

அனைத்தும் இளைப்பாறி அமர்ந்திருக்கின்
றது. கம்பீரமாய் முழங்குகிறார்கள்.—
பாய்மரவிருட்சங்கள் தானும் லீபனோனி 8
ன் கேதுருக்களும் உன்னிமித்தியஞ் சந்
தோஷிமாயிருந்து நீ விழுந்து கிடக்கிறது
முதற்கொண்டு எங்களை வெட்ட ஏறிவரு
வார். ஒருத்தரும் இல்லையென்கின்றது.-
தாழ இருக்கிற நரகம் உன்னிமித்தியம் 9
அசைந்து நீவர எதிர்கொண்டு இராட்சத
ரையும் பூமியில் இருந்த எல்லாக்கடாக்
களையும் உன் நிமித்தியம் எழுப்பிச் சாதி
களுடைய எல்லா இராசாக்களேயுந் தங்க
ள் ஆசனங்களில் இருந்து எழுந்திருக்கப்
பண்ணும்.—இவர்கள் எல்லாரும் பிரத் 10
தியுத்தரமாக நீயும் எங்களைப்போல ப
லட்சயமாகி எங்களைப்போலானாயோ எ
ன்று உன்னுடனே சொல்லுவார்கள்.—
உன் முக்கிடமும் உன் தம்புருக்களின்மு 11
ழக்கமும் நரகத்திலேதள்ளுண்டு போயி
ற்று. புழுக்கள் உன் கீழ்ப் போடப்பட்
ட படுக்கையும் பூச்சிகள் உன் மூடனு
மாயிருக்கின்றது.-அதிகாலத்தின்மகனாகி 12
ய விடிவெள்ளியே, நீஎப்படிவானத்தில்

Digitized by Google

இருந்து விழுந்தாய். சாதிகளைப்பலவீன
ப்படுத்தினவனே, எப்படித் தரையிலே
13 விழ வெட்டப்பட்டாய்!—நான் வானத்
துக்கு ஏறி என் ஆசனத்தைத் தேவனு
டைய நட்சத்திரங்களின் மேலாக உயர்
த்தி வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்
டத்தின் பருவதத்திலே உளுக்காருவேன்
14 என்றும்,—மேகங்களுடைய உயர்ந்த த
லங்களின்மேல் ஏறி உன்னதமானவருக்கு
ஒப்பாவேனென்றும் நீ உன் இருதயத்தி
15 ற் சொன்னாய்.—ஆனாலும் பாதாளப்பு
றங்களாகியநரகத்திலே தள்ளுண்டாயே.
16 —உன்னைக் காண்கிறவர்கள் உன்னைக் க
ண்ணோக்கி உன்மேல் நிந்தனை வைத்துப்
பூமியைத் தத்தளிக்கவும் இராச்சியங்களை
17 அதிரவும் பண்ணினவனும்,—பூச்சக்கர
த்தை வனாந்தரமாக்கி அதின் பட்டணங்
களை அழித்துப்போட்டுத் தான் கட்டி
வைத்தவர்களை ஊருக்குப்போக விடுத
லையாக்காதே போனவனுமாகிய புருஷ
18 ன் இவனோ என்பார்கள்.—சாதிகளுடை
ய சகல இராசாக்களோ அனைவருங் கன
த்தோடே அவரவர் தங்கள் வீட்டிலே

Digitized by Google

கிடக்கிறார்கள்.—நீயோ அருவருப்பான 19
கிளையைப்போலவும் பட்டயக் குத்தா
ய்க் கொலையுண்டவர்களின் உடுப்பைப்
போலவும் ஒரு குழியின் கற்குவியலோ
டே கிடக்க இறைக்கப்பட்டவர்களைப்
போலவும் மிதித்துப் போடப்பட்டபி
ணத்தைப்போலவும் உன் கல்லறைக்கு
ப் புறம்பேயெறிந்து விடப்பட்டாய்.
—நீ அவர்களோடொத்து அடக்கம்பண் 20
ணப்பட்டாய். ஏனெனில் உன் தேசத்
தைக் கெடுத்து உன் சனத்தைக்கொன்
றுபோட்டாய். பொல்லாருடைய வித்து
என்றென்றைக்கும் பேர்கொள்ளுவதில்
லை.—அவன் பிள்ளைகள் எழும்பித் தேச 21
த்தைச் சுதந்தரித்துக்கொண்டு பூச்சக்க
ரத்தைப் பட்டணங்களால் நிரப்பாதப
டிக்கு அவர்களுக்கு அவர்கள் பிதாக்க
ளுடைய அக்கிரமத்தின் நிமித்தியம் வ
தையை ஆயத்தம்பண்ணுங்கள்.—ஏனெ 22
னில் சேனைகளுடைய யெகோவா விளம்
புகிறதாவது நாம் அவர்கள்மேல் எழும்
பிப் பாபேலுடைய பேரையும் மீந்த
தையுங் குமாரனையும் பேரனையுஞ் சங்க

Digitized by Google

ரிப்போமென்று யெகோவாச் சொல்லு
23 கிறார்.—நாம் அதை முள்ளம்பன்றிகளு
டைய சுதந்திரமுந் தண்ணீர்த் தடாக
ங்களுமாக்கி அதை அழிப்பின் துடைப்
பத்தினாலே பெருக்கிப் போடுவோமெ
ன்று சேனைகளுடைய யெகோவா விளம்
புகிறார்.
24 நாம் நினைத்திருக்கிறபடியே நடக்கு
ம்.நாம் நிறணித்துக்கொண்டதே நிறை
வேறி நிற்குமென்று சேனைகளுடைய
யெகோவா ஆணை சத்தியம்பண்ணினார்.—
25 என்னவெனில் நாம் அசூரியனை நமது
தேசத்திலே முறித்து நமது பருவதங்
களின்மேல் அவனை மிதித்துப்போடு
வோம், அப்போது அவனுடைய நுகத்
தடி அவர்கள்மேல் இருந்து விலகி அவன்
சுமை அவர்கள் தோளிலிருந்து நீங்கும்.
26 —இது தேசமனைத்தின்மேலும் நிறணி
க்கப்பட்ட யோசனையும் இது சகல சா
திகள்மேலும் நீட்டப்பட்டிருக்கிற கை
27 யுமாய் இருக்குதென்றார்.—ஏனெனிற்
சேனைகளுடைய யெகோவா இப்படி நி
றணித்துக்கொண்டார். அதை அவத்தமா


Digitized by Google

க்குபவனார். அவருடைய கை நீட்டப்பட
டிருக்கின்றது. அதைத் திருப்புபவனார்.

பெலிஸ்தருக்கு விரோதமான தீர்க்கதரிசனம்.

ஆகாஸ் இராசா மரணமடைந்த வருஷ 28
த்திலே உண்டான பாரமான காட்சியா
வது,

முழுபெலிஸ்தேயாவே உன்னை அடித் 29
தகோல் உடைந்ததென்ற களிப்பாய் இ
ராதே ஏனெனிற் பாம்பின் வேரில் இருந்
து கட்டுவிரியன் புறப்படும். அதின் கனி
பறக்கிற நெருப்புப்பாம்பாயிருக்கும்.
—ஆனதுகொண்டு தரித்திரரின் தலைச்ச 30
னங்கள் மேய்ந்து எளியவர்கள் சுகமாய்ப்
படுத்திருப்பார்கள். ஏனெனிற் பஞ்சத்தி
னாலே உன் வேரைச் சாகப்பண்ணுவோ
ம். உன்னில் மீதியானவர்களையோ அவன்
கொன்றுபோடுவான் —வாசலே அலறு, 31
பட்டணமே கதறு, பெலிஸ்தேயாவே நீ
முழுதுங் கரைந்து போகிறாய். ஏனெனி
ல் வடக்கேயிருந்து புகைக்காடாய் வரு
கிறான். அவன் கூட்டங்களில் தனித்தவன்
இல்லை. —இப்போதும் அந்தச் சாதியி 32
ன் தானாபதிகளுக்கென்ன மறுவுத்தரவு

Digitized by Google

சொல்லப்படும். யெகோவா சீயோனை அஸ்திபாரப்படுத்தினார். அவருடைய சனத்திற் சிறுமையானவர்கள் அதிலே திடன்கொண்டு தங்குவார்களென்பதுதானே.

---

## ௰௫. அதிகாரம்.

### மோவாபின்மேல் வருகிற தண்டனையின் தீர்க்கதரிசனம்.

1 மோவாபின்மேல் இறங்கும் பாரம் இ
ராவிலே மோவாபின் ஆர்பட்டணம் பா
ழாக்கப்பட்டது. அது சங்காரமாயிற்று.
இராவிலே மோவாபின் கீர்பட்டணம்
பாழாக்கப்பட்டது. அது சங்காரமாயிற்
2 று.—ஆனபடியால் அழும்படிக்குப் பா
யித்துக்குந் திபோனுக்கும் பாமோத்து
க்கும் போயேறுகிறார்கள். நேபோவின்
நிமித்தியமும்மேதேபாவின்நிமித்தியமு
ம் மோவாப் அலறுகிறது. அவர்களுடை
யவெல்லாத்தலைகளும்மொட்டையிட்டிரு
க்கும் எல்லாத் தாடிகளுஞ் கத்திரித்திருக்
3 கும்.—அதின் வீதிகளில் இரட்டைக் கட்

Digitized by Google

டிக்கொண்டு அதின் வீடுகளின் மேலும்
அதின் தெருக்களிலும் எல்லாரும் அல
றியழுகையில் இறங்க இருக்கிறார்கள்.—
எஸ்போன் ஊராரும் எலெயாலே ஊ 4
ராருங்கூக்குரலிடுகிறார்கள். அவர்கள் சத்
தம்ஆகாசமட்டுங் கேட்கப்படுகின்றது.
ஆனபடியால் மோவாபின் ஆயுதப்பா
டானவர்கள் கதறுகிறார்கள். அவனவனு
டைய ஆத்துமம் அவனவனில் தீங்குப்ப
டுகிறதாய் இருக்கின்றது.-என் இருதயம் 5
மோவாபின் நிமித்தியங்கூவுகிறது. அதிலி
ருந்து ஓடிவருகிறவர்கள் மூன்றுவயதுக்
கடாரியைப்போலே அலைகிறார்கள். லூ
கித்துக்கு ஏறுகிற வழியிலே அழுகையோ
டே ஏறுகிறார்களே. ஒரோனாயீமின் வழி
யிலுங் குளறுட்டமான கூக்குரல் இடுகி
றார்களே.-ஏனெனில் நிம்ரீமின் நீர்ப்பா 6
ய்ச்சல்கள் பாழாய்க்கிடக்கின்றது. அதி
னாற்புல் உலர்ந்துமுளையழிந்து பச்சையி
ல்லாமற்போகின்றது.-ஆனபடியால் மீ 7
தியாகச் சேர்த்ததையும் அவர்கள் வைத்
து வைத்ததையும் அலரிகளின் ஆற்றுக்க
ப்பாலே எடுத்துப் போவார்கள்.-ஏனெ 8

Digitized by Google

னிற் கூக்குரல் மோவாபின் எல்லையைச் சு
ற்றும் எக்லாயிம் மட்டும் அதின் அலறு
தலும் பெயேரேலிம்மட்டும் அதின் அலறு
9 தலும் எட்டும்.—அதேனெனில் தீமோ
னின் தண்ணீர்கள் இரத்தத்தால் நிறைந்
திருக்கும், ஏனென்றால் நாந் தீமோனின்
மேல் அதிக கேடுகளைக் கட்டளையிட்டு
மோவாபிலே தப்பினவர்கள்மேலுந் தே
சத்தில் மீதியானவர்கள்மேலுஞ் சிங்கத்
தை வரப்பண்ணுவோம்.

---

## ௰௬. அதிகாரம்.

நல்ல ஆலோசனையை மோவாப் தனக்குக் கே
டாக அசட்டைபண்ணுமென்பது.

1 தேசாதிபதிக்குச் செலுத்தும் ஆட்டு
க்குட்டிகளை நீங்கள் சேலாப்பட்டணந்
துவக்கி வனாந்தரமட்டுஞ் சேர்த்துச் சீ
யோன் குமாரத்தியின் பருவதத்துக்கு
௨ அனுப்புங்கள்.—இல்லாவிட்டால் மோவா
பின் குமாரத்திகள் கூண்டை விட்டுத் து
ரத்தப்பட்டு அலைகிற குருவியைப்போ
லே அர்னோன் நதியின் துறைகளண்டை

யில் இருப்பார்கள்.—நீ ஆலோசனைபண் 3
ணி நியாயஞ்செய்து மத்தியான உருமத்
திலே உன் நிழலை இராவைப்போலாக்கித்
துரத்துண்டவர்களை மறைத்து ஓடிவரு
கிறவர்களைக் காட்டிக்கொடாதிரு.-மோ 4
வாபே துரத்துண்ட என்னுடையவர்கள்
உன்னில்த் தங்கட்டும். சங்கரிக்கிறவனுக்
குத் தப்ப அவர்களுக்கு அடைக்கலமாயி
ரு. ஏனெனில் இறுகப்பிடிக்கிறவன் இல்
லாதேபோவான். சங்கரிப்பு ஒழிந்துபோ
ம். மிதிக்கிறவர்கள் தேசத்தில் இராதபடி
க்கு அழிந்துபோவார்கள்.—ஏனெனில் 5
இராசாசனங் கிருபையோடே உறுதிப
ண்ணப்படும். தாவீதின் கூடாரத்திலே நி
யாயாதிபதியாயிருந்து நியாயம்விசாரித்
து நீதிக்குத் தீவிரிக்கிற ஒருத்தர் அதி
ன் மேல் உண்மையோடே உளுக்காரு
வார்.

மிகவும் ஒப்பாரமான மோவாபின்பெ 6
ருமையையும், அதின் மேட்டிமையையு
ம், அதின் அகந்தையையும், அதின் உக்கிர
தையுங் கேட்டிரும். அதின் வீம்பு அப்
படியல்லவென்கிறது.-ஆகையால் மோவா 7

வாபியர் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து
அலறி எல்லாரும் ஏகமாய் அலறுவார்க
ள். கிராரே,சேத்தூரின் அஸ்திபாரங்கள்
தகர்க்கப்பட்டதேயென்று அவைகளுக்
8 சாகப் பெருமூச்சு விடுவீர்கள்.—எஷ்போ
னில் எஸ்ப்போன் ஊர்வயல்கள் சத்துவ
ற்றுப்போயிற்று. சிப்மாவூர் திராட்சப்ப
யிருக்கோ சாதிகளின் அதிபதிகள் அதி
நற்சாதிச் செடிகளை நருக்கிப்போட்டு
யாசேர் மட்டுஞ் சேர்ந்துவந்து, வனாந்
தரத்திற் சுற்றித் திரிகிறார்கள். அதின் காந்
றுகள் சிதறப்பட்டுக் கடலுக்கப்பாலே
எறியுண்டுபோம்.
9 ஆகையால் யாசேருக்காகவும், சிப்மா
வூர் திராட்சப்பயிருக்காகவும் மிகவும் அ
ழுகிறேன். எஸெபோன் எலெயாலேயே
உனக்கு என் கண்ணீரைப்பாய்ச்சுகிறேன்.
நீ உன் வசந்தகாலத்திற்காகவும், உன் அ
றுப்புக்காகவுங் கொக்கரிக்கிற சந்தோஷ
10 சத்தம் விழுந்துபோயிற்று.- சந்தோஷ
மும் களிப்பும் பயிர்வெளியில் இருந்து
வாங்கிப்போயிற்று. திராட்சத்தோட்டங்
களிற் கம்பீரிப்புமில்லை, ஆர்ப்பரிப்

Digitized by Google

யில்லை. மிதிக்கிறவன் ஆலைகளில் இரசத்
தை மிதிப்பதில்லை. கொக்கரிப்பை ஓயப்
பண்ணினேம்.—ஆகையால் என் குடல் 11
கள் மோவாபின் நிமித்தியமும் என் உள்
ளங் கீராரேசின் நிமித்தியமுஞ் சுரமண்
டலத்தைப்போல முழங்குகின்றது.
சம்பவிப்பதேதெனில், மோவாபியர் 12
மேடைகளின்மேல் இளைப்படைந்தார்க
ளென்று காணப்படும்போது, தங்கள் ப
ரிசுத்த ஸ்தலத்திலே பணியப் பிரவேசிப்
பார்கள். ஆனாலும் ஒன்றும் அடையமா
ட்டார்கள்.—இதுவே யெகோவா அக்கா 13
லமுதல் மோவாபின்மேற் சொன்னவா
ர்த்தை—இப்போதும் யெகோவா உ 14
ரைக்கிறதாவது ஒரு கூலிக்காரனின் வரு
ஷிங்களைப்போலொத்த மூன்று வருஷங்
களிலே மோவாபின் மகிமை அந்த எல்லா
ப் பெரிய திரளோடுங் கூடச் சிறுகிப்
போம். அதில் மீதியாயிருப்பதோ ப
லத்திராமற் கொஞ்சமும் மட்டுமாயிருக்
குமென்கிறார்.

Digitized by Google

## ௰எ. அதிகாரம்.

சூரியர்மேலும், இஸ்ரவேலர்மேலும், பாழ்க்கடி
ப்புவருமென்பது.

1 தமஸ்குவினுடைய பாரம் இதோ தம
ஸ்குபட்டணமாயிராதபடிக்குத் தள்ளப்
பட்டு இடிந்த மண்மேடாய் இருக்கும்.
2 —ஆரோவேரின் பட்டணங்கள் பாழா
ய்விடப்பட்டு மந்தைகளின் வெளியாயி
ருக்கும். அவைகள் அங்கே மிரட்டுவாரில்
3 லாமற் படுக்கும்.—அரண் எப்பிராயீ
மையும், இராசாங்கம் தமஸ்குவையும் வி
ட்டொழியும். சூரியாவில் மீதியாயிருப்ப
வர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய மகி
மையின் சாயலாய் இருப்பார்களென்று
சேனைகளுடைய யெகோவா சொல்லுகி
4 றார்.—அக்காலத்திலே சம்பவிப்பதேதெ
னில் யாக்கோபின் மகிமை குறுகி அவ
ன் மாங்கிஷத்தின் கொழுப்புக் கரைந்து
5 போம்.—ஒருத்தன் ஓங்கினபயிரை அரி
ந்துகொண்டு தன் புயத்தினாற் கதிர்களை
அறுத்து ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே

Digitized by Google

கதிர்களைச் சேர்க்குமாப்போலிருக்கும்.
ஆனாலும் ஒலிவமரத்தை உலுக்கின 6
போது நுனிக்கொம்பிலே இரண்டு மூ
ன்று காய்களும் அல்லது காய்க்கிற அதி
ன் கிளைகளில் நாலைந்து காய்களும் மீதி
யாய் இருக்குமாப்போலே அதிலே பின்
அறுப்புக் கொஞ்சம் மீதியாயிருக்குமெ
ன்று இஸ்ரவேலின் தேவனாகிய யெகோ
வாச் சொல்லுகிறார்.— அக்காலத்திலே 7
மனுஷன் தன் கைகளின் கிரியையாகிய பீ
டங்களை நோக்காமலும், தன் விரல்கள்
உண்டுபண்ணினதையுந், தோப்புகளையு
ஞ், சிலைகளையும் நோக்காமலும்,—தன் 8
னை உண்டாக்கினவரை நோக்குவான். அ
வன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரை
நோக்கிக்கொண்டிருக்கும்.

அக்காலத்திலே அவர்களுடைய பலனு 9
ன பட்டணங்கள் இஸ்ரவேல் புத்திரருக்
குப்பின் வைக்கப்பட்டுப்போன தழைபி
ன் மீதியைப்போலவும், நுனிக்கொம்பி
ன் மீதியைப்போலவும் இருந்து பாழா
ய்க்கிடக்கும்.—ஏனெனில் உன் பலனின் 10
கன்மலையை நீ நினையாமல் உன் இரட்சி

Digitized by Google

ட்பின் தேவனை மறந்தாய். ஆனபடியா
ல் நீ நேத்தியான நாற்றுக்களை நட்டும்,
அன்னியதேசத்துக் கன்னுகளை வைத்
11 தும்,—பகற்காலத்திலே உன் நாற்றை வ
ளரவும், காலமே உன் விரையை முளைக்
கவும்பண்ணியும், பலனைக் கைவசமாக்கி
க்கொள்ளும் நாளிலே அறுப்பு ஒருபோ
ரும் நோயான வேதனையுமாயிருக்கும்.

அசூரியர்மேல் ஆக்கினை இறங்குவது.

12 ஐயோ! கடல்கள் கொந்தளிக்குமாப்
போலே கொந்தளிக்கிற அநேகஞ் சனச
தளங்களின் திரளும் பலத்த தண்ணீர்கள்
இரையும்போலே இரைகிற சனக்கூட்ட
13 ங்களின் அமளியும் உண்டு.—சனக் கூட்
டங்கள், திரளான தண்ணீர்கள் இரையு
மாப்போலே இரையும். ஆனாலும் அவ
னை அதட்டுவார். அப்போது பருவதங்
களிற் காற்றுக் கொண்டுபோம் பதரை
ப்போலேயும், பெருங்காற்றில் அகப்ப
ட்ட துரும்பைப்போலேயுந் தூரத்தி
14 லே ஓடித் துரத்தப்படுவான்.—சாய்
ங்காலத்திலே இதோ கலக்கமுண்டு, ஆனா
லும் விடியுங் காலமாகாததுக்கு முன்

Digitized by Google

னே அவன் இல்லை. இது நம்மைக்கொள்
ளையாடுகிறவர்களின்பங்கும் நம்மைச்சூ
றையாடுகிறவர்களின்வீதமுமாயிருக்கும்.

---

## ௰௮. அதிகாரம்.

எத்தியோப்பியருக்கு வரும் பாழ்க்கடிப்பும், அவர்களுடைய குணப்படுதலும் முன் அறிவிக்கப்பட்டது.

எத்தியோப்பியாவின் ஆறுகளுக்கு அ 1
க்கரையிலே நிழல் இருபுறமாகத் திரும்
புகின்றது.—கடலிற் தானாபதிகளை அ 2
னுப்பித் தண்ணீர்களின்மேல் மூங்கித்
தோணிகளிற் போகிறதுமாகிய தேசத்தி
ன் சனத்துக்கு ஐயோ! வேகமான தூ
தாக்களே, நீண்ட ஓரமாய்க் குடியிருக்
கிறதும், மயிர் சிரைக்கப்பட்டதுமாகி
ய சாதியண்டைக்கும், உண்டானது முத
ற்கொண்டு இதுவரைக்குங் கொடியாயி
ருந்ததும், அளவிடப்படுவதும், மிதிக்க
ப்படுவதும், ஆறுகள் புரண்டு தேசத்தை
ப் பாழ்க்கடிப்பதுமான சாதியாகிய ச
னத்தண்டைக்கும் போகுங்கள்.—பூச்ச 3
க்கரத்தில் வாசமாயிருக்கிறவர்களும், தே

Digitized by Google

சித்துக் குடிகளுமாகிய நீங்கள் எல்லாரு
ம் பருவதங்களிற் கொடியேற்றப்படும்
போது பார்த்து எக்காளம் ஊதப்படு
4 ம்போது, கேட்பீர்கள்.—ஏனெனில் நா
ம் அமர்ந்திருந்து வெளிச்சத்தின்மேற்
காணுங் காந்தியுள்ள காங்கையைப் போ
லவும், அறுப்புக்காலத்தின் வெயிலில் ப
னிமேகத்தைப்போலவும், நமது வாசஸ்
தலத்திலிருந்து கண்ணோக்குவோமென்
கிறதாய் யெகோவா என்னுடனே சொ
5 ன்னார்.—ஏனெனில் அறுப்புக்குமுன்னே
பூப் பூத்துத் தீர்ந்து காய்க்கிற திராட்
சக்காய்கள் பிஞ்சாயிருக்கும்போதே, அ
வர் அரிவாள்களினாலே சப்புக் கயிறு
அறுத்துக் கொடிகளை அரிந்து வாங்கிப்
6 போடுவார்.—அவைகள் ஏகமாய்ப் பருவ
தங்களின் பட்சிகளுக்கும், பூமியின் மிரு
கங்களுக்கும் விடப்படும். பட்சிகள் அ
தின்மேல் கோடைகாலத்துக்கும் பூமி
யின் மிருகங்களெல்லாம் அதின்மேலே
7 மாரிகாலத்துக்குந் தங்கும்.—அக்காலத்
திலே நீண்ட கரையோரமாய்க் குடியிரு
க்கிறதும், உண்டானது முதற்கொண்டு,


Digitized by Google

கெடியாய் இருந்ததுமான சனமும், அளவிடப்பட்டதும், மிதிக்கப்பட்டதும், ஆறுகள் புரண்டுதேசத்தைப் பாழ்க்கடித்ததுமான சாதியுஞ், சேனைகளுடைய யெகோவாவின் நாமந் தங்குந் தலமாகிய, சீயோன்பருவதத்தண்டை சேனைகளுடைய யெகோவாவுக்குக் காணிக்கையாகக் கொண்டுவரப்படும்.

## ௰௯. அதிகாரம்.

எகிப்த்தியருக்கு வரும் பாழ்க்கடிப்பும் அவர்களுடைய குணப்படுதலும் முன்னறிவிக்கப்பட்டது.

எகிப்த்தினுடைய பாரம் இதோ யெ 1
கோவா வேகமான மேகத்தின் மேல் ஏறி
எகிப்த்துக்கு வருவார். அப்போது எகி
ப்த்தின் விக்கிரகங்கள் அவருக்கு முன்பா
க அசைந்து எகிப்த்தியரின் இருதயம் அ
வர்கள் உள்ளத்திலே கரைந்துபோம் —
சகோதரனோடே சகோதரனுஞ், சினே 2
கிதனோடே சினேகிதனும், பட்டணத்
தோடே பட்டணமும், இராச்சியத்தோ
டே இராச்சியமும், யுத்தம்பண்ணும்பு

டியாய் எகிப்த்தியரை எகிப்த்தியரோடே
3 போர் கலக்கப்பண்ணுவோம்.—அதினா
லே எகிப்த்தியருடைய ஆவி அவர்களுக்
குள் வெறுமையாகும். அவர்கள் ஆலோ
சனையை முழுகிப்போகப்பண்ணுவோம்.
அப்போது விக்கிரகங்களையும், மந்திர
வாதிகளையுஞ், சன்னதக்காரர்களையுங், கு
றிசொல்லுகிறவர்களையுந் தேடுவார்கள்.
4 —ஆனாலும் எகிப்த்தியரைக் கடினமான
அதிபதிகளின் கைக்குள் அடைப்போம்.
கடூர இராசா அவர்களை ஆளுவானென்
று சேனைகளின் யெகோவாவாகிய ஆண்
5 டவர் சொல்லுகிறார்.—அப்போது கட
லின் தண்ணீர்கள் குறைந்து நதி வற்றி வ
6 றண்டுபோம்.—ஆறுகளை விட்டுவிடுவார்
கள். அரணிப்பான அகழ்கள் குறுகி வற்
றிப்போம். கொறுக்கையும், நாணலும்
7 வதங்கும்.—நதியண்டையிலும் நதியோ
ரத்திலும் இருக்கிற மடலுள்ள செடிக
ளும் நதியருகே, விதைக்கப்பட்ட யாவு
ம் உலர்ந்துபோம். அது பறக்கடிக்கப்
8 பட்டு இல்லாதேபோம்.—மீன் பிடிக்கிற
வர்கள் பெருமூச்சுவிட்டு நதியிலே தூ

Digitized by Google

ண்டில் போடுகிற யாவருந் துக்கித்துத்
தண்ணீர்களின் மேல் வலைகளை வீசுகிறவ
ர்கள்சலித்துப்போவார்கள்.—மெல்லிய 9
சணல் வேலைகளைச் செய்து சல்லாக்களை
நெய்கிறவர்கள் நாணுவார்கள்.—மீன் வ 10
ளர்க்கிறகுளங்களைக் கூலிக்குக் கட்டுகிற
அனைவருடைய அணைக்கட்டுகளும் நசுங்
குண்டுபோம்.

சோகான் பட்டணத்தின் பிரபுக்கள் 11
பயித்தியக்காரர்தானே. பார்வோனுடை
ய ஞானமுள்ள ஆலோசனைக்காரரின் ஆ
லோசனை மதியற்றுப்போயிற்று. நான்
ஞானிகளின் பிள்ளை. நான் பூருவ இரா
சாக்களின் புத்திரனென்று பார்வோனு
டனே எப்படிச் சொல்லுகிறீர்.— இப் 12
போதும் உன்னுடைய ஞானிகள் எங்கே?
சேனைகளின் யெகோவா எகிப்தின் மே
ற் பண்ணின யோசனையை அவர்கள் உ
னக்கு அறிவிக்கட்டுமே, அல்லது தாங்
கள் அறிந்துகொள்ளட்டும்.—சோசான்
ஊர்ப் பிரபுக்கள் பயித்தியக்காரரானார்க
ள். நோப்பூர் பிரபுக்கள் மோசம்போய் 13
எகிப்த்தையும் அதின்கோத்திரங்களுடை

Digitized by Google

ய தலைவனையும் வழிதப்பப்பண்ணுகிறார்
14 கள்.—யெகோவா அதின் நடுவிலே தாறு
மாறுகளின் ஆவியை ஊற்றினார். ஆன
துகொண்டு வெறித்தவன் வாந்திபண்ணு
கையில் திசைகெட்டுத் திரிகிறதுபோலே
அவர்கள் எகிப்தை அதின் எல்லாச் செ
ய்கையிலுந் திசைகெட்டுத்திரியப்பண்ணு
15 கிறார்கள்.—தலையும், வாலும், கிளையும்,
நாணலுமென்றவர்கள் செய்யும் வேலை
எகிப்துக்கு உதவாத வேலையாய் இருக்
16 கும்.—அக்காலத்திலே எகிப்தியர் பெ
ண்சாதிகளைப்போலிருந்து சேனைகளின்
யெகோவா தங்கள் மேல் அசைக்குங்கை
அசைவினாலே தத்தளித்தருக்களிப்பார்
17 கள்.—யூதாவின் தேசம் எகிப்தியருக்
குத் தத்தளிப்பு உண்டாக்கிறதாய் இருக்
கும். தனக்குள் அதை நினைக்கிறவன் எ
ல்லாருஞ் சேனைகளின் யெகோவா தங்களு
க்கு விரோதமாய் நிறணித்துக்கொண்ட
ஆலோசனையின் நிமித்தியந் திடுக்கிடு
வான்.

18 அக்காலத்திலே கானான் பாஷையைப்
பேசிச் சேனைகளின் யெகோவாவுக்கு ஆ

Digitized by Google

ணேயிடுகிற ஐந்து பட்டினங்கள் எகிப்த்
துத் தேசத்தில் இருக்கும் ஒன்று நிர்மூ
லமான பட்டினமென்னப்படும்.— அக் 19
காலத்திலே எகிப்த்துத் தேசத்தின் நடு
விலே யெகோவாவுக்கொரு பீடமும் அ
தின் எல்லையருகே யெகோவாவுக்கொரு
தூணும் உண்டாய் இருக்கும்.—அது எ 20
கிப்த்துத் தேசத்திலே சேனைகளின் யெ
கோவாவுக்கு அடையாளமுஞ் சாட்சியு
மாய் இருக்கும். ஏனெனில்.ஒடுக்கிறவர்க
ளின் நிமித்தியம் அவர்கள் யெகோவா
வை நோக்கிக் கூப்பிடுவார்கள். அப்போ
து அவர்களுக்கு ஒரு ரெட்சகனையும் ஒரு
பலவானையும் அனுப்பி அவர்களை விடு
விப்பார்.— அப்போது யெகோவா எகி 21
ப்த்தியனுக்கு அறியப்படுவார். எகிப்த்தி
யர் யெகோவாவை அக்காலத்திலே அறி
ந்து அவருக்குப் பலிகளோடுங், காணி
க்கைகளோடும, ஆராதனை செய்து யெ
கோவாவுக்குப் பொருத்தனைகளைப் பண்
ணி அவைகளைச் செலுத்துவார்கள்.—யெ 22
கோவா எகிப்த்தியரை வாதையினாலே அ
டித்துக் குணமாக்குவார். அவர்கள் யெ

Digitized by Google

கோவாவண்டைக்கு மனந்திரும்புவார்க
ள், அப்போதவர்கள் விண்ணப்பத்தை
க் கேட்டு அவர்களைக் குணமாக்குவார்.
23 அக்காலத்திலே எகிப்த்தில் இருந்து அ
சூரியாவுக்குப் போகிற பாதை உண்டா
யிருக்கும். அசூரியர் எகிப்த்திலும் எகி
ப்தத்தியர் அசூரியாவிலும் வந்து எகிப்த்
தியர் அசூரியரோடுந் தேவாராதனை செ
24 ய்வார்கள்.— அக்காலத்திலே பூமியின் ந
டுவில் இருக்கும் ஆசீர்வாதத்துளுலே இ
ஸ்ரவேல் எகிப்த்துவோடும், அசூரியா
25 வோடும் மூன்றாவதாய் இருக்கும்.—அ
வர்களைச் சேனைகளுடையயெகோவா ஆ
சீர்வதித்து எகிப்தத்தியராகிய நமது சன
மும், அசூரியராகிய நமது கரங்களின் கி
ரியையும், இஸ்ரவேலராகிய நமது சுதந்
திரமும் ஆசீர்வதிக்கப்பட்டதென்பார்.

---

## உ௰. அதிகாரம்.

*அசல் தேசங்களின் குடிகள் நம்பியிருந்த எத்தியோப்பியருக்கும், எகிபத்தியருக்கும் வரும் ஆக்கினையின் தீர்க்கதரிசனம்.*

1 கர்த்தான் அசூரியாவின் இராசாவாகி

Digitized by Google

ய சர்கோனாலே அனுப்பப்பட்டு அஸ்
தோத்துக்கு வந்து அஸ்தோத்தின் மே
ல் யுத்தம்பண்ணி அதைப் பிடித்த வரு
ஷமாகிற அக்காலத்திலே,— யெகோவா 2
ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயாவைக்
கொண்டு பேசி நீ போய் உன் அரையி
ன்மேல் இருக்கிற இரட்டை அவிழ்த்து
உன் கால்களில் இருக்கிற பாதரட்சைக
ளைக் கழற்றென்றார். அப்படியே அவ
ன் செய்து அம்மணமும் வெற்றுக் கா
லுமாய் நடந்தான்.— அப்போது யெ 3
கோவா உரைத்ததாவது, எகிப்த்தின்மே
லும், எத்தியோப்பியாவின் மேலும் வரு
ம் மூன்று வருஷித்துக் காரியங்களுக்கு
அடையாளமும், அற்புதமுமாக நம்மு
டைய ஊழியக்காரனாகிய ஏசாயா அம்ம
ணமும் வெற்றுக்காலுமாய் நடக்கிறது
போலே,— அசூரியாவின் இராசா தான் 4
சிறைப்பிடிக்கப்போகிற எகிப்த்தியரை
யும், தான் குடிவிலக்கப்போகிற எத்தி
யோப்பியரையும், இளைஞரையுங், கிழவ
ரையும், அம்மணமாகவும், வெற்றுக் கா
கவும் எகிப்த்தியரின் வெட்கத்துக்கு

Digitized by Google

த் திறந்த இருப்பிடமாகவுங் கொண்டு
5 போவான்.—அப்போது இந்தக் கரைத்து
றைக் குடிகள் தாங்கள் நம்பியிருந்த எத்
தியோப்பியாவைத் தொட்டுந் தாங்கள்
பெருமைபாராட்டின எகிப்த்துவைத்
6 தொட்டுங் கலங்கி வெட்கி,— இதோ அ
சூரிய இராசாவின் முகத்துக்குத் தப்பும்
படிக்கு நாங்கள் நம்பிச் சகாயத்துக்கெ
ன்று ஓடிவந்து, அண்டினவன் இப்படி
யானுமென, நாங்கள் எப்படி விடுவிக்கப்ப
டுவோமென்று அக்காலத்திலே சொல்
லுவார்கள் என்றார்.

---

## ௨௧. அதிகாரம்.

பாபேலின் விழுங்குதல் முன் அறிவிக்கப்பட்டது.

1 கடற்புறமான வனாந்தரத்தினுடைய
பாரஞ் சுழல்காற்றுகள் தெற்குத் தேசத்
தில் எழும்பிக் கடந்துவருமாப்போலே
பயங்கரமான தேசமாகிய வனாந்தரத்தி
௨ ல் இருந்து வருகிறான்.—கடினதரிசனம்
எனக்கு அறிவிக்கப்பட்டது துரோகி து
ரோகம்பண்ணிப் பாழ்க்கடிக்கிறவன் பா

Digitized by Google

ழ்க்கடித்துக்கொண்டே இருக்கிறான்.
பெர்சியனே எழும்பு, மேதியனே முத்
திக்கைபோடு, அதினால் உண்டான தவி
ப்பை எல்லாம் ஓயப்பண்ணுகிறேன்.— 3
ஆகையால் என் இடுப்புகள் மகாவேதனை
யால் நிறைந்திருக்கிறது. பிள்ளைப்பெறு
கிறவளின் வாதைகளுக்கொத்த வாதைக
ள் என்னைப் பிடித்தது கேட்கிறதினாலே
மடங்கிக் காண்கிறதினாலே கலங்கிறேன்.
—என் இருதயந் திகைக்கின்றது. திகில் எ 4
ன்னைத் திடுக்கிடப்பண்ணுகின்றது. அது
எனக்கு விருப்பமான இராவிருளை என
க்கு நடுக்கமுள்ளதாக்கிற்று.—பந்தியை 5
ஆயத்தம்பண்ணுதலுஞ், சாமங் காக்கு
தலும், புசித்துக் குடிக்குதலுமுண்டு.
பிரபுக்கள் எழுந்து பரிசைகளைப் பூசுங்க
ள்.—ஏனெனில் ஆண்டவர் என்னுடனே 6
நீ போய்க் காண்பதை அறிவிக்குஞ் சா
மக்காரனை வையென்றார்.—அவன் சோ 7
டுசோடாகக் கழுதையின் மேலும், ஒட்
டகங்களின்மேலும் ஏறிவருகிறவர்களைக்
கண்டு, மிகுந்த கவனமாய்க் கவனித்துக்
கொண்டேயிருந்து,—ஆண்டவரே நா 8

Digitized by Google

னென் காவலிலே பகல்மாறெப்போதும்
நின்று நான் இராக்காலங்கள் முழுதும்
என் சாமத்திலே தரித்திருக்கிறேனென்
ன்று சிங்கச் சத்தமாய்க் கூப்பிடுகிறான்.
9 —இப்போதும் இதோ, ஒரு சோடு கு
திரைபூண்ட இரதத்தின் மேல் ஏறியிரு
க்கிற ஒரு மனுஷன் வந்து, பாபேல் வி
ழுந்தது, விழுந்தது. அதின் விக்கிரகத்
தேவர்களை எல்லாந் தரையோடே மோ
தி உடைத்தாரென்று பிரத்தியுத்தரமா
10 கச் சொல்லுகிறான்.—என் போரடித்தானி
யமே, என் களத்தின் கோதுமையே, இஸ்
ரவேலின் தேவனாகிய சேனைகளுடைய
யெகோவாவாலே நான் கேள்வியானதை
உங்களுக்கு அறிவித்தேன்.

ஏதோம் தேசத்துக்கும் அராபிய தேசத்துக்கு
ங் கேடுவருவதென்பது.

11 தூமாவினுடைய பாரஞ் சேயீரில் இ
ருந்து என்னை நோக்கிச் சாமங்காக்கிறவ
னே இராத்திரியிலே நடந்த செய்தியெ
ன்ன? சாமங்காக்கிறவனே இரவுபோகிற
செய்தியென்ன? என்று கூப்பிடுகிறார்கள்.
12 —விடியற்காலம் வந்திருந்தும் இராவாய்

Digitized by Google

இருக்கிறது. நீங்கள் கேட்க மனதானால்
திரும்பிவந்து கேளுங்களென்று சாமங்
காக்கிறவன் சொல்லுகிறான்.—அராபியா 13
வின் மேற் சுமரும் பாரந் தேதானியரா
கிய பயணக் கூட்டங்களே அராபியாவில்
இராத் தங்குவீர்கள்—தேமத் தேசத்தி 14
ன் குடிகளே நீங்கள் தாகமாய் இருக்கிற
வர்களுக்குத் தண்ணீரை எதிராகக் கொ
ண்டுபோய் வலசை வருகிறவர்களுக்கு அ
வர்களுடைய அப்பத்தைக் கொடுக்க நே
ரிட்டுப்போங்கள்.—ஏனென்றால் பட் 15
டயங்களுக்கும், உருவின பட்டயத்து
க்கும், நாணேற்றின வில்லுக்குங் கன
யுத்தத்துக்குந் தப்ப வலசைவருகிறார்க
ள்.—ஏனெனில் ஆண்டவர் என்னுடனே 16
சொன்னதாவது, ஒரு கூலிக்காரனின் வ
ருஷங்களைப்போலொத்த ஒரே வருஷத்
திலே கேதாருடைய மகிமை எல்லாம் அ
ற்றுப்போய்,—கேதாரின் புத்திரருடைய 17
பலத்த வில்காரரின் தொகையில் மீதியா
யவர்கள் கொஞ்சப்பேராய் இருப்பார்க
ளென்றார். இதை இஸ்ரவேலின் தேவ
னாகிய யெகோவா உரைத்தார்.

Digitized by Google

---

## ௨௨. அதிகாரம்.

எருசலேமினுடைய அழிவின் தீர்க்கதரிசனம்.

1 தரிசனப்பள்ளத்தாக்கின் பாரம் உன்
னிலுள்ளவர்களெல்லாரும் வீடுகளின்மே
ல் ஏறவதற்கு உனக்கு இப்போ வந்த
2 தென்ன!—களிகூர்ந்திருந்த பட்டினமே
நீ அமளிகளால் நிறைந்து கலங்கின ஊ
ராளுப் உன்னிற் கொலையுண்டவர்கள் ப
ட்டயத்தாற் கொலையுண்டதில்லை. யுத்த
3 த்திற் செத்ததுமில்லை.—உன் அதிபதி
களெல்லாரும் ஏகமாய் ஓடி அலைந்து வி
ற்காரராற் கட்டுண்கிறார்கள். உன்னில் அ
கப்பட்டயாவருந் தூரத்துக்கோடியும்
4 ஏகமாய்க் கட்டுண்கிறார்கள்.—ஆகையா
ல் என்னை விட்டுக்கண்ணைத் திருப்புங்கள்.
மனங் கசந்தழுவேன். என் சனமாகிய
குமாரத்தியினுடைய பாழாக்குதலின் நி
மித்தியம் எனக்கு ஆறுதலைச்சொல்ல
5 நெருங்காதேயுங்களென்கிறேன்.—ஏனெ
ன்றாற் சேனைகளின் யெகோவாவாகிய
ஆண்டவராலே தரிசனப் பள்ளத்தாக்கி
லே அமளியும், மிதியுண்குதலுங் கலக்க

Digitized by Google

ண்டில் போடுகிற யாவருந் துக்கித்துத்
தண்ணீர்களின் மேல் வலைகளை வீசுகிறவ
ர்கள் சவித்துப்போவார்கள்.—மெல்லிய 9
சணல் வேலைகளைச் செய்து சல்லாக்களை
நெய்கிறவர்கள் நாணுவார்கள்.— மீன் வ 10
ளர்க்கிற குளங்களைக் கூலிக்குக் கட்டுகிற
அனைவருடைய அணைக் கட்டுகளும் நசுங்
குண்டுபோம்.
சோகான் பட்டணத்தின் பிரபுக்கள் 11
பயித்தியக்காரர்தானே. பார்வோனுடை
ய ஞானமுள்ள ஆலோசனைக்காரரின் ஆ
லோசனை மதியற்றுப்போயிற்று. நான்
ஞானிகளின் பிள்ளை. நான் பூருவ இராச
சாக்களின் புத்திரரென்று பார்வோனு
டனே எப்படிச் சொல்லுகிறீர்.— இப் 12
போதும் உன்னுடைய ஞானிகள் எங்கே?
சேனைகளின் யெகோவா எகிப்தின் மே
ற் பண்ணின யோசனையை அவர்கள் உ
னக்கு அறிவிக்கட்டுமே, அல்லது தாங்
கள் அறிந்துகொள்ளட்டும்.—சோகான்
ஊர்ப் பிரபுக்கள் பயித்தியகாரரானார்க
ள். நோப்பூர் பிரபுக்கள் மோசம்போய் 13
எகிப்தையும் அதின் கோத்திரங்களுடை

Digitized by Google

ய தலைவரையும் வழிதப்பப்பண்ணுகிறார்
14 கள்.—யெகோவா அதின் நடுவிலே தாறு
மாறுகளின் ஆவியை ஊற்றினார். ஆன
துகொண்டு வெறித்தவன் வாந்திபண்ணு
கையில் திசைகெட்டுத் திரிகிறதுபோலே
அவர்கள் எகிப்த்தை அதின் எல்லாச் செ
ய்கையிலுந் திசைகெட்டுத்திரியப்பண்ணு
15 கிறார்கள். —தலையும், வாலுங், கிளையும்,
நாணலுமென்றவர்கள் செய்யும் வேலை
எகிப்த்துக்கு உதவாத வேலையாய் இருக்
16 கும்.—அக்காலத்திலே எகிப்த்தியர் பெ
ண்சாதிகளைப்போலிருந்து சேனைகளின்
யெகோவா தங்கள் மேல் அசைக்குங்கை
அசைவினாலே தத்தளித்தருக்களிப்பார்
17 கள்.—யூதாவின் தேசம் எகிப்த்தியருக்
குத் தத்தளிப்பு உண்டாக்கிறதாய் இருக்
கும். தனக்குள் அதை நினைக்கிறவன் எ
ல்லாருஞ் சேனைகளின் யெகோவா தங்களு
க்கு விரோதமாய் நிறணித்துக்கொண்ட
ஆலோசனையின் நிமித்தியந் திடுக்கிடு
வான்.

18 அக்காலத்திலே கானான் பாஷையைப்
பேசிச் சேனைகளின் யெகோவாவுக்கு ஆ

Digitized by Google

ஷையபேசுகிற ஐந்து பட்டினங்கள் எகிப்த்
துத் தேசத்தில் இருக்கும் ஒன்று நிர்மூ
லமான பட்டினமென்னப்படும்.— அக் 19
காலத்திலே எகிப்த்துத் தேசத்தின் நடு
விலே யெகோவாவுக்கொரு பீடமும் அ
தின் எல்லையருகே யெகோவாவுக்கொரு
தூணும் உண்டாய் இருக்கும்.—அது எ 20
கிப்த்துத் தேசத்திலே சேனைகளின் யெ
கோவாவுக்கு அடையாளமுஞ் சாட்சியு
மாய் இருக்கும். எனெனில்.ஓடுகிறவர்க
ளின் நிமித்தியம் அவர்கள் யெகோவா
வை நோக்கிக் கூப்பிடுவார்கள். அப்போ
து அவர்களுக்கு ஒரு தெட்சகனையும் ஒரு
பலவானையும் அனுப்பி அவர்களை விடு
விப்பார்.— அப்போது யெகோவா எகி 21
ப்த்தியனுக்கு அறியப்படுவார். எகிப்த்தி
யர் யெகோவாவை அக்காலத்திலே அறி
ந்து அவருக்குப் பலிகளோடுங், காணி
க்கைகளோடும, ஆராதனை செய்து யெ
கோவாவுக்குப் பொருத்தனைகளைப் பண்
ணி அவைகளைச் செலுத்துவார்கள்.—யெ 22
கோவா எகிப்த்தியரை வாதையினாலே அ
டித்துக் குணமாக்குவார். அவர்கள் யெ

Digitized by Google

கோவாவண்டைக்கு மனந்திரும்புவார்க
ள், அப்போதவர்கள் விண்ணப்பத்தை
க் கேட்டு அவர்களைக் குணமாக்குவார்.
23 அக்காலத்திலே எகிப்திலிருந்து அ
சூரியாவுக்குப் போகிற பாதை உண்டா
யிருக்கும். அசூரியர் எகிப்திலும் எகி
ப்தியர் அசூரியாவிலும் வந்து எகிப்
தியர் அசூரியரோடுந் தேவாராதனை செ
24 ய்வார்கள்.— அக்காலத்திலே பூமியின் ந
டுவில் இருக்கும் ஆசீர்வாதத்துக்குள்ளே இ
ஸ்ரவேல் எகிப்துவோடும், அசூரியா
25 வோடும் மூன்றாவதாய் இருக்கும்.—அ
வர்களைச் சேனைகளுடையயெகோவா ஆ
சீர்வதித்து எகிப்தியராகிய நமது சன
மும், அசூரியராகிய நமது கரங்களின் கி
ரியையும், இஸ்ரவேலராகிய நமது சுதந்
திரமும் ஆசீர்வதிக்கப்பட்டதென்பார்.

---

## ௨௰. அதிகாரம்.

அசல் தேசங்களின் குடிகள் நம்பியிருந்த எத்தி
யோப்பியருக்கும், எகிப்தியருக்கும் வரும் ஆக்கி
னையின் தீர்க்கதரிசனம்.

1 கர்த்தான் அசூரியாவின் இராசாவாகி

Digitized by Google

ய சர்கோனாலே அனுப்பப்பட்டு அஸ்
தோத்துக்கு வந்து அஸ்தோத்தின் மே
ல் யுத்தம்பண்ணி அதைப் பிடித்த வரு
ஷமாகிற அக்காலத்திலே,— யெகோவா 2
ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயாவைக்
கொண்டு பேசி நீ போய் உன் அரையி
ன்மேல் இருக்கிற இரட்டை அவிழ்த்து
உன் கால்களில் இருக்கிற பாதரட்சைக
ளைக் கழற்றென்றார். அப்படியே அவ
ன் செய்து அம்மணமும் வெற்றுக் கா
லுமாய் நடந்தான்.— அப்போது யெ 3
கோவா உரைத்ததாவது, எகிப்த்தின்மே
லும், எத்தியோப்பியாவின் மேலும் வரு
ம் மூன்று வருஷத்துக் காரியங்களுக்கு
அடையாளமும், அற்புதமுமாக நம்மு
டைய ஊழியக்காரனாகிய ஏசாயா அம்ம
ணமும் வெற்றுக்காலுமாய் நடக்கிறது
போலே,— அசூரியாவின் இராசா தான் 4
சிறைப்பிடிக்கப்போகிற எகிப்த்தியரை
யுந், தான் குடிவிலக்கப்போகிற எத்தி
யோப்பியரையும், இளைஞரையுங், கிழவ
ரையும், அம்மணமாகவும், வெற்றுக் கா
லாகவும் எகிப்த்தியரின் வெட்கத்துக்கு

Digitized by Google

த் திறந்த இருப்பிடமாகவுங் கொண்டு
5 போவான்.—அப்போது இந்தக் கரைத்து
றைக் குடிகள் தாங்கள் நம்பியிருந்த எத்
தியோப்பியாவைத் தொட்டுந் தாங்கள்
பெருமைபாராட்டின எகிப்தைத்
6 தொட்டுங் கலங்கி வெட்கி,— இதோ அ
சூரிய இராசாவின் முகத்துக்குத் தப்பும்
படிக்கு நாங்கள் நம்பிச் சகாயத்துக்கெ
ன்று ஓடிவந்து, அண்டினவன் இப்படி
யானானே, நாங்கள் எப்படி விடுவிக்கப்ப
டுவோமென்று அக்காலத்திலே சொல்
லுவார்கள் என்றார்.

---

## உக. அதிகாரம்.

பாபேலின் விழுங்குதல் முன் அறிவிக்கப்பட்டது.

1 கடற்புறமான வனாந்தரத்தினுடைய
பாரஞ் சுழல்காற்றுகள் தெற்குத் தேசத்
தில் எழும்பிக் கடந்துவருமாப்போலே
பயங்கரமான தேசமாகிய வனாந்தரத்தி
௨ ல் இருந்து வருகிறான்.—கடினதரிசனம்
எனக்கு அறிவிக்கப்பட்டது துரோகி து
ரோகம்பண்ணிப் பாழ்க்கடிக்கிறவன் பா

Digitized by Google

ழ்க்கடித்துக்கொண்டே இருக்கிறான்.
பெர்சியனே எழும்பு, மேதியனே முத்
திக்கைபோடு, அதினால் உண்டான தவி
ப்பை எல்லாம் ஓய்ப்பண்ணுகிறோம்.— 3
ஆகையால் என் இடுப்புகள் மகாவேதனை
யால் நிறைந்திருக்கிறது. பிள்ளைப்பெறு
கிறவளின் வாதைகளுக்கொத்த வாதைக
ள் என்னைப் பிடித்தது கேட்கிறதினாலே
மடங்கிக் காண்கிறதினாலே கலங்குகிறேன்.
—என் இருதயந் திகைக்கின்றது. திகில் எ 4
ன்னைத் திடுக்கிடப்பண்ணுகின்றது. அது
எனக்கு விருப்பமான இராவிருளை என
க்கு நடுக்கமுள்ளதாக்கிற்று.—பந்தியை 5
ஆயத்தம்பண்ணுதலும், சாமங் காக்கு
தலும், புசித்துக் குடிக்குதலுமுண்டு.
பிரபுக்கள் எழுந்து பரிசைகளைப் பூசுங்க
ள்.—ஏனெனில் ஆண்டவர் என்னுடனே 6
நீ போய்க் காண்பதை அறிவிக்குஞ் சா
மக்காரனை வையென்றார்.—அவன் சோ 7
டுசோடாகக் கழுதையின் மேலும், ஒட்
டகங்களின்மேலும் ஏறிவருகிறவர்களைக்
கண்டு, மிகுந்த கவனமாய்க் கவனித்துக்
கொண்டேயிருந்து,—ஆண்டவரே நா 8

Digitized by Google

னென் காவலிலே பகல்மாறெப்போதும்
நின்று நான் இராக்காலங்கள் முழுதும்
என் சாமத்திலே தரித்திருக்கிறேனென்
ன்று சிங்கச் சத்தமாய்க் கூப்பிடுகிருன்.
9 —இப்போதும் இதோ, ஒரு சோடு கு
திரைபூண்ட இரதத்தின் மேல் ஏறியிரு
க்கிற ஒரு மனுஷன் வந்து, பாபேல் வி
ழுந்தது, விழுந்தது. அதின் விக்கிரகத்
தேவர்களை எல்லாந் தரையோடே மோ
தி உடைத்தாரென்று பிரத்தியுத்தாரமா
10 கச் சொல்லுகிருன்.—என் போரடித்தானி
யமே, என் களத்தின் கோதுமையே, இஸ்
ரவேலின் தேவனாகிய சேனைகளுடைய
யெகோவாவாலே நான் கேள்வியானதை
உங்களுக்கு அறிவித்தேன்.

ஏதோம் தேசத்துக்கும் அராபிய தேசத்துக்கு
ங் கேடுவருவதென்பது.

11 தூமாவினுடைய பாரஞ் சேயீரில் இ
ருந்து என்னை நோக்கிச் சாமங்காக்கிறவ
னே இராத்திரியிலே நடந்த செய்தியெ
ன்ன? சாமங்காக்கிறவனே இரவுபோகிற
செய்தியென்ன? என்று கூப்பிடுகிருர்கள்.
12 —விடியற்காலம் வந்திருந்தும் இராவாய்

Digitized by Google

இருக்கிறது. நீங்கள் கேட்க மனதானால்
திரும்பிவந்து கேளுங்களென்று சாமங்
காக்கிறவன் சொல்லுகிறான்.—அராபியா 13
வின் மேற் சுமரும் பாரந் தேதானியரா
கிய பயணக்கூட்டங்களே அராபியாவில்
இராத் தங்குவீர்கள் —தேமாத் தேசத்தி 14
ன் குடிகளே நீங்கள் தாகமாய் இருக்கிற
வர்களுக்குத் தண்ணீரை எதிராகக் கொ
ண்டுபோய் வலசை வருகிறவர்களுக்கு அ
வர்களுடைய அப்பத்தைக் கொடுக்க நே
ரிட்டுப்போங்கள்.—ஏனென்றால் பட் 15
டயங்களுக்கும், உருவின பட்டயத்து
க்கும், நாணேற்றின வில்லுக்குங் கன
யுத்தத்துக்குந் தப்ப வலசைவருகிறார்க
ள்.—ஏனெனில் ஆண்டவர் என்னுடனே 16
சொன்னதாவது, ஒரு கூலிக்காரனின் வ
ருஷங்களைப்போலொத்த ஒரே வருஷத்
திலே கேதாருடைய மகிமை எல்லாம் அ
ற்றுப்போய்,—கேதார் புத்திரருடைய 17
பலத்த விற்காரரின் தொகையில் மீதியா
யவர்கள் கொஞ்சப்பேராய் இருப்பார்க
ளென்றார். இதை இஸ்ரவேலின் தேவ
னாகிய யெகோவா உரைத்தார்.

Digitized by Google

## உஉ. அதிகாரம்.

எருசலேமினுடைய அழிவின் தீர்க்கதரிசனம்.

1 தரிசனப்பள்ளத்தாக்கின் பாரம். உன்
னிலுள்ளவர்களெல்லாரும் வீடுகளின்மே
ல் ஏறுவதற்கு உனக்கு இப்போ வந்த
2 தென்ன?—களிகூர்ந்திருந்த பட்டினமே
நீ அமளிகளால் நிறைந்து கலங்கின ஊ
ராலும் உன்னிற் கொலையுண்டவர்கள் ப
ட்டயத்தாற் கொலையுண்டதில்லை. யுத்த
3 த்திற் செத்ததுமில்லை.—உன் அதிபதி
களெல்லாரும் ஏகமாய் ஓடி அலைந்து வி
ற்காரராற் கட்டுண்கிறார்கள். உன்னில் அ
கப்பட்டபாவரும் தூரத்துக்கோடியும்
4 ஏகமாய்க் கட்டுண்கிறார்கள்.—ஆகையா
ல் என்னை விட்டுக்கண்ணைத்திருப்புங்கள்.
மனங் கசந்தழுவேன். என் சனமாகிய
குமாரத்தியினுடைய பாழாக்குதலின் நி
மித்தியம் எனக்கு ஆறுதலைச்சொல்ல
5 நெருக்காதேயுங்களென்கிறேன்.—ஏனெ
ன்றாற் சேனைகளின் யெகோவாவாகிய
ஆண்டவராலே தரிசனப் பள்ளத்தாக்கி
லே அமளியும், மிதியுண்குதலுங் கலக்க



Digitized by Google

மூமான நாளாய் இருக்கிறது. அலங்கத்
தைத் தகர்த்துப் பருவதத்துக்கு நேரா
ய் ஆர்ப்பரிக்கும் நாள்தானே.—பெர்சி 6
யன் அப்பிருத்தூணியை எடுத்து இரத
ங்களோடும், மனுஷரோடும், இராவுத்த
ரோடும், வருகிறான். அலங்கங் கேடயங்
களற்றுப்போம்.—மகாவடிவான உன்ப 7
ள்ளத்தாக்குகள் இரதங்களால் நிறைப்
படுவதுண்டு. குதிரைக்காரரை வாசல்க
ள் மட்டும் நிறுத்துவார்கள்.

அவன் யூதாவின் மறைவை வாங்கிப் 8
போடுவான். அந்நாளிலே காட்டுமர வீ
ட்டின் ஆயுதச் சாலையை நோக்குவாய்.
—நீங்கள் தாவீதுடைய பட்டணத்தின் 9
இடிதல்களை மிகுதியானவைகளென்று க
ண்டு கீழ்க் குளத் தண்ணீர்களைச் சேர்த்
து,—எருசலேமின் வீடுகளை எண்ணி அ 10
லங்கத்தை அரணிப்பாக்கும்படிக்கு வீடு
களை இடித்து,—இரண்டு மதில்களுக்கு 11
நடுவே பழைய குளத்தண்ணீர்களுக்கு
ஒரு அகழ் உண்டுபண்ணுவீர்கள். ஆனா
லும் அதைச் செய்கிறவரை நீங்கள் நோக்
காமலும், அதை ஏற்படுத்தித் தூரத்தி

Digitized by Google

லிருந்து வரப்பண்ணுகிறவரைக் கவனி
12 யாமலும் போகிறீர்கள்.—சேனைகளு
டைய யெகோவாவாகிய ஆண்டவர் அக்
காலத்திலே அழுகையையும், புலம்பலை
யும், மொட்டையிடுதலையும், இரட்டு உ
13 டுக்குதலையும் வர அழைப்பார்.— இப்
போதோ இதோ சந்தோஷமும் களி
ப்பும், மாடுகளைக் கொல்லுகிறதும்,
ஆடுகளை அடிக்கிறதும், இறைச்சியைச்
சாப்பிடுகிறதும், மதுபானத்தைக் குடிக்
கிறதும், புசித்துக் குடிப்போம். ஏ
னெனில் நாளைச் சாகிறோமென்று சொ
14 ல்லுகிறதுமுண்டு.—அது சேனைகளின்
யெகோவாவாகிய நம்முடைய செவிகளு
க்கு வெளியரங்கமாய் இருக்கிறது. மெ
ய்யாகவே நீங்கள் சாகுமட்டும் இந்த அ
க்கிரமம் உங்களுக்கு நிவர்த்தியாவதில்லை
யென்று சேனைகளின் யெகோவாவாகிய
ஆண்டவர் சொல்லுகிறார்.

*செப்னாவென்ற பொல்லாத மந்திரியின் விழுகு
தல அவனுக்கு முன்னறிவிக்கப்பட்டது.*

15 சேனைகளுடைய யெகோவாவாகிய ஆ
ண்டவர் உரைத்ததாவது, நீ வீட்டு விசாரி

Digitized by Google

முமான நாளாய் இருக்கிறது. அலங்கத்
தைத் தகர்த்துப் பருவதத்துக்கு நேரா
ய் ஆர்ப்பரிக்கும் நாள்தானே.—பெர்சி 6
யன் அப்பிறாத்தூணியை எடுத்து இரத
ங்களோடும், மனுஷரோடும், இராவுத்த
ரோடும், வருகிறான். அலங்கங் கேடயங்
களற்றுப்போம்.—மகாவடிவான உன்ப 7
ள்ளத்தாக்குகள் இரதங்களால் நிறைப்
படுவதுண்டு. குதிரைக்காரரை வாசல்க
ள் மட்டும் நிறுத்துவார்கள்.
அவன் யூதாவின் மறைவை வாங்கிப் 8
போடுவான். அந்நாளிலே காட்டுமர வீ
ட்டின் ஆயுதச் சாலையை நோக்குவாய்.
—நீங்கள் தாவீதுடைய பட்டணத்தின் 9
இடிதல்களை மிகுதியானவைகளென்று க
ண்டு கீழ்க் குளத் தண்ணீர்களைச் சேர்த்
து,—எருசலேமின் வீடுகளை எண்ணி அ 10
லங்கத்தை அரணிப்பாக்கும்படிக்கு வீடு
களை இடித்து,—இரண்டு மதில்களுக்கு 11
நடுவே பழைய குளத்தண்ணீர்களுக்கு
ஒரு அகழ் உண்டுபண்ணுவீர்கள் ஆனா
லும் அதைச் செய்கிறவரை நீங்கள் நோக்
காமலும், அதை ஏற்படுத்தித் தூரத்தி

Digitized by Google

யிருந்து வரப்பண்ணுகிறவரைக் கவனி
12 யாமலும் போகிறீர்கள்.—சேனைகளு
டைய யெகோவாவாகிய ஆண்டவர் அக்
காலத்திலே அழுகையையும், புலம்பலை
யும், மொட்டையிடுதலையும், இரட்டு உ
13 டுக்குதலையும் வர அழைப்பார்.— இப்
போதோ இதோ சந்தோஷமுங் களி
ப்பும், மாடுகளைக் கொல்லுகிறதும்,
ஆடுகளை அடிக்கிறதும், இறைச்சியைச்
சாப்பிடுகிறதும், மதுபானத்தைக் குடிக்
கிறதும், புசித்துக் குடிப்போம். எ
னெனில் நாளைச் சாகிறோமென்று சொ
14 ல்லுகிறதுமுண்டு.—அது சேனைகளின்
யெகோவாவாகிய நம்முடைய செவிகளு
க்கு வெளியரங்கமாய் இருக்கிறது. மெ
ய்யாகவே நீங்கள் சாகுமட்டும் இந்த அ
க்கிரமம் உங்களுக்கு நிவர்த்தியாவதில்லை
யென்று சேனைகளின் யெகோவாவாகிய
ஆண்டவர் சொல்லுகிறார்.

சேப்னாவென்ற பொல்லாத மந்திரியின் விழுகு
தல அவனுக்கு முன்னறிவிக்கப்பட்டது.

15 சேனைகளுடைய யெகோவாவாகிய ஆ
ண்டவர் உரைத்ததாவது, நீ வீட்டு விசாரி

Digitized by Google

ப்புள்ள இந்தப் பொக்கிஷக்காரனாகிய
செப்னாவண்டைக்குப் போய்ச் சொல்ல
வேண்டியதேதெனில்,—தன் கல்லறை 16
யை உயர்ந்த தலத்திலே வெட்டிக் கன்
மலையிலே தனக்கு வாசஸ்தலத்தைத் தோ
ண்டுகிறவனைப்போலே, நீ உனக்கு இங்
கே கல்லறையை வெட்டும்படிக்கு உன
க்கு இங்கே இருப்பதென்ன? அல்லது உ
னக்கு இங்கே இருப்பவர்களார்? - இதோ 17
பலவான் ஒருவனைத் துரத்துகிறவண்ண
மாக யெகோவா உன்னைத் துரத்திவிட்டு
உன்னை மூடவே மூடுவார்.—ஒருவன் ஒ 18
ரு உண்டையை உருட்டுமாப்போலே உ
ன்னை அகலமும் விசாலமுமான தேசத்தி
லே உருட்டவே உருட்டுவார். அங்கே சா
வாய், அங்கே உன் மகிமையின் இரதங்க
ள் உன் ஆண்டவனின் வீட்டுக்கு இகழ்
ச்சியாக இருக்கும்.—உன்னை உன் நிலை 19
யைவிட்டுப் பறக்கடிப்போம். உன் தா
னத்திலிருந்து உன்னைப் பிடுங்கிப்போ
டுவான்.

அந்நாளிலே சம்பவித்ததாவது, இல் 20
கியாவின் குமாரனாகிய எலியாக்கீமென்

றநமது ஊழியக்காரனை நாம் அழைத்
21 து,—உன் வஸ்திரத்தை அவனுக்கு உடு
த்தி உன் கச்சையால் அவனைத் திடனாகக்
கட்டி உன் அதிகாரத்தை அவன் கையிற்
கொடுப்போம். அவன் எருசலேமின் கு
டிகளுக்கும் யூதாவின் வீட்டுக்குந் தகப்
22 பனாய் இருப்பான்.-தாவீதினுடைய வீட்
டின் திறவுகோலை அவன் தோளின் மே
ல் வைப்போம். அவன் ஆரும் பூட்டக்
கூடாதபடிக்குத், திறந்து ஆரும் திறக்க
23 க்கூடாதபடிக்குப் பூட்டுவான்.-அவனை
உறுதியான இடத்திலே ஆணியாகக் கடா
வுவோம். அவன் தன் தகப்பன் வீட்டுக்
குக் கனமான ஆசனமாக இருப்பான்.-
24 அதின்மேல் அவன் தகப்பனின் வீட்டா
ராகிய பிள்ளைகள் பேரமாருடைய மகி
மை அனைத்தையுங் குடிக்கிற பாத்திரங்க
ள்முதற்கொண்டு சகல தம்புருமுட்டுக
ள்மட்டுமிருக்கிற சகல சிறு பாத்திரங்க
25 ளையுந் தூக்கிப்போடுவார்கள்.-உறுதியா
ன இடத்திற் கடாவப்பட்டிருந்த ஆணி
அந்நாளிலே பிடுங்கப்பட்டு வெட்டுண்டு
விழும். அப்பொழுது அதின்மேலிருந்த க

Digitized by Google

௨௫ அற்றுப்போகுமென்று சேனைகளின் யெகோவா உரைக்கிறார். இதை யெகோவாவே உரைக்கிறாரென்று சொல்லென்றார்.

## ௨௩. அதிகாரம்.

*தீருபட்டணம் பாழாகி எழுபது வருஷத்துக்குப் பிறகு திரும்பக் கட்டப்பட்டுச் சுவிசேஷத்தின் ஆசீர்வாதத்துக்குப் பங்குள்ளதாகுமென்பது.*

தீருவினுடைய பாரம் தர்சீஸ் கப்பல் 1
களின் மனுஷரே, அலறுங்கள். அது வீ
டில்லாமலும் வருவாரில்லாமலும் பாழ்க்
குப் பாழாக்கப்பட்டது. கித்தீம் தேச
த்தில் இருந்து இந்தச் செய்தி வந்து அவ
ருக்கு வெளிப்படுகிறது.—தீவுக் குடிக 2
ளே மவுனமாகுங்கள். சீதோனின் வர்
த்தகர் சமுத்திரத்திலே யாத்திரைபண்
ணி உன்னை நிரப்பினார்கள்.—சீகோர் ந 3
தியின் மிகுந்த நீர்ப்பாய்ச்சல்களால் விளை
யும் பயிர்வகைகளும் ஆற்றங்கரையின் அ
றுப்பும் உன் வரத்தாயிருந்தது. நீ சாதிக
ளின் சந்தையாய் இருந்தாய்.—சீதோ 4
னே வெட்கப்படு. ஏனெனில் நான் இனிக்

Digitized by Google

கர்ப்பவேதனைப்படுகிறதுமில்லை, பெறு
கிறதுமில்லை. இளைஞரை ஆளாக்கிறதுமி
ல்லை, கன்னியாஸ்திரிகளை வளர்க்கிறதுமி
ல்லை என்று சமுத்திரக் கோட்டையான
5 கடல்துறை சொல்லுகிறது.-எகிப்தின்
சேதி கேட்கப்பட்டதினாலே நோயுண்
டானதுபோலே தீருவின் செய்தி கேட்
6 கப்படுவதாலும் உண்டாம்.—கரை து
றைக் குடிகளே நீங்கள் தர்ஷீஸ்மட்டும்
7 புறப்பட்டுப்போய் அலறுங்கள்.—பூரு
வநாட்கள் முதல் துவக்கங்கொண்டு க
ளிகூர்ந்திருந்த உங்கள் பட்டணம் இது
வோ, பரதேசப்போக இதின் குடிகளு
டைய கால்கள் இவர்களைத் தூரமாய்க்
8 கொண்டுபோம்.— கிரீடந்தரித்துக்கொ
ண்டிருக்கிற தீருவுக்கு விரோதமாக இ
தையோசித்துத் தீர்த்தவரார். அதின் வ
ருத்தகர் பிரபுக்களும், அதின் வியாபாரிக
ள் தேசத்திலே கனமுள்ளவர்களுமாமே,
9 —எல்லாச் சிறப்பின் அகந்தையைக் கு
லைத்துத் தேசத்திற் கனமுள்ள யாவரை
யுங் கனவீனமாக்குவதற்காகச் சேனைகளி
ன் யெகோவாவே இதையோசித்துத் தீர்

Digitized by Google

த்தார்.—தர்சீசின் குமாரத்தியே ஒரு ஆ 10
ற்றைக் கடக்கும்போலே உன் தேச
த்தைக் கடந்துபோ. கட்டுங் கச்சை இனி
இல்லை.—தமது கையைச் சமுத்திரத்தி 11
ன்மேல் நீட்டி இராச்சியங்களைக் குலுங்
கப்பண்ணுகிறார். கானானின் அரண்களை
அழிக்கயெகோவா அதற்குவிரோதமாகக்
கட்டளைகொடுத்து,-ஒடுக்குண்ட கன்னி 12
யாகிய சீதோன் குமாரத்தியே இனிக்க
ளிகூர்ந்துகொண்டிராய். எழுந்திருந்து
கித்திமுக்குப் புறப்பட்டுப்போ. அங்கே
யும் உனக்கு இளைப்பாறுதலில்லையென்று
ர். அதோ கல்தேயருடைய தேசம், அ 13
ந்தச் சனம் முன்னிருந்ததில்லை. அசூர்எ
ன்றவன் வனாந்தரத்தாருக்காக அதின் அ
ஸ்திபாரத்தை ஏற்படுத்தினான். இப்படி
த்தங்கள் துருக்கங்களை எடுப்பித்துத் த
ங்கள் அரமனைகளைக் கட்டினார்கள். அழி
வுசெய்ய அதையே குறித்தார்.—தர்சீஸ் 14
கப்பல்களில் மனுஷரே அலறுங்கள். ஏ
னெனில் உங்கள் அரண் பாழாக்கப்பட்
டது.—அக்காலத்திலே சம்பவிப்பதே 15
தென்றால் தீரு ஒரு இராசாவுடையநாட்

Digitized by Google

களின்படி எழுபது வருஷம் மறக்கப்ப
ட்டிருக்கும். ஆனாலும் எழுபது வருஷங்
களின் முடிவிலே தீருவின் சம்மதி ஒரு
வேசியின் பாடலுக்குச் சமானமாய் இ
16 ருக்கும்.—மறக்கப்பட்ட வேசியே சுர
மண்டலத்தையெடுத்து ஊரிலே சுற்றித்
திரி. நீ நினைக்கப்படும்படிக்கு அதை ந
ன்றாய் வாசித்து மெத்தவும் பாடு.
17 ஏனெனில் சம்பவிப்பதேதென்றால், எ
ழுபதுவருஷங்களின்-முடிவிலே யெகோ
வா தீருவைச் சந்திப்பார். அப்போது
அது தன் பணையத்துக்குத் திரும்பிவந்து
பூச்சக்கரத்தின் மேலுள்ள பூமியின் இரா
ச்சியங்களோடெல்லாம் வேசித்தனம் ப
18 ண்ணும்.—அதின் வியாபாரமும் அதின்
பணையமும் யெகோவாவுக்குப் பரிசுத்த
மாயிருக்கும். அது பொக்கிஷமாய்ச் சே
ர்க்கப்படுவதும் இல்லை அடைத்து வைக்க
ப்படுவதுமில்லை. யெகோவாவுக்கு முன்
பாக வாசமாய் இருக்கிறவர்கள் திருத்தி
யாகச் சாப்பிடத்தக்கதாகவும் அவர்களுக்
கு உரப்பான வஸ்திரத்தரிப்புண்டாக்கவு
ம், அதின்வியாபாரம் அவர்களைச்சேரும்.

Digitized by Google

---

## ௨௪. அதிகாரம்.

அரோகிகளான யூதருடைய தேசம் பாழாவதும். யூதச் சாதியிலும் புறச்சாதிகளிலும் இருக்கும் விசுவாசிகள் யெகோவாவை ஸ்தோத்திரிப்பதும்.

இதோ யெகோவாத் தேசத்தை வெ 1
றுமையும் பாழுமாக்கி அதின் ரூபைமா
றுபாடாக்கிப்போட்டு அதின் குடிகளை
ச் சிதறவடிப்பார்.—அப்போது சனத் 2
துக்கும், ஆசாரியனுக்கும், வேலைகாரனு
க்கும் அவன் எசமானுக்கும், வேலைக்கா
ரிக்கும், அவள் நாய்ச்சியாருக்கும், கொ
ண்டவனுக்கும், விற்றவனுக்கும், கடன்
கொடுத்தவனுக்கும், கடன் வாங்கினவ
னுக்கும், வட்டி வாங்கினவனுக்கும், வட்
டி கொடுத்தவனுக்குஞ் சரியாக நடக்கு
ம்.— தேசம் முழுதும் வெறுமையாகி 3
முழுதுங் கொள்ளையாகும். ஏனெனில்
யெகோவா இந்த வார்த்தையைச் சொன்
னார்.—தேசம் புலம்பி வதங்கும். பூமிச 4
த்துவமற்று வதங்கிப்போகும். தேசத்
துச் சனத்தில் உயர்ந்தவர்கள் பலவீன

Digitized by Google

5 ராவார்கள்.-பூமிதன் குடிகளின் கீழ்த்தீட்
டுப்பட்டிருக்கின்றது. ஏனெனில் நியாய
ப்பிரமாணங்களை மீறிக் கட்டளையை மா
றுபாடாக்கி நித்திய உடம்படிக்கையை
6 முறித்தார்கள்.—இதின் நிமித்தியமே தே
சத்தின் குடிகள் பாழ்க்கடிக்கப்பட்டுத்த
க்கனையாய்ச் சாபந் தேசத்தைப் பட்சிக்
கும். இதின் நிமித்தியமே கொஞ்சம் பே
ர் மீதயாகத்தக்கனையாய்த் தேசத்தின் கு
7 டிகள் வெந்துபோவார்கள்.—திராட்சப்
பழ இரசந் துக்கங்கொண்டாடும். திரா
ட்சச் செடி வதங்கும். மனக்களிப்பாய்
இருந்தவர்கள் எல்லாரும் பெருமூச்சுவி
8 டுவார்கள்.—மேளங்களின் சந்தோஷம்
ஓய்ந்து களிகூருகிறவர்களின் சந்தடி தீர்
ந்து, சுரமண்டலக் களிப்பு நின்றுபோ
9 ம்.—பாடலோடே திராட்சப்பழ இரச
ங் குடியார்கள். மதுபானந் தன்னைக் கு
10 டிக்கிறவர்களுக்குக் கசக்கும்.— வெறு
மையாய்ப்போன பட்டணந் தகர்ந்து உ
ட்பிரவேசிக்கக் கூடாதபடிக்கெல்லா வீ
11 டுகளும் அடைபட்டுக்கிடக்கும்.-கொடி
முந்திரிகை இரசத்துக்கென்று வீதிகளி

Digitized by Google

லே கூக்குரலுண்டு. எல்லாச் சந்தோ
ஷமும் இருண்டு தேசத்தின் மகிழ்ச்சி போ
யிவிடும். — பட்டணத்தில் மீதியாயிருப் 12
பது அழிவு. வாசல்கள் பாழாய்க்கிடக்க
இடிக்கப்படும்.

ஆனாலும் ஒலிவ மரத்தை புலுக்கிக் 13
கொடு முந்திரிகைப் பழங்களை அறுத்து
த்தீர்ந்த போது பின்னறுப்புக் கொஞ்ச
ம் இருக்குமாப்போலே தேசத்துக்குள்
ளும் இந்தச் சனசதனங்களின் நடுவிலும்
இருக்கும். — இவர்கள் தங்கள் சத்தத்தை 14
உயர்த்திக் கம்பீரிப்பார்கள். சமுத்தி
ரத்தில் இருந்து யெகோவாவுடைய மு
க்கியத்தின் நிமித்தியம் ஆர்ப்பரிப்பார்க
ள். — ஆகையால் யெகோவாவைக் கெபி 15
களிலும் இஸ்ரவேலுடைய தேவனாகிய
யெகோவாவின் நாமத்தைச் சமுத்திரத்
தீவுகளிலும் மகிமைப்படுத்துங்கள்.

நீதிபரனுக்கு மகிமையென்று பூமியி 16
ன் கடையாந்தரத்தில் இருந்து பாடுங் கீ
தங்களைக் கேட்கிறோம். நானோ இளைத்
திருக்கிறேன், இளைத்திருக்கிறேன். என
க்கு ஐயோ! துரோகிகள் துரோகம்பண்

Digitized by Google

ணுகிறார்கள். துரோகிகள் மிகுதியாய்த்து
17 ரோகம் பண்ணுகிறார்களென்கிறேன்.—
தேசக் குடிகளே திகிலும், படுகுழியுங், க
18 ண்ணியும் உங்களுக்கு வரும்.—சம்பவிப்
பதேதென்றால் திகிலின் சத்தத்தை வில
க ஓடுகிறவன் படுகுழியிலே விழுவான். ப
டுகுழியில் இருந்து ஏறுகிறவனோ கண்ணி
யிலே பிடிபடுவான். ஏனெனில் உயரவி
ருக்கும் மதகுகள் திறவுண்டு பூமியின் அ
19 ஸ்திபாரங்கள் குலுங்கும்.—தேசம் நொ
ருங்கவே நொருங்கும். தேசங் கிழியவே
கிழியும். தேசம் அசையவே அசையும்.
20 —வெறித்தவனைப்போலத் தேசந் தளம்
பவே தளம்பி ஒரு குடிசையைப்போலே
பேர்த்துப்போடப்பட்டும் அதின்பாத
கம் அதின்மேலே பாரமாயிருக்கையா
ல் அது அப்புறம் எழுந்திராமல் விழு
ந்துபோம்.

சபையின் சத்துருக்கள்மேல் இறங்கும் ஆக்கி
னையும், சபைக்குண்டாகும் மகிமையும்.

21 அக்காலத்திலே சம்பவிப்பதேதெனி
ல் யெகோவா உயரவிருக்கிற உயரமான
சேனையையும், பூமியின்மேல் இருக்கிற


Digitized by Google

பூமியின் இராசாக்களையும் விசாரிப்பார்.-
அவர்கள் ஒ.கவியில் ஏகமாய்க் கட்டுண் ௨௨
டவர்களாகச் சேர்ந்து காவலில் அடை
க்கப்பட்டு அநேக நாட் சென்ற பிறகு வி
சாரிக்கப்படுவார்கள்.—அப்போது சே 23
னைகளின் யெகோவா சீயோன் பருவதத்
திலும் எருசலேமிலும் ஆளுகையாற் சந்
திரன் நாணிச் சூரியன் கூச்சமடையும்.
அவருடைய மூப்பர்களுக்கு முன்பாக
மகிமையுண்டாயிருக்கும்.

---

## ௨௫. அதிகாரம்.

யெகோவா விடுவித்து இரட்சித்ததின் நிமித்தியம் அவருக்குச் செலுத்தும் இஸ்தோத்திரம்.

யெகோவாவே தேவரீர் என் தேவனா 1
யிருக்கிறீர், உம்மை உயர்த்தி உமது நா
மத்தைத் துதிப்பேன். ஏனெனில் அதி
சயங்களைச்செய்தீர். உம்முடைய தூரத்
துயோசனைகள் சத்தியமும் உறுதியுமா
னவைகள்.-ஏனெனிற் பட்டணத்தைம ௨
ண்மேடும் அரணைபுரியை இடிந்துகிட
க்கிற அழிவும் அன்னியரின் அரண்மனை

Digitized by Google

யை ஊரல்லாததும் என்றைக்குங் கட்ட
ப்படாததுமான தலமுமாக்கிப் போட்
3 டீர்.—ஆகையாற் பலத்த சனம் உம்மை
மகிமைப்படுத்திப் பலவந்தரான சாதிக
ளின் பட்டணங்கள் உமக்குப்பயப்படும்.
4 —ஏனெனிற் பலவந்தரின் சீறல் மதிலை
மோதி அடிக்கிற பெருவெள்ளத்தைப்
போலிருக்கையில் நீர் நீசனுக்குப்பலனு
ம், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் தி
டனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும்
அடைக்கலமும், வெய்யிலுக்கு ஒதுங்கு
5 ந் நிழலுமானீர்.—அந்நியரின் மும்மு
ரம் வரட்சியான இடத்தின் காங்கையை
ப்போலிருக்கையில் அதைத் தணியப்ப
ண்ணுகிறீர். மேகத்தின் நிழலினால் வெ
யில் தாழுமாப்போலே பலவந்தரின்
கூவுதல் தாழ்த்தப்படும்.

6 எல்லாச் சனசதளங்களுக்குச் சேனை
களுடைய யெகோவா இந்தப் பருவதத்
திலே ஊன்களுடைய கொழுப்புகளாகி
ய கொழுப்புகளின் விருந்தையும் தெளி
வாக்கப்பட்ட திராட்சப்பழ இரசங்களி
7 ன் விருந்தையும்பண்ணி,—எல்லாச் சன

சதளங்கள்மேலுமுள்ள முகமுக்காட்டை
யும் எல்லாச் சாதிகளையும் மூடியிருக்கிற
மூடலையும் இந்தப் பருவதத்திலே வி
ழுங்குவார். —அவர் மரணத்தைச் சய 8
மாக விழுங்குவார். யெகோவாவாகிய
தேவன் எல்லா முகங்களிலுமுள்ள கண்
ணீரை அறத்துடைத்துத் தமது சனத்தி
ன் நிந்தையைப் பூமியெங்கும் இராதபடி
க்கு நீக்கிப்போடுவார். ஏனெனில் யெ
கோவா இதைச்சொன்னார்.

இதோ நம்முடைய தேவன் இவர்தா 9
னே, இவர் நம்மை இரட்சிக்கிறார். இவரே
நாங் காத்திருந்த யெகோவா. அவருடை
ய இரட்சிப்பினாலே களிகூர்ந்து மகிழு
வோமாகவென்று அக்காலத்திலே சொல்
லப்படும்.-ஏனெனில் யெகோவாவுடை 10
ய கரம் இந்தப் பருவதத்திலே தங்கிக்
கொண்டிருக்கும். மோவாப்போவெனி
ல் வைக்கோற் கூளம் எரு நிலத்திலே ம
திக்கப்படுமாப்போலே அவர் கீழே ம
திக்கப்படும்.—நீந்துகிறவன் நீந்துவதற் 11
காகக் கைகளை விரிக்குமாப்போலே அவ
ர் தமது கைகளை அவர்கள் நடுவிலே வி

Digitized by Google

ரித்து அவர்கள் பெருமையையும் அவர்
கள் கைகளின் சதிசற்பனைகளையுங் கூட
12 த் தாழ்த்திப்போட்டு,—உன் மதில்களு
டைய உயர்ந்த அரணைப் பணிவாக்கித் தா
ழ்த்தித் தரையிலே தூளாக அழிப்பார்.

---

## உசா. அதிகாரம்.

*சபை இஸ்தோத்திரிப்பும் நம்பிக்கையுமாய்ச் செய்கிற விண்ணப்பம்.*

1 அக்காலத்திலே யூததேசத்திற் பாடப்
படும் பாட்டாவது. பலஞன பட்டணம்
நமக்கிருக்கின்றது. இரட்சிப்பையேமதி
2 ல்களும் அரணுமாக்கினார்:-உண்மையை
க்கைக்கொண்டு வருகிற நீதியுள்ள சாதி
உட்பிரவேசிப்பதற்காக வாசல்களைத் தி
3 றவுங்கள்.—சமாதானத்தைச் சமாதான
த்தையேகாப்பீரென்கிறது ஊன்றப்பட்
டநினைவாயிருக்கிறது.ஏனெனில் உம்மை
4 நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.-என்றென்
றைக்கும் யெகோவாவை நம்புங்கள். ஏ
னெனில் யெகோவாவாகிய தேவனுக்குள்
ளே நித்திய கன்மலையின் உறுதியிருக்கும்.

ஏனென்றால் அவர் உயரத்திலே வாச 5
மாயிருக்கிறவர்களையும், உயர்ந்த பட்ட
ணத்தையும் பணிவாக்கி அதைத் தாழ்த்
துவார். அவர் அதைத் தரை மட்டாகத் தா
ழ்த்தி அது மண்ணுக்கும்மட்டும் இடியப்
பண்ணுவார்.—கால்கள் அதை மிதிக்கும் 6
சிறுமையானவர்களின் கால்களும் ஏழைகளி
ன் அடிகளுந்தானே.-நீதிமானுடையபா 7
தை மகா செம்மையாய் இருக்கிறது. நீதி
மானுடைய நடையைச் செம்மையாக நி
றுத்துகிறீர்.-யெகோவாவே உம்முடைட 8
ய நியாயத்தீர்ப்புகளின் பாதையிலே உ
மக்குக் காத்திருக்கிறோம். உமது நாம
மும், உமது நினைப்பும் ஆத்துமத்தின்
வாஞ்சையாயிருக்கிறது.—என் ஆத்தும 9
ம் இராவிலே உம்மை வாஞ்சிக்கிறது. என
க்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலத்
திலும் உம்மைத் தேடுகிறேன். ஏனெனி
ல் உம்முடைய நியாயத்தீர்ப்புகள் தேச
த்தில் நடக்கும்போது, பூச்சக்கரக்குடி
கள் நீதியைப் படிக்கிறார்கள்.—ஆகாதவ 10
னுக்குக் கிருபைசெய்யப்பட்டாலும் நீ
தியைப்படியான். நல் நிதானமானதேச

Digitized by Google

த்தில் முதலாய் அநியாயஞ்செய்து யெ
கோவாவுடைய மகத்துவத்தைக் கவனி
11 யாதேபோகிறான்.—யெகோவாவே உம
து கரம் உயர்ந்திருந்தாலும் அதைக்
காணுதிருக்கிறார்கள். ஆனாலுஞ் சனத்து
க்காக உமக்கிருக்கும் பட்ச வயிராக்கி
யத்தைக்க கண்டு வெட்குவார்கள், அக்கி
னி உம்முடைய சத்துருக்களைப் பட்சி
க்கும்.
12 யெகோவாவே எங்களுக்குச் சமாதான
த்தைக் கட்டளையிடுவீர். ஏனெனில் எங்
கள் எல்லாவேலைகளையும் எங்களுக்காக
13 நடத்திவருகிறீரே,- எங்கள் தேவனாகிய
யெகோவாவே உம்மையல்லாத ஆண்டவ
மார் எங்களை ஆண்டார்கள். ஆனாலும் உ
ம்மைமாத்திரஞ் சார்ந்து உம்முடைய
நாமத்தை நினைத்துக்கொண்டிருக்கிறோ
14 ம்.-செத்தவர்கள் உயிருக்குத் திரும்பா
ர்கள்.மாண்ட இராட்சதர் திரும்ப எழுந்
திரார்கள். அப்படி நீர் அவர்களை விசாரி
த்துச் சங்கரித்து அவர்கள் பேரையெ
15 ல்லாம் அழியப்பண்ணினீர்.—இந்தச் சா
தியோடே கூட்டினீர்.யெகோவாவே இந்

Digitized by Google

தச் சாதியோடே கூட்டி மகிமைப்பட்
டீர் பூமியின் எல்லாக்கடையாந்தரங்கள்
மட்டும் வர்தெட்டினீரே.—யெகோவா 16
வே நெருக்கத்தில் உம்மைத் தேடுகிறார்
கள். உம்முடைய தண்டனை அவர்கள்மே
லிருக்கையில் அந்தரங்கவேண்டுதலை ஊ
ற்றுகிறார்கள்.—யெகோவாவே பேறுகா 17
லஞ் சமீபித்திருக்கையில் வேதனைப்பட்
டுத் தன் வாதைகளிற் கூப்பிடுகிற கருப்
பவதியைப்போலே உமக்குமுன்பாகவி
ருக்கிறோம்.— நாங்கள் கருப்பமாயிருந் 18
து வாதைப்பட்டுக் காற்றைப்பெற்றவர்
களைப் போலிருக்கிறோம். தேசத்துக்கு
இரட்சிப்புசெய்யமாட்டாதிருக்கிறோம்.
பூச்சக்கரக் குடிகள் விழுகிறதுமில்லை.
-மரித்த உம்முடையவர்கள் என் சவத் 19
தோடுங் கூடப் பிழைத்தெழுந்திருப்பா
ர்கள். மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே
விழித்துக் கம்பீரியுங்கள். ஏனெனில்
உம்முடைய பனி பூண்டுகளின் பனியை
போலிருக்கும். ஆனாலும் இராட்சதரை
ப் பூமி தள்ளிப்போடும்.
என் சனமே நீ போய் உன் அறைக 20

Digitized by Google

ளுக்குட் பிரவேசித்து உனக்குப் பின்
ளுக உன் கதவுகளைப் பூட்டிச் சினங்கடந்
துபோகுமட்டுங் கொஞ்ச நிமிஷம் ஒளி
21 த்துக்கொள்.—ஏனெனில் இதோ பூமியி
னுடைய குடிகளின் அக்கிரமத்தின் நிமி
த்தியம் அவர்களை விசாரிக்கும்படிக்கு
யெகோவா தம்முடைய தானத்தில் இருந்
து புறப்படுவார். அப்போது பூமி தன்
இரத்தப்பழிகளைத் திறந்து காண்பித்து
த் தன்னிற் கொலைசெய்யப்பட்டவர்களை
இனிமூடாதிருக்கும்.

---

## ௨௭. அதிகாரம்.

*சத்துருக்களின் கைக்கு நீங்கி விடுதலையானபி
ன் சபையடையும் நற்சீர்.*

1 அக்காலத்திலே யெகோவா நீண்டபா
ம்பாகிய துஷ்டமிருகத்தையுங் கோணை
லான பாம்பாகிய துஷ்டமிருகத்தையுங்
கடிதும் பெரிதும் பலத்ததுமான தம
து பட்டயத்தால் விசாரித்துச் சமுத்திர
த்தில் இருக்கிற வலுசருப்பத்தைக்கொன்
௨ றுபோடுவார்.--அக்காலத்திலே நல்லதிரா

Digitized by Google

ட்சப்பழ இரசத்தைத் தருந் திராட்சத்
தோட்டமுண்டாயிருக்கும். அதின்பே
ரிலே ஒன்றுக்கொன்று பாடுங்கள்.—யெ 3
கோவாவாகிய நாம் அதைக்காத்து அதற்
கு அடிக்கடி தண்ணீர்பாய்ச்சி ஆரும் அ
தைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இ
ரவும்பகலுங் காப்பாற்றுவோம்.—உக்கி 4
ரம் நமக்கில்லை. ஆனாலும் முட்செடியு
ம் நெரிஞ்சிலுமாய் நம்மோடே யுத்தத்
துக்குட்பட்டானேயானால் நாம் அதின்
மேல் வந்து அதை ஏகமாய்க்கொளுத்தி
ப்போடுவோம்.-அல்லவென்றால் அவன் 5
நம்முடையபெலனைப்பற்றிக்கொண்டு ந
ம்மோடே ஒப்புரவாகவேவேண்டும்.நம்
மோடே ஒப்புரவாகவேண்டும்.— யாக் 6
கோபுவேர்பற்றி இஸ்ரவேல் பூத்துக் கா
ய்த்துப் பூச்சக்கரத்தைப் பலனால்நிரப்
பும் நாட்கள் வரும்.

அவர் அவனை அடிக்கும் அடியாய் இ 7
வனை அடிக்கிறாரோ அவர்கள் கொல்லப்
படுங்கொலையாய் இவன் கொல்லப்படுகி
றானோ?—தேவரீர் சனத்தைத் துரத்திவி 8
டுகையில் மட்டாய் அத்தோடே வழக்கா

Digitized by Google

டுகிறீர்.கொண்டற்காற்றடிக்கிற நாளிலே
தம்முடைய பலத்த கரத்தினால் அதை
9 விலக்கிப்போடுகிறார்.—ஆகையால் அத்
தோடே யாக்கோபின் அக்கிரமம் நிக்கி
ரகம்பண்ணப்படும் தோப்புகளுஞ், சி
லைகளும் இனி நில்லாதபடிக்கு அவர்க
ள் பலிபீடங்களின் கல்லுக்களை எல்லாஞ்
சிதறடிக்கப்பட்ட சுண்ணாம்புக் கல்லு
க்களாக்கிப்போடும்பொழுது அவர்களு
டைய பாவத்தை அவர் அகற்றுவாரென்
பதே அதினாலெல்லாம் உண்டாகும்பல
10 ன்.—அதேதெனில் அரணான பட்டணம்
அவந்தரையாம். அந்த வாசஸ்தலந் தள்
ளுண்டு வனாந்தரத்தைப்போல விட்டுவி
டப்பட்டதாயிருக்கும் கன்றுக்குட்டிக
ள் அங்கே மேய்ந்து அங்கே படுத்துக்
கொண்டு அதின் தழைகளைப்பட்சிக்கும்.
11 —அதின் கொப்புகள் உலர்ந்திருக்கும்
பொழுது ஒடிந்துபோம். இஸ்திரீகள் வ
ந்து அவைகளைக் கொளுத்தி விடுவார்க
ள்.ஏனெனில் அது உணர்வுள்ளசனமல்
ல. ஆனபடியால் அதை உண்டாக்கினவர்
அதுக்கிரங்காமலும் அதை உருவாக்கின

Digitized by Google

வர் அதுக்குக் கிருபைசெய்யாமலும் இ
ருப்பார்.
அக்காலத்திலே சம்பவிப்பதேதெனில் 12
யெகோவா ஆற்றங்கரையின் விளைவு து
வக்கி எகிப்த்துவின் நதிமட்டும்போரடி
ப்பார். ஆனாலும் இஸ்ரவேற்புத்திரரே
நீங்கள் ஒருத்தரோடொருத்தராய்ச் சே
ர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.—அக்கால 13
த்திலே சம்பவிப்பதேதென்றாற் பெரிய
எக்காளத்தொனிப்புண்டாம். அப்போ
து அசூரியதேசத்திற் சிதறடிக்கப்பட்
டவர்களும் எகிப்த்துத்தேசத்தில் துரத்
திவிடப்பட்டவர்களும் வந்து எருசலே
மிலுள்ள பரிசுத்த பருவதத்திலே யெ
கோவாவைப்பணிந்துகொள்ளுவார்கள்.

---

## ௨அ. அதிகாரம்.

துன்மார்க்கமான இஸ்ரவேலுக்கு ஆக்கினையு
ந் தேவனுடைய சனத்தில் தேவபத்தியாய் இ
ருக்கிறவர்களுக்கு நற்சீரும்வருவது.

எப்பிராயீமுடைய வெறியரின் பெரு 1
மையான கிரீடத்துக்கும், மதுபான லச

கிரியாயிருக்கிறவர்களுடைய செழிப்பா
ன பள்ளத்தாக்குடைய கொடுமுடியின்
மேலுள்ள அலங்காரச் சோடிப்பான வா
2 டிய பூவுக்கும் ஐயோ!—இதோ பல
னும் வல்லமையுமான ஒருத்தன் ஆண்ட
வருக்கிருக்கிறான். அவன் கன்மழைவெள்
ளமாகவுந், சங்காரப்புசலாகவும், புரண்
டுவருகிற கன தண்ணீர்களின் வெள்ளமா
கவும் வந்து கையினாலே அதைத் தரை
3 யிலே தள்ளிப்போடுவான்.—எப்பிராயீ
முடைய வெறியரின் முக்கிய கிரீடங் கா
4 ல்களால் மிதித்துப்போடப்படும்.—செ
ழிப்பானபள்ளத்தாக்குடையகொடுமுடி
யின்மேலுள்ள அலங்காரச் சோடிப்பின்
வாடியபூ பருவகாலத்துக்கு முன் பழு
த்ததும் காண்கிறவன் பார்த்து அது இ
ன்னந் தன் கையிலிருக்கையில் விழுங்கிற
துமான முதற் கனியைப்போலிருக்கும்.
5 அக்காலத்திலே சேனைகளின் யெகோ
வா தமது சனத்தின் மீதியானவர்களுக்
கு மகிமையான கிரீடமாகவும், அலங்கா
6 ரமுடியாகவும்,—நியாயம் விசாரிக்கிறத
ற்கு உளுக்காருகிறவனுக்கு நியாயத்தின்

Digitized by Google

ஆவியாகவும், யுத்தத்தை அதின் வாசல்மட்டுந்திருப்புகிறவர்களின் பராக்கிரமமாகவும் இருப்பார்.

யூதாவிலும் *ஆகாமியம் மிஞ்சினதினால் அதற்குவரும் ஆக்கினைகளின் கடூக்கும் அவர்களுடைய குணப்படுதலை நோக்கியிருக்கிற தேவன் அவைகளுக்குக் குறிக்கப்போகிற மட்டுத்திட்டமும்.

ஆனாலும் இவர்கள் மதுபானத்தால்த் 7
திசைகெட்டு லொட்டியினால் வழிதப்பி
ப்போகிறார்கள். ஆசாரியனுந் தீர்க்கதரி
சியும் லொட்டியினால் திசைகெட்டு ம
துபானத்தால் அமிழ்ந்தி லொட்டியினா
ல் வழிதப்பித் தீர்க்கதரிசனத்தில் மோச
ம்போய் நியாயந்தீர்க்கிறதிலே இடறுகி
றார்கள்.—ஏனெனில் எல்லாப் பந்திகளு 8
ம் சுத்த இடமில்லாதபடிக்கு வாந்தியினா
லுந், தீழ்ப்பழுக்கினாலும் நிறைந்திருக்
கின்றது.

இனியாருக்கு அறிவைப்போதிப்பா 9
ர். கேட்டை யாருக்குத்தெளிவிப்பார்.
பால்மறந்தவர்களுக்கும் முலைமறக்கப்ப
ண்ணப்பட்டவர்களுக்குமே.- ஏனெனி 10
ற் கற்பனையின்மேற் கற்பனையுங், கற்ப

Digitized by Google

ளையின்மேற் கற்பனையும், பிரமாணத்தி
ன்மேற் பிரமாணமும், பிரமாணத்தின்
மேற்பிரமாணமும் இங்கேகொஞ்சமும்
11 அங்கே கொஞ்சமுமென்கிறார்கள்.—ஆ
கையாற் பரிகாச உதட்டினாலும், வேற்
றுப்பாஷையினாலும் இந்தச் சனத்தோ
12 டே பேசுவார்.—இதுவே நீங்கள் இளை
த்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இ
ளைப்பாறுதல். இதுவே சாங்கோபாங்கம
டையுதலென்றவர்களோடே அவர் சொ
ன்னாலுங் கேட்க மாட்டோமென்கிறார்க
13 ள்.—ஆனதுகொண்டு அவர்கள்போய்ப்
பின்னிட்டு விழுந்து நொருங்கும்படிக்கு
ஞ் சிக்குண்டு பிடிபடும் படிக்கும் யெ
கோவாவுடைய வார்த்தை அவர்களுக்கு
க் கற்பனையின்மேற் கற்பனையும், கற்ப
னையின்மேற் கற்பனையும், பிரமாணத்தின்
மேற்பிரமாணமும், இங்கே கொஞ்சமு
ம் அங்கே கொஞ்சமுமென்கிறதாகவிரு
க்கும்.

14 ஆகையால் எருசலேமில் இருக்கிற இந்
தச் சனத்தை ஆளுகிற சக்கந்தக்காரரே
யெகோவாவுடைய வார்த்தையைக் கே

Digitized by Google

ளுங்கள்.—நாங்கள் மரணத்தோடே உ 15
டம்படிக்கையையும், நரகத்தோடே ஒ
ப்பந்தத்தையும் பண்ணினோம். வாதை
பெருவெள்ளமாய்ப் புரண்டு வந்தாலும்
எங்களை அணுகாது. ஏனெனில் நாங்கள்
பொய்யை எங்களுக்கு அடைக்கலமாக்
கி மாய்கையின் மறைவிலே வந்தடைந்
தோமென்கிறீர்களே.

ஆகையினாலே யெகோவாவாகிய ஆ 16
ண்டவர் உரைக்கிறதாவது இதோ உத்த
மம் விளங்கினதும், விலையேறப் பெற்ற
துந் திட அஸ்திபாரப் பட்டதுமான
கோடிக்கல்லாகிய கல்லை நான் சீயோனி
லே வைக்கிறேன். விசுவாசிக்கிறவன் ப
தறான்.—நாம் நியாயத்தை நூலும், நீதி 17
யைத் தூக்குமாக்குவோம். ஆனாலும்
பொய்யென்ற அடைக்கலத்தைக் கன்ம
ழை பறக்கடித்து அந்த மறைவைத் த
ண்ணீர் வெள்ளம் அடித்துக் கொண்டு
போகும்.

அப்படியே உங்களுக்கு மரணத்தோ 18
டிருக்கிற உடம்படிக்கை விருதாவாகி உ
ங்களுக்கு நரகத்தோடிருக்கிற ஒப்பந்த

Digitized by Google

ம் நில்லாதேபோம். வாதை பெருவெள்
ளமாய்ப் புரண்டு வரும்போது, அதின்
19 கீழ் அகப்பட்டுக் கசங்குவீர்கள்.--அது
புரண்டுவந்ததுமுதல் உங்களை அடித்து
க்கொண்டுபோம். ஏனெனில் அது கால
மாறும் இரவும் பகலும் புரண்டுவரும்.
கேட்டதின் உணர்வை உண்டாக்கும்படி
20 க்கு அலைச்சலே உண்டாயிருக்கும்.—ஏ
னெனிற் படுக்கை நீட்டிக்கொள்ளக் கூ
டாத குறுகலும், மூடுசீலை மூடிக்கொள்
ளக்கூடாத அகலக்கட்டையுமாய் இருக்
21 கும்.—ஏனெனில் தமது அன்னிய கிரி
யையாகிய தமது கிரியையைச் செய்யவு
ம், தமது வேற்றுவேலையாகிய தமது
வேலையை நடப்பிக்கவும் யெகோவா பெ
ராத்சீம் மலையிற் செய்ததுபோல் எழு
ம்பிக் கிபெயோனின் பள்ளத்தாக்கில் இ
22 ருந்ததுபோலே சினந்திருப்பார்.— இ
ப்போதும் உங்கள் கட்டுகள் பலத்துப்
போகாதபடிக்குப் பரிகாசம்பண்ணாதி
ருங்கள். ஏனெனிற் தேசமனைத்தின் மே
லும் நிர்ணயம்பண்ணப்பட்டிருக்கிற ச
ங்காரத்தின் செய்தியைச் சேனைகளின்

Digitized by Google

யெகோவாவாகிய ஆண்டவரால் கேள்வி
ப்பட்டிருக்கிறேன்.
செவிகொடுத்து என் சத்தத்தைக் கே 23
ளுங்கள். நான்சொல்வதைக் கவனித்துக்
கேளுங்கள்.—உழுகிறவன் நாள்தோறும் 24
உழுது விதைக்கிறதற்காகத் தன் நிலத்
தைக்கொத்திப்பரம்படிக்கிறதுண்டோ?
—அவன் அதை மேலே நிரவின பிறகு 25
அதினதின் எல்லையில் உழுந்தைத் தெளி
த்துச் சீரகத்தைத் தூவி மேன்தரமான
கோதும்பையையும் நியமிக்கப்பட்ட
வாற்கோதும்பையையும், கம்பையும் வி
தைத்துப்போடுகிறான் அல்லவோ?-அப் 26
படி அவர்களுடைய தேவன் அவர்களை
நியாயம் மட்டாய்த்தண்டித்து அவர்க
ளை உபதேசிப்பார்.—ஏனெனில் உழுந் 27
து தூலத்தாலே போரடிக்கப்படுகிறதில்
லை. சீரகத்தின்மேல் பண்டியின் உருளை சு
ற்றிவிடப்படுகிறதுமில்லை. உழுந்துகோ
லினாலும், சீரகம் மிலாறினாலும் அடிக்
கப்படும்.—போசனமாகும்படியாக அ 28
து மசிக்கப்படும். ஆகையால் எப்போ
தும் அவன் அதைப்போரடிக்கிறதுமில்

Digitized by Google

௨௮. அவன் தன் பண்டியின் உருளையால் அதை நசுக்குகிறதும் அல்லது தன் குதிரைகளால் அதை நொறுக்குகிறதுமில்லை.
29 —இதுவுஞ் சேனைகளுடைய யெகோவாவாற் புறப்பட்ட விசேஷிட். அவர் ஆச்சரியமான ஆலோசனையும் பெருத்த ஞானத்தின் செயலுமுள்ளவர்.

---

## ௨௯. அதிகாரம்.

எருசலேமின் அழிவையும் அதின் சத்துருக்களுடைய அருப்பசியையும் யூதர்களின் மேலிறங்கும் ஞான ஆக்கினையையும் முன் அறிவித்தது.

1 தாவீது பாளயமிறங்கின பட்டணமாகிய வலுசிங்கமே, வலுசிங்கமே உனக்கு ஐயோ! வருஷத்துக்கு வருஷம் பண்டிகை
2 பின்பலிகள் பலியிடப்பட்டாலும், -வலுசிங்கத்துக்கு இடுக்கமுண்டாக்குவோம். அப்போது துக்கிப்புஞ் சலிப்புமுண்டாகி இந்தப்பட்டணம் நமக்குச் சிங்கத்தை
3 ப்போலத்தானிருக்கும்.—எனெனில் உன்னைச் சூழப் பாளயமிறங்கி உன்னைத் தெத்துகளால் முத்திக்கைபோட்டு உன

Digitized by Google

க்கு விரோதமாகக் கொத்தளங்களை எழு
ப்புவோம்.—அப்போது நீ தாழ்ந்து 4
போய்த் தரையிலிருந்து பேசுவாய், உன்
பேச்சுப்பணிந்ததாய் மண்ணில் இருந்து
புறப்பட்டு உன் சத்தம் அஞ்சனம் பார்
க்கிறவனின் சத்தத்தைப் போலத் தரை
யில் இருந்து முணுமுணுத்து உன் பே
ச்சு மண்ணில் இருந்து கசுகுசென்றதாக
விருக்கும்.—உன்மேல் வருகிற அன்னி 5
யரின் திரள் பொடித்தூள் அத்தனையா
கவும் பலபந்தரின் திரள் பறந்துவருகிற
பதர்கள் அத்தனையாகவும் இருக்கும். அ
து அசுப்புந் தீவிரமுமாய்ச்சம்பவிக்கும்.
—இடிகளினாலும், பூமியதிர்த்தலினாலு 6
ம், மகா இரைச்சலினாலும், பெருங்காற்
றினாலும், புசலினாலும், பட்சிக்கிற அக்
கினிச்சுவாலையினாலுஞ் சேனைகளின் யெ
கோவாவாலே விசாரிக்கப்படுவாய்.

ஆனாலும் வலுசிங்கத்தின்மேல் யுத் 7
தம்பண்ணுகிற சகல சாதிகளுடைய திர
ளும் அதின் மேலும் அதின் அரண்மனை
மேலும், யுத்தம்பண்ணி அதை இடுக்க
ஞ்செய்கிற அனைவரும் இராத் தரிசனை

Digitized by Google

யாகிய சொப்பனத்தைக் காண்கிறவர்க்
8 கொப்பாய் இருப்பார்கள்.— பசியாயி
ருக்கிறவன் இதோ புசிக்கிறேனென்று
சொப்பனங் காண்கிறதற்கு அது ஒத்த
தாயிருக்கும். அவன் விழிக்கையில் அவன்
ஆத்துமம் வெறுமையேயிருக்கும் அல்
லது தாகமாயிருக்கிறவன் இதோ குடிக்
கிறேனென்று சொப்பனங் காண்கிறத
ற்கு ஒத்ததுமாயிருக்கும். அவன் விழிக்
கையில் இதோ அவன் விடாய்த்தே இரு
க்கிறான், அவன் ஆத்துமந் தவனத்தோ
டேதானே இருக்கும். அப்படியே சீ
யோன் பருவதத்துக்கும் விரோதமாக
யுத்தம்பண்ணுகிற சகல சாதிகளுடைய
திரளுக்கும் இருக்கும்.
9 தரித்துநின்று திகையுங்கள், பிரமித்
துக் கூப்பிடுங்கள், வெறித்திருக்கிறார்கள்
ஆனாலும் மதுபானத்தால் அல்ல, தள்ள
ம்பாறுகிறார்கள், ஆனாலும் லொட்டியி
10 னாலல்ல.— ஏனெனில் யெகொவா உங்க
கள்மேல் கன நித்திரையின் ஆவியை ஊ
ற்றி உங்கள் கண்களை அடைத்துத் தீர்க்க
தரிசிகளையும் உங்கள் தலைவரையும் ஞான

Digitized by Google

திஷிடிக்காரரையும் மூக்காடு போட்டா
ர்.-ஆனதுகொண்டு தரிசனமெல்லாம் உ 11
ங்களுக்கு முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தி
ன் வசனங்களைப் போலிருக்கும் அதை
வாசிக்க அறிந்திருக்கிற ஒருத்தனுக்கு அ
தைக்கொடுத்து நீ இதை வாசியேயென்
றால் அவன் இது எனக்குக் கூடாது ஏனெ
ன்றால் அது முத்திரித்திருக்கின்றதென்பா
ன்.—அல்லது வாசிக்க அறியாதவனுக்கு 12
ப் புஸ்தகத்தைக்கொடுத்து நீ இதை வா
சியே என்கிறதைப் போலுமிருக்கும். அ
வன் எனக்கு வாசிக்கத் தெரியாதென்பா
ன்.

*பூதச்சனத்தினுடைய கள்ள ஆராதனையின் அமார்க்கமும் மாறுபாடான சிந்தையுங் காண்பிக்கப்பட்டது.*

இந்தச் சனந் தங்கள் வாயினால் நம்ம 13
ண்டைக்குச் சேர்ந்து தங்கள் உதடுகளி
னாலே நம்மைக் கனம்பண்ணியும் அவர்
கள் இருதயம் நமக்குத் தூரமாய் விலகி
யிருக்கிறபடியினாலும் அவர்கள் நமக்கு
ப்பயந்திருக்குதல் மனுஷருடைய கற்ப
னையின் உபதேசிக்குதலாய் இருக்கிறப
டியினாலும்,-இதோ அவர்கள் ஞானிகளி 14

Digitized by Google

ன் ஞானங்கெட்டு அவர்கள் விவேகிகளி
ன் உணர்வு மறைந்துபோகத்தக்க மகா
அதிசயமும் ஆச்சரியமுமான பிரகாரமா
க நாம் இந்தச் சனத்தை நடப்பித்துக்
கொண்டேயிருப்போமென்று ஆண்ட
15 வர் சொல்லுகிறார்.—தங்கள் ஆலோச
னையை யெகோவாவுக்கு மறைவாக்கும்
படிக்கு ஆழமாய் ஒளித்துத் தங்கள் கிரி
யைகளை அந்தகாரத்தில் நடப்பித்து எங்
களைக்காண்கிறவரார்? எங்களை அறிகிறவ
16 ரார் என்கிறவர்களுக்கு ஐயோ!—எத்த
னை மாறுபாடாய் இருக்கிறீர்கள்! குயவ
ன் களிமண்ணுக்குச் சரியாக எண்ணப்ப
டுவானோ? உண்டாக்கப்பட்டது தன்னை
உண்டாக்கினவரைக் குறித்து அவர் என்
னை உண்டாக்கினதில்லையென்றும் உரு
வாக்கப்பட்டது தன்னை உருவாக்கினவ
ரைக்குறித்து அவர் உணராரென்றுஞ்
சொல்லத்தகுமோ.

யூதர் தள்ளப்பட்டுப் புறசாதிகள் தெரிந்து கொள்ளப்படுவதும் யூதருங் கடைசியிலே குணப்படுவதும்.

17 இன்னுங் கொஞ்சப்பொழுதிலே லீப

னேன் வயல்வெளியாகமாறுவதும், வய
ல் வெளிக்காடாக எண்ணப்படுவதும் இ
ல்லையோ.—அக்காலத்திலே செவிடர் பு 18
ஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள்.
குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகா
ரத்துக்கும் நீங்கலாகிப் பார்வை அடை
யும்.—சிறுமையானவர்கள் யெகோவா 19
வுக்குள் மகிழ்ந்து கொண்டேயிருந்து
மனுஷரில் ஏழைகள் இஸ்ரவேலின் பரிசு
த்தருக்குட் களிகூருவார்கள்.—ஏனெனி 20
ல் பலபர்தன் அற்றுச் சக்கந்தக்காரன்
இல்லாதேபோவான்.-வசனத்திலே மனு 21
ஷனைப் பாவியாக்கி வாசலில்த் தங்களை
க்கடிந்துகொள்ளுகிறவனுக்குக் கண்ணி
யை வைத்து நீதிமானை அந்தரத்திலே து
ரத்துகிற அக்கிரமச் செய்கையின் கருக
றுப்புக்காரர் அனைவருஞ் சங்கரிக்கப்படு
வார்கள்.—ஆகையால் ஆபிரகாமை மீட் 22
டுக்கொண்ட யெகோவா யாக்கோபின் வீ
ட்டாருக்குச் சொல்லுகிறதாவது இனி
யாக்கோபு வெட்கப் படுவதில்லை. இனி அ
வன் முகஞ்செத்துப் போவதுமில்லை.-
ஏனெனில் நமது கரங்களின் செயலாகி 23

Digitized by Google

யதன் பிள்ளைகளை அவன் தன் நடுவிலே கா
ணும்பொழுது நம்முடைய நாமத்தைப்
பரிசுத்தமாக்குவார்கள். யாக்கோபின் ப
ரிசுத்தரை அவர்கள் பரிசுத்தமாக்கி இஸ்
ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்க
24 ள்.—மோசமான ஆவியாயிருந்தவர்கள்
உணர்வுள்ள அறிவை அடைந்து முறு
முறுப்புக்காரர் உபதேசங் கற்றுக்கொ
ள்ளுவார்கள்.

---

## ௩௰. அதிகாரம்.

எகிப்த்தியரின் சவிகையைத் தேடின இஸ்ரவே
லரைக் கடிந்துகொண்டது.

1 பருவதத்தின் மேற் பாவத்தைக் கூட்
டும்படிக்கு நம்மையல்லாமல் ஆலோச
னைபண்ணி நமது ஆவியையல்லாமல் தங்
களை மூடிக்கொள்ளப் பார்க்கிறவர்களு
2 ம்,-பார்வோனின் பலத்தினும் பலக்கவும்
எகிப்த்தினுடைய நிழலில் ஒதுங்கவும்
வேண்டுமென்று நம்முடைய வாக்கைக்
கேளாமல் எகிப்த்தில் இறங்கிப் போகிற
வர்களுமாகிய முரட்டாட்டமான பிள்

Digitized by Google

ளைகளுக்கு ஐயோ! என்று யெகோவாச்
சொல்லுகிறார்.— ஏனெனில் உங்களுக்கு 3
ப் பார்வோனுடைய பலன் வெட்கமா
கவும் எகிப்த்துவினுடைய நிழலொதுக்
கு இலச்சையாகவும் இருக்கும்.—அவர் 4
கள் பிரபுக்கள் சோகானிலேபோய் அ
வர்கள் தானாபதிகள் கானேஸ் மட்டுஞ்
சேருகிறார்கள்.— ஆனாலுந் தங்களுக்குச் 5
சகாயத்துக்கும் பிரயோசனத்துக்குமல்
ல, வெட்கத்துக்கும் நிந்தைக்குமே உத
வுஞ் சனத்தினாலே அனைவரும் வெட்கப்
படுவார்கள்.—தெற்கே போகிற மிருக ஜீ 6
வன்களின் நிமித்தியஞ் சுமரும் பாரமா
வது துஷ்ட சிங்கமும், கிழச் சிங்கமும்
பறக்கிற காலக்கோடி விஷமும் இருந்து
வருகிறதும் நெருக்கமும் இடுக்கமும் அ
டைவிக்கிறதுமான தேசத்துக்கு அவர்க
ள் கழுதை மறிகளுடைய முதுகின்மேல்
தங்கள் ஆஸ்திகளையும் ஒட்டகங்களுடை
ய முதுகின்மேல் தங்கள் பொக்கிஷங்க
ளையுந் தங்களுக்கு உதவாத சனத்தண்டை
க்கும் ஏற்றிக்கொண்டு போகிறார்கள்.—
ஏனெனில் எகிப்த்தியர் சகாயம்பண்ணு 7

Digitized by Google

வது மாய்மையும் வீணுமாயிருக்கும். ஆ
கையால் இராகாப்புடைய மனுஷர் சும்
மாயிருப்பார்களென்று அதற்காகக் கூ
றுகிறோம்.
8 இப்போதும் இது பிற்காலத்துக்கும்
என்றென்றைக்கும் இருக்கும்படிக்கு நீ
போய் இதை அவர்களுக்குமுன்பாக ஒ
ரு பலகையில் எழுதி ஒரு புஸ்தகத்தில் வ
9 ரை.—ஏனெனில் இவர்கள் கலகமுள்ள ச
னமும் புளுகிற பிள்ளைகளும் யெகோ
வாவுடைய வேதத்தைக் கேட்க மனதில்
லாத புத்திரருமாய் இருக்கிறார்கள்.—
10 அவர்கள் பார்க்கிறவர்களுடனே நீங்கள்
பார்க்கவேண்டாமென்றும் ஞானதிஷ்டி
யுள்ளவர்களுடனே நீங்கள் எங்களுக்கு
நிதானமான தரிசனமாய்த் தரிசனஞ்
சொல்லாமல் எங்களுக்கிதமான சொற்
களை உரைத்து எத்துவாத்தமாய்த் திஷ்
11 டியுங்களென்றும்,—நீங்கள் வழியைவி
ட்டுப் பாதையைவிலகி இஸ்ரவேலின் ப
ரிசுத்தரை எங்கள் முன்பாக இராமல் ஓ
யப் பண்ணுங்களென்றுஞ் சொல்லுகிறா
12 ர்கள்.—ஆனதுகொண்டு நீங்கள் இந்த

Digitized by Google

வார்த்தையை வெறுத்து இடுக்கமுந் தா
றுமாறுஞ் செய்கிறதை நம்பி அதைச்சார்
ந்துகொள்ளுகிறபடியினாலே,- இந்த அக் 13
கிரமம் உங்களுக்கு உயர்ந்தசுவரில் விழப்
பிதுங்குகிறதும் அசுப்பாய் ஒரு நிமிஷத்
தில் இடியப்போகிறதுமான வெடிப்பை
ப்போலிருக்குமென்றும் இஸ்ரவேலின்
பரிசுத்தர் சொல்லுகிறார்.- அவர்களைத்த 14
ப்ப விடாமல் நொருக்கப்பட்ட குயவர்
பாண்டத்தினுடைய உடையுதலுக்குச் ச
ரியாய் அவர்களை உடைப்பார், நொருங்
கின துண்டுகளில் அடுப்பிலே நெருப்பெ
டுக்கிறதற்கும் அல்லது ஒரு பள்ளத்தி
லே தண்ணீர் மொள்ளுகிறதிற்கும் ஒரு
ஓடாகிலும் அகப்படாதேபோம். —ஏ 15
னெனில் மனந்திரும்பி அமர்ந்திருந்தீர்க
ளானால் இரட்சிக்கப்படுவீர்கள். அமரிக்
கையிலும் நம்பிக்கையிலும் உங்கள் பலன்
இருக்குமென்று இஸ்ரவேலின் பரிசுத்த
ராய் இருக்கிற யெகோவாவான தேவன்
சொன்னார். ஆனாலும் நீங்கள் அப்படிச்
செய்ய மனதாய் இராமல்,— அப்படிய 16
ல்ல, குதிரைகளின்மேலேறி ஓடிப்போ

Digitized by Google

வோமென்கிறீர்கள். ஆனதுகொண்டு ஓ
டிப்போவீர்கள். வேகமான வாகனங்களி
ன் மேல் ஏறிப்போவோமென்கிறீர்கள்.
ஆனதுகொண்டு உங்களைத் துரத்துகிறவ
17 ர்கள் வேகமாய் இருப்பார்கள்.—நீங்கள்
உச்சி மலையின்மேல் ஒரு பாய்மரத்தை
ப் போலவும் மேட்டின்மேல் ஒரு கொ
டியைப்போலவும் மீந்திருக்கு மட்டா
க ஒருத்தனுடைய உதம்புதலினால் ஆயி
ரம்பேரும் ஐந்துபேருடைய உறுமுதலி
னால் அனைவரும் ஓடிப்போவீர்கள்.

*தேவன் பாக்கியமான நற்சீரைக் கட்டளையி
ட்டுச்சத்துருக்களுக்கு நிலையச்சரிக்கட்டுவா
ரென்றுவிசுவாசிகளுக்கு ஆறுதல்சொல்லுது.*

18 ஆனாலும் உங்களுக்கு இரங்குவதற்காக
த்தானே யெகோவா காத்திருந்து உங்கள்
மேல் மனதுருகுவதற்காகத்தானே உய
ருவார், ஏனெனில் யெகோவா நியாயத்
தின் தேவனாயிருக்கிறார். அவருக்குக் காத்
திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.
19 —ஏனெனில் சீயோனிலும், எருசலே
மிலுஞ் சனம் வாசமாயிருப்பதுண்டு. அ
ழுதுகொண்டேயிராய். உன் கூப்பிடுதலி

Digitized by Google

ன் சத்தத்திற்கு அவர் உன்மேல் இரங்க
வே இரங்கி அதைக்கேட்டவுடனே உன
க்கு மறுவுத்தரவுகொடுப்பார்.—எனெ 20
னில் ஆண்டவர் உங்களுக்கு நெருக்கத்தி
ன் அப்பத்தையும்,ஒடுக்குதலின் தண்ணீ
ரையுங் கொடுத்திருக்கிறார். ஆனாலும் இ
னி உன்போதகர்கள் பறந்துபோவதில்
லை. உன் கண்கள் உன்போதகர்களைக்கா
ண்கிறவைகளாயிருக்கும்.-நீங்கள் வலது 21
புறமாக அல்லது இடது புறத்துக்கு வி
லகும்போது வழியிதுவே,இதில் நடவுங்
களென்று உனக்குப்பிறகாலே சொல்லு
ம்வார்த்தையை உன்காதுகள்கேட்கும்.-
உன்வெள்ளி சுரூபங்களின் பூச்சையும் உ 22
ன்பொன்வார்ப்பான உன் ஆடையாபர
ணத்தையுந் தீட்டாகவெண்ணி அவைக
ளைத் தீட்டமானதைப்போலச் சிதறஎறி
ந்து அதைச்சீபோவென்பாய்.-அப்போ 23
து நீ நிலத்தில் விரைக்கும் உன் விரைக்
கு அவர் மழையையும், நிலத்தின்பலனா
கிய ஆகாரத்தையுங்கொடுப்பார். அது
கொழுப்பும், புஷ்டியுமாயிருக்கும். அ
க்காலத்திலே உன் ஆடுமாடுகள் விஸ்தார

Digitized by Google

மான மேய்ச்சல் இஸ்தலத்திலே மேய்ந்
24 து,—நிலத்தை உழுகிற எருதுகளுங், க
ழுதைமறிகளும், முறத்தாலுந், தூற்ற
க்கூடையாலும் புடைக்கப்பட்ட உருசி
25 யுள்ளகப்பிகளைத்தின்னும்.—கோபுரங்க
ள்விழும், பெரியகொலையின்நாளிலே உ
யரமான சகல மலையின்மேலும், உயர்ந்
தியான சகல மேட்டின்மேலும் ஆறுக
26 ளும், வாய்க்கால்களும் உண்டாய்,—யெ
கோவா தமது சனத்தின் நொிசலைக்கட்
டி அதின் அடிக்காயத்தைக் குணமாக்கு
ம் நாளிலே சந்திரனுடைய வெளிச்சஞ்
சூரியனின் வெளிச்சத்தைப் போலவுஞ்,
சூரியனுடைய வெளிச்சம் எழத்தனையா
ய் எழு பகல்களின் வெளிச்சத்தைப்போ
லவும் இருக்கும்.
27 இதோ யெகோவாவுடைய நாமந் தூ
ரத்தில் இருந்து வரும் அவருடைய கோ
பம் எரிகிறதும் பாரம் கனக்கிறதுமாய்
இருக்கும். அவருடைய உதடுகள் சின
த்தால் நிறைந்தவை. அவருடைய நா
வு பட்சிக்கிற அக்கினியைப் போல் இரு
28 க்கும்.—மாய்கைக்கான சல்லடையிலே

Digitized by Google

சாதிகளை அரிக்கும்படிக்கு அவர் ஊது
ஞ் சுவாசங் கழுத்துமட்டும் எட்டுகிற ஆ
ற்றின் வெள்ளத்தைப் போலவுஞ் சனச
தளங்களுடைய தாடைகளிற் போட்டு அ
லைகளை அலைக்கழிக்கிற கடிவாளத்தைப்
போலவும் இருக்கும்.—பண்டிகை ஆச 29
ரிக்கப்படுகிற இராத்திரியிலே பாடுகிறத
ற்குச் சரியான பாட்டும் யெகோவாவு
டைய பருவதத்துக்கு இஸ்ரவேலின் கன்
மலையண்டைக்குப்போக நாகசுரத்தோ
டே நடந்துவருகிறதற்குச் சரியான மன
மகிழ்ச்சியும் உங்களுக்கு இருக்கும்.—
யெகோவா தமது சனத்தின் பிரஸ்தாப 30
த்தைக் கேட்கப்பண்ணிக் கோபத்தின்
சினத்தினாலும் பட்சிக்கிற அக்கினிச் சு
வாலையினாலும் இடி, பெருவெள்ளங், கன்
மழையினாலுந் தமது புயத்தின் இறங்கு
தலைத் தெரிவிப்பார்.—ஏனெனில் மிலா 31
றினால் அடித்த அசூர் யெகோவாவுடைய
சத்தத்தினாலே நொருங்குண்பான்.—ச 32
ம்பவிப்பதேதென்றால், உறுதி பலனு
ன கோலுக்கு விரோதமாக வலு யுத்தங்
களால் யுத்தம்பண்ணப்பட்ட பிறகு

Digitized by Google

அது கடந்துவந்த இடங்களிலெல்லாம்
யெகோவா அவைகளுக்கு இளைப்பாறுத
ல் கொடுத்தபடியினால் மேளங்களாலும்,
சுரமண்டலங்களாலுங் கொண்டாடப்படு
33 ம்.—ஏனெனில் அக்கினிப்பள்ளம் நே
ற்றே ஆயத்தமாயிருக்கின்றது. இராசாவு
க்கும் அது சேகரமாயிருக்கின்றது. அ
தையாழமும் அகலமுமாக்கினார். அதின்
வேகுதலுக்கு அக்கினியும் விறகுகளும்
மிகுதியாயிருக்கின்றன. யெகோவாவின்
சுவாசங் கந்தகத்திரையைப்போல அதைக்
கொளுத்தும்.

---

## ௩௧. அதிகாரம்.

*எகிப்த்தியரின் சகாயத்தை நம்பின இஸ்ரவேல ரைத் தேவன் அதட்டி அசூரியரைத் தேவ செய லாய் அழிப்போமென்று யூதருக்கு வாக்குத்தத்த ம் பண்ணினது.*

1 சகாயமடைய இஸ்ரவேலுடைய பரிசு
த்தரைச் சார்ந்துகொள்ளாமலும் யெ
கோவாவைத் தேடாமலும் எகிப்த்துக்
கு இறங்கிப்போய்க் குதிரைகளைச் சார்ந்
து இரதங்களை அவைகள் திரளானதென்
றும் இராவுத்தரை அவர்கள் மகா பலசா

Digitized by Google

விகளென்றும் நம்பியிருக்கிறவர்களுக்கு
ஐயோ!—அவருமோ ஞானமுள்ளவர். 2
அவர் தம்முடைய வார்த்தைகளை மறக்கா
மல் தீங்கைவரப்பண்ணித் தீமை செய்
கிறவர்களின் வீட்டுக்கும் அக்கிரமக்கார
ரின் சகாயத்துக்கும் விரோதமாக எழு
ம்புவார்—எனெனில் எகிப்த்தியர் தெ 3
ய்வமல்ல மனுஷர்தானே. அவர்களுடை
ய குதிரைகள் ஆவியல்ல மாங்கிஷந்தா
னே. யெகோவா தமது கரத்தை நீ
ட்டுவார். அப்போது சகாயஞ் செய்
கிறவனும் இடறிச் சகாயஞ் செய்வித்
துக்கொள்ளுகிறவனும் விழுந்து அனைவ
ரும் ஏகமாய் அழிந்து போவார்கள்.—
எனென்றால் யெகோவா என்னுடனே 4
சொன்னதாவது சிங்கமுஞ் சிங்கக்குட்டி
யுந் தன்இரையின்பேரிலே கருச்சித்துத்
தனக்கு விரோதமாய்க் கூப்பிடுகிற திர
ளான மேய்ப்பரின் சத்தத்தினாலே கலங்
காமலும் அவர்கள் அமளியினாலே தா
ழாமலும் இருக்கிறதுபோல சேனைக
ளின் யெகோவா சீயோன் பருவதத்துக்
காகவும் அதின் மேட்டுக்காகவும் யுத்த

Digitized by Google

5 ம்பண்ண இறங்குவார்.—பறந்து காக்கி
ற பட்சிகளைப்போலே சேனைகளின் யெ
கோவா எருசலேமின்மேல் ஆதரவாக இ
ருப்பார். அவர் அதைக்காப்பாற்றித் தப்
பப்பண்ணுவார். அவர் அதைக் கடந்துவ
ந்து அதை விடுவிப்பார்.
6 இஸ்ரவேலின்புத்திரர் தீரப் புரண்டு
விட்டுவிட்டவர் அண்டைக்கு நீங்கள் தி
7 ரும்புங்கள்.—ஏனெனில் பாவமாக உங்
கள் கைகள் உங்களுக்குச் செய்திருந்த த
ன் தன் வெள்ளி விக்கிரகங்களையுந் தன்
தன் பொன் விக்கிரகங்களையும் அவரவர்
அக்காலத்திலே வெறுப்பார்கள்.
8 மனுஷனுடைய பட்டயமல்லாத ப
ட்டயத்தாலே அசூர் விழுவான். மனு
ஷனுடைய பட்டயமல்லாத பட்டய
மே அவனைப் பட்சிக்கும் அவன் பட்
டயத்துக்குத் தப்ப ஓடுவான் அவன் வா
9 லிபர் கலந்து போவார்கள்.—அவர்களு
டைய கன்மலை பயத்தினால் ஒழிந்துபோ
ம். அவர்களுடைய பிரபுக்கள் கொடி
யைக் கண்டு கலங்குவார்களென்கிறதைச்
சீயோனில் நெருப்பையும் எருசலேமில்

Digitized by Google

அடிப்பையுமுடைய யெகோவாச் சொல்லுகிறார்.

---

## ௩௨. அதிகாரம்.

மேசியாவினுடைய இராச்சியத்தின் பாக்கியமும் அதற்கு முன் நடக்குந் தண்டனைவிசாரிப்பும்.

இதோ நீதியாக ஒரு இராசா அரசா 1
ளுவார். பிரபுக்களும் நியாயமாகத் துரை
த்தனம்பண்ணுவார்கள்.—அவர் காற்று 2
க்கு ஒதுக்காகவும் பெருவெள்ளத்துக்கு
மறைவிடமாகவும் வரண்ட நிலத்துக்கு
வாய்க்கால்களாகவும் விடாய்த்த பூமிக்
குப் பருங் கன்மலையின் நிழலாகவும் இ
ருப்பார்.--அப்போது காண்கிறவர்களி 3
ன் கண்கள் திரும்பிப்பார்ப்பதில்லை. கே
ட்கிறவர்களின் செவிகள் கவனித்தேயிரு
க்கும்.--பதறுகிறவர்களின் இருதயம் அ 4
றிவுண்டாக உணர்ந்து தெற்றுவாயரு
டைய நாக்கு மகா தெளிவாய்ப்பேசத் தீ
வரித்திருக்கும்.--இனிமூடன் சற்குண 5
ன் என்னப்படுவதில்லை. பிசினித்தனக்
காரன் உதாரனென்று சொல்லப்படு
வதுயில்லை.--ஏனென்றால் மூடன் மாய 6

Digitized by Google

ம்பண்ணுவதற்கும் யெகோவாவுக்கு வி
ரோதமாய்த் தப்பிதம் பேசுவதற்கும் ப
சியுள்ள ஆத்துமத்தை வெறுமையாக
வைத்துத் தாகமுள்ளவனுக்குத் தாகம
டங்காதேபோகப் பண்ணுவதற்குமாகப்
பயித்தியத்தைப் பேசுகிறான், அவனிரு
7 தயம் அநியாயத்தை நடப்பிக்கும்.—பி
சினித்தனக்காரனுடைய எத்தனங்களும்
பொல்லாதவைகள், தரித்திரன் நியாயமா
யிப் பேசும்போது அவன் கள்ளவார்த்
தைகளாலே சிறுமையானவர்களைக் கெ
டுப்பதற்காகத் தீவினைகளை யோசிக்கிறா
8 ன்.—சற்குணனோ சற்குணமானவைகளை
யோசிக்கிறான், சற்குணமானவைகளின்மேல்
நிலைத்துமிருக்கிறான்.
9 சுக சீவிகளாயிருக்கிற ஸ்திரீகளே எ
ழுந்திருந்து என் சத்தத்தைக் கேளுங்க
ள், நிர்விசாரமான குமாரத்திகளே என்
10 வசனத்துக்குச் செவிகொடுங்கள்.—நிர்
விசாரிகளே வருஷத்துக்கதனமான நா
ட்களாய்த் தத்தளிப்பீர்கள், ஏனெனில்
திராட்சம் பலனற்றுப்போய் அறுப்பு
11 வராதே போம்.— சுகசீவிகளே நடுங்



Digitized by Google

ருங்கள், நிர்விசாரிகளே தத்தளியுங்கள்,
உடையைக் களைந்து உரிந்துபோட்டு அ
ரையிலிரட்டைக் கட்டிக்கொள்ளுங்கள்.
—விருப்பமான வயல்களின் நிமித்தியமு 12
ம் கனி தந்திருந்த திராட்சச்செடிகளி
ன் நிமித்தியமும் மாரடித்துப்புலம்புவா
ர்கள்.—என் சனத்தினுடைய பூமியின் 13
மேலுங் களிகூர்ந்திருந்த பட்டணத்தினு
டைய எல்லாச் சந்தோஷ வீடுகளின்மே
லுங் கூட முட்செடியும் முட்காடும் மு
ளைக்கும்.—ஏனெனில் அரண்மனை பா 14
ழாய்விடப்பட்டு ஊரின் சந்தடி விட்டுப்
போய் மேடுந் துருக்கமும் என்றென்
றைக்குங் காட்டுக் கழுதைகளின் சந்தோ
ஷமும் மந்தைகளின் மேய்ச்சலுமான
குகைகளாயிருக்கும்.— நம்முடைய மே 15
ல் உன்னதத்திலிருந்து ஆவி ஊற்றப்படு
மட்டுந்தானே, அப்போது வனாந்தரம் ப
யிர் நிலமாகிப் பயிர் நிலங் காடாகவெண்
ணப்படும்,—வனாந்தரத்திலே நியாயம் 16
வாசமாயிருந்து பயிர் நிலத்திலே நீதி த
ங்கித் தரிக்கும்.—நீதியின் செய்கை சமா 17
தானமும் நீதியின் பலன் நித்திய காலமா

Digitized by Google

யி அமரிக்கையுஞ் சுகமுமாயிருக்கும்.—
18 என் சனஞ் சமாதான தாபரத்திலும் ப
தன வாசஸ்தலங்களிலுஞ் சாங்கோபாங்
கமாய்த் தங்குமிடங்களிலுங் குடியிருக்
19 கும்.—ஆனாலுங் காட்டிடங்களிற் கன்ம
ழை பெய்யும், அந்தப் பட்டணம் மகா
20 தாழ்வாய்த்தாழ்ந்துபோம்.—தண்ணீர்
களுடைய ஓரங்களில் எங்கும் மாடுகளை
யுங் கழுதைகளையும் போகவிட்டு விரை
விரைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்.

---

## ௩௩. அதிகாரம்.

*அசூரியரின் அழிவும், சீயோன் குடிகளின் இரட்*
*சிப்பும் பாக்கியமும் முன்னறிவிக்கப்பட்டது.*

1 பாழ்க்கடிக்கப்படாதிருந்தும் பாழ்க்
கடிக்கிறவனும்,உனக்குத் துரோகம்பண்ண
ணாதிருக்கிறவர்களுக்குத் துரோகம்பண்
ணுகிறவனுமாகிய உனக்கு ஐயோ! நீ பா
ழ்க்கடித்து முடிந்த பின்பு பாழ்க்கடிக்க
ப்படுவாய், நீ துரோகம்பண்ணித்தீர்த்
தபின்பு உனக்குத் துரோகம்பண்ணுவா
௨ ர்கள்.—யெகோவாவே எங்களுக்கிரங்கு

Digitized by Google

ம் உமக்குக் காத்திருக்கிறோம், தேவரீர்
காலமாற அவர்கள் புயமும் இக்கட்டுக்
காலத்தில் எங்களிரட்சிப்புமாயிரும்.—
அமளியின் சத்தத்தினாலே சனசதளங்கள் 3
அலைந்தோடி நீர் உயருகிறதினாலே சாதிக
ள் சிதறடிக்கப்படுகிறார்கள். — பச்சைக் 4
கிளிகள் சேர்க்குமாப்போலே உங்கள்
கொள்ளை சேர்க்கப்படும், வெட்டுக்கிளி
கள் குதித்துத் திரியுமாப்போலே அதின்
மேற் குதித்துத் திரிவதுண்டு.—யெகோ 5
வா உயர்ந்தவர், ஏனெனில் உன்னதத்தி
லே வாசமாயிருக்கிறார், சீயோனை நியா
யத்தினாலும் நீதியினாலும் நிரப்புகிறார்.-
பலத்த இரட்சிப்புகளும், ஞானமும், அ 6
றிவும் உன் கால்களுடைய உறுதியாயிரு
க்கும், யெகோவாவுக்குப் பயப்படுதலே
அதின் பொக்கிஷம் —இதோ அவர்கள் 7
தானாபதிகள் வெளியிலே அலறுகிறார்க
ள், சமாதானத்துக்கனுப்பப்பட்டவர்க
ள் மனங்கசந்து அழுகிறார்கள்.—பாதை 8
கள்பாழாயிற்று,வழிகளில் நடப்போரய்ந்
தது,உடன்படிக்கையை அவத்தமாக்குகி
றான்,ஊர்களை இகழ்ச்சிபண்ணுகிறான்,ம

Digitized by Google

9 னுஷனை எண்ணாதேபோகிறான்.-பூமி து
க்கித்து விடாய்த்திருக்கின்றது, லீபனோ
ன் வெட்கி வதங்குகின்றது, சாரோன் வ
னாந்தரத்துக்கொப்பாகுகின்றது, பாசா
னுங் கர்மேலும் பாழ்க்கடிக்கப்படுகின்ற
10 து—இப்போது எழுந்திருப்போம், இப்
போது உயர்வோம், இப்போது உயர
எழும்புவோமென்று யெகோவா சொ
11 ல்லுகிறார்.—செத்தையைக் கருப்பந்தரி
த்துத் தாளடியைப் பெறுவீர்கள், உங்க
ள் ஆவி அக்கினியைப் போல உங்களையே
12 பட்சிக்கும்.—உன் சனசதளங்கள் சுண்
ணாம்பு சுடப்படுகிறதுக்கொப்பாகி வெ
ட்டுண்டமுட்செடிகளைப் போலே தீயி
லெரிக்கப்படுவார்கள்.
13 தூரத்தாரே நான் செய்கிறதைக் கேளு
ங்கள், சமீபத்தாரே நமது பராக்கிரமத்
14 தை அறியுங்களென்கிறார்.-சீயோனிலிரு
க்கிற பாவிகள் திகைக்கிறார்கள், மாயக்கா
ரரை நடுக்கம்பிடிக்கின்றது. நம்மிற் பட்
சிக்கும் அக்கினிக்கு முன்பாகத் தரித்தி
ருப்பவனார்? நம்மில் நித்திய தணலுக்கு
முன்பாகத் தாபரிப்பவனாரென்கிறார்க

Digitized by Google

ள்.-நீதியாய் நடந்து செம்மையானவை 15
களைப் பேசி இடுக்கஞ் செய்யுதலின் ஆ
தாயத்தை வெறுத்துப் பரிதானங்களை
ப் பிடியாதபடிக்குத் தன் கைகளையுத
றி இரத்தயோசனைகளைக் கேளாதபடிக்
குத் தன் செவியை அடைத்துப் பொல்
லாங்கைக் காணாதபடிக்குத் தன் கண்க
ளை மூடுகிறவனே,—அவன் உயரங்களில் 16
வாசம்பண்ணுவான், கன்மலைகளின் அர
ண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கல
ம், அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்
கப்படும், அவன் தண்ணீர் அவனுக்கு நி
சமாயிருக்கும்.—உன் கண்கள் இராசா 17
வை அவருடைய சவுந்தரியத்திலே கண்
டு தேசத்தைத் தூர எல்லைகளுள்ளதெ
ன்று பார்க்கும்.—வேதபாரகனெங்கே? 18
நிறுத்துப் பார்த்தவனெங்கே? கோபுர
ங்களை எண்ணினவனெங்கேயென்று உன்
இருதயந் திகைப்புடன் தியானிக்கும்.-
கேட்கக் கூடாதபடிக்கு அடக்கமான உ 19
தடும் உணரக் கூடாதபடிக்கு ஒருவிதமா
ன நாவுமுள்ள ஓட்டாரமான சனத்தை
இனிக்காணாய்.- நம்முடைய ஆசரிப்பின் 20

Digitized by Google

பட்டணமாகிய சீயோனை நோக்கிப்பார்,
உன் கண்கள் எருசலேமை அமரிக்கையா
ன தாபரமாகவும் பேர்க்கப்படாத கூடா
ரமாகவும் காணும், இனி அதின் கூச்சுகள்
என்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை அ
தின் கயிறுகளிலொன்றும் அறுந்துபோ
21 வதுமில்லை.—எனென்றால் அங்கே யெ
கோவா நமக்கு மகிமையுள்ளவராயுமிரு
ப்பார். அது மகா அகலமான நதிகளும்
ஆறுகளுமுள்ள தலமாயிருக்கும், வலிக்கி
ற படகு அங்கே ஓடுவதுமில்லை, பெரிய
கப்பல் அங்கே கடந்துவருவதுமில்லை.-
௨௨ ஏனெனில் யெகோவா நம்முடைய நியா
யாதிபதியும் யெகோவா நம்முடைய நி
யாயநெறியாளனும் யெகோவா நம்மு
டைய இராசனுமானவர், அவர் நம்மை இ
23 ரட்சிப்பார்.—உன் கயிறுகள் தளர்ந்து
போம் அப்படியே அவைகள் தங்கள் பா
ய்மரத்தைக் கெட்டிப்படுத்தவும் பாயை
விரிக்கவும்மாட்டாது, அப்போது திரளா
ன கொள்ளையுடைமை பங்கிடப்படும்,
சப்பாணிகள் முதலாய்க் கொள்ளையாடு
௨௪ வார்கள்.— வியாதிப்பட்டிருக்கிறேனெ

Digitized by Google

ன்று குடியானவனொருத்தனுஞ் சொல்
வதில்லை, அதில் வாசமாயிருக்கிற சனத்தி
ன் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்.

---

## ௩௪. அதிகாரம்.

*தமது சபையின் சத்துருக்களுக்குத் தேவன் நீதி
யைச் சரிக்கட்டுவது.*

சாதிகளே கேட்கிறத்துக்குக் கிட்டி 1
வாருங்கள், சனசதளங்களே கவனியுங்க
ள், பூமியும் அதின் நிறைவும் பூச்சக்கர
மும் அதினுடைய எல்லாப் பிறப்புங் கே
ட்கக்கடவது. - ஏனெனில் யெகோவாவுக் 2
கு எல்லாச் சாதிகளின் மேலுங் கடுங்கோ
பமும் அவைகளுடைய எல்லாச் சேனையி
ன் மேலும் உக்கிரமுமிருக்கின்றது, அவை
களைச் சங்காரத்துக்கு நேமித்துக் கொ
லைக்கொப்புக்கொடுக்கிறார். - அவர்களிற் 3
கொலைசெய்யப்பட்டவர்கள் எறியுண்டு
கிடப்பார்கள், அவர்கள் பிரேதங்களு
டைய நாற்றங் கிளம்பிப்போம், அவர்க
ள் இரத்தத்தினாலே மலைகள் கரையும். -
வானத்தின் சேனையெல்லாம் வாடி வான 4

Digitized by Google

ங்கள் புஸ்தகச் சுருளைப்போலச் சுருட்ட
ப்பட்டு அவைகளின் சேனையெல்லாம் இ
லைகள் திராட்சச்செடியிலிருந்து உதிரு
மாப்போலேயும் அத்திமரத்தின் காய்க
ள் உதிருமாப்போலேயும் உதிர்ந்து விழு
5 ம்.—ஏனெனில் வானங்களில் நம்முடை
ய பட்டயம் வெறித்தது, இதோ ஏதோ
மின் மேலும் நாம் சங்காரத்துக்கு நே
மித்த சனத்தின் மேலும் அது நியாயஞ்
6 செய்ய இறங்கும்.—யெகோவாவுடைய
பட்டயம் இரத்தத்தால் நிறைந்ததும்
ஆட்டுக்குட்டிகள் கடாய்களுடைய இரத்
தத்தின் கொழுப்பினாலும் ஆட்டுக்கடாய்
களுடைய குண்டிக்காய்களின் கொழுப்
பினாலும் நிணத்ததுமாம், ஏனெனில்
போத்ஸ்ராவிலே யெகோவாவுக்குப் ப
லியடிக்குதலும் ஏதோம் தேசத்திலே
7 பெரிய கொலைசெய்குதலுமுண்டு.—அ
ப்போது அவைகளோடே காண்டாமிரு
கங்களும், வலுவான எருதுகளோடே கா
ளைகளுமிறங்கிமடியும். அவர்கள் தேசம்
இரத்தப்பாய்ச்சலாகி அவர்கள் மண் தி
8 ணத்தினாற் கொழுக்கும்.—ஏனெனிற் சி

யோனுடைய வழக்கினிமித்தியம் அது
யெகோவா நீதியைச்சரிக்கட்டுகிறநாளும்
பதிலுக்குக்கொடுக்கிற வருஷமுமாயிரு
க்கும்.- அதின் ஆறுகள் பிசினாகவும் அதின் 9
மண் கந்தகமாகவும் மாறி அதின் நிலம்
எரிகிற கிசிலாய்ப்போம்.—இரவும் பக 10
லும் அது அவியாது, அதின் புகை என்
றென்றைக்குமெழும்பும், தலைமுறை த
லைமுறையாக அது பாழாயிருக்கும், சதா
காலஞ் சதாகாலமாக அதை ஆருங் கடந்
துபோவதில்லை.

நாரையும் முள்ளம்பன்றியும் அதைச் 11
சுதந்தரிக்கும், ஆந்தையுங் காக்கையும் அ
திற் குடியிருக்கும், அதின்மேல் வெட்ட
வெளியின் நூலையும் வெறுமையின் தூக்
கையும் பிடிப்பார்.—அதின்மேற் குலத் 12
தாரை இராச்சியபாரத்துக்கு அழைத்தா
ல் அங்கே அவர்களில் ஆருமில்லை, அதின்
பிரபுக்கள் அனைவரும் ஒன்றுமில்லை.—
இதின் அரண்மனைகளில் முட்செடிகளு 13
ம் அதின் கோட்டைகளிற் காஞ்சொறிக
ளும் முட்பூண்டுகளும் முளைக்கும், அ
து வலுசருப்பங்களின் தாபரமுங் கோட்

Digitized by Google

14 டான்களின் கொல்லையுமாயிருக்கும்.-அ
ங்கே வனாந்தர சீவன்களும் ஓரிகளும் ஒ
ன்றுக்கொன்று சந்தித்துப்பேயைப்பே
யீ கூப்பிடும். அங்கே இராக் குருவிகளு
15 ந் தங்கித் தாவைக் கண்டடையும்.—அங்
கே வல்லூரங் கூடுகட்டி முட்டையிட்டுக்
குஞ்சுபொரித்துத் தன்னிழலிலே கூட்டி
க்கொள்ளும். அங்கே கூளிகளுஞ் சோடு
சோடாகச் சேரும்.
16 யெகோவாவுடையபுத்தகத்திலே தே
டி வாசியுங்கள். இவைகளில் ஒன்றுங்
குறையாதிருப்பதில்லை.இதுவும் அதுவுங்
காணாதிருப்பதில்லை. ஏனெனில் அவர் த
மது வாயினாலே அதைக்கற்பித்தார். அவ
ருடைய ஆவியே அவைகளைச் சேர்க்கு
17 ம்.—அவரே அவைகளுக்குச்சீட்டுபோடு
கிறார்.அவருடையகையே அதை அவைக
ளுக்கு அளவு நூலாய்ப்பகிர்ந்துகொடுக்
கும் அவைகளென்றென்றைக்கும் அதை
ச்சுதந்தரித்துத் தலைமுறைதலைமுறையா
க அதிலே சஞ்சரித்திருக்கும்.

Digitized by Google

## ௩௫. அதிகாரம்.

புதுவேற்பாட்டுச் சவை ஆசீர்வாதமுள்ள நற்
சீராய்ச் செழிப்பது.

வனாந்தரமும் வரண்ட பூமியும் மகிழ் 1
ந்து கடுவெளி களித்துப் புஷ்பத்தைப்
போலே செழிக்கும்.—அது செழிக்க 2
வேசெழிப்பதுமல்லாமற் பூரிப்புங் க
ம்பீரமுமாய்க் களிக்கும். லீபனோனின்
மகிமையுங் கற்மேல்சாரோனென்றவை
களின் அலங்காரமும் அதுக்குக்கொடுப
டும். அவர்கள் யெகோவாவுடைய மகிமை
யையுந் நம்முடைய தேவனுடைய மாக்
கியத்தையுங் காண்பார்கள்.
நெகிழ்ந்த கைகளைத் திடப்படுத்தித் 3
தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படு
த்துங்கள்.— மனங் கலங்கினவர்களுட 4
னே நீங்கள் பயப்படாதிருங்கள் திடன்
கொள்ளுங்கள், இதோ உங்கள் தேவன்
நீதியைச் சரிக்கட்டவுந் தேவன் வதிலுக்
குக்கொடுக்கவும் வருவார். அவர் வந்து
உங்களை இரட்சிப்பாரென்று சொல்லுங்
கள்.—அப்போது குருடரின் கண்கள் தி 5

Digitized by Google

றக்கப்பட்டுச் செவிடரின் செவிகள் திற
6 வுண்டு போகும்.—அப்போது சப்பா
ணி மானைப்போலக் குதிப்பான், ஊமை
யன் நாவுங் கம்பீரிக்கும், ஏனெனில்
வனாந்தரத்திலே தண்ணீர்களுங், கடுவெ
7 ளியிலே ஆறுகளும்பிறந்தோடும்.—வெ
ட்டாந்தரை தண்ணீர்த் தடாகமுஞ் வற
ண்டதலம் நீரூற்றுக்களுமாகும் வலுசரு
ப்பங்கள் தாபரித்துக்கிடந்தவிடங்களிற்
புல்லுங் கொறுக்கைகளும் நாணலுமு
8 ண்டாயிருக்கும்.—அங்கே உயர்ந்த பா
தையும் வழியுமிருக்கும், அது பரிசுத்த
வழியென்னப்படும், தீட்டுள்ளவன் அதி
லே நடந்துவருவதில்லை. ஆர் அந்தவழி
களிலே நடக்கிறார்களோ அவர்கள் புத்தி
யீனராயிருந்தாலுந் திசைகெட்டுப் போ
9 வதில்லை.—அங்கே சிங்கமில்லை துஷ்டமி
ருகம் அதிலேறுவதுமில்லை, அங்கே தெ
ன்படுவதுமில்லை மீட்கப்பட்டவர்களே
10 அங்கேநடப்பார்கள்.—யெகோவாவால்
மீட்கப்பட்டவர்கள் திரும்பிக் கம்பீர
த்தோடே சீயோனுக்கு வருவார்கள், நித்
திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிரு

Digitized by Google

க்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும், சஞ்சலமுந் தவிப்பும் ஓடிப்போம்.

---

## ௩௰௬. அதிகாரம்.

*அசூரியாவின் இராசாவாகிய சனகேரிபின் நாமத்திலே இரப்சாக்கேவந்து எருசலேமை ஒப்புக்கொடுக்கக்கேட்டது.*

எசேக்கியா இராசாவின் பதினாலாம் 1
வருஷத்திலே சம்பவித்ததேதென்றால்,
அசூரியாவின் இராசாவாகிய சனகேரிபு
யூதாவிலிருக்கிற அரணான சகலபட்டண
ங்களுக்கு விரோதமாய் வந்தேறி அவை
களைப் பிடித்தான்.—அப்போது அசூரி 2
யாவின் இராசா லாகீசிலிருந்து இரப்
சாக்கேயைக் கனஇராணுவத்தோடே எ
ருசலேமுக்கு எசேக்கியா இராசாவண்
டைக்கு அனுப்பினான். அவன் வண்ணார
த்துறையின் வழியிலுள்ளமேல் குளத்து
மதகண்டையிலே நின்றான்.—அப்போ 3
து இலக்கியாவின் குமாரனாகிய எலியாக்
கீம் என்ற அரண்மனை விசாரிப்புக்கார
னும், சேப்னா என்ற சம்பிரதியும், அசா

Digitized by Google

ப்பின் குமாரனாகிய யோவாகென்ற கண
க்கனும் அவனண்டையிலே புறப்பட்டு
4 ப்போனார்கள்.—இரப்சாக்கே அவர்க
ளோடே சொன்னது அசூரியாவின் இ
ராசாவாகிய பெரிய அரசனானவர் உரை
க்கிறதும் நீங்கள் எசேக்கியாவுக்குச்சொ
ல்லவேண்டியதுமேதெனில் நீ நம்பியிரு
5 க்கிற இந்த நம்பிக்கை ஏது.—இது உத
டுகளின் வசனிப்புமாத்திரந்தான் என்கி
கிறேன் யுத்தத்துக்கு யோசனையும் ப
லனும்வேணுமே இப்போதும் என்னை
விட்டுப் புரண்டுவிழுந்ததற்கு நீ ஆரை ந
6 ம்பியிருக்கிறாய்—இதோ எகிப்தியனெ
ன்கிற அந்த முறிக்கப்பட்ட நாணற் கோ
லை நம்புகிறாய் அதின்மேல் ஒருத்தன் சா
ய்ந்தால் அது அவன் உள்ளங்கையிலே ப
ட்டுருவிப்போம், அப்படி எகிப்துவின்
இராசாவாகிய பார்வோன் தன்னை நம்பு
7 கிற யாவருக்குமிருக்கிறான்.—நீ என்னுட
னே எங்கள் தேவனாகிய யெகோவாவை ந
ம்புகிறோமென்றாயேயாகில் அவருடைய
மேடைகளையும் அவருடைய பலிபீடங்க
ளையும் அல்லவோ எசேக்கியா தள்ளிப்

Digitized by Google

போட்டு யூதாவோடேயும் எருசலேமி
யாரோடேயும் இந்தப் பலிபீடத்தின் மு
ன்பணியுங்களென்றானே.- இப்போதும் 8
உனக்கு இரண்டாயிரங் குதிரைகளைக்கொ
டுப்பேன். நீ அவைகள் மேலேறத்தக்கவ
ர்களை உனக்குச்சம்பாதிக்க மாட்டுவா
யோவென்று அசூரியாவின் இராசாவாகி
ய என்னாண்டவனோடே நீ சபதங்கூறே.
—பின்னை எப்படி நீ என்னாண்டவனு 9
டைய ஊழியக்காரரில் ஒரே ஒரு தலைவ
னின் முகத்தைத் திருப்புவாய் இரதங்க
ளும் குதிரைக்காரரும் வருமென்று எகி
ப்த்தியனையோ நம்பிக்கொள்ளுகிறாய்,— 10
இப்போதும் யெகோவாவையல்லாமல்
இந்தத்தேசத்தின்மேலே அதை அழிக்க
வந்தேறினேனோ இந்தத்தேசத்தின் மே
லேபோயேறி அதை அழியென்று யெ
கோவா என்னோடே சொன்னாரென்று
சொன்னான்.

அப்பொழுது எலியாக்கீமுஞ், சேப் 11
னாவும், யோவாக்கும், இரப்சாக்கேயுட
னே உம்முடைய ஊழியக்காரரோடே
சூரியபாஷையிலேபேசுமென், அதைநா

Digitized by Google

ங்கள் அறிந்தவர்கள் அலங்கத்திலிருக்கிற
சனத்தின் செவிகளிற்பட எங்களோடே
யூதபாஷையிலேபேசீராகவென்றார்கள்.
12 இரப்சாக்கேயோவென்றால் உங்களோ
டே தங்கள் கஷ்டத்தைத் தின்கவும், தங்
கள் நீரைக் குடிக்கவும் அலங்கத்தில் த
ங்கியிருக்கிற புருஷரண்டைக்கேயல்லாம
ல் உன் ஆண்டவனண்டைக்கும், உன்ன
ண்டைக்கும் என்னாண்டவன் என்னை இ
ந்த வார்த்தைகளைப் பேச அனுப்பினா
13 ரோவென்று சொல்லி,—இரப்சாக்கேநி
ன்றுகொண்டு யூதபாஷையிலே மகாசத்த
மாய்க்கூப்பிட்டுச்சொன்னதாவது, அசூ
ரியாவின் இராசாவாகிய பெரிய அரச
னுடைய வார்த்தைகளைக் கேளுங்கள்.—
14 எசேக்கியா உங்களை எத்தவொட்டாதே
யுங்கள். ஏனெனில் உங்களைத் தப்புவிக்க
15 மாட்டான்.— யெகோவா நம்மைத் தப்
பவே தப்பப்பண்ணுவார். இந்தப் பட்
டணம் அசூரியா இராசாவின் கையில் ஒ
ப்புக்கொடுக்கப்படுவதில்லையென்று எ
சேக்கியா உங்களை யெகோவாவை நம்ப
ப்பண்ணவொட்டாதேயுங்களென்று இ

Digitized by Google

ராசாச் சொல்லுகிறார்.—எசேக்கியாவி 16
ன் சொல்லைக் கேளாதேயுங்கள். எனெ
னில் அசூரியாவின் இராசா உரைக்கிறதா
வது, நீங்கள் நம்மோடே இராசியாகி ந
ம்மண்டையிலே புறப்பட்டு,—நாம் வந் 17
து உங்களை உங்கள் தேசத்தைப்போல்
இருக்கிற தானியமுந், திராட்சப்பழ இர
சமுள்ள, தேசமும் அப்பமும், திராட்ச
த் தோட்டங்களுமுள்ள தேசமுமாகிய சீ
ர்மையில் அழைத்துக்கொண்டுபோகும
ளவும் அவரவர் தன் திராட்சச்செடியின்
கனியையுந் தன் அத்திமரத்தின் கனியை
யும் புசித்து அவரவர் தன் கிணற்றி
ன் தண்ணீரைக் குடியுங்கள்.—யெகோ 18
வா நம்மைத் தப்புவிப்பாரென்று எசே
க்கியா உங்களை மோசம்போக்கவேண்
டாம். சாதிகளுடைய தேவர்களில் அ
வரவர் தங்கள் தேசத்தை அசூரியா இரா
சாவின் கைக்குத் தப்புவித்ததுண்டோ?
—அமாத், அர்பாத் பட்டிணங்களின் தே 19
வர்கள் எங்கே, செப்பர்வாயீமின் தேவ
ர்கள் எங்கே, சமாரியாவை நமது கைக்கு
த் தப்புவிப்பாருண்டாயிருந்தார்களோ?

Digitized by Google

20 -யெகோவா எருசலேமை நம்முடைய
கைக்குத் தப்புவிப்பாரென்னத்தக்கதாக
இந்தத்தேசங்களுடைய எல்லாத் தேவர்க
ளிலுந் தங்கள்தேசத்தை நம்முடையகை
க்குத் தப்புவித்தவராரென்கிறாரென்று
21 சொன்னார்.-ஆனாலும் அவர்கள் அவனுக்
கு ஒரு வார்த்தையும் பிரத்தியுத்தாரமா
கச் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள்,
ஏனெனில் மறுவுத்தரவு சொல்லாதேயுங்
களென்பது இராசாவின் கட்டளையாய்
இருந்தது.
22 அப்போது இலக்கியாவின் குமாரனாகி
ய எலியாக்கீமென்ற அரண்மனை விசாரிப்
புக்காரனும் சேப்னாவென்ற சம்பிரதியு
ம் ஆசாப்பின் குமாரனாகிய யோவாகென்
ற கணக்கனும் வஸ்திரங்களைக் கிழித்துக்
கொண்டவர்களாய் எசேக்கியாவண்டை
க்குவந்து அவனுக்கு மறுவுத்தரவு இர
ப்சாக்கேயின் வார்த்தைகளை அறிவித்தா
ர்கள்.

Digitized by Google

## ௩௭. அதிகாரம்.

---

எசேக்கியா அசூரியா இராசாவின் கைக்கு அதிசயமான தேவ வல்லமையினாலே நீங்கலாக்கிவிடுவிக்கப்பட்டது.

இராசாவாகிய எசேக்கியா இதைக்கே 1
ட்டபோது சம்பவித்ததேதென்றால், அ
வன் தன் வஸ்திரங்களைக் கிழித்து இரட்
டுடுத்துக்கொண்டு யெகோவாவுடைய வீ
ட்டுக்குட் பிரவேசித்து,— அரண்மனை 2
விசாரிப்புக்காரனாகிய எலியாக்கிமையும்,
சம்பிரதியாகிய செப்னாவையும், ஆசாரிய
ர்களுடைய மூப்பர்களையும், ஆமோத்
சின் குமாரனாகிய எசாயாவென்ற தீர்க்க
தரிசியண்டைக்கு இரட்டுடுத்தவர்களாக
அனுப்பினான்.— அவர்கள் அவனுடனே 3
இந்த நாள் நெருக்கமுஞ் சீறுபாறுந் தூ
ஷணமும் அனுபவிக்கிறநாளாமே,எனெ
னிற் பிள்ளைகள் பேறுநோக்கச் சமீபித்
தது, ஆனாலும் பெறப் பலனில்லை.—
சீவனுள்ள தேவனை நிந்திக்கவும் உன் தே 4
வனாகிய யெகோவா கேட்டிருக்கிற வார்
த்தைகளாலே சீறுபாறுபண்ணவும் அசூ

Digitized by Google

ரியாவின் இராசாவாகிய தன்னாண்டவனா
ல் அனுப்பப்பட்ட இரப்சாக்கே சொன்
ன வார்த்தைகளை உன் தேவனாகிய யெ
கோவா கேட்டாராக்கும், ஆகையால் இ
ன்னம் மீதியாய் வைக்கப்பட்டவர்களுக்
காக விண்ணப்பஞ் செய்வாயாகவென்று
எசேக்கியாச் சொல்லச் சொன்னாரென்
5 று,—எசேக்கியா இராசாவின் ஊழியக்
காரர் எசாயாவண்டையிலே வந்து சொ
ன்னார்கள்.

6 அப்போது எசாயா அவர்களுடனே
அசூரியாவுடைய இராசாவின் ஊழியக்கா
ரர் நம்மைத் தூஷணித்ததும் நீ கேட்
டதுமான வார்த்தைகளினாலே பயப்ப
7 டாதே.-இதோ அவன் ஒரு செய்தியைக்
கேட்டுத் தன் தேசத்துக்குத் திரும்புவ
தற்கான ஆவியை நாம் அவனுக்குட்கொ
டுத்து அவனை அவனுடைய தேசத்திலே
பட்டயத்தால் விழுந்துபோகப் பண்
ணுவோமென்று யெகோவா உரைக்கிறா
ரென்கிறதை உங்கள் ஆண்டவனோடே
சொல்லுங்களென்றான்.

8 இரப்சாக்கே திரும்பிப் போய் அசூரி

Digitized by Google

யாவின் இராசா இலாகீசை விட்டுப் புற
ப்பட்டானென்று கேட்டு அவன் லீப்னா
வுக்கு விரோதமாக யுத்தம்பண்ணக் க
ண்டான்.-ஆனாலும் எத்தியோப்பியாவி 9
ன் இராசாவாகிய தீழாக்கா உம்மோடு யு
த்தம்பண்ணப் புறப்பட்டானென்று செ
ய்தியைக் கேட்டான். அதைக் கேட்ட
போது, அவன் எசேக்கியாவண்டைக்கு
த் தானாபதிகளை அனுப்பிச் சொன்னதா
வது,—நீங்கள் யூதாவின் இராசாவாகிய 10
எசேக்கியாவுக்குச் சொல்லவேண்டியதே
தெனில், எருசலேம் அசூரியாவுடைய இ
ராசாவின் கையிலே ஒப்புக்கொடுக்கப்ப
டுவதில்லையென்று நீ நம்பியிருக்கிற உ
ன் தேவன் உன்னை எத்தவொட்டாதே.-
இதோ அசூரியாவின் இராசாக்கள் எல் 11
லாத் தேசங்களுக்கும் அவைகளைச் சங்க
ரிக்கும்படிக்குச் செய்ததை நீ கேட்டா
யே. நீ தப்புவாயோ!-என் பிதாக்கள் அ 12
ழித்துப்போட்ட கோசேனும் ஆரானு
ம் ரேத்சேப்பும் தெலாசாரியிலிருந்த எ
தேனின் புத்திரருமென்ற சாதிகளை அ
வர்களுடைய தேவர்கள் தப்புவித்ததுண்

Digitized by Google

13 டோ!—ஆமாத்தின் இராசாவும், அர்பா
த்தின் இராசாவும், செப்பற்வாயீம், எனா,
ஈவா பட்டினங்களின் இராசாவும் எங்
கேயென்று சொல்லுங்களென்றான்.
14 எசேக்கியா தானுபதிகளின் கையிலே
நிருபங்களை வாங்கி அவைகளை வாசித்தா
ன். பிறகு எசேக்கியா யெகோவாவுடைவீ
ட்டுக்குப் போயேறி அவைகளை யெகோ
15 வாவுக்கு முன்பாக விரித்து, —யெகோ
வாவை நோக்கிப்பண்ணின விண்ணப்ப
16 மாவது,— சேனைகளின் யெகோவாவே,
கேருபீன்களின் மேல் வாசம்பண்ணுகி
ற இஸ்ரவேலின் தேவனே, தேவரீர் ஒரு
த்தரே பூமியின் இராச்சியங்களுக்கெல்
லாந் தெய்வமானவர், தேவரீர் வானத்தை
17 யும் பூமியையும் உண்டாக்கினீர்.— யெ
கோவாவே! உமது செவியைச் சாய்த்து
க்கேளும், யெகோவாவே! நீர் உமது க
ண்களைத் திறந்து பார்த்துச் சன்னேரீப்
சீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்கு அ
னுப்பின எல்லா வார்த்தைகளையுங் கே
18 ளும்.—மெய்தான் யெகோவாவே அசூ
ரியர்வின் இராசாக்கள் எல்லாத் தேசங்க

Digitized by Google

ளையும் அவைகளின் நாட்டையும் பாழ்க்க
டித்து,-அவைகளின் தேவர்களை நெருப் 19
பிலே போட்டார்கள், ஏனெனில் அவர்க
ள் தேவர்களாய் இராமல் மனுஷர் கைக
ளின் வேலையாகிய மரமுங் கல்லுமாயி
ருந்தது, ஆகையால் அவைகளை நிறுதூளி
யாக்கினார்கள். — இப்போதும் எங்கள் 20
தேவனாகிய யெகோவாவே தேவரீரொரு
த்தரே யெகோவாவென்று பூமியின் இ
ராச்சியங்களெல்லாம் அறியும்படிக்குத்
தேவரீர் எங்களை அவன் கைக்கு நீங்கலா
க்கி இரட்சியுமென்று எசேக்கியா விண்
ணப்பம்பண்ணினான்.

அப்போது ஆமோத்சின் குமாரனாகி 21
ய ஏசாயா எசேக்கியாவுக்குச் சொல்லிய
னுப்பினதாவது, இஸ்ரவேலின் தேவனா
கிய யெகோவா உரைக்கிறதேதெனில், நீ
அசூரியாவின் இராசாவாகிய சனகெரிபி
ன் நிமித்தியம் நம்மை நோக்கி விண்ண
ப்பம்பண்ணினாயே. — அவனைக்குறித்து 22
யெகோவா உரைக்கிற வசனமாவது, சீ
யோன் குமாரத்தியாகிய கன்னியாஸ்திரி
உன்னை இகழ்ந்து உன்னை யாகடியம்ப

Digitized by Google

ண்ணுகிறாள். எருசலேம் குமாரத்தி உன்
பின்னாலே தலையைத் துலுக்குகிறாள்.—
23 ஆரை நிந்தித்துத் தூஷணித்தாய், ஆரு
க்கு விரோதமாய்ச் சத்தத்தை உயர்த்தி
னாய்! நீ இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு வி
ரோதமாகவல்லவோ உன் கண்களை மேட்
24 டிமையாய் நெரித்தாய்!—உன் ஊழியக்
காரரைக்கொண்டு நீ ஆண்டவரை நிந்தி
த்து என் இரதங்களின் திரளினாலே நா
ன் லீபனோனின் பக்கங்களாகிய மலைகளி
ன் உயரத்திலேறினேன், அதின் ஓங்கலா
கிய அதின் கேதுருக்களையுந் தெரிந்து
கொள்ளப்பட்ட பாய்மரவிருட்சங்களை
யும் நான் வெட்டி அதின் கடைசி உயர
மாகிய அதின் செழும்பலான காடுமட்
25 டும் வருவேனென்றும்,—நான் ஊற்று
களை வெட்டித் தண்ணீர்களைக் குடித்தே
ன், என் உள்ளங் கால்களின் அடியினாலே
எகிப்த்துவின் ஆறுகளை எல்லாம் வரள
வும் பண்ணுவேனென்றுஞ் சொன்னாய்.
26 -நாம் வெகு காலத்துக்கு முன் அதைச்
செப்பனிட்டுப் பூருவ நாட்கள்முதற்கொ
ண்டு அதைச் செய்ய யோசித்திருக்கிறே


Digitized by Google

மென்று நீ கேட்டதில்லையோ? இப்போ
து நீ அரணான பட்டணங்களைப் பாழா
ன மண்மேடுகளாக்குகிறவனாயிருக்க அதை
வரப்பண்ணினோம்.-அதினாலே அவைக 27
ளின் குடிகள் கையிளைத்தவர்களாகிக் கல
ங்கி வெட்கப்பட்டு வெளியின் பூண்டுக்கு
ம் பச்சையான முளைக்கும் வீடுகளின்
மேல் முளைத்த புல்லுக்கும் ஓங்கி வளரா
ததுக்குமுன் தீய்ந்துபோன பயிருக்குஞ்
சமானமானார்கள்.—ஆனாலும் உன் இரு 28
ப்பையும், உன் புறப்படுதலையும், உன் வ
ருகையையும் நீ நமக்கு விரோதமாய்க்
கொந்தளிக்கிறதையும் அறிவோம்.—ஆ 29
னதுகொண்டு நீ நமக்கு விரோதமாய்க்
கொந்தளித்து உன் ஆங்காரம் நமது செ
விகளிலேறினபடியினாலே நாம் நம்மு
டைய துறட்டை உன் மூக்கிலும் நம்மு
டைய கடிவாளத்தை உன் உதடுகளிலும்
போட்டுநீ வந்தவழியே உன்னைத் திருப்பி
க்கொண்டு போவோமென்பதுதானே.
—உனக்கோ அடையாளமாயிருப்பதாவ 30
து இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகி
றதையும் இரண்டாம் வருஷத்திலே அதி

Digitized by Google

ஞல் விளைகிறதையுஞ் சாப்பிடு. மூன்று
ம் வருஷத்திலோ விதைத்து அறுத்துத்
திராட்சத்தோட்டங்களை நாட்டி அவை
31 களின் கனிகளைச் சாப்பிடுங்கள்.-யூதாவி
ன் வீட்டாரில் தப்பி மீதியானவர்கள் அ
ப்புறந் தாழ வேர்ப்பற்றி உயரக் கனி
32 கொடுப்பார்கள்.-ஏனெனில் மீதியானவ
ர்கள் எருசலேமிலுந் தப்பினவர்கள் சீ
யோன் பருவதத்திலுமிருந்து புறப்படு
வார்கள், சேனைகளுடைய யெகோவாவி
33 ன் சுறுசுறுப்பு அதைச் செய்யும்.— ஆ
கையால் யெகோவா அசூரியாவின் இரா
சாவைக் குறித்து உரைக்கிறதாவது, அ
வன் இந்தப் பட்டிணமட்டும் வருவதுமி
ல்லை, அதிலே அம்பை எய்வதுமில்லை. அ
துக்கு முன் கேடயத்தோடே வருவது
மில்லை. அதுக்கு விரோதமாய்க்கொத்த
34 ளம்போடுவதுமில்லை. — அவன் இந்த
ப் பட்டணத்துக்குட் பிரவேசியாமல்த்
தான் வந்த வழியே திரும்பிப்போவான்.
35 —ஏனெனில் நம்முடைய நிமித்தியமாக
வும் நம்முடைய தாசனாகிய தாவீதின் நி
மித்தியமாகவும் நாம் இந்தப் பட்டிண

Digitized by Google

த்தை இரட்சிக்கும்படிக்கு அதற்காதர
வாயிருப்பேனென்கிறதை யெகோவா
உரைக்கிறாரென்று சொல்லியனுப்பினு
ன்.—அப்போது யெகோவாவுடையதூ 36
தன் புறப்பட்டு அசூரியன் பாளயத்தில்
நூற்றெண்பத்தையாயிரம் பேரைச் சங்
கரித்தான், அவர்கள் அதிகாலமே எழுந்
திருக்கும்போது இதோ எல்லாருஞ் செ
த்த சவங்களாய்க் கிடந்தார்கள்.

அப்போது அசூரியாவின் இராசாவா 37
கிய சனகேரிப் பயணப்பட்டுத் திரும்பி
க்கொண்டுபோய் நினிவேயில் இருந்து
விட்டான்.—பிறகு சம்பவித்ததேதெனி 38
ல் அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின்
வீட்டிற் பணிந்துகொள்ளுகிறபோது அ
வன் குமாரராகிய அதிர்மேலேக்குஞ் ச
ரேத்சேரும் அவனைப் பட்டயத்தாலே
வெட்டிப்போட்டு அறாராத்தேசத்துக்
குத் தப்பியோடிப் போனார்கள். அவன்
குமாரனாகிய எசர் காதோன் அவன் பட்
டத்துக்குவந்து அரசாண்டான்.

Digitized by Google

## ௩௮. அதிகாரம்.

சாகக்கிடந்த எசேக்கியாவின் ஆயிசோடே
கர்த்தர் பதினைந்துவருஷங்களைக்கூட்டினது.

1 அந்நாட்களில் எசேக்கியா சாகத்தக்க
கவியான வியாதிப்பட்டிருந்தான், அப்
போது ஆமோத்சின் குமாரனாகிய எசா
யாவென்ற தீர்க்கதரிசி அவனண்டைக்கு
வந்து அவனுடனே உன் வீட்டுக்குப்ப
ண்ணவேண்டிய திட்டங்களைக் கட்டளை
பண்ணு, எனெனில் நீ பிழையாமல் மரி
ப்பாயென்றுயெகோவா சொல்லுகிறார்
2 என்றான்.—அப்போது எசேக்கியா தன்
முகத்தைச் சுவர்ப்புறமாகத்திருப்பி யெ
கோவாவை நோக்கி விண்ணப்பம்பண்
3 ணி,—ஆ! யெகோவாவே, நான் உமக்கு
முன்பாக உண்மையும் மன உத்தமமுமா
ய்நடந்துகொண்டு உமது பார்வைக்கு ந
லமானதைச் செய்தேனென்கிறதை நி
னையுமே என்று எசேக்கியா மகா அழு
கையாய் மிகுதியாய் அழுதான்.
4 அப்போது எசாயாவுக்குண்டான யெ
5 கோவாவுடைய வார்த்தையாவது,— நீ

போய் எசேக்கியாவுடனே சொல்லவே
ண்டியது உன் தகப்பனாகிய தாவீதின்தே
வனாயிருக்கிற யெகோவா சொல்லுகிற
தேனெனில் உன் விண்ணப்பத்தைக்கேட்
டோம். உன் கண்ணீரைக்கண்டோம் இ
தோ நாம் உன் நாட்களோடே பதினை
ந்து வருஷங்களைக்கூட்டி,—அசூரியாஇ 6
ராசாவின் கைக்கு உன்னையும் இந்தப் ப
ட்டணத்தையுந் தப்புவித்து இந்தப் பட்
டணத்துக்கு ஆதரவாகவிருப்போம்.—
இதோ நாம் ஆகாசுடைய சூரியகடியார 7
த்தில் வரிக்கு வரியிறங்கின நிழலைப் பத்
துவரி பின்னிட்டுத்திருப்புவோம் என்று
ர்.—தாஞ் சொன்ன இந்த வார்த்தையின் 8
படி யெகோவாச் செய்வாரென்கிறத்து
க்கு இது யெகோவாவால் உனக்கடையா
ளமாயிருக்குமென்று சொல்லென்றார்.
அப்படியே கடியாரத்தில் இறங்கியிருந்த
சூரியநிழல் பத்துவரி திரும்பிற்று.

யூதாவின் இராசாவாகிய எசேக்கியா வி 9
யாதியாகித் தன் வியாதியும் நீங்கிச் சொ
ஸ்தமான போது எழுதிவைத்ததாவது,-
என் குறையாயிசின் வருஷங்களுக்குச் சே 10

Digitized by Google

ராமற் பாதாள வாசல்களுக்குட்படுவே
னென்று நான் என் நாட்கள் அறப்புண்கி
11 றபோது சொன்னேன்.-யெகோவாவை
யெகோவாவையே நான் இனி உயிரோடி
ருக்கிறவர்களின் தேசத்திலே தரிசிப்பதி
ல்லை.நான் இனிப் பூலோகக் குடிகளோடி
12 ருந்து மனுஷரைக் காண்பதில்லை.—என்
ஆயிசு மேய்ப்பனுடைய கூடாரத்தைப்
போல் என்னை விட்டுப் பேர்ந்துபோகின்
றது.நெய்கிறவன்பாவையறுக்கிறாப்போ
ல் என் சீவனை அறுக்கக்கொடுக்கிறேன்.
என்னை நூற்பாவிலிருந்தறுத்துப்போடு
கிறார், இன்றிராவைக்குள்ளே என்னை மு
13 டிவடையப்பண்ணுவீர்.— விடியற்காலத்
தோடென் எண்ணஞ் சரியாயிற்று, சிங்க
கத்தைப்போல் என் எலும்புகளை எல்லா
ம் நொறுக்குவார்,இன்று இரவைக்குள்
ளே என்னை முடிவடையப்பண்ணுவீர் எ
14 ன்று சொல்லி,— நமூட்டைப்போலுந்
தகைவில்லான் குருவியைப்போலுங் கீச்
சென்றுகூவினேன், புறாவைப்போலப்பு
லம்பினேன், என் கண்கள் உயரப் பா
ர்க்கிறதினாலே பூத்துப்போயிற்று, யெ

Digitized by Google

கோவாவே ஒடுங்கிப் போகிறேன், என
க்காக மேற் போட்டுக்கொள்ளுமென்
றேன்.—நான் என்ன சொல்லுவேன் அ 15
வர் எனக்கு உத்தரவுகொடுத்தார், அந்த
ப் பிரகாரமுஞ் செய்தார். என் ஆத்து
மத்தின் கசப்பை என் ஆயிசு வருஷங்க
ளிலெல்லாம் நினைத்து நடந்துகொள்வே
ன்.—ஆண்டவரே அதினாற்பிழைக்கிறார்க 16
ள். அதில் முழுதும் என் ஆவியின் சீவன்,
இருக்கின்றது என்னைச் சொஸ்தப்படவு
ம் பிழைக்கவும்பண்ணினீர்.—இதோ ச 17
மாதானத்துக்குப் பதிலாக எனக்கு மகா
கசப்பு வந்திருந்தது, தேவரீரோ என் ஆ
த்துமத்தை அழிவின் குழிக்கு விலக்கி அ
ரவணைத்தீர், ஏனெனில் என் பாவங்களை
எல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எ
றிந்துவிட்டீர்.—ஏனென்றால் பாதாளம் 18
உம்மைத் துதிப்பதும் மரணம் உம்மை
ப் போற்றுவதுமில்லை. குழியில் இறங்கு
கிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தி
யானிக்கிறதில்லை.- உயிரோடே உயிரோ 19
டிருக்கிறவனே உம்மை நான் இன்று செ
ய்கிறதுபோலே துதிப்பான். தகப்பன்

Digitized by Google

பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தை அறி
20 விப்பான்.—யெகோவா என்னை இரட்சி
க்க வந்தார், ஆகையால் எங்கள் சீவனு
டைய எல்லா நாட்களிலுஞ் யெகோவா
வுடைய வீட்டிலே என் கீதவாத்தியங்க
ளை வாசிப்போமென்று எழுதிவைத்தா
21 ன்.—அத்திப் பழக் குழம்பை எடுத்து
வந்து எரிபந்தப் பருவின் மேலே பற்று
ப்போடுங்கள், அப்போது பிழைப்பா
ரென்று எசாயாச் சொல்லியிருந்தான்.
22 —அப்போது எசேக்கியா நான் யெகோ
வாவுடைய வீட்டுக்குப் போயேறுவதற்
கு அடையாளம் என்னவென்று கேட்டி
ருந்தான்.

---

## ௩௰௯. அதிகாரம்.

பாபேலுடைய இராசாவின் தானாதிபதிகளு
க்கு எசேக்கியா தன் பொக்கிஷங்களைக்காண்
பித்தபோது, எசாயாவின் வாயினாலே கேட்
டதீர்க்கதரிசனம்.

1 அக்காலத்திலே பாபேலுடைய குமா
ரனாகிய மேரோதாக் பாலாதான் என்ற
பாபேலின் இராசா எசேக்கியா வியாதி

Digitized by Google

ப்பட்டு ஆரோக்கியமானதைக்கேட்டு அ
வனண்டைக்குக் காகிதங்களையும் வெகு
மானத்தையும் அனுப்பினான். — அவர்க 2
ள் பேரிலே எசேக்கியா சந்தோஷப்பட்
டு அவர்களுக்குத் தன் பொக்கிஷ சாலை
யையும், வெள்ளியையும், பொன்னையு
ம், கந்தவருக்கங்களையும், நல்ல பரிமள
தயிலத்தையும், தன் ஆயுத சாலையனைத்
தையும், தன் பொக்கிஷங்களிலுள்ளதெ
ல்லாவற்றையுங் காண்பித்தான். தன் வீட்
டிலுந் தன்னுடைய எல்லா இராச்சியத்
திலும் எசேக்கியா அவர்களுக்குக் காண்
பியாத பொருளில்லை.
அப்போது ஏசாயாத்தீர்க்கதரிசிஎசேக் 3
கியா இராசாவண்டைக்குவந்து அவனுட
னே அந்த மனுஷர் என்னசொன்னார்கள்?
எங்கேயிருந்து உம்மண்டைக்கு வந்தார்
களென்றான். அதற்கு எசேக்கியா பாபே
லென்கிற தூரதேசத்திலிருந்து என்னண்
டைக்குவந்தார்களென்றான். — அப்போ 4
து அவன் உம்முடைய வீட்டிலே என்ன
த்தைக்கண்டார்களென்றான். அதற்கு எ
சேக்கியா என் வீட்டிலுள்ளதெல்லாவ

Digitized by Google

ற்றையுங் கண்டார்கள். என் பொக்கிஷங்
களில் நான் அவர்களுக்குக் காண்பியாத
5 பொருளில்லையென்றான்.— அப்போது
எசாயா எசேக்கியாவுடனே சொன்ன
தாவது சேனைகளுடைய யெகோவாவின்
6 வார்த்தையைக்கேளும்.—இதோ நாட்
கள்வரும் அப்போது உன் வீட்டிலுள்ள
திலும் உன் பிதாக்கள் இந்நாள்வரைக்கு
ஞ் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய்வை
க்கப் படாமல் எல்லாம் பாபேலுக்குக்
7 கொண்டுபோகப்படும்.- நீ பெறப்போ
கிற உன் சந்தானமாகிய உன் குமாரரி
லுஞ் சிலரைப் பாபேலுடைய இராசாவி
ன் அரண்மனையிற் பிரதானிகளாயிருக்க
எடுப்பார்களென்று யெகோவாச் சொன்
8 னாரென்றான்.—அப்போது எசேக்கியா
எசாயாவுடனே நீ சொன்ன யெகோவா
வுடையவார்த்தை நல்லதேயென்றுசொ
ல்லி என் நாட்களிலாகிலுஞ் சமாதான
மும் உண்மையும் இருக்குமேயென்றான்.

Digitized by Google

---

## ௪௰. அதிகாரம்.

மேசியாவின்கிருபையுள்ள வருகையையும், யோ
வானிஸ்நானனாலும், அப்போஸ்தலராலுங் கூ
றப்படுஞ் சுவிசேஷத்தின் பிரசங்கிப்பையும்
முன்னறிவித்தது.

நீங்கள் நமது சனத்தை ஆற்றுங்கள், 1
தேற்றுங்கள்.- நீங்கள் எருசலேமுடனே 2
பட்சமாய்ப் பேசி அதின் போர் முடிந்
ததென்றும் அதின் அக்கிரமம் நிவிர்த்தி
யாக்கப்பட்டதென்றும் அது தன்னுடை
ய எல்லாப் பாவங்களின் நிமித்தியம் யெ
கோவாவின் கையில் இரட்டிப்பாய் அ
டைந்து தீர்ந்ததென்றும் அதுக்குக் கூ
றுங்களென்றும் உங்கள் தேவன் சொல்
லுகிறார்.— வனாந்தரத்திலே யெகோ 3
வாவுடைய வழியை ஆயத்தப்படுத்துங்க
ள், நம்முடைய தேவனுக்கு அந்தரவெ
ளியிலே பாதையைச் செவ்வைபண்ணுங்
களென்றும்,— பள்ளமெல்லாம் உயர்த் 4
தப்பட்டுச் சகல மலையுங் குன்றுந் தாழ்
த்தப்பட்டுக் கோணலானது செவ்வையா
கிக் கரடுமுரடானவைகள் சமனாக்கடவ

Digitized by Google

5 தென்றும்,-யெகோவாவின் மகிமை வெ
ளியரங்கமாகும். அதை எல்லா மாமிசமு
ம் ஏகமாய்க் காணும்,ஏனெனில் யெகோ
வாவின் வாக்கு அதை உரைத்ததென்று
6 ம் கூப்பிடுகிற சத்தமுண்டாம்.— கூப்பி
டு என்றொரு சத்தமுண்டாம், என்னத்
தைக் கூப்பிட்டுச் சொல்லுவேனென்கிறா
ன், எல்லா மாமிசமும் புல்லைப்போலும்
அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூ
7 வைப் போலும் இருக்கின்றது.-யெகோ
வாவின் ஆவி அதின் மேல் ஊதும் போ
து புல்லுலர்ந்து பூவுதிரும்,சனமே புல்
8 லு.-புல்லுலர்ந்து பூவுதிரும். நமது தே
வனுடைய வசனமோ என்றென்றைக்கு
ம் நிற்குமென்பதையேயென்று உரைக்
கும்.

9 சீயோனென்ற சுவிசேஷகியே நீ உயர்
ந்த பருவதத்தில் ஏறு, எருசலேமென்
ற சுவிசேஷகியே உன் சத்தத்தைப் பல
த்தோடே உயர்த்து பயப்படாமல் அ
தை உயர்த்தி யூதாவின் பட்டணங்களு
டனே இதோ உங்கள் தேவனென்று சொ
10 ல்லு,— இதோ யெகோவாவாகிய ஆண்



Digitized by Google

டவர் பலவானுக்கு விரோதமாய்வருகிறு
ர், அவர் கைப்புயம் அவனை ஆண்டுகொ
ள்ளும், இதோ அவருடைய பலன் அவ
ரோடுங் கூட வருகின்றது, அவருடைய
பலபாகம் அவர் முகத்துக்கு முன்பாகப்
போகின்றது.- மேய்ப்பனைப்போலத் த 11
மது மந்தையை மேய்ப்பார் ஆட்டுக்கு
ட்டிகளைத் தமது புயத்திலே சேர்த்துத்
தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை
மெதுவாய் நடத்துவார்.

விக்கிரகாராதனைக்காரராகிய லோக ஞானி
களின் பெரும் பயித்தியத்தையுந் தேவக் கிரி
யைகளால் விளங்கிய தேவனுடைய மகிமை
யையுங் காண்பித்தது.

தண்ணீர்களைத் தன் கைப்பிடியால் அ 12
ளந்து வானங்களைச் சாணளவாகத் திட்ட
ம்பார்த்துப் பூமியின் மண்ணை மரக்கா
லால் அளந்து பருவதங்களைக் கயிற்றாக்
கோலாலும் மேடுகளைத் தராசாலும் நி
றுத்தவனுர்?— யெகோவாவுடைய ஆவி 13
யைத் திடப்படுத்தி அவருக்கு ஆலோச
னைக்காரனுய் அவருக்கு அறிவுண்டாக்கி
னவனுர்.- தமக்கு உணர்வுண்டாக்கவுந் த 14
ம்மை நியாய வழியிலே உபதேசிக்கவும்

Digitized by Google

தமக்கு அறிவைக் கற்றுக்கொடுக்கவுந் த
மக்கு விவேகங்களின் வழியை அறிவிக்க
வும் அவர் ஆரோடே ஆலோசனைபண்
15 ணிக்கொண்டார்,-இதோ சாதிகள் ஏற்றச்
சாலிலே தொங்கும் துளியாகவும் தரா
சிற் படிந்த தூசியாகவும் எண்ணப்பட்
டிருக்கிறார்கள், இதோ தீவுகளை ஒரு அணு
16 வைப்போலத் தூக்குகிறார்.- லீபனோன்
நெருப்புக்கும்போதாது, அதின் மிருக
17 சீவன்கள் தகனபலிக்கும் போதாது—ச
கல சாதிகளும் அவருக்கு முன்பாக ஒன்
றுமில்லாததுபோலிருந்து ஏதுமற்றதி
லும் கடையாகவும் வெறுமையாகவும் அ
வரால் எண்ணப்படுகின்றது.
18 இப்படியிருக்கத்தேவனை ஆருக்குச்சா
யலாக்குவீர்கள் அல்லது எந்தச் சாயலை
19 அவருக்கொப்பிடுவீர்கள்?—கன்னான் ஒ
ரு சுரூபத்தைவார்க்கிறான் தட்டான் பொ
ன்தகட்டால் அதை மூடி அதற்கு வெள்
ளிச்சங்கிலிகளைப் பொருத்தவைக்கிறான்.
20 —அதற்குக் கொடுக்க வகையில்லாதவன்
உளுத்துப்போகாத மரத்தைத் தெரிந்
துகொண்டு அசையாத ஒரு சுரூபத்தை

Digitized by Google

ச் செப்பனிட விவேகமுள்ள ஒரு தச்ச
னைத் தனக்குத் தேடுகிறான்.—நீங்கள் அ 21
றிந்ததில்லையோ, நீங்கள் கேட்டதில்லை
யோ, உங்களுக்கு ஆதிமுதலாய் அறிவிக்
கப்பட்டதில்லையோ, பூமி அஸ்திபாரப்
பட்டதை உணராதிருக்கிறீர்களோ.—அ 22
வர் பூமியினுடைய உண்டையின்மீதில் உ
ளுக்கார்ந்திருக்கிறவர் அதின் குடிகள் வெ
ட்டுக்கிளிகளைப் போல் இருக்கிறார்கள்.
அவர் வானங்களை மெல்லிய பாவாடை
யைப்போலப் பரப்பிக் குடியிருக்கிறவர்
களுக்கு அவைகளைக் கூடாரத்தைப்போ
ல் விரிக்கிறவர்.—அவர் தலைவர்களை மா 23
யிகையாக்கிப்போட்டுப் பூமியின் நியா
யாதிபதிகளை அவாந்தரையாக்கிறவர்.—
அவர்கள் திரும்ப நாட்டப்படுவதுமில் 24
லை, விரைக்கப்படுவதுமில்லை, வெட்டப்
பட்ட அவர்களுடைய அடிமரந் திரும்ப
த் தரையிலே வேர் விடுவதுமில்லை, அவர்
கள்மேல் அவர் ஊதவேபட்டுப்போவா
ர்கள். பெருங்காற்று அவர்களை ஒரு துரு
ம்பைப்போலடித்துக்கொண்டுபோம்.—
பின்னை நம்மை ஆருக்கொப்பான சாய 25

Digitized by Google

லாக்குவீர்களென்று பரிசுத்தர் சொல்லு
26 கிறார்.--உங்கள் கண்களை உயர எடுத்துப்
பாருங்கள் இவைகளைச் சிருட்டித்தவரா
ர் அவர் அவைகளின் சேனையை இலக்கத்
திட்டமாகப் புறப்படப்பண்ணி அவைக
ளையெல்லாம் பேர் பேராக அழைக்கிற
வராமே அவருடைய வலுசத்துவங்களா
லும் அவர் வல்லமையிற் பலத்தவராயி
ருக்கிறதினாலும் அவைகளிலொன்றுங் கு
றையாதேபோம்.

யெகோவாவுக்குக் காத்திருக்கும்படிக்கு விசு
வாசிகளுக்குச்சொல்லனதிடன்.

27 யாக்கோபே இஸ்ரவேலே என் வழி
யெகோவாவுக்கு மறைவாயிற்றென்று
ம் என் நியாயம் என் தேவனைச் சேராம
ற்போகின்றதென்றும் நீ சொல்லுவா
னேன்.

28 பூமியின் கடையாந்தரங்களைச் சிருட்
டித்த யெகோவாவாகிய நித்திய தேவன்
இளையாமலும் விடாயாமலும் இருக்கி
றாரென்று நீ அறியாயோ? நீ கேட்டது
மில்லையோ? அவருடைய உணர்வுக்கு
29 ஆராயுதவில்லை.—இளைத்தவனுக்கு அ

ர் பலன்கொடுத்துச் சத்துவமற்றவனு
க்குப் பலனைப் பெருகப் பண்ணுகிறா
ர்.—இளைஞர் இளைத்து விடாய்க்கிறார்க 30
ள் வாலிபரும் இடறி விழுவார்கள்.—யெ 31
கோவாவுக்குக் காத்திருக்கிறவர்களோ பு
து பலன் அடைந்து கழுகுகளைப்போல
ச் செட்டைகளை அடித்தெழும்புவார்கள்
அவர்கள் ஓடியும் விடாயார்கள் நடந்து
ம் இளையார்கள்.

---

## ௪௧. அதிகாரம்.

*விக்கிரகார்த்தனைக்காரரைத்தேவன் கண்டிக்கிறது.*

தீவுகளே, நமக்கு முன்பாக மவுனமா 1
ருங்கள் சனசதளங்கள் தங்கள் பலனைப்
புதிதாக்கிக்கொண்டு சமீபித்துவந்து பிற
கு பேசக்கடவார்கள், ஒருமிக்க நியாய
த்திலே சேருவோம்.-நீதியாய்த் தமது 2
காலடியிலே வரக் கிழக்கிலிருந்து ஒருத்
தனை எழுப்பி அழைத்தவரார், அவனுக்
கு முன்பாகச் சாதிகளை ஒப்புக்கொடுத்
அவனை இராசாக்களுக்கு ஆண்டவனா

Digitized by Google

க்கி இவர்களை அவன் பட்டயத்துக்குத்
தூசியும் அவன் வில்லுக்குச் சிதறவடிக்
3 கப்பட்ட தாளடியுமாக்கி,—அவன் இவர்
களைத் துரத்தவுந் தன் கால்கள் வராதிரு
ந்த பாதையிலே சமாதானத்தோடே க
4 டக்கவும்பண்ணுகிறவரார்?—அதை நட
ப்பித்துச்செய்து ஆதிமுற்கொண்டு தலை
முறைகளை வரவழைத்துக்கொண்டிருக்
கிறவரார்?முந்தினவராயிருக்கிற யெகோ
வாவாகிய நாந்தாமே பிந்தினவர்களோடு
5 மிருப்பவராகிய நாந்தாமே.—தீவுகள் அ
தைக்கண்டு பயப்படும்,பூமியின் கடையா
ந்தரங்கள் நடுங்கும் அவர்கள் சேர்ந்து
6 வந்து,—ஒருத்தனுக்கொருத்தன் ஒத்தா
சை செய்து சகோதரனோடே சகோதர
ன் பலப்படுவேனென்று சொல்லுகிறா
7 ன்.–கூஸ்திரக்காரன் தட்டானையுஞ் சுத்தி
யலாலே மெல்லிசாய்த் தட்டுகிறவன் அ
டையலின் மேல் அடிக்கிறவனையுந் தயிரி
யப்படுத்தி இசைவு நல்லதென்று சொல்
லி அதை அசையாதபடிக்கு ஆணிகளாற்
கெட்டியாக்கிறான்.

Digitized by Google

விசுவாசிகளின் சபையை அவர் ஆற்றித் தேற்றுகின்றது.

ஆனாலும் நம்முடைய தாசனாகிய இஸ்ர 8
வேலே நாந் தெரிந்துகொண்ட யாக்கோ
பே நம்முடைய சினேகிதனான ஆபிரகா
மின் வித்தே,—நாம் பூமியின் கடையா 9
ந்தரங்களில் இருந்து உன்னை எடுத்து அ
தின் எல்லைகளிலிருந்து அழைத்து வந்
து நீ நம்முடைய தாசன் உன்னை நாம்
வெறுமல் உன்னைத் தெரிந்துகொண்
டோமென்று நாஞ் சொன்னோமே.
நீ பயப்படாதே, ஏனெனில் நாம் உ 10
ன்னுடனே இருக்கிறோம், திகையாதே.
ஏனெனில் நாம் உன் தேவன் நாம் உ
ன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாய
ம்பண்ணுகிறவரும் உன்னை நமது நீதியி
ன் வலது கரத்தினாலே தாங்குகிறவருமா
ய் இருக்கிறோம்.—இதோ உன் மேல் எ 11
ரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இல
ட்சை அடைவார்கள். உன்னோடே வழ
க்காடுகிற மனுஷர் மாய்கையாகி அழி
வார்கள்.—உன்னோடே போராடினவர்க 12
ளைத் தேடிக் காணாதிருப்பாய், உன்னோ

Digitized by Google

டு யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமி
13 ல்லாததும் மாய்கையுமாவார்கள்.— ஏ
னெனில் உன் தேவனாயிருக்கிற யெகோ
வாவாகிய நாம் உன் வலது கையைப் பி
டித்து உன்னுடனே பயப்படாதே நா
ம் உனக்கு ஒத்தாசைசெய்கிறேமென்கி
14 றேம்.—யாக்கோபென்ற பூச்சியே இஸ்
ரவேலின் சின்னக் கூட்டமே பயப்படா
தே நாம் உனக்கு ஒத்தாசை செய்கிறே
மென்று யெகோவாவும் இஸ்ரவேலின்
பரிசுத்தருமாகிய உன் மீட்பருமானவர்
15 உரைக்கிறார்.— இதோ போரடிக்கிறதற்
கு நாம் உன்னைப் புதிதுங் கூர்மையுமா
ன பல்லுகளுள்ள தளவாடங்களாக்கிறே
ம், நீ பருவதங்களை மிதித்து நொருக்கி மே
டுகளைப் பதருக் கொப்பாக்கிப்போடுவா
16 ய்.—அவைகளைத் தூற்றுவாய் அப்போ
து காற்று அவைகளைக் கொண்டுபோய்ப்
புசல் அவைகளைப் பறக்கடிக்கும், நீயோ
வெனில் யெகோவாவுக்குட் களிகூர்ந்து
இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் மேன்மை
17 பாராட்டிக்கொண்டிருப்பாய்.-சிறுமை
யானவர்களும் எழைகளுந் தண்ணீரைத்

Digitized by Google

தேடுகிறார்கள் ஆனாலும் இல்லாதிருக்கு
ம். அவர்கள் நாக்கு தாகத்தால் வரளு
ம் யெகோவாவாகிய நாம் அவர்களுக்கு
க் கேள்விகொடுத்து இஸ்ரவேலின் தேவ
னாகிய நாம் அவர்களைக் கைவிடாதிருப்
போம்.- நாம் உயர்ந்த நிலங்களில் ஆறு 18
களையும் பள்ளத்தாக்குகளின் நடுவே ஊ
ற்றுகளையுந் திறந்து வனாந்தரத்தைத் த
ண்ணீர்த் தடாகமும் வரண்ட பூமியைத்
தண்ணீர்க் கேணிகளுமாக்கி,—வனாந்த 19
ரத்திலே கேதுரு மரங்களையுஞ், சித்தீம
மரங்களையும், மிறுதுச் செடிகளையும்,
ஒலிவ மரங்களையுங் கட்டளையிட்டு அவா
ந்தர வெளியிலே தேவதாரி விருட்சங்க
ளையும், பிசின் மரங்களையும், புன்னை ம
ரங்களையுங்கூட உண்டுபண்ணுவோம்.— 20
யெகோவாவுடைய கரம் அதைச் செய்த
தென்றும் இஸ்ரவேலின் பரிசுத்தர் அதை
ப் படைத்தாரென்றும் யாவருங் கண்ட
றிந்து நியானித்து உணரும்படியாகத்தா
னே.

Digitized by Google

வருங் காரியங்களை அறிவிக்கமாட்டாத விக்கிரகங்
களின் மாய்கையை அவர் காண்பித்தது.

21 உங்கள் வழக்கைக் கொண்டுவாருங்க
ளென்று யெகோவா சொல்லுகிறார், உ
ங்கள் பெலப்படியான நியாயங்களைச்சே
ரப்பண்ணுங்களென்று யாக்கோபின் இ
22 ராசாச் சொல்லுகிறார்.--அவர்கள் அவை
களைச்சேரப்பண்ணிச் சம்பவிக்கப்போ
கிறவைகளை நமக்கறிவிக்கட்டும், அவைக
ள் முதற் சம்பவிப்பவைகள் ஏதென்று
சொல்லி நாம் நம்முடைய மனதைஅவை
களின் மேல் வைத்து அவைகளின் முடி
வையும் அறியும்படிக்கு நமக்கறிவிக்கட்
டும், அல்லது வருங் காரியங்களை நமக்கு
23 க் கேட்கப்பண்ணட்டும்.—பின்வருங்கா
ரியங்களை நமக்கறிவியுங்கள், அப்போது
நீங்கள் தேவர்களென்றறிவோம் அல்ல
வென்று நன்மை தீமையேதாகிலுஞ் செ
ய்யுங்கள், அப்போது நாந் திகைத்து ஏ
கமாய்க் கூடி அதைப் பார்ப்போம்.—
24 இதோ நீங்கள் ஒன்றுமில்லாததிலுங் கடை
யாயிருக்கிறீர்கள். உங்கள் செயல் ஏது
மற்றதுக்குந் தாழ்ச்சியானது உங்களை

Digitized by Google

த் தெரிந்துகொள்ளுகிறவன் அருவருப்
பானவன்.—ஒருத்தனை வடக்கேயிருந்து 25
எழும்பப்பண்ணுகிறோம், அவன் சூரி
யோதயத்தில் இருந்து வருவான். அவன்
நமது நாமத்தைப் பிரஸ்தாபமாக்குவா
ன் அவன் வந்து அதிகாரிகளைச் சேற்றை
ப்போலேயுங் குயவன் களிமண்ணை மிதி
யிடுகிறதுபோலேயும் மிதிப்பான்.—ஆ 26
திமுதற்கொண்டு அல்லது முற்காலமுத
ற்கொண்டு அதை நாம் அறியும்படியாக
வும் நாம் அவனை நீதியானென்று சொல்
த்தக்கனையாகவும் அறிவித்தவனார்? அறி
விக்கிறவனொருவனுமில்லையே கேட்கப்
பண்ணுகிறவனுமில்லை,உங்கள் வார்த்தை
களைக் கேள்விப்படுகிறவனுமில்லையே. -
நாமே முதல்முதல் இதோ இதோ என் 27
ன்று சீயோனுக்குச் சொல்லி எருசலே
முக்குச் சுவிசேஷகரைக் கொடுக்கிறோம்.
—நாம் பார்த்தோம் ஆனாலும் அவர்க 28
ளில் அறிவிக்கிறவனொருத்தனுமில்லை அ
வர்களிலே நாங் கேட்குங் காரியத்துக்கு
ப் பிரத்தியுத்தாரங் கொடுக்கத்தக்கவொ
ரு ஆலோசனைக்காரனுமில்லை.—இதோ, 29

Digitized by Google

அவர்களெல்லாரும் மாய்கை அவர்கள் கி
ரியைகள் ஒன்றுமில்லை, வார்க்கப்பட்ட அ
வர்களுடைய சுரூபங்கள் காற்றும் வெறு
மையுந்தானே.

---

## ௪௨. அதிகாரம்.

லோகத்தின் இரட்சகராகிய மேசியா செய்யுங்
கிருபையை முன்னறிவித்ததும், அவரைப்பாடி
மகிமைப்படுத்தச் சாதிகளை எழுப்பினதும்.

1 இதோ நாந் தெரிந்துகொண்டவரும்
நமதாத்துமம் பிரியமாயிருக்கிறவரும் நா
ம் ஆதரிக்கிறவருமாகிய நமமுடைய ப
ணிவிடைகாரன் நம்முடைய ஆவியை அ
வர் மேல் வைக்கிறோம், அவர் சாதிகளு
க்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்.—
2 அவர் கூப்பிடாமலுஞ் சத்தத்தை உயர்த்
தாமலுந் தம்முடைய சத்தத்தை வீதியி
லே கேட்கப்பண்ணாமலும் இருப்பார்.-
3 அவர் நெரிந்த நாணலை முறியாமலும், ம
ங்கியெரிகிற திரியை அவியாமலும் நியா
யத்தை உண்மையாக வெளிப்படுத்துவா
4 ர்.—அவர் நியாயத்தைப் பூமியிலே நிலை



Digitized by Google

ப்படுத்துமட்டும் இளக்கரிப்பதில்லை பத
றுவதுமில்லை, அவருடைய உபதேசத்து
க்குத் தீவுகள் காத்திருக்கும்.
வானங்களைச் சிஷ்டித்து அவைகளை வி 5
ரித்துப் பூமியையும் அதிற் பிறக்கிறவைக
ளையும் பரப்பினவரும் அதில் இருக்கிறச
னத்துக்குச் சுவாசத்தையும் அதிலேநட
மாடுகிறவர்களுக்கு ஆவியையுங் கொடுக்
கிறவருமான யெகோவாவாகிய தேவன்
சொல்லுகிறதாவது,-நீர் குருட்டுக்கண்க 6
ளைத் திறக்கவுங் கட்டுண்டவர்களைக்காவலி
லும் இருளில் உளுக்கார்ந்திருக்கிறவர்க
ளைச் சிறைச்சாலையிலுமிருந்து புறப்பட
ப்பண்ணவும்.-யெகோவாவாகிய நாம் உ 7
ம்மைநீதியாய் அழைத்துஉம்முடையகை
யைப்பிடித்துக்கொண்டுஉம்மைத்தற்கா
த்து உம்மைச் சனத்தின் உடம்படிக்கை
யாகவுஞ்சாதிகளின் வெளிச்சமாகவும்வை
க்கிறோம்.—நாம் யெகோவா இது நம 8
துநாமம். நாம் நமது மகிமையை வே
றொருத்தனுக்கும் நமது துதியை விக்கிர
கங்களுக்குந் தொடோம்.—முந்தின கா 9
ரியங்கள் இதோ வந்ததே,புதியவைகளை

Digitized by Google

யும் நாமே அறிகிறவர் அவைகள் தோன்
றுததுக்குமுன்னே அவைகளை உங்களுக்
10 குக் கேட்கப்பண்ணுகிறோம்.—யெகோ
வாவைப் புதுப் பாட்டாய்ப் பாடுங்கள்,
சமுத்திரத்துக்கு இறங்கிப் போகிறவர்க
ளும் அதிலுள்ளதனைத்துந் தீவுகளும் அ
வைகளின் குடிகளும் பூமியின் கடையாந்
தரத்தில் இருந்து அவருடைய துதியைப்
11 பாடுவதாக.—வனாந்தரமும் அதின் ஊர்
களுங் கேதாரியர் குடியிருக்கிற கிராம
ங்களுஞ் சத்தத்தை உயர்த்துவதாக,கன்
மலைகளிற் குடியிருக்கிறவர்கள் கம்பீரி
த்துப் பருவதங்களின் கொடுமுடியிலிரு
12 ந்து ஆர்ப்பரிப்பார்களாக.—யெகோவா
வுக்கு மகிமையைச்செலுத்தி அவர் துதி
யைத் தீவுகளில் அறிவிப்பார்களாக.—
13 யெகோவாப் பராக்கிரமசாலியைப் போ
லப்புறப்பட்டு யுத்தசேவகனைப்போலஎ
ரிச்சலை எழும்பப்பண்ணித் தொனித்து
க் கருச்சித்துத் தம்முடைய சத்துருக்க
14 ளை மேல்கொள்ளுவார்.—வெகுகாலமா
ய் மவுனமாயிருந்தோம் சும்மாயிருந்து
நமக்குள்ளே அடக்கிக் கொண்டோம்.

Digitized by Google

இப்போது நாம் பிள்ளைப்பெறுகிறவளை
ப்போலக் கூப்பிட்டு அவர்களைப் பாழா
க்கவும், முழுங்கவும் போகிறோம்.—நா 15
ம் பருவதங்களையும் மேடுகளையும் பா
ழாக்கி அவைகளின் பயிர்வகையை எல்
லாம் வதங்கப்பண்ணி ஆறுகளைத் திட்டு
களாக்கி ஏரிகளை வற்றிப்போகப்பண்ணி
க்,—குருடரை அவர்களறியாத வழியிலே 16
நடத்தி அவர்களுக்குத் தெரியாத பாதை
களிலே அவர்களை அழைத்துக்கொண்டு
வந்து அவர்களுக்கு முன்பாக இருளை
வெளிச்சமுங் கோணல்களைச் செம்மையு
மாக்குவோம். இந்தக் காரியங்களை நா
ம் அவர்களுக்குச் செய்து அவர்களைக்
கைவிடாதிருப்போம்.
ஆனாலும் விக்கிரகங்களை நம்பி வார்க் 17
கப்பட்ட சுரூபங்களுடனே நீங்கள் எங்
கள் தேவர்களென்று சொல்லுகிறவர்க
ள் பின்னிடைந்து மிகவும் வெட்கப்படு
வார்கள்.

யூதருடைய குணப்படாமையின்மேலும் அவர்கள் குருக்களுடைய குருட்டாட்டத்தின்மேலும், உணராமையின் மேலும் முறையிட்டது.

செவிடரே கேளுங்கள், குருடரே நீங் 18

Digitized by Google

கள் காணும்படிக்கு நோக்கிப்பாருங்கள்.
19 நம்முடைய தாசனையேயல்லாமல் ஆர்
அத்தனை குருடனும் நாம் அனுப்புகிற
தூதனையேயல்லாமல் ஆர் அத்தனை செ
விடனுமாயிருக்கிறான். உத்தமனைப்போ
லக் குருடானவனார் யெகோவாவுடைய
ஊழியக்காரனைப்போல அந்தசனானவ
20 னார்.—நீ அநேகங்களைக் கண்டுங் கைக்
கொள்ளாய் அவனுக்குச் செவிகளைத்திற
21 ந்தாலுங் கேளாதேபோகிறான்.— யெ
கோவாத் தமது நீதியின் நிமித்தியமாக
அவன்மேற் பிரியம்வைத்திருந்தார் அவ
னை வேதத்தினாலே பெரியவனாக்கி மூக்கி
22 யப்படுத்தினார்.—அவனோவெனிற் கொ
ள்ளையுஞ் சூறையுமாய்ப் போகிற சனம்
அவர்கள் அனைவருங் கெவிகளிற் சிக்குண்
டு காவல் அறைகளில் அடைக்கப்படுவா
ர்கள் தப்புவிப்பாரில்லாமற் கொள்ளை
யாகித் திரும்ப விட்டுவிடென்பாரில்லா
23 மற் சூறையாவார்கள்.—உங்களில் இதற்
க்குச் செவிகொடுத்து பின்வருகிறதைக்
24 கவனித்துக் கேட்கிறவனார்.— யாக்கோ
பைச் சூறையிட்டு இஸ்ரவெலைக் கொள்

Digitized by Google

ளைக்காரருக்கு ஒப்புக் கொடுக்கிறவரார்?
நாம் பாவஞ்செய்து விரோதித்த யெகோ
வாவல்லவோ ஏனெனில் அவருடைய வ
ழிகளில் நடக்கமனதாயிராமலும் அவரு
டைய வேதத்துக்குச் செவிகொடாமலு
ம்போனார்கள்.- அவர் இவர்கள் மேலேத 25
மது கோபத்தின் உக்கிரத்தையும் யுத்தத்
தின் வலுமையையும் ஊற்றி அவர்களைச்
சூழ அக்கினிச் சுவாலைகளைக் கொளுத்தியி
ருந்தாலும் அறிவில்லாதேபோனார்கள். அ
வர் இவர்களை வேகப்பண்ணியிருந்தாலும்
அதை மனதிலே வையாதேபோனார்கள்.

---

## ௪௩. அதிகாரம்.

இஸ்ரவேலின் சற்குணமான தமது சனத்துக்குத் தேவன் சொன்ன ஆறுதல்.

இப்போதும் யாக்கோபே உன்னைச் 1
சிஷ்டித்தவரும் இஸ்ரவேலே உன்னை
உருவாக்கினவருமாகிய யெகோவா சொ
ல்லுகிறதாவது, பயப்படாதே ஏனெனி
ல் உன்னை மீட்டுக்கொண்டோம். உன்னை
ப் பேர்சொல்லி அழைத்தோம் நீ நம்மு
டையவன்.—நீ தண்ணீர்களைக் கடக்கும் 2

Digitized by Google

போது நாம் உன்னோடேயிருக்கிறோம்.
நீ ஆறுகளைக்கடக்கும்போது அவைகள்
உன்மேலே புரளுவதில்லை நீ அக்கினியை
க்கடக்கும்போது வேகாதிருப்பாய் அ
க்கினிச்சுவாலை உன்னைக்கொளுத்துவதில்
3 லை.—என்னெனில் நாம் இஸ்ரவேலின் பரி
சுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உ
ன் தேவனாகிய யெகோவா உன்னை மீட்
கும்பொருளாக எகிப்த்துவையும் உனக்
குப்பதிலாகஎத்தியோப்பியாவையுஞ்சே
4 பாவையும் ஒப்புக்கொடுத்தோம்.—நீ ந
ம்முடைய பார்வைக்கு அருமையான ப
டியினாலே கனம்பெற்றாய் நாம் உன்னை
ச் சிநேகித்தபடியினாலே உனக்குப் பதி
லாக மனுஷர்களையும் உன் ஆத்துமத்து
க்குப்பதிலாகச் சனசதளங்களையும் ஒப்
5 புக்கொடுப்போம்.—பயப்படாதே, எ
ன்னென்றால் நாம் உன்னோடே இருக்கி
றோம். நாம் உன் வித்தைக் கிழக்கிலிருந்
து வரப்பண்ணி உன்னை மேற்கிலுமி
6 ருந்து கூட்டிச்சேர்ப்போம்.—நாம் வ
டக்குடனே தாவென்றுந் தெற்குடனே
வைத்திராதேயென்றுஞ் சொல்லி, தூரத்
Digitized by Google

திருந்து நம்முடைய குமாரரையும் பூமி
யின் கடையாந்தரத்திலிருந்து நம்மு
டைய குமாரத்திகளையும்,—நமது நா 7
மந்தரிக்கப்பட்டு, நாம் நம்முடைய மகி
மைக்கென்று சிஷ்டித்து உருவாக்கிப்
படைத்த யாவையுங் கொண்டுவாவென்
போம்.

விக்கிரகத் தேவர்கள் முன்னறிவிக்கமாட்டா
த இரட்சிப்புகளைத் தேவன் விசுவாசிகளுக்கு
ச் சுத்தத் தயவினால் வாக்குத்தத்தம் பண்ணி
னதுங் குணப்படாதவர்களுக்கோ சங்கார
த்தை முன்னறிவித்ததும்.

கண்களிருந்துங் காணதிருக்கிற சனத் 8
தையுங், காதுகளிருந்துஞ் செவிடரானவ
ர்களையும் புப்பட்டு வரப்பண்ணுங்கள்.
--சகல சாதிகளும் ஏகமாய்ச் சேர்ந்து 9
கொண்டு சகல சனசதளங்களுங் கூடிவா
ட்டும் இதை அறிவித்து முதற் சம்பவிக்
குங் காரியங்களை நமக்குக் கேட்கப்பண்
ணத்தக்கவனார்? கேட்டு மெய்யென்று
சொல்லப்படக் கூடும்படிக்கு அவர்கள்
தங்கள் சாட்சிகளைக்கொண்டுவந்து நிதா
னக்காரராய் விளங்கட்டும்,—நாமே அவ 10
ரென்று நீங்கள் அறிந்து நம்மை விசுவாசி

Digitized by Google

ந்து உணர்ந்துகொள்ளும்படிக்கு நீங்க
ளும் நாந் தெரிந்துகொண்ட நம்முடைய
தாசருமாயிருக்கிறீர்களென்று யெகோ
வாசொல்லுகிறார். நமக்கு முன் ஏற்பட்
டதேவனில்லை, நமக்குப் பின்னிருப்பது
11 மில்லை.--நாம் நாமே யெகோவா. நம்மை
12 யல்லாமல் இரட்சகரில்லை.—நாமே அறி
வித்து இரட்சித்து அதைக்கேட்கப்பண்
ணுகிறோம். உங்களில் அப்படிச்செய்ய
த்தக்க அன்னியதேவனில்லை. நாமேதே
வனென்கிறதுக்கு நீங்கள் நம்முடைய
சாட்சிகளென்று யெகோவா சொல்லுகி
13 றார்.--நாளுண்டாகாததற்கு முன்னும்,
நாமேயிருக்கிறோம், நம்முடைய கைக்
குத் தப்புவிக்கத்தக்கவனில்லை. நாம் நட
ப்பிப்பதைத் திருப்புபவனார்?
14 உங்களுக்காக நான் தாட்பாள் அரண்
களையெல்லாமிடிந்து விழப்பண்ணவும்,
கல்தேயரைப் படகுகளில் உட்பட்டலற
ப்பண்ணவுந் தக்கவர்களைப் பாபேலுக்க
னுப்பினேனென்று உங்கள் மீட்பரும் இ
ஸ்ராவேலின் பரிசுத்தருமாகிய யெகோ
15 வாசொல்லுகிறார்.—நாமே உங்கள் பரி

Digitized by Google

சுத்தராகிய யெகோவாவும் இஸ்ரவேலி
ன் சிருட்டிகரும், உங்களிராசாவுமானவ
ர்.--சமுத்திரத்திலே வழியையும், வல்ல 16
மையான தண்ணீர்களிற் பாதையையுங் க
ட்டளையிட்டு,--இரதங்களையும், குதிரைக 17
ளையும், இராணுவத்தையும், பெலனையும்
வரவிட்டு அவைகள் எழுந்திராதபடிக்கு
ஒருமித்து விழுந்துகிடக்கவும், ஒரு திரி
யவியும்போல அணைந்துபோகவும் பண்
ணின யெகோவா சொல்லுகிறதாவது,
முந்தினவைகளை நினையாதேயுங்கள் பூ 18
ருவமானவைகளைச் சிந்தியாதேயுங்கள்,--
இதோ நாம் புதுக்காரியத்தைச் செய் 19
வோம், இனி அது தோன்றும், நீங்கள் அ
தையறியப்போவதில்லையோ? நாம் வனா
ந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளி
யிலே ஆறுகளையுமுண்டாக்குவோம்.--
நாந் தெரிந்துகொண்ட நமது சனத்தின் 20
தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்க
ளையும் அவாந்தரவெளியிலே ஆறுகளை
யும் உண்டாக்குவதினால் வெளியின் மிரு
கங்களும், வல்லமையுள்ள பாம்புகளும்,
கோட்டான் குஞ்சுகளும் நம்மைக் கன

Digitized by Google

21 ம்பண்ணும்,—இந்தச் சனத்தைநமக்கெ
ன்று ஏற்படுத்தினோம். இவர்கள் நமது
துதியைச்சொல்லிவருவார்கள்.
22 ஆனாலும் யாக்கோபே நீ நம்மைநோ
க்கிக் கூப்பிட்டதில்லை. இஸ்ரவேலே அ
தைவிட நீ நம்மை விசனப்படுத்தினாய்.-
23 நீ நமக்கு உன் ஆடுகளின் தகனப்பலிக
ளைச்செலுத்தினதில்லை. நீ நம்மை உன் ப
லிகளாலே கனம்பண்ணினதுமில்லை. கா
ணிக்கைகளைச்செலுத்த நாம் உன்னைப்
பிரயாசப்படுத்தாமலும், தூபங்காட்ட உ
ன்னை வருத்தப்படுத்தாமலுமிருந்தோம்.
24 —நீ நமக்குப் பணங்களாற் சுகந்த பட்
டையைக்கொள்ளாமலும், உன் பலிகளி
ன் கொழுப்பினாலே நம்மை நிரப்பாம
லும், உன் பாவங்களினாலே நம்மைப் பி
ரயாசப்படுத்தி உன் அக்கிரமங்களினாலே
25 நம்மைவருத்தப்படுத்தினாய்.-- நாம்நா
மே,உன் மீறுதல்களை நம்முடைய நிமித்
தியமாகக் கொலைக்கிறோம் உன் பாவங்க
26 ளை நினையாமலுமிருப்போம்.--நாம் ஒ
ன்றுக்கொன்று வழக்காடும்படியாக நம
க்கு நினைப்பூட்டு, நீ நீதிவிளங்கும்படி

Digitized by Google

யாக விவரித்துச்சொல்லு.—உன் ஆதித் 27
தகப்பன் பாவஞ்செய்தான் உனக்கு மு
ன்னின்று பேசுகிறவர்களும் நமக்கு வி
ரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள்.
-ஆகையால் நாம் பரிசுத்த ஸ்தலத்தலைவ 28
ர்களைப் பரிசுத்த குலைச்சலாக்கி யாக்கோ
பைச் சங்காரத்துக்கும்,இஸ்ரவேலைத் தூ
ஷணங்களுக்கும் ஒப்புக்கொடுப்போம்.

---

## சச. அதிகாரம்.

புதுஏற்பாட்டிலுடைய பாக்கியத்தை முன்
னறிவித்தது.

இப்போதும் நம்முடைய தாசனாகிய 1
யாக்கோபே,நாந் தெரிந்துகொண்ட இ
ஸ்ரவேலே கேள்.-உன்னை உண்டாக்கின 2
வரும் உன்னைத் தாயின் கருப்பந்துவக்கி
உருவாக்கினவரும் உனக்கொத்தாசைசெ
ய்கிறவருமாகிய யெகோவாசொல்லுகிற
தாவது,நம்முடைய தாசனாகிய யாக்கோ
பே, நாந் தெரிந்துகொண்ட உத்தம
னே பயப்படாதே.—ஏனெனில் தாகமு 3
ள்ளவன்மேல் தண்ணீரையும், வரண்டநி
லத்தின்மேல் ஆறுகளையும்ஊற்றுவோம்

Digitized by Google

ம். நம்முடைய ஆவியை உன் வித்தின்
மேலும் நம்முடைய ஆசீர்வாதத்தை உ
ன் சந்தானத்தின்மேலும் ஊற்றுவோம்.
4 —அதினால் புல்லின் நடுவே நீர்க்கால்க
ளின் ஓரத்திலுள்ள அலரிச் செடிகளைப்
5 போலே வளருவார்கள்.—இவனும் நான்
யெகோவாவுடையவனென்பான், அவனு
ம் யாக்கோபின் பேராய் அழைக்கப்ப
டுவான், அவனும் தான் யெகோவாவுடை
யவனென்று தன் கையெழுத்துப்போட்
டு இஸ்ரவேலின் நாமத்தைத் தரித்துக்
கொள்ளுவான்.

சத்தியவாசகராகிய தேவன் தம்முடைய மகி
மையையும் உண்மையையும், விக்கிரகங்களின் வெ
றுமையான மாய்கையையுங் காண்பித்தது.

6 நாம் முந்தினவரும் நாம் பிந்தினவருந்
தானே நம்மைத் தவிரத் தேவனில்லை
என்று இஸ்ரவேலின் இராசாவாகிய யெ
கோவாவுஞ், சேனைகளின் யெகோவாவா
கிய அவனுடைய மீட்பருஞ் சொல்லுகி
7 றார்.—நித்திய சனத்தை நாம் இஸ்தாபி
த்தது முதற்கொண்டு நம்மைப் போல
எதையாகிலும் வரவழைத்து இன்னின்ன
தை முன் அறிவித்து நமக்கு முன்பாக


Digitized by Google

வரிசையாக நிறுத்தத்தக்கவனார்? பின்ன
டிச்செய்திகளையும் வருங்காரியங்களையுந்
தங்களுக்கு அவர்கள் அறிவிக்கட்டும்.—
நீங்கள் கலங்காமலும், ஐயப்படாமலும் 8
இருங்கள், நாம் அதுமுதற்கொண்டு அ
தை யுனக்குக் கேட்கப்பண்ணினதும்,
முன்னறிவித்ததும் இல்லையோ என்பத
ற்கு நீங்கள் நம்முடைய சாட்சிகள், நம்
மைத் தவிர ஒரு தேவனுண்டோ? வே
றொரு கன்மலையுமில்லையே, ஒருத்தனை
யும் அறியோம்.

சுரூபங்களை யுருவாக்கிற யாவரும் மா 9
யைதானே, அவர்களால் இச்சிக்கப்ப
ட்ட காரியங்கள் ஒன்றுக்கும் உதவாது
தங்களுக்கு வெட்கமாக அவர்கள்தானே
அவைகளொன்றுங் காணாமலும், ஒன்று
மறியாமலுமிருக்குதென்று அவைகளுக்
குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்.—ஒன்று 10
க்குமுதவாத தேவனை யுருவாக்கிச் சுரூப
த்தை வார்க்கிறவன் எப்படிக்கொத்தவ
ன்?—இதோ, அவனுடைய கூட்டாளிக 11
ளெல்லாம் வெட்குவார்கள். ஏனெனில்
தொழிலாளிகள் நரசீவன்கள்தானே, அ

Digitized by Google

வர்கள் எல்லாருங் கூடிக்கொண்டு நிற்க
ட்டும்,அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெ
12 ட்கப்படுவார்கள்.— கொல்லன் இரும்
பைக் குறட்டால் இடுக்கித் தணலிலேவே
கவைத்துச் சுத்தியல்களால் அதை உரு
வேற்படுத்தித் தன் புயத்தின் பலத்தினா
லே அதைச் செப்பனிடுகிறான். பலனற்
றுப் போகுமட்டும் பட்டினியுமாயிருக்
கிறான். இளைத்துப் போகுமட்டும் தண்
13 ணீர் குடியாமலும் இருக்கிறான்.-தச்சன்
நூல்பிடித்து மட்டப்பலகையால் மரத்
துக்குக் குறிபோட்டு அதைக் கோணங்
கோணமாகப் பிடித்துக் கவராசத்தால் அ
தை நூன்றி அது வீட்டிலே வாசமாயிரு
ப்பதற்காக அதை ஒரு புருஷனின் சாய
லும் ஒரு மனுஷனின் ரூபமுமாக்குகிறா
14 ன்.-அவன் தனக்குக் கேதுருகளை வெட்
டப்போகிறபோது, ஒரு புங்கமரத்தை
த் தெரிந்துகொண்டு, காட்டுமரங்களில்
அல்லது ஒரு கருவாலிபு பலக்க அதை
த்தனக்கு வளர்க்கிறான். அல்லது அசோ
கமரத்தை, மழை அதைப் பயிராக்கும்
15 படிக்கு நாட்டுகிறான். —மனுஷனுக்கு

Digitized by Google

அவைகள் அடுப்புக்காகும்போது அவ
னவன் அவைகளிலெடுத்துக் குளிர்காய்
ந்துகொள்ளுகிறான். நெருப்பை மூட்
டி அப்பஞ் சுடுகிறான். என்றாலும் ஒ
ரு தேவனையும் உண்டுபண்ணி, அதை
ப் பணிந்து ஒரு சுரூபத்தை அதினாற்
செப்பனிட்டு அதைவணங்குகிறான்.—அ 16
தில் ஒருபங்கை அடுப்பில் எரிக்கிறான்.
ஒரு பங்கினால் இறைச்சியைச் சமைத்து
ப் புசித்து, பொரியலைப் பொரித்துத்
திருத்தியாகிக் குளிருங்காய்ந்துகொண்டு
ஆகா அனலானேன், நெருப்பைக் கண்
டேனென்று சொல்லி,—அதின் மீதியா 17
ன பங்கைத் தேவனாகவும் தனக்குச் சுரூ
பமாகவுஞ் செப்பனிட்டு, அதுக்கு மு
ன்விழுந்து, அதை வணங்கி என்னைவிடுவி
ஏனெனில் நீ என்தேவனென்று, அதை
நோக்கி விண்ணப்பஞ்செய்கிறான்.—அ 18
றியாமலும் உணராமலும் இருக்கிறார்க
ள். ஏனென்றாற் காணாதபடிக்குஅவர்கள்
கண்களும் உணராதபடிக்கு அவர்கள் இ
ருதயமும்பூச்சுப்பூசப்பட்டிருக்கின்றது
—அதிற் பாதியை அடுப்பில் எரித்தேன் 19

Digitized by Google

அதினுடைய தணலின்மேல் அப்பத்தை
யுஞ் சுட்டு இறைச்சியையும் பொரித்து
ப் புசித்தேன். அதின் மீதியான பங்கை
நானருவருப்பாக்குவேனோ? ஒரு மரத்
தின் துண்டை வணங்குவேனோவென்று
சொல்ல, அவன் தன் மனதுக்குள்த்
தோன்றவில்லை. அம்மாத்திரம் அறிவு
20 ஞ் சொரணையுமில்லை.—அவன் சாம்பலி
லே மேய்கிறான்.—அவனுடைய இருத
யம் அவனைப் புரட்டிப்போட்டது.—
அவன் தன் ஆத்துமத்தைத் தப்புவியா
மலும் என் வலதுகையிலே மோசமல்
லோ இருக்கின்றதென்றுஞ் சொல்லாம
லும் இருக்கிறான்.
21 யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை
நினை. ஏனெனில் நீ நம்முடைய தாசன்.
உன்னை உருவாக்கினோம். நீ நம்முடைய
தாசன். இஸ்ரவேலே, நீ நம்மால் மறக்
22 கப்படுவதில்லை.-உன் மீறுதல்களை மந்தா
ரத்தைப் போலவும், உன் பாவங்களை மே
கத்தைப் போலவும் நிற்கிரகம்பண்ணு
கிறோம், நம்மண்டைக்குத் திரும்பு, ஏ
னெனில் உன்னை மீட்டுக்கொண்டோம்.

Digitized by Google

பாபிலோனிய சிறையிருப்பின் நீங்குதலை அவர் முன்னறிவித்தது.

வானங்களே கம்பீரியுங்கள், ஏனெ 23
னில் யெகோவா அதைச் செய்தார். பூ
தலமான தாழ்விடங்களே, ஆர்ப்பரியுங்
கள். பருவதங்களே, காடுகளே, காட்டி
லுள்ள சகல மரங்களே, கம்பீரமாய் மு
ழங்குங்கள், ஏனெனில் யெகோவா யா
க்கோபை மீட்டு, இஸ்ரவேலிலே மகிமை
ப்படுகிறார்.—உன் மீட்பரும் உன்னைத் 24
தாயின் கருப்பந் துவக்கி உருவாக்கினவ
ருமான யெகோவா சொல்லுகிறதாவது,
நாமேயெல்லாவற்றையுஞ் செய்கிற யெ
கோவா, நாம் ஒருத்தராய் வானங்களை வி
ரித்து, நாமாய்ப் பூமியைப் பரப்பினவ
ர்.—நாங் கட்டுக் கதைக்காரரின் குறிக 25
ளை அபத்தமாக்கிக் குறிசொல்லுகிறவர்க
ளை நின்மூடராக்கி ஞானிகளைப் பின்னி
டத்திருப்பி, அவர்கள் அறிவைப் பயித்திய
மாகப்பண்ணுகிறவர்.-நாம் நம்முடைய 26
ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படு
த்தி, நம்முடைய தானுபதிகளின் ஆலோ
சனையை நிறைவேற்றிக் குடியேறுவாயெ

Digitized by Google

ன்று யெருசலேமுக்குங் கட்டப் படுவீர்
களென்று யூதாவின் பட்டணங்களுக்கு
ஞ் சொல்லி அவைகளின் பாழான தலங்
27 களை எடுப்பிப்பவர்.—நாம் ஆழத்துடனே
வற்றிப்போ, உன் நதிகளை வெட்டாந்த
ரையாக்குவோமென்று சொல்லுகிறவர்.
28 —கோரேசைக் குறித்து, அவன் நம்மு
டைய மேய்ப்பன், அவன் எருசலேமுக்
குக் கட்டப்படுமென்றும், தேவாலயத்
துக்கு அஸ்திபாரப்படுமென்றுஞ்சொல்
லி,நமக்குப் பிரியமானதையெல்லாம் நி
றைவேற்றுவானென்று நாஞ் சொல்லுகி
றவர்.

---

## ௪௫. அதிகாரம்.

*யெகோவா யூதரைப் பாபிலோனிய சிறையிருப்புக்கு நீங்கலாக்கி இரட்சிப்போமென்ற தீர்க்க தரிசனம்.*

1 யெகோவாவாகிய நாம் அபிஷேகம்பண்
ணிவித்த கோரேசுக்கு முன்பாகச் சாதி
களைக் கீழ்ப்படுத்தி இராசாக்களின் இடை
களைக் கட்டவிழ்க்கும் படிக்கும் அவனு
க்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாம

Digitized by Google

ருக்கக் கதவுகளைத் திறந்து வைக்கும்ப
டிக்கும் அவனையவன் வலது கையைப்பி
டித்துக்கொண்டு அவனுக்குச் சொல்லு
கிறதாவது,—நாம் உனக்கு முன்பாக ந 2
டந்து கோணலானவைகளைச் செவ்வை
யாக்குவோம்.—உன்னைப் பேர் சொல் 3
லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகி
ய நாமே யெகோவாவென்று நீ அ
றியும் படிக்கு நாம் நம்முடைய தாசனா
கிய யாக்கோபின் நிமித்தியமும் வெண்
கலக் கதவுகளை உடைத்து,இருப்புத்தாட்
பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இ
ருக்கிற பொக்கிஷங்களையும் ஒளிக்கப்பட்
டிருக்கிற புதையல்களையுமுனக்குக் கொ
டுப்போம்—அதுக்காக நாம் உன்னைப் 4
பேர் சொல்லி அழைத்து நீ நம்மை அ
றியாதிருக்க உனக்கு நாமந் தரித்தோம்.
நாமேயெகோவாவேயொருத்தரில்லை.— 5
நம்மைத்தவிரத் தேவனில்லை.—நம்மை 6
த்தவிர ஒருத்தருமில்லையென்பது சூரிய
னுதிக்கிற திசையும் அது அஸ்தமிக்கிற தி
சையுந் துவக்கி யறியப்படும் படிக்கு நா
முன்னை நீ நம்மை யறியாதிருக்கக்கொள்

Digitized by Google

ள இடைக்கட்டினேம்,நாமே யெகோவா
7 வேறொருத்தரில்லை.— வெளிச்சத்தையு
ம் உருவேற்படுத்தி இருளையுஞ் சிருஷ்
டித்துச் சுகவாழ்வையும் உண்டுபண்ணி
த் துன்பத்தையும் படைப்பிக்கிறவர் நா
மே யெகோவாவாகிய நாமே யிவைகளை
8 யெல்லாஞ்செய்கிறவர்.—வானங்களே உ
யர இருந்து சொரியுங்கள், ஆகாயமண்
டலங்கள் நீதியைப்பொழியக்கடவது, பூ
மி திறவுண்டு இரட்சிப்பின் கனியைத்தந்
து, நீதியுங் கூட விளைவதாக, யெகோவா
வாகிய நாம் இவைகளைச் சிருஷ்டிக்கிறோ
9 ம்.—மண்ஓடுகளோடொத்த ஓடாயிருந்
தும், தன்னை யுருவாக்கினவரோடே வழ
க்காடுகிறவனுக்கையோ,களிமண் தன்னை
உருவாக்கினவனுடனே என்ன செய்கி
றாயென்றும், அல்லது உன் கிரியைக்கா
ன கைகளில்லையென்றுஞ் சொல்லுமோ.
10 — தகப்பனோடே என் சனிப்பித்தா
யென்றுந் தாயோடே யேன்பெற்றாயெ
11 ன்றுஞ் சொல்லுகிறவனுக்கையோ!— இ
ஸ்ரவேலின் பரிசுத்தராகிய யெகோவா
வும் அதை யுருவாக்கினவருஞ் சொல்லு

Digitized by Google

...ாக து. வருங்காரியங்களைக் குறித்து
...ளைக் கேட்டீர்கள் நம்முடைய பிள்
...ளைகளைக்குறித்தும் நம்முடைய கரங்களின்
...க்களையுங் குறித்துக் கட்டளையிடு
...வீர்களோ!—நாம் பூமியையுண்டுபண் 12
...ணவேயதின்மேலிருக்கிற மனுஷனை
...டைத்தேன் நம்முடைய கரங்கள்
...வானங்களை விரித்து அவையின் சேனை
...யெல்லாம் கற்பித்தோம்.—நாம் 13
...க அவனை எழுப்பினோம் அவன்
...வழிகளையெல்லாஞ் செவ்வையாக்குவோ
...அவன் நம்முடைய பட்டணத்தைக் க
...ச் சிறைப்பட்டுப்போன நம்முடைய
...ர்களைக் கிரயமில்லாமலும் பரிதான
...மில்லாமலும் விடுதலையாக்குவனென்
...சேனைகளுடைய தேவனாகிய கர்த்தர் சொல்
...கிறார்.—எகிப்துவின் பிரயாசமும் எ 14
...தியோப்பியரின் வருத்தகமும் நெடிய
...ட்களாகிய சபேயரின் வருத்தக இலா
...மும் உன்னண்டைக்குத் தாண்டிவந்து
...ன்னுடையதாகும் அவர்கள் உன்பிறகே
...சென்று விலங்குகளில் நடந்துவந்து உ
...க்குள்ளே தானே தேவனிருக்கிறார், அ

வரையல்லாமல் வேறே தேவனில்லையெ
ன்று, உன்னைப்பணிந்து கொண்டு, உன்
னைநோக்கி விண்ணப்பம் பண்ணுவார்க
15 ளென்று யெகோவா சொல்லுகிறார்.—இ
ஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய
தேவரீர் மெய்யாகவே மறைவான தேவ
16 னாயிருக்கிறீர்.—சுரூபங்களை யுண்டுபண்
ணுகிற அனைவரும் நாணி, இலச்சையும
டைந்து ஏகமாய் வெட்கப்பட்டுப் போ
17 வார்கள்.—இஸ்ர வேலோவெனில் யெ
கோவாவாலே நித்திய இரட்சிப்பாக இ
ரட்சிக்கப்படும். நீங்களென்றென்றைக்கு
முள்ள சதாகாலங்களில் நாணமலும் வெ
18 ட்கப்படாமலுமிருப்பீர்கள்.—ஏனெனி
ல் வானங்களைச்சிருஷ்டித்துப் பூமியையு
ம் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல்
அதைக் குடியிருப்பாகச் செப்பனிட்டுப்
படைத்து அதையுருவேற்படுத்தின தே
வனாகிய யெகோவா சொல்லுகிறதாவது,
நாமே யெகோவா வேறொருத்தரில்லை.—
19 நாம் அந்தரங்கத்திலும், பூமியின் அந்த
காரமானவிடத்திலும் பேசினதில்லை, நா
ம் யாக்கோபின் வித்துக்குவிருதாவாக ந

Digitized by Google

ம்மைத் தேடுங்களென்று சொன்னதுமி
ல்லை நாம்நீதியைப்பேசி நிதானங்களை யு
ரிவிக்கிற யெகோவா.
சாதிகளில் தப்பினவர்களே, கூடிக் 20
கொண்டுவாருங்கள், ஏகமாய்ச் சேருங்க
ள் தங்கள்சுரூபங்களின் மரத்தைச்சுமக்
து,இரட்சிக்கமாட்டாத தேவனைத் தொ
ழுது கொள்ளுகிறவர்கள் அறிவில்லாதிரு
க்கிறார்கள்.—நீங்களறிவிக்கும் படிக்குச் 21
சேர்ந்து, ஏகமாயோசனையும் பண்ணுங்
கள், இதைப் பூருவகால முதற்கொண்டு
கேட்கப்பண்ணி அப்போது துவக்கி அ
தையறிவித்தவரார்? யெகோவாவாகியநா
மல்லவோ? நீதிபரனும் இரட்சகருமாகி
ய நம்மையல்லாமல் வேறேதேவனில்லை
நம்மைத்தவிர வேறொருத்தருமில்லை.—
பூமியின் எல்லா எல்லைகளே நம்மை நே 22
ரிட்டு நோக்குங்கள் அப்போதிரட்சிக்க
ப்படுவீர்கள்,ஏனென்றால் நாமேதேவன்
வேறொருத்தருமில்லை.-நமக்கு முழங்கா 23
ல்யாவும் முடங்கி, யெகோவாவுக்குள்
மாத்திரம் எனக்கு நீதிகளும் பலனுமு
ண்டென்று நாவுயாவுஞ்சத்தியம்பண்ண-

Digitized by Google

வேணுமென்று, நம்மைக்கொண்டு நா
ம் ஆணையிட்டோம். இந்த நீதியான வா
ர்த்தை நமது வாயிலிருந்து புறப்பட்ட
து. அது மாறுவதுமில்லையென்றார்.—
24 அப்படிக்கொத்தவர்கள் அவரண்டைக்கு
வந்து சேருவார்கள். ஆனாலும் அவருக்
கு விரோதமாய் எரிகிற யாவரும் வெட்
25 கப்படுவார்கள்.— இஸ்ரவேலின் வித்தா
கிய யாவரும் யெகோவாவுக்குள் நீதிமா
ன்களாகி மேன்மை பாராட்டுவார்கள்.

## ௪௬. அதிகாரம்.

*அப்பாலுந் தேவன் அந்த இரட்சிப்பின் நிச்சயத்தைத் திடப்படுத்தித் தமது சனத்தை விக்கிரக ஆராதனைக்குச் சாயாதபடிக்கு எச்சரித்தது.*

1 பெல்குனிந்து, நேபோமடங்கிப்போம்.
அவர்களுடைய விக்கிரகங்கள் சீவன்களு
க்கும் மிருகங்களுக்குஞ் சுமையாகும் மூ
ட்டைகளாகிய உங்கள் சுமைகள் இளைப்
2 பான சீவன்களுக்குப் பாரமாம்.- ஏகமா
யிமடங்கிக் குனியும், மூட்டையாகாதப
டிக்கு அவைகள் தப்பமாட்டா? அவைக
ள் தாங்கள்தான் சிறைப்பட்டுப்போம்.


Digitized by Google

தாயின் வயிற்றிலே துவக்கி, நம்மாலே 3
ஏந்தப்பட்டுத் தாயின் கருப்பத்திலே து
வக்கிச் சுமக்கப்பட்டவர்களாகிய யாக்
கோபின்வீட்டாரே இஸ்ரவேலின் வீட்டி
ல் மீதியாகிய சகல சனங்களே நம்மைக்
கேளுங்கள்.—உங்கள் முதிர்ந்த வயதும 4
ட்டுக்கும் நாம் அவரே, நரைமட்டுக்கும்
நாஞ் சுமப்போம். நாம் அப்படிச்செய்
து வந்தோம். இனிமேலும் நாம் எடுப்
போம். நாஞ் சுமப்போம் தப்புவிடுவி
ப்போம்.

ஆருக்கு நம்மைச் சாயலுஞ் சமானமு 5
மாக்கி, ஆருக்கு நாஞ் சாயலாகும்படிக்
கு நம்மை ஒப்பிடுவீர்கள்!—பையிலிரு 6
க்கிற பொன்னைச் செலவழித்து, வெள்
ளியைத்திராசில் நிறுத்துத் தட்டானுட
னே கூலியொருந்திக்கொள்ளுகிறார்கள்,
அவனதைத் தேவனாக்குகிறான், அதை வ
ணங்கிப் பணிந்துகொள்ளுகிறார்கள்.—
அதைத் தோளின்மேலெடுத்து அதைச் 7
சுமந்து அதை அதின் தானத்திலே வைக்
கிறார்கள். அங்கே நிற்குந் தன்னிடத்
தை விட்டசையாது. ஒருவன் அதை

Digitized by Google

நோக்கிக்கூப்பிட்டால், அது மறுவுத்தர
வுகொடுக்கிறதுமில்லை அவன் இக்கட்டை
நீக்கி, அவனை இரட்சிக்கிறதுமில்லை.—
8 இதை நினைத்து, உங்களைத் திடப்படுத்தி
க்கொள்ளுங்கள், பாதகரே இதை மனதில்
9 வையுங்கள்.—முந்திப் பூருவ காலத்து
வக்கி நடந்தவைகளை நினையுங்கள், ஏனெ
னில் நமே தேவன், வேறொரு தேவனி
ல்லை, நமக்கொத்ததொன்றுமில்லை. —
10 நாம் பிற்காரியத்தை ஆதிமுதற்கொண்டு
ம் இன்னஞ் செய்யப்படாதவைகளைப்
பூருவகால முதற்கொண்டும் அறிவித்து
நம்முடைய ஆலோசனை நிற்குமென்றும்
நமக்குச் சித்தமானதை எல்லாஞ் செய்
11 வோமென்றுஞ் சொல்லி,—ஊராஞ்சுகிற
ஒரு பட்சியைக் கிழக்கிலும் நம்முடைய
ஆலோசனையின் மனுஷனைத் தூர தேச
த்திலுமிருந்து வரவழைக்கிறவராயிருக்கி
றோம். அதைச் சொன்னோம், அதை வ
ரவும்பண்ணுவோம், அதைத் திட்டம்பண்
ணினோம், அதைச் செய்துமிருப்போம்.
12 முரட்டிருதயத்தாரே, நீதிக்குத் தூர
மானவர்களே, நம்மைக் கேளுங்கள்.—

Digitized by Google

நம்முடைய நீதியைச் சமீபிக்கப்பண்ணு 13
கிறேம். அது தூரமாயிருப்பதில்லை. ந
மது இரட்சிப்பு தாமதிப்பதுமில்லை. நா
ஞ் சீயோனிலே இரட்சிப்பையும் இஸ்ர
வேலுக்கு நமது மகிமையையுங் கட்டளை
யிடுவோம்.

---

## ௪௭. அதிகாரம்.

*பாபேலுடைய அழிவின் தீர்க்கதரிசனம்.*

பாபேல் குமாரத்தியாகிய கன்னியா 1
ஸ்திரீயே, நீ இறங்கி மண்ணிலே யுளுக்
காரு, கல்தேயரின் குமாரத்தியே, தரை
யிலே யுளுக்காரு, இனி இராசாசனமில்
லை. ஏனெனில் நீ அப்புறஞ் செருக்குக்கா
ரியுஞ் சுக செல்வியுமென்றழைக்கப்படு
வதில்லை.—ஏந்திரத்தை வாங்கி மாவரை, 2
உன் கூந்தலை விரித்துவிடு. வெற்றுக்காலு
ம் அம்மணத்தொடையுமாய் ஆறுகளைக்
கடந்துபோ.—உன் நிருவாணந் திறக்கப் 3
படும். உன் இலச்சை காணப்பட்டுப்
போம். ஒருத்தனையும் பாராமல் நீதியைச்
சரிக்கட்டுவோம்.—எங்கள் மீட்பருடை 4
ய நாமம் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய

Digitized by Google

சேனைகளுடைய யெகோவாவென்பது.—
5 கல்தேயரின் குமாரத்தியே, நீ மவுனமா
யுளுக்கார்ந்து இருளுக்குட் பிரவேசி, ஏ
னெனில் இனி இராச்சியங்களுடைய நா
யச்சியாரென்றழைக்கப்படாய்.
6 நாம் நமது சனத்தின்மேற் கடுங்கோ
பமடைந்து, நமது சுதந்திரத்தைப் ப
ரிசுத்தகுலைச்சலாக்கி அவர்களை உன் கை
யில் ஒப்புக்கொடுத்தோம். நீயோவெனி
ல் அவர்களுக்காக இரக்கம் வையாமல்
முதிர்ந்த வயதுள்ளவர்களின் மேல் உன்
7 நுகத்தடியை மகா பாரமாக்கி,—என்
றென்றைக்கும் நாயச்சியாராயிருப்பே
னென்று சொல்லி இந்தக் காரியங்க
ளை இதுவரைக்கும் உன் மனதிலே வை
யாமலும் அதின் முடிவை நினையாமலு
8 ம் போனாய்,—இப்போதுஞ் சுகமாயிரு
ந்து நான் தானே என்னைத் தவிர ஆருமி
ல்லை, நான் விதவையாய் உளுக்காராமலு
ஞ் சந்தான சேதத்தை அறியாமலும் இ
ருப்பேனென்று உன் இருதயத்திலே
சொல்லுகிற செல்வியே நாஞ் சொல்வ
9 தைக் கேள்.—சந்தான சேதமும் வித

Digitized by Google

வைப்பிருப்பும் இவ்விரண்டும் உனக்குப்
பிலே ஒரே நாளிலே வரும் உன் திர
ளான சூனியங்களின் நிமித்தியமும் உ
ன் தம்பனங்களின் மகா வெகுத்தத்தின்
நிமித்தியமும் அவைகள் நிறைவாகரமா
ய் உன்மேல் வரும்.
எனெனில் உன் பொல்லாங்கிலே நீ 10
திட நம்பிக்கையாயிருந்து என்னைப் பார்
க்கிறவரில்லையென்றாய், உன் ஞானமும்
உன் அறிவுமே உன்னைப் புரட்டின. ஆ
கையால் உன் இருதயத்திலே நான்தா
னேஎன்னைத்தவிர ஆருமில்லையென்றாய்.
ஆனபடியால் எங்கேயிருந்து உதித் 11
தென்று நீ அறியாத ஒரு பொல்லாங்கு
உன்மேல் வந்தது நீ, நிவிர்த்தியாகமாட்
டாத ஒரு விக்கினம் உன்மேல் விழுந்து
நீ அறியாதபடிக்கு அசுப்பிலே உண்டா
க்கும் பாழ்க்கடிப்பு உன்மேல் வரும்.—
இப்போதும் இலாபம் அடையமாட்டு 12
வாயோவென்றும், உன்னைப்பலப்படுத்
துவாயோவென்றும், நீ புன் சிறுவயது
துவக்கிப் பிரயாசப்பட்டு, உன் தம்பன
ங்களிலும் உன் திரளான சூனியங்களிலு

Digitized by Google

13 ம். நீ யில்லே,—உன் திரளான யோசனை
களிலே வேசாறினேயே, இப்போதும்
வானத்தைக் கவனித்து நட்சத்திரங்களை
நோக்கி அமவாசைகளைப் பார்த்துக் க
ணிக்கிறவர்கள் எழும்பி, உன்மேல் வரு
கிறவைகளுக்கு உன்னை விலக்கி இரட்சிக்
14 கட்டும்.— இதோ தாளடிகளைப்போலி
ருப்பார்கள், நெருப்பு அவர்களைச் சுட்
டெரிக்கும். தங்கள் பிராணனையே அவர்
கள் அக்கினிச் சுவாலையின் கைக்குத் த
ப்புவிப்பதில்லை. அது குளிர்காயுந் தண
லல்ல அது எதிரே யுளுக்காரத்தக்க அடு
15 ப்புமல்ல,—அப்படி யுன் சிறுவயது மு
தல்கொண்டு நீ பிரயாசப்பட்ட உன் வியாபாரி
கள் உனக்கிருப்பார்கள். அவரவர் தங்க
ள் போக்கிலே போய் அலைவார்கள். உன்
னை இரட்சிப்பாரில்லை.

---

## ௪௮. அதிகாரம்.

பாபிலோனிய சிறையிருப்பைத் தொலைக்குஞ் ச
ரீர இரட்சிப்புக்கும் புதுவேற்பாட்டினுடைய ஞா
ன இரட்சிப்புக்கும் பாத்திரமல்லாதபடி நடக்கும்
யூதர்களின்மேல் மேசியா முறையிடுகிறது.

1 இஸ்ரவேலென்ற பேராய் அழைக்கப்

Digitized by Google

பட்டு யூதாவின் நீரூற்றிலிருந்து சுர
ந்தவர்களும் யெகோவாவுடைய நாமத்
தின்மேல் ஆணையிட்டு இஸ்ரவேலுடைய
தேவனை நினைத்தும் அதை உண்மையும்
நீதியுமாய்ச் செய்யாதவர்களும்,— பரிசு ௨
த்தபட்டணத்தாரின் பேரைத் தரித்துக்
கொண்டு சேனைகளின் கர்த்தரென்ற நாம
முள்ள இஸ்ரவேலுடைய தேவன் மேல்
ஊன்றிக்கொள்ளுகிறவர்களுமாகிய யாக்
கோபின் வீட்டாரே கேளுங்கள்,—முன் 3
னடந்தவைகளை அதுக்கு முன் அறிவித்
தோம், நமது வாயிலிருந்து பிறந்தது.
அவைகளைக் கேட்கவும்பண்ணினோம், அ
ப்படியே அசுப்பிலே செய்தோம் அப்ப
டி வந்ததே.—நீ கடினமுள்ளவனென்று 4
ம் உன் பிடரி இருப்பு நரம்பும் உன்னெ
ற்றி வெண்கலமுமென்றும் அறிந்திருக்கி
றோம்.—ஆகையால் என் விக்கிரகம் அ 5
வைகளைச் செய்ததென்றும், என் சுரூப
மும் நான் வார்ப்பித்ததும் அவைகளைக்
கட்டளையிட்டதென்றும் நீ சொல்லாத
படிக்கு நாம் அதுக்கு முன் அவைகளை
உனக்கு முன்னறிவித்து அவைகள் வராத

Digitized by Google

துக்கு முன்னே உனக்குக் கேட்கப்ப
6 ண்ணினேம்.—அவைகளைக் கேட்டாயே
அவைகளையெல்லாம்பார், இப்போது நீ
ங்களுமல்லோ அவைகளை அறிவிக்கத்த
கும், இது முதற் புதிதானவைகளையும்
நீ அறிந்திராமல் வைத்துவைக்கப்பட்ட
வைகளையும் உனக்குக் கேட்கப்பண்ணுகி
7 றேம்.—அவைகள் அதுமுதற்கொண்ட
ல்ல, இப்போது சிருஷ்டிக்கப்பட்டது,
இதோ அவைகளை அறிவேனென்று நீ
சொல்லாதபடிக்கு இந்நாட்களுக்கு மு
ன்னே நீ அவைகளைக் கேட்டிருந்ததில்
8 லை.— நீ கேட்டதுமில்லை அறிந்ததுமில்
லை, அதுமுதல் உன் செவி திறந்துபோ
னதுமில்லை,ஏனெனில் நீ துரோகம்பண்
ணுவதையும் நீ தாயின் கருப்பந் துவக்
கி மீறுகிறவனென்றழைக்கப்பட்டதையு
ம் அறிந்திருந்தோம்.
9 நமது நாமத்தின் நிமித்தம் நம்முடை
கோபத்தைத் தாமதிக்கப்பண்ணினேம்,
உன்னைச் சங்கரியாதபடிக்கு நாம் நமது
புகழ்ச்சிநிமித்தியம் உனக்காகப் பொ
10 றுத்துமிருப்போம்.— இதோ உன்னைப்

Digitized by Google

பிடமிடுகிறோம், ஆனாலும் வெள்ளியைப்
போலல்ல, சிறுமையின் குகையிலே உன்
னைத் தெரிந்துகொள்ளப்பட்டவனாக்கி
றோம்.—நம்முடைய நிமித்தியம் நம்மு 11
டைய நிமித்தியமே அதைச் செய்வோ
ம், ஏனெனில் எப்படி நமது நாமத்தின்
பரிசுத்தங் குலைக்கப்படலாம், நமது மகி
மையைவேறொருதனுக்குக் கொடோம்.
யாக்கோபே, நாம் அழைத்திருக்கிற இ 12
ஸ்ரவேலே நமக்குச் செவிகொடு, நாம்
அவரே நாம் முந்தினவரும் நாம் பிந்தி
னவருந்தானே.—நம்முடைய கரமே பூ 13
மியை அஸ்திபாரப்படுத்தி நம்முடைய
வலது கை வானங்களை அளவிட்டது, நாம்
அவைகளைக் கூப்பிட அனைத்தும் நிற்கு
ம்,— நீங்களெல்லாருங் கூடிவந்து கே 14
ளுங்கள் யெகோவா சிநேகித்திருக்கி
றவன் அவருக்குச் சித்தமானதைப் பா
பேலிலே செய்வான், அவன் புயங் கல்
தேயரின் மேலிருக்கிறதென்பவைகளை
இவர்களில் அறிவித்தவனார்.— நாம் நா 15
மே அதைச் சொன்னோம், நாம் அவனை
அழைக்கிறவருமாயிருக்கிறோம்: அவனை

Digitized by Google

வரப்பண்ணுவோம் அவன் வழி வாய்க்கி
றதுமாயிருக்கும்.
16 நம்மண்டை சேர்ந்து நாஞ் சொல்வ
தைக் கேளுங்கள், நாம் ஆதிமுதற்கொ
ண்டு அந்தரங்கத்திலே பேசினதில்லை, அ
துவுண்டாகுங் காலந் துவக்கி அங்கே நா
ம் இருந்தோம். இப்போதோ யெகோவா
வாகிய ஆண்டவரும் அவருடைய ஆவியு
17 ம் நம்மை அனுப்புகிறார்.--இஸ்ரவேலின்
பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான யெ
கோவாச் சொல்லுகிறதாவது, நாம் பிர
யோசனமாயிருக்கிறதை உனக்குப் போ
தித்து நீ நடக்கவேண்டிய வழியில் உ
ன்னை நடத்துகிற உன் தேவனாகிய யெ
18 கோவா.—ஆ! நம்முடைய கற்பனைக‌ளை
க் கவனித்தாயானால் தாவினே, அப்போ
து உன் சமாதானம் நதியத்தனையும் உ
ன் நீதி சமுத்திரத்தின் அலைகளத்தனையு
19 மாயிருக்கும்.- அப்போது உன் வித்து ம
ணலத்தனையும் உன் கருப்பப்பிறப்புகள்
அதின் பொடிக்கல்லுக்களத்தனையுமாயி
ருக்கும். அப்போது அதின்பேர் நம்

Digitized by Google

மை விட்டு அறப்புண்ணுமலும் அழிக்க
ப்படாமலும் இருக்கும்.

பாபேலிலிருந்து புறப்படுங்கள், கல் 20
தேயரை விட்டுக் கம்பீர சத்தமாய் ஓ
டிவாருங்கள், இதை அறிவித்துக் கேட்
கப்பண்ணுங்கள், இதைப் பூமியின் கடை
யாந்தரமட்டும் வெளிப்படுத்துங்கள் யெ
கோவாத் தமதடியாளுகிய யாக்கோபை
மீட்டுக்கொண்டாரென்று சொல்லுங்க
ளென்கிறார். - அவர் இவர்களை வனாந்தரங் 21
களில் நடத்தும்போது, இவர்களுக்குத்
தாகத் தவனமாயிராது, தண்ணீர்களைக்
கன்மலையிலிருந்து இவர்களுக்குச் சுர
க்கப்பண்ணித் தண்ணீர்களோடிவரக்க
ன்மலையைப் பிளப்பார், —ஆகாதவர்களு 22
க்கோ சமாதானமில்லையென்று யெகோ
வாச் சொல்லுகிறார்.

---

## ௪௯. அதிகாரம்.

மேசியா உலகத்தின் இரட்சகராகவருவாரெ
ன்பதும், கெஞ்சுகிற சபைக்குச் சொன்ன ஆ
றுதலும்.

தீவுகளே! நமக்குக் கேள்விகொடுங்க!

ள், தூரத்திலிருக்கிற சனசதளங்களே
கவனியுங்கள். யெகோவா நம்மைத் தா
யின் கருப்பத்திலே துவக்கி அழைத்து
நான் என் தாயின் குடல்களிலிருக்கக்
கொள்ள என் நாமத்தைப் பிரஸ்தாபப்ப
௨ டுத்தினார்.—அவர் என் வாயைக் கூர்மை
யான பட்டயமாக்கித் தம்முடைய கரத்
தின் நிழலினலென்னை மறைத்து என்னை
த் துலக்கமான அம்பாக்கி என்னைத் த
ம்முடைய அம்பிருத் தூணியிலே மூடி
3 வைத்தார்.-நம்முடனே நீரே நம்முடை
ய ஊழியகாரன், இஸ்ரவேல் நாம் மகி
4 மைப்படுஞ் சாதியென்றார்.— நாமோ
சொன்னதாவது, விருதாவாய் உழைக்கி
றோம். வீணும் அவத்தமுமாய் நம்முடை
யபலனைச் செலவழிக்கிறோம்.ஆகிலும் ந
ம்முடைய நியாயம் யெகோவாவிடத்தி
லும் நம்முடைய பலன் நம்முடைய
தேவனிடத்திலும் இருக்குதென்றோம்.
5 இப்போதும் நம்மைத் தாயின் கருப்
பத்திலே துவக்கித் தமக்கு ஊழியகார
ஞக உருவேற்படுத்தின யெகோவா யா
க்கோபைத் தம்மண்டைக்குத் திருப்பச்


Digitized by Google

சொல்லுகிறார், ஆனாலும் இஸ்ரவேல் சே
ராதேபோகின்றது ஆகிலும் யெகோ
வாவுடைய பார்வையிற் கனமடைவோ
ம், நமது தேவன் நம்முடைய பெலனாயி
ருப்பார். - யாக்கோபின் கோத்திரங்களை 6
நிமிர்த்தவும், இஸ்ரவேலில் மீர்த்து வை
க்கப்பட்டவர்களைத் திருப்பவும் நீர் ந
மக்கு ஊழியக்காரனாயிருக்கிறது கொ
ஞ்சக்காரியமாயிருக்கின்றது, நீர் பூமியி
ன் கடைசிபரியந்தமும் நமது இரட்சிப்
பாய் இருக்கவும் உம்மைச் சாதிகளின் வெ
ளிச்சமாகவும் வைத்தோமென்கிறார். - ச 7
த்தியமுள்ள யெகோவாவின் நிமித்தியமு
ம் உம்மைத்தெரிந்துகொண்ட இஸ்ரவே
லுடைய பரிசுத்தரின் நிமித்தியமும் இ
ராசாக்கள் கண்டெழுந்திருந்து, பிரபுக்
கள் பணிந்துகொள்வார்களென்று, இஸ்
ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தரு
மாகிய யெகோவா சாதியால் அருவருக்க
ப்பட்டவரும் அங்காரிகளின் பணிவிடை
காரனுமான அசட்டை பண்ணப்பட்ட
ஆத்துமாவுக்குச் சொல்லுகிறார். — யெ 8
கோவாச் சொல்லுகிறதாவது, பிரியமா

Digitized by Google

ன காலத்தில் உம்முடைய வேண்டுதலைக்
கேட்டு இரட்சிப்பின் நாளிலே உமக்கு
ஒத்தாசை பண்ணுகிறோம். நீர் பூமி
யை நிமிர்த்துப் பாழாய்க் கிடக்கிற சு
தந்தரங்களைச் சுதந்தரிக்கப்பண்ணவும்,
9 —கட்டுண்டவர்களுடனே புறப்படுங்க
ளென்றும் இருளிலிருக்கிறவர்களுடனே
வெளிப்படுங்களென்றுஞ் சொல்லவு
ம் நாம் உம்மைக் காப்பாற்றி உம்மை
ச் சனத்தின் உடம்படிக்கையாகக் கட்ட
ளையிடுவோம். அவர்கள் வழிகளோரமாய்
மேய்வார்கள், சகலமேடுகளிலும் அவர்
களுக்கு மேய்ச்சலுண்டாயிருக்கும்.—
10 அவர்கள் பசியாயிருப்பதுமில்லைத் தாக
மாயிருப்பதுமில்லை உஷ்டணமாகிலும்
வெயிலாகிலும் அவர்கள்மேற் படுவதுமி
ல்லை, ஏனெனில் அவர்களுக்கிரங்குகிறவ
ர் அவர்களை நடத்த அவர்களை நீரூற்றுக
ளண்டைக்குக் கொண்டுபோய் விடுவார்.
11 —நமது பருவதங்களை எல்லாம் வழி
களாக்குவோம் நம்முடைய பாதைகள் உ
12 யர்த்தப்பட்டவைகளுமாயிருக்கும்.—
இதோ இவர்கள் தூரத்திலும் அதோ அ

Digitized by Google

வர்கள் வடக்கிலும் மேற்கிலும் அவர்கள்
சீனீம் தேசத்திலுமிருந்து வருவார்களெ
ன்கிறார்.
வானங்களே கம்பீரியுங்கள் பூமியேக 13
ளிகூரு பருவதங்களே கம்பீரமாய் முழ
ங்குங்கள், ஏனெனில் யெகோவாத் தம்
முடைய சனத்தைத் தேற்றரவு பண்ணி
னார். சிறுமைப்பட்டிருக்கிற தம்முடைய
வர்கள்மேல் இரக்கமாயிருப்பார்.—சீ 14
யோனோவென்றால் யெகோவா என்னை
க் கைவிட்டார், ஆண்டவர் என்னை மற
ந்தாரென்கிறது.—ஒரு இஸ்திரி தன் கரு 15
ப்பத்தின் பிள்ளைக்கிரங்காதபடிக்குத் த
ன் பாலகனை மறப்பாளோ? அப்படிக்
கொத்தவள் அவைகளைமறந்தாலும் நாம்
உன்னை மறப்பதில்லை.—இதோ உள்ளங் 16
கைகளில் உன்னைப்பதித்தோம் உன்மதி
ல்கள் நித்தம் நமக்குமுன்பாகவிருக்கின்
றது.—உன் குமாரர் தீவரித்து வருவார் 17
கள், உன்னை நிருமூலமாக்கினவர்களும்
உன்னைப் பாழ்க்கடித்தவர்களும் உன்னை
விட்டுப் புறப்பட்டுப்போவார்கள்.
உன் கண்களையேறெடுத்துச் சுற்றிலு 18

Digitized by Google

ம் பார், இவர்களெல்லாருங் கூட்டப்பட்டு உன்னண்டைக்கு வருவார்கள். நீ இவர்களையெல்லாம் ஆபரணமாகத்தரித்து, ஒரு மனைவியைப்போலே இவர்களை உடையாகக்கட்டிக் கொள்ளுவாய் என்கிறதை நம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறோமென்று யெகோவாவுரைக்கி
19 றார்.—ஏனெனில் உன்னுடைய வனாந்தரங்களும் பாழான உன்னுடைய தானங்களும், நிர்மூலமான உன்னுடைய தேசமுமே இனிக் குடிகளின் திரளினாலே உனக்கு நெருக்கமாயிருக்கும், உன்னை முழுங்கினவர்களோவெனில் தூரமாவார்கள்.
20 —இடம் எனக்கு நெருக்கமாயிருக்கின்றது, நான் குடியிருக்கும்படிக்கு ஒத்திவிருவென்று, உனக்குண்டாயிருக்கப்போகிற பிள்ளைகளற்றிருந்த உன் காதுகள்
21 கேட்கச் சொல்வதுண்டு.—நீ உன் இருதயத்திலே இவர்களை எனக்குப் பிறப்பித்தவரார். நான் பிள்ளைகளற்றுந் தனித்துஞ் சிறைப்பட்டும் நிலையற்றுமிருந்தேனே, இவர்களை எனக்கு வளர்த்தவரார், இதோ நான் ஒண்டியாய் விடப்பட்டிருந்

Digitized by Google

தேனே, இவர்கள் எங்கேயிருந்தவர்களெ
ன்பாய்.—இதோ சாதிகளுக்கு நேராக ந 22
மது கரத்தையுயர்த்தி சனசதளங்களுக்
கு நேராக நமது கொடியை ஏற்றுவோ
ம். அப்போது உன் குமாரரைக் கொடுங்
கைகளிலேந்திக்கொண்டு வருவார்கள், உ
ன் குமாரத்திகள் தோட்களின் மேலெ
டுத்து வரப்படுவார்களென்று யெகோ
வாவாகிய ஆண்டவர் சொல்லுகிறார்.—
இராசாக்களுன்னை வளர்க்கிறவர்களும் அ 23
வர்கள் நாயகிகள் உன் தாதிகளுமாயிரு
ப்பார்கள். தரையிலே முகங்குப்புறவிழு
ந்து உன்னைப் பணிந்து உன் கால்களின்
தூளை நக்குவார்கள், நாம் யெகோவா, ந
மக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கிப்
போவதில்லை யென்கிறதை அப்போது
அறிந்துகொள்ளுவாய்.

பராக்கிரமன் கையிலே கொள்ளை உ 24
டைமைப் பறிக்கப்படக்கூடுமோ, அல்ல
து நீதியாய்ச் சிறைப்பட்டுப் போனவர்
கள் விடுவிக்கப்படக் கூடுமோ.— இப் 25
போதும் இதோ பராக்கிரமன் சிறைப்ப
டுத்தினவர்களும் பறிக்கப்படுவார்கள். ப

Digitized by Google

லவர்தன் கொள்ளையிட்டதும் விடுவிக்க
ப்படும், உன்னோடே வழக்காடுகிறவர்க
ளோடே நாம் வழக்காடி உன் பிள்ளைக
26 ளை நாம் இரட்சித்துக்கொண்டு,—உன்
னை ஒடுக்கினவர்களுடைய மாமிசத்தை
அவர்களுக்கே தின்னக்கொடுப்போம், ம
துபானத்தால் வெறியாகுமாப்போலே
தங்களுடைய இரத்தத்தினாலே வெறியா
வார்கள், யெகோவாவும் யாக்கோபிலேவ
ல்லவருமாகிய நாம் உன் இரட்சகரும் உ
ன் மீட்பருமாயிருக்கிறதை மாமிசமெல்
லாம் அறியப்போமென்று யெகோவாச்
சொல்லுகிறார்.

---

## ௫௰. அதிகாரம்.

*அவிசுவாசிகளான யூதர் தள்ளப்படும் முகாந்திரத்தையும் அவர்களால் தாம் அனுபவிக்கும் சிக்ஷையையும் மேசியா முன்னறிவித்தது.*

1 யெகோவாச்சொல்லுகிறதாவது நாம்
உங்கள்தாயை அனுப்பிவிட்டோமென்று
அவளுக்குக்கொடுத்த தள்ளுதலின் சீட்
டெங்கே? அல்லது நாங் கடன்பட்ட எவ
னுக்கு உங்களை விற்றுப்போட்டோம்? இ

Digitized by Google

தோ உங்கள் அக்கிரமங்களின் நிமித்தியம்
விற்றுப்போடப்பட்டீர்கள், உங்கள் பா
தகங்களின் நிமித்தியம் உங்கள் தாய் அ
னுப்பிவிடப்பட்டாள்.—நாம் வந்தபோ 2
து ஒருத்தனும் இல்லாமலும், நாங் கூப்
பிட்டபோது மறுவுத்தரவுகொடுக்கிற
ஒருத்தனுமில்லாமலும் போனதேது?
மீட்கக்கூடாதபடிக்கு நம்முடைய கை
குறுகிற்றோ, விடுவிக்கிறதுக்கு நம்மிற்
பலன் இல்லாமற்போயிற்றோ, இதோ
நமது உதம்புதலினாலே நாங் கடலைவரள
ப்பண்ணி, நதிகளை வெட்டாந்தரையாக்கி
ப் போடுகிறோம், அவைகளின் மீன் தண்
ணீரில்லாமல் தாகத்தாற் செத்து நாற்ற
மெடுக்கும்படியாகத்தானே.—நாம் வா 3
னங்களுக்குக் காரிருளையுடுத்தி, இரட்டை
அவைகளின் மூடுசீலையாக்குகிறோம்.—
இளைப்பானவனோடே நாம் சமயத்திலே 4
வார்த்தைசொல்ல அறியும்படிக்கு யெ
கோவாவாகிய ஆண்டவர் நமக்குக் கல்வி
மான்களின் நாவைத் தந்தார், காலமாறு ந
ம்மை எழுப்புகிறார், கற்றுக்கொள்ளுகிற

Digitized by Google

வர்களைப்போலே கேட்கும்படிக்கு ந
மக்குச் செவியை எழுப்புகிறார்.
5 யெகோவாவாகிய ஆண்டவர் நமக்குச்
செவியைத் திறந்தார், நாம் முரண்டுத்த
னம் பண்ணுகிறவருமல்ல, நாம் பின்வாங்
6 கிலலோம்.—நம்முடைய முதுகின்மே
லடிக்கிறவர்களுக்கும், நம்முடைய தா
டை மயிரைப்பிடுங்குகிறவர்களுக்கும், ஒ
ப்புக்கொடுக்கிறோம். நம்முடைய முகத்
தை அவமானங்களுக்கும் உமினீருக்கும்
மறையோம்.
7 ஏனெனில் யெகோவாவாகிய ஆண்ட
வர் நமக்குத் துணைசெய்கிறார், ஆகையா
ல் நாம் வெட்கப்படோம், ஆனதுகொ
ண்டு நம்முடைய முகத்தைக் கற்பாறை
யாக வைத்தோம், ஏனெனில் நாம் வெ
8 ட்கிப்போவதில்லையென்றறிவோம்.—ந
ம்மை நீதிவிளங்கப்பண்ணுகிறவர் சமீ
பமாயிருக்கிறார். ஆர் நம்மோடே வழக்
காடுவான்? கூடிக்கொண்டு நிற்போம், ஆ
ர் நம்முடைய எதிராளி? அவன் நம்மண்
9 டை சேரட்டும்.—இதோ யெகோவாவா
கிய ஆண்டவர் நமக்குத் துணைசெய்கிறா

Digitized by Google

ர், நம்முடைமேற் குற்றஞ்சுமத்துபவரா
ர், இதோ அவர்களெல்லாரும் ஒரு வஸ
திரத்தைப்போலப் பழசாவார்கள், பொ
ட்டு அவர்களை அழிக்கும்.
உங்களிலெவன் யெகோவாவுக்குப் ப 10
யந்து அவருடைய ஊழியக்காரரின்சொ
ற் கேட்டுத் தனக்கு வெளிச்சமில்லாத
தினாலே இருட்டிலே நடக்கிறானோ அவ
ன் யெகோவாவுடைய நாமத்தை நம்பித்,
தன் தேவனைச் சார்ந்துகொள்ளக் கடவா
ன்.—இதோ நெருப்பைக் கொழுத்தி, 11
அக்கினிப் பொறிகளால் அரை கட்டிக்
கொண்டிருக்கிற நீங்களனைவரும் உங்
கள் நெருப்பின் தீயிலும் நீங்கள் மூட்டி
ன அக்கினிச்சுவாலைகளிலும் நடவுங்கள்.
நம்முடைய கரத்தினாலே இது உங்களுக்
கு உண்டாகும், வேதனையிலே கிடப்பீர்
கள்.

---

## ௫௧. அதிகாரம்.

*வாஞ்சையாய்ப் பார்த்துக்கொண்டிருக்கப்பட்ட இரட்சிப்பைவாக்குத்தத்தம் பண்ணி விசுவாசிகளைத்தேற்றினது.*

நீதியைத் தொடர்ந்து யெகோவாவை 1

த்தேடுகிற நீங்கள் நம்முடைய சொற்கே
ளுங்கள், நீங்கள் வெட்டியெடுக்கப்பட்ட
கன்மலையையும், நீங்கள் தோண்டியெடுக்
கப்பட்ட துரவின் குழியையும் நோக்கி
2 ப்பாருங்கள்.— உங்கள் தகப்பனாகிய ஆ
பிரகாமையும் உங்களைப்பெற்ற சாராளை
யும் நோக்கிப் பாருங்கள் ஏனென்றால்
அவன் ஒருத்தனாயிருக்க நாம் அவனை அ
ழைத்து அவனை ஆசீர்வதித்து அவனைப்
3 பெருகப்பண்ணினோம்.— அதேதெனி
ல் யெகோவா சீயோனைத் தேற்றரவுபண்
ணுவார். அவர் அதின் பாழ்தலங்களையெ
ல்லாந் தேற்றரவுபண்ணி அதின் வனாந்த
ரத்தை ஏதேனைப்போலவும் அதில் அந்
தரவெளியை யெகோவாவின் தோட்டத்
தைப் போலவுமாக்குவார். சந்தோஷமு
ம், மகிழ்ச்சியும், துதியும், கீதசத்தமும்
அதிலுண்டாயிருக்கும்.
4 நம்முடைய சனமே நம்மைக்கவனியு
ங்கள். நம்முடைய சனசதளமே நமக்கு
ச் செவிகொடுங்கள். ஏனெனில் வேதம்
நம்மிலிருந்து வெளிப்படும் நம்முடைய
நியாயத்தைச் சனசதளங்களின் வெளிச்

Digitized by Google

சமாக வீசப்பண்ணுவோம்.—நமது நீ 5
தி சமீபித்திருக்கின்றது, நமது இரட்சி
ப்பு வெளிப்படும், நமது புயங்கள் சன
சதளங்களை நியாயந்தீர்க்கும், தீவுகள் ந
மக்குக் காத்திருந்து நம்முடைய புயத்தி
ன்மேல் நம்பிக்கையாயிருக்கும்.—உங்க 6
ள் கண்களை வானத்துக்கேறெடுத்துத்
தாழவிருக்கிற பூமியையும் நோக்கிப்பா
ருங்கள், ஏனெனில் வானம் புகையைப்
போல உருவழிந்து பூமி வஸ்திரத்தைப்
போலப் பழசாய்ப்போம், அதின் கு
டிகளும் அப்படியே சாவார்கள். நம்மு
டைய இரட்சிப்போவென்றால் என்றெ
ன்றைக்குமிருக்கும், நம்முடைய நீதி மு
றிந்து போவதில்லை.

நீதியை அறிந்தவர்களே, நமது சொற் 7
கேளுங்கள், நம்முடைய வேதத்தை இரு
தயத்திலே தரித்திருக்கிற சனமே மனு
ஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும் அ
வர்கள் தூஷணங்களாற் கலங்காமலுமிரு
ங்கள்,—ஏனென்றாற் பொட்டு அவர்களை 8
வஸ்திரங்களைப்போலே அரித்துப் பூச்சி
அவர்களை ஆட்டுமயிரைப்போலே சதை

Digitized by Google

த்துப்போகும். நம்முடைய நீதியோ
என்றென்றைக்கும் நம்முடைய இரட்சி
ப்பு தலைமுறை தலைமுறைகளாகவுமிரு
க்கும்.
9 எழும்பு, எழும்பு, பலன்கொள். யெ
கோவாவின் புயமே முந்தின நாட்களு
க்கும் பூருவ தலைமுறைகளுக்கும் ஒத்த
படியெழும்பு, ராகாப்பைத் துண்டித்த
தும் முதலையை வதைத்ததும் நீதானல்
10 லவோ?—மகா ஆழத்தின் தண்ணீர்களா
கிய சமுத்திரத்தை வரண்டுபோகப்பண்
ணினதும், மீட்கப்பட்டவர்கள் கடந்து
போகக் கடலின் பள்ளங்களை வழியாக்
11 கினதும் நீதானல்லவோ?— அப்படியே
யெகோவாவால் மீட்கப்பட்டவர்கள் தி
ரும்பிக் கம்பீரத்தோடே சீயோனுக்கு
வருவார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்கள்
தலையின் மேலிருக்கும், சந்தோஷமும்
மகிழ்ச்சியும் அவர்களைப் பிடிக்கும், ச
12 ஞ்சலமுந் தவிப்பும் ஓடிப்போம்.—நா
ம் நாமே உங்களைத் தேற்றரவுபண்ணு
கிறவர், சாகப்போகிற மனுஷனுக்கும் பு
ல்லுக்கொப்பாகிற மனுப்புத்திரனுக்கு


Digitized by Google

ம் பயப்படுகிறதுக்கும், —வானங்களை வி 13
ரித்துப் பூமியை அஸ்திபாரப்படுத்தி உ
ன்னை உண்டாக்கின யெகோவாவை மற
க்கிறத்துக்கும் நீயார்? இடுக்கண் செய்கி
றவன் அழிக்க ஆயத்தமாகிறபோது, நீ
அவனுடைய உக்கிரத்துக்கு நித்தமெந்
நாளிலும் அருக்களிப்பானேன், இடுக்க
ண்செய்பவனுடைய உக்கிரமெங்கே?—
பரதேசியாய்ப் போகிறவன் தீவிரமாய் 14
விடுதலையாவான், அவன் கெபியிலே சா
வதுமில்லை அவனுடைய அப்பம் அவனு
க்குக் குறைபடுவதுமில்லை.—ஏனெனில் 15
நாமே சமுத்திரத்தை அதின் அலைகள்
கொந்தளிக்கத் தக்கனையாய்க்குலுக்குகிற
சேனைகளுடைய யெகோவாவென்ற நா
மமுள்ள உன் தேவனாகிய யெகோவா.—
நாம் வானத்தை நாட்டிப் பூமியை அஸ் 16
திபாரப்படுத்திச் சீயோனுடனே நீ நம்
முடைய சனமென்று சொல்வதற்காக
நாம் நம்முடைய வார்த்தையை உன் வா
யிலே கொடுத்து நம்முடைய கரத்தின்
நிழலினால் உன்னை மறைக்கிறோம்.
எழும்பிக்கொள், எழும்பிக்கொள். யெ 17

Digitized by Google

கோவாவுடைய உக்கிரத்தின் பாத்திரத்
தை அவர் கையில் வாங்கிக் குடித்திருக்கிற
எருசலேமே எழும்பு, தத்தளிப்பினுடை
யபாத்திரத்தின் வண்டல்களைக்குடித்துறி
18 ஞ்சினாய்.—அவள் பெற்ற எல்லாக்குமா
ரரிலும் அவளை மெதுவாய் நடத்துவா
ருமில்லை அவள் வளர்த்த எல்லாக் குமா
ரரிலும் அவளைக் கைக்கொடுத்து அழை
19 ப்பாருமில்லை.-இவ்விரண்டும் உனக்குச்
சம்பவித்தது, உனக்குப் பரிதபிக்கத்த
க்கவனார்? பாழ்க்கடிப்பும் நொருக்குத
லும் பஞ்சமும் பட்டயமும் வந்தது, ஆ
ரைக்கொண்டு உன்னைத் தேற்றரவுபண்
௨0 ணுவேம்?-உன் குமாரர்மூர்ச்சித்து வி
ழுந்தார்கள், அவர்கள் வலையிற்சிக்குண்ட
கலைமானைப்போலெல்லா வீதிகளின் மு
கனையிலுஞ் யெகோவாவுடைய உக்கிரத்
தினாலும் உன் தேவனுடைய உதம்புதலி
னாலும் நிறைந்தவர்களாய்க் கிடக்கிறார்
கள்.

௨1 ஆனதுகொண்டுசிறுமைப்பட்டவளே,
மதுபானமல்லாமல் வெறிகொண்டவ
௨2 ளே நீ கேளே.-யெகோவாவாகிய உன்

Digitized by Google

ஆண்டவருந் தமது சனத்துக்காக வ
ழக்காடப்போகிற உன் தேவனுமானவர்
சொல்லுகிறதாவது இதோ, தத்தளிப்பி
ன் பாத்திரத்தை உன் கையிலே வாங்கிப்
போடுகிறோம், இனி நம்முடைய உக்கி
ரத்தினுடைய பாத்திரத்தின் வண்டல்க
ளை நீ குடிப்பதில்லை.—கடந்துபோகிற 23
வர்களுக்கு நீ உன் முதுகைத் தரையுந்
தெருவுமாக்கும்படியாக உன் ஆத்துமத்
துடனே நாங்கள் கடந்துபோகும்படி
க்குக் குனியென்று சொல்லி, உன்னைச் ச
ஞ்சலப்படுத்தினவர்களின் கையிலே அ
தைக் கொடுப்போமென்கிறார்.

---

## ௫௨. அதிகாரம்.

*சவையின் இரட்சிப்பையுஞ் சுவிசேஷத்தின் இன்பமான பிரசங்கிப்பையும் முன்னறிவித்தது.*

எழும்பு எழும்பு சீயோனே, உன் ப 1
லனைத்தரித்துக்கொள், பரிசுத்தபட்டண
மாகிய எருசலேமே உன் அலங்கார வஸ்
திரங்களைத் தரித்துக்கொள், ஏனெனிற் சு
ன்னத்தில்லாதவனும், அசுத்தனும் இனி

Digitized by Google

2 உனக்குள் வருவதில்லை.—தூளை உதறிப்
போட்டெழுந்திரு எருசலேமே உழுக்
காரு, சிறைப்பட்டுப்போன சீயோன் கு
மாரத்தியே உன் கழுத்தின் கட்டுகளை அ
3 விழ்த்து விடு.—ஏனெனில் யெகோவா
சொல்லுகிறதாவது, இலவசமாய் விற்கப்
பட்டீர்கள், பணங்கொடாமலும் மீட்கப்
4 பட்டுப்போவீர்கள்.—ஏனென்றால் முந்
தி நம்முடைய சனம் பரதேசியாய்த் த
ங்கி எகிப்துக்கிறங்கிப் போயிருந்தது.
அசூரியனும் முகாந்திரமில்லாமல் அதை
யொடுக்கிப்போட்டானென்று யெகோ
5 வாவாகிய ஆண்டவர் சொல்லுகிறார்.-இப்
போதும் நமக்கிங்கே என்னவிருக்குதெ
ன்று யெகோவா சொல்லுகிறார். ஏனெ
னில் நம்முடைய சனம் சும்மாய்க் கொ
ண்டுபோகப்பட்டது, அதை ஆளுகிறவ
ர்கள் அதை அலறப்பண்ணுகிறார்கள். நி
த்தம் எந்நாளும் நம்முடைய நாமந் தூ
6 ஷிக்கப்படுகின்றது.—இது நிமித்திய
ம், இது நிமித்தியமே நமது சனம் அக்கா
லத்திலே நம்முடைய நாமத்தை அறியும்,
ஏனெனில் இதைச் சொல்லுகிறவர் நா

Digitized by Google

மே, இதோ இங்கே இருக்கிறேனென்
று யெகோவா விளம்புகிறார்.

சமாதானத்தைக் கூறி நற்காரியத்தை 7
ச் சுவிசேஷமாயறிவித்து இரட்சிப்பைக்
கூறிச் சீயோனுடனே உன் தேவன் இரா
சரிக்கப்பண்ணுகிறாரென்று சொல்லுகி
ற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளி
ன்மேலெத்தனை யந்தமானவைகள்,—உ 8
ன் சாமக்காரருடைய சத்தங் கேட்கப்ப
டும் அவர்கள் சத்தத்தையுயர்த்தி ஏகமா
ய்க் கெம்பீரிக்கிறார்கள், ஏனென்றால் யெ
கோவா சீயோனைத்திரும்பிவரப்பண்ணு
ம்போது அதைக் கண்ணாரக் காண்பார்
கள்.

எருசலேமின் பாழ்தலங்களே, முழ 9
ங்கியேகமாய்க் கெம்பீரியுங்கள். ஏனெ
னில் யெகோவாத் தம்முடைய சனத்தை
த் தேற்றரவுபண்ணி, யெருசலேமை மீ
ட்டார்.—எல்லாச் சாதிகளின் கண்களுக் 10
கு முன்பாகவும் யெகோவாத் தம்முடை
ய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவா
ர், பூமியின் எல்லைகளெல்லாம் நம்முடை
ய தேவனுடைய இரட்சிப்பைக்காணும்.

Digitized by Google

11 —அகன்று, அகன்று, அவ்விடம் விட்டுப்
புறப்படுங்கள், அசுத்தமானதைத் தொ
டாதேயுங்கள். யெகோவாவுடைய பாண்
டங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடு
விலிருந்து புறப்பட்டு, உங்களைச் சுத்திக
12 ரியுங்கள். —ஏனெனில் நீங்கள் தீவிரித்து
ப் புறப்படுவதில்லை. நீங்கள் ஓடிப்போகி
றவர்களாய் நடப்பதுமில்லை. ஏனென்
றால் யெகோவா உங்கள் முன்னடப்பார்.
இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிற்புறத்
தையுங் காப்பார்.

மேசியாவின் தாழ்ந்த நிலைமையையும் உயர்ச்
த நிலைமையையும் முன்னறிவித்தது.

13 இதோ, நம்முடைய ஊழியக்காரன்
ஞானமாய் நடந்துகொண்டு உயர்த்தப்
பட்டு, மேன்மையும், மகா உன்னதமு
14 மாயிருப்பார். —மனுஷனைப் பார்க்கிலு
ம் அவருடைய முகப்பார்வையும் மனுப்
புத்திரரைப் பார்க்கிலும் அவருடைய
ரூபமும் இத்தனைபந்தக்கேடடைந்தப
டியினாலே அநேகர் உம்முடைய பேரில்
15 எப்படி விறுமிப்பார்களோ, —அப்படி
அநேகஞ் சாதிகள்மேலும் அவர் தெளிப்

Digitized by Google

யார். அவருக்காக இராசாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள். ஏனெனில் எவர்களுக்கு விபரிக்கப்படாதிருந்ததோ, அவர்கள் காண்பார்கள், எவர்களுக்குக் கேள்விப்படாதிருந்ததோ அவர்கள் உணர்வார்கள்.

---

## ௫௩. அதிகாரம்.

கிறிஸ்து பாவிகளுக்குப் பதிலாக அனுபவிக்கும் பாடுகளையும் அவைகளின் பிரயோசனத்தையுங் காண்பிக்கிற மேன்மையான தீர்க்கதரிசனம்.

எங்களாற் கேள்விப்பட்டதை விசுவா 1
சித்தவனார்? யெகோவாவுடைய புயம் ஆ
ருக்கு வெளிப்பட்டது? — கிளையைப் ௨
போலேயும் வரண்ட பூமியிலிருந்து
துளிர்க்கிற வேரைப்போலேயும் அவனு
க்கு முன்பாக எழும்புகிறார். அவருக்கு
ரூபமில்லை. மகத்துவமுமில்லை, நாம் அ
வரைப் பார்த்தபோது நாம் அவரை இ
ச்சிக்கத்தக்க ரூபு அவருக்கில்லாதிருந்த
து.—அவர் அசட்டைபண்ணப்பட்டவ

Digitized by Google

ரும் மனுஷரில் ஈனமானவரும்வேதனை
களுள்ளவரும் பலவீனத்தை அறிந்தவ
ருமாயிருந்தார். அவரை விட்டு முகங்க
ளை மறைத்துக்கொள்ளலாயிற்று. அவர்
அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவ
ரை எண்ணாதேபோனோம்.
4 மெய்யாகவே நம்முடைய பலவீன
ங்களை அவரெடுத்துக்கொண்டு, நம்மு
டைய நோவுகளைச் சுமந்தார். நாமோ
வெனில் அவர் தேவனால் அடிபட்டு ஒ
டுங்குண்டவராய் வாதிக்கப்பட்டாரென்
5 றெண்ணினோம்.— ஆனாலும் அவர் நம்
முடைய மீறுதல்களின் நிமித்தியங் காய
ப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின்
நிமித்தியம் நொருக்கப்பட்டார். நமக்
குச் சமாதானத்தை யுண்டுபண்ணும் ஆ
க்கினை அவர்மேலிறங்கிற்று. அவருடை
௬ ய தழும்புகளாற் குணமாகிறோம்.—நா
ம் எல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்
பித் திரிந்து அவரவர் தன் தன் வழியை
நோக்கிப் போனோம். யெகோவாவோ
வென்றால் நம்மெல்லாருடைய அக்கிர
மத்தை அவர்மேல் விழப்பண்ணினார்.

—கடன் கேட்கப்பட்டபோது, அவரே 7
ஒடுக்கப்பட்டார், ஆனாலுந் தம்முடை
ய வாயை அவர் திறந்ததில்லை, அவரொரு
ஆட்டுக்குட்டியைப்போல அடிக்கப்பட
க்கொண்டுபோகப்பட்டுத் தன்னை மயிர்
க் கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்த
மற்றிருக்கிற ஆட்டைப்போலே தம்மு
டைய வாயைத் திறவாதிருந்தார்.- அவர் 8
இடுக்கத்திலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்
தெடுக்கப்பட்டார், அவருடைய ஆயிசை
யெண்ணுபவனார்! ஏனெனிற் சீவனுள்
ளோருடைய தேசத்திலிருந்து வெட்
டிப்போடப்பட்டார், என் சனத்தினுடை
ய மீறுதலினாலே அவருக்கு அந்த வாதை
யுண்டாயிற்று.- ஆகாதவர்களோடே அவ 9
ருடைய பிரேதக் குழியை நியமித்தார்க
ள், ஆனாலும் ஐசுவரியவானோடே தம்மு
டைய மரணத்தில் இருந்தார். ஏனென்றா
ல் அவர் கொடுமை செய்ததில்லை அவர்
வாயிலே வஞ்சனையிருந்ததுமில்லை.

யெகோவாவோ அவரை நொருக்க வி 10
ருப்பமாயிருந்து அவரைப் பலட்சயமா
க்கினார், அவருடைய ஆத்துமந் தன்னை

க்குற்றம்போக்கும் பலியாக ஒப்புக்கொ
டுத்தபின் அவர் வித்தைக் கண்டு நீடிய
நாளாயிருப்பார் யெகோவாவுக்கு விருப்
பமானது அவர் கையால் வாய்க்கும்.—
11 தமதாத்தும வருத்தத்தின் பலனை அவர்
கண்டு திருத்தியாவார். நம்முடைய ஊ
ழியக்காரனாகிய நீதிபரர் அநேகரைத் த
மதறிவினாலே நீதிமான்களாக்குவார், ஏ
னெனில் அவர்களுடைய அக்கிரமங்களை
12 அவர் சுமந்துகொள்ளுகிறார்.—ஆனபடி
யினாலே அவர் தம்முடைய ஆத்துமத்தை
மரணத்திலூற்றிப் பாதகரில் ஒருத்த
ராக எண்ணப்பட்டு அநேகரானவர்களி
ன் பாவத்தைத் தாமே சுமந்து, பாதகரு
க்காக வேண்டிக்கொண்டதுக்கீடாக அ
நேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்
போம். பலவான்களை அவர் தமக்குக்
கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்ளுவார்.

---

## ருச. அதிகாரம்.

புதுவேற்பாட்டுச் சபையின் விஸ்தாரமான பெருகுதல்.

பிள்ளைப்பெறாத மலடியே கம்பீரித் 1
துப்பாடு, கருப்பவேதனைப்படாதவளே
கம்பீரமாய் முழங்கிச் சந்தோஷசத்தமி
டு.ஏனெனில் வாழ்க்கைப்பட்டவளுடைய
ய பிள்ளைகளைப்பார்க்கிலும், அவாந்தர
மானவளுடைய பிள்ளைகள் அதிகமென்
று யெகோவாச்சொல்லுகிறார்.—உன் கூ 2
டாரத்தின் இடத்தை விசாலமாக்கு உன்
வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டு
ம், தடைசெய்யாதே,உன் கயிறுகளை நீள
மாக்கி,உன் கூச்சுகளை உறுதிப்படுத்து.
—ஏனெனில் வலதிடதுபுறமாகவும் இட 3
ங்கொண்டு பெருகுவாய், உன் வித்தான
வர்கள் சாதிகளைச் சுதந்தரித்துக்கொண்
டு பாழாய்க்கிடந்த பட்டினங்களைக் குடி
யேற்றுவிப்பார்கள்.—பயப்படாதே, ஏ 4
னெனில் நீ வெட்கிப்போவதில்லை, நாணா
தே,ஏனெனில் நீ இலட்சை அடைவதில்
லை. உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ

Digitized by Google

மறந்து உன் விதவையிருப்பில் நிந்தை
5 யை இனி நினையாதிருப்பாய்.—ஏனெனி
ல் உன்னை உண்டாக்கின சேனைகளுடை
ய யெகோவாவென்ற நாமமுள்ளவர் உ
ன்பத்தாவுஞ் சருவ பூமியினுடைய தேவ
னென்னப்படப்போகிற இஸ்ராவேலின்
பரிசுத்தர் உன் மீட்பருமாயிருக்கிறார்.—
6 அதேதெனில் தள்ளிவிடப்பட்டவளும் ம
னம் நொந்தவளுமான ஸ்திரியைப்போ
லிருக்கிற உன்னை யெகோவா அழைத்
தார். நீ பிறக்கணிக்கப்பட்டிருந்தாலும்,
இளவயதில்ஸ்திரியாயிருக்கிறாயென்று உன்
7 தேவன் சொல்லுகிறார்.—கொஞ்ச நிமி
ஷம் உன்னைக் கைவிட்டோம் ஆனாலும்
மகா உருக்கவிரக்கங்களால் உன்னைச்சே
8 ர்ப்போம்.—கொஞ்சபோதான கோப
த்தியிலே நம்முடைய முகத்தை ஒரு நி
மிஷம் உனக்கு மறைத்தோம் ஆனாலும்
நித்திய கிருபையாய் உனக்கிரங்குவோம்
என்று யெகோவாவாகிய உன் மீட்பர்
9 சொல்லுகிறார்.—ஏனெனில் இது நமக்
கு நோவாவின் சலங்களைப்போலிருக்கு
ம், நோவாவின் சலங்கள் இனிப்பூமியின்


Digitized by Google

மேற் புரளுவதில்லையென்று நாம் ஆணை
யிட்டதுபோலே உன்மேல் நாங் கோப
மாவதில்லையென்றும், உன்னை நாம் உதம்
புவதில்லையென்றும் ஆணையிட்டோம்.-
ஏனெனிற் பருவதங்கள் விலகிக் குன்றுக 10
ள் சாய்ந்தாலும் நம்முடைய கிருபை உ
ன்னைவிட்டு விலகாமலும் நம்முடைய
சமாதானத்தின் உடம்படிக்கை சாயாம
லுமிருக்குமென்று உன்மேல் மனதுருகு
கிற யெகோவா சொல்லுகிறார்.
சிறுமையானவளே புசல்களிலடிபட் 11
டவளே, தேற்றரவற்றவளே இதோ நா
ம் உன் கல்லுகளை மினுக்காகவைத்து நீ
லக்கல்லுகளை உன் அஸ்திபாரமாக்கி,—
உன் பலகணிகளைப் பளிங்கும் உன் வாச 12
ல்களை மாணிக்கக்கல்லுகளும், உன் எல்
லைகளையெல்லாம் உச்சிதமான கல்லுகளு
மாக்குவோம்.—உன் பிள்ளைகளெல்லாம் 13
யெகோவாவாலே போதிக்கப்பட்டிருப்
பார்கள் உன் பிள்ளைகளுடைய சமாதான
ம் பெருத்திருக்கும்.—நீதியினாலே திட 14
ப்படுவாய், இடுக்கத்துக்கு நீங்கித் தூர
து. ஏனெனிற் பயப்படாதிருப்பாய்

Digitized by Google

கலங்கலுக்குத் தூரமாகு ஏனெனில் அ
15 து உன்னை அணுகுவதில்லை.—இதோ உ
ன்மேற் கூட்டங்கூடினால் அது நம்மா
லே கூடுகிற கூட்டமல்ல எவர்கள் உனக்
கு விரோதமாய்க் கூடுகிறார்களோ அவர்
16 கள் உன்னிமித்தியமாக விழுவார்கள்.-இ
தோ கரி நெருப்பையூதித் தன் கிரியை
க்கான ஆயுதத்தைஉண்டுபண்ணுகிறகொ
ல்லனையும் நாஞ் சிருட்டித்தோம்.
17 உனக்கு விரோதமாய் உருவாக்கப்ப
டும் ஆயுதமெல்லாம் வாயாதேபோம் உ
னக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்
பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்து
வாய் இது யெகோவாவுடைய ஊழியக்
காரரின் சுதந்தரமும் நம்மாலுண்டான
அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்
று யெகோவா சொல்லுகிறார்.

---

## ௫௫. அதிகாரம்.

எல்லாச்சாதிகளையும் மேசியாவின் இராச்சிய
த்துக்கு வரவழைக்குதல்.

1 ஓய்! தாகமாயிருக்கிற நீங்களெல்லாரு

Digitized by Google

ந் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள், ப
ணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, கொ
ண்டு சாப்பிடுங்கள், நீங்கள் வந்து பண
மன்றி விலையுமன்றித் திராட்சப்பழ இர
சமும் பாலுங் கொள்ளுங்கள்.—நீங்கள் 3
அப்பமில்லாததிலே பணத்தையுந், திரு
ப்தியாகாததிலே உங்கள் பிரயாசத்தையு
ஞ் செலவழிப்பானேன். நீங்கள் நமக்கு
ச் செவிகொடுக்கவேகொடுத்து, நலமா
னதைச் சாப்பிடுங்கள், அப்போது உங்க
ள் ஆத்துமங் கொழுப்பானதிலே மகி
ழ்ச்சியாயிருக்கும்.—உங்கள் செவியைச் 3
சாய்த்து நம்மண்டைக்கு வாருங்கள்,
கேளுங்கள், அப்போது உங்கள் ஆத்து
மம் பிழைக்கும், ஏனெனில் தாவீதின் நி
ச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்
திய உடன்படிக்கையாய் உடன்படிக்கை
பண்ணுவோம்.—இதோ அவரைச் சன 4
க்கூட்டங்களுக்குச் சாட்சியாகவுஞ் சன
சதளங்களுக்குத் தலைவராகவும் அதிகாரி
யாகவுங்கொடுத்தோம்.—இதோ நீ அறி 5
யாதிருந்தசாதியை வரவழைப்பாய், உன்
னை அறியாதிருந்த சாதி உன் தேவனாகிய

Digitized by Google

யெகோவாவின் நிமித்தியமும் இஸ்ரவே
லுடைய பரிசுத்தரின் நிமித்தியமும் உ
ன்னண்டைக்கு ஓடிவரும் ஏனெனில் உ
ன்னை மேன்மைப்படுத்தினார்.
6 யெகோவா கண்டுபிடிக்கையில் அவரை
த் தேடுங்கள், அவர் சமீபமாயிருக்கையி
7 ல் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.—ஆகா
தவன் தன் வழியையும் அக்கிரமக்கார
ன் தன் நினைவுகளையும் விட்டு யெகோவா
வண்டைக்கு மனந்திரும்பக்கடவான் அ
ப்போது அவன்மேல் மனதுருகுவார்,
நம்முடைய தேவனண்டைக்கே மனந்தி
ரும்பக்கடவான். ஏனெனில் அவர் மன்
னிக்கிறதற்குத் தயவுபெருத்திருக்கிறார்.
8 ஏனெனில் நம்முடைய நினைவுகள் உ
ங்கள் நினைவுகளல்ல உங்கள் வழிகள் நம்
முடைய வழிகளுமல்லவென்று யெகோ
9 வாச்சொல்லுகிறார்.—ஏனென்றால் பூமி
யைப்பார்க்க வானங்கள் எப்படி உயர்ந்தி
ருக்கின்றதோ, அப்படி உங்கள் வழிகளை
ப்பார்க்க நம்முடைய வழிகளும் உங்கள்
நினைவுகளைப்பார்க்க நம்முடைய நினைவு
10 களும் உயர்ந்திருக்கின்றன.—அதேனெ

by Google

ன்றால் மாரியும் உறைந்தமழையும் வான
த்திலிருந்திறங்கி, அவ்விடத்துக்குத் திரு
ம்பாமற், பூமியையே நனைத்து, அதை
முளைகிளம்பவும் விளையவும்பண்ணி, வி
தைக்கிறவனுக்கு விதையையுஞ் சாப்பிடுகி
றவனுக்கு ஆகாரத்தையும் எப்படிக்கொ
டுக்கின்றதோ,— அப்படி நம்முடைய 11
வாயிலிருந்து புறப்படும் வசனமுமிருக்
கும். அது வெறுமையாய் நம்மண்டை
க்குத்திரும்பாமல், அது நாம் விரும்புகி
றதைச்செய்து, நாம் அதை அனுப்பின
காரியமாகும்படியாக வாய்க்கும். —அ 12
தேதெனில் நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புற
ப்பட்டுச் சமாதானமாய்க்கொண்டுபோ
கப்படுவீர்கள் பருவதங்களும் மேடுகளு
ம் உங்களுக்குமுன்பாகக் கம்பீரமாய்மு
ழங்கி வெளியின் மரங்களெல்லாங் கை
கொட்டும்.—முட்செடிக்குப் பதிலாக 13
த் தேவதாரி மர விருட்சம் முளைக்கும்.
காஞ்சொறிக்குப் பதிலாக மிறுதச் செ
டியெழும்பும், அது யெகோவாவுக்குக்
கீர்த்தியாகவும் நிர்மூலமாகாத நித்திய
அடையாளமாகவுமிருக்கும்.

Digitized by Google

## ருசு. அதிகாரம்.

மெய்யான தேவபத்திக்கு ஏவுறைபுத்தி.

1 யெகோவாச் சொல்லுகிறதாவது, நீ
ங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதி
யைச் செய்யுங்கள், ஏனெனில் தம்முடை
ய இரட்சிப்பு வரவும் தம்முடைய நீதிவெ
2 ளிப்படவுஞ் சமீபித்திருக்கின்றது.—இ
ப்படிச் செய்கிற மனுஷனும் இதைப்ப
ற்றிக்கொண்டிருந்து ஓய்வுநாளைப் பரி
சுத்த குலைச்சலாக்காதபடிக்குக் காத்து
ஒரு பொல்லாங்கையுஞ் செய்யாதபடிக்
குத் தன் கையைக்காத்துக்கொண்டிருக்
கிற மனுப்புத்திரனும் பாக்கியவான்.
3 யெகோவாவைச் சேர்ந்த அன்னிய பு
த்திரனும் யெகோவா என்னைத் தம்மு
டைய சனத்தை விட்டுப் பிரிக்கவேபிரித்
துப்போடுவாரென்று சொல்லாருக. அ
ண்ணகனும், இதோ நான்பட்டமரமென்
4 று சொல்லாருக.-ஏனெனில் நம்முடை
ய ஓய்வுநாட்களைக்காத்து நமக்கு இதமி
யமாயிருக்கிறதைத் தெரிந்துகொண்டு ந
ம்முடைய உடன்படிக்கையைப்பிடித்தி

ருக்கிற அண்ணகர்களைக் குறித்து யெ
கோவாச் சொல்லுகிறதாவது,—நாங் கு 5
மாரரைப் பார்க்கிலுங் குமாரத்திகளைப்
பார்க்கிலும் அவர்களுக்கு நம்முடைய
வீட்டிலும் நம்முடைய மதில்களுக்குள்
ளும் நல்ல இடத்தையுங் கீர்த்தியையுங் க
ட்டளையிடுவோம். அழிந்துபோகாதிருக்
கும் நித்தியகீர்த்தியை அப்படிக்கொத்த
வனுக்குக் கட்டளையிடுவோம்.-யெகோ 6
வாவைச் சேவிக்கவும் யெகோவாவுடைய
நாமத்தைச்சிநேகிக்கவும் அவருக்கு ஊ
ழியகாராயிருக்கவும் அவரைச்சேர்ந்து,
ஓய்வுநாளைப் பரிசுத்தகுலைச்சலாக்காதப
டிக்குக்காத்து நம்முடைய உடன்படிக்
கையைப்பிடித்திருக்கிற அன்னிய புத்திர
ரனைவரையும்,-நாம்நமமுடையபரிசுத்தப 7
ருவதத்துக்குக் கொண்டுவந்து, அவர்க
ளை நம்முடைய செபவீட்டிலே மகிழப்
பண்ணுவோம். அவர்களுடைய சருவா
ங்கத் தகனங்களும் அவர்களுடைய பலி
களும் நம்முடைய பலிபீடத்தின்மேல்
அங்கிகரிக்கப்பட்டிருக்கும். ஏனெனில்
நம்முடைய வீடு சகல சனசதனங்களுக்கு

மான செபத்தின் வீடென்னப்படும்.—
8 இஸ்ரவேல் சனத்தில் தள்ளுண்டவர்க
ளைச் சேர்க்கிறயெகோவாவாகிய ஆண்ட
வர் அதிலே சேர்க்கப்பட்டவர்களையல்
லாமல் நாம் இன்னம் அத்தோடே சேர்
ப்போமென்கிறார்.

### பூமிக்கடுத்த சிந்தையான போதகரைக்கண்டித்தது.

9 காட்டிலேயிருக்கிற சகல மிருகங்க
ளே,சகல காட்டுமிருகங்களே, பட்சிப்ப
10 தற்கு வாருங்கள்,—அதின் சாமக்கா
ரெல்லாரும் ஒன்றுமறியாத குருடர்,
அவர்களெல்லாருங் குலைக்கமாட்டாத
ஊமையான நாய்கள், அவர்கள் தூக்கக்
கலக்கமாகிப் பேசிச் சயனித்திருந்து, உ
11 றக்கத்தைச் சிநேகிக்கிறவர்கள்.—அவர்
கள் திருத்தியடைய அறியாதவலுவானஆச
யுள்ள நாய்களும் அவர்கள் உணரவறியா
த மேய்ப்பருந்தானே. அவர்களனை
வருந் தங்கள் தங்கள் வழியையும் அவரவ
ர் தன் தன் மூலையிலிருந்து தன் தன்
பொழிவையு நோக்கிக் கொண்டிருக்கி
12 றார்கள்.—வாருங்கள், மதுபானத்தைக்

Digitized by Google

கொண்டு வருவேன். மொண்டு குடிப்
போம் நாளை அதினம் இன்றையதினம்
போலவும் இன்னம் மகா அதிகமாகவும்
இருக்குமென்பார்கள்.

---

## ௫௭. அதிகாரம்.

*கன கண்டிப்பும் மகா ஆறுதலுமான பிரசங்கம்.*

நீதிமான் மடிந்துபோகிறான் ஆனாலு 1
ம் ஒருத்தரும் அதை மனதிலே வைக்கி
றதில்லை, சன்மார்க்கர் எடுத்துக்கொள்ள
ப்படுகிறார்கள் ஆனாலுந் தீங்கு வாரதற்
க்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்
ளப்படுகிறானென்பதைச் சிந்திப்பாரில்
லை.-நேராய் நடந்தவர்கள் சமாதானத்து 2
க்குட்பிரவேசித்துத் தங்கள் படுக்கைக
ளில் இளைப்பாறுகிறார்கள்.-ஆனாலும் நா 3
ட் பார்க்கிறவளின் பிள்ளைகளே விப
சாரனுக்கும் வேசிக்கும் வித்தானவர்க
ளே, நீங்கள் இங்கே கிட்டிவாருங்கள்.--
ஆர்மேல் சிமாளிக்கிறீர்கள் ஆர்மேல் வா 4
யை விஸ்தாரமாய்த் திறந்து,நாக்குவளவு
கிறீர்கள்,நீங்கள் துரோகப் பிள்ளைகளும்
கள்ளத்தன வித்தாருமல்லவோ?-நீங்கள் 5

Digitized by Google

பச்சையான சகலமரத்தின் கீழும் விக்கிர
கத் தேவர்களோடே மோக அக்கினியா
ய் வெந்து பள்ளத்தாக்குகளிலே பிள்ளைக
ளைக் கன்மலை வெடிப்புகளின் கீழ்க்கொ
6 ன்றுபோடுகிறவர்களே,- பள்ளத்தாக்கு
களிலுள்ள மெருகான சிலைகளிடத்தில் உ
ன் பங்கிருக்கின்றது, அவைகள் அவை
களே உன்னுடைய வீதம் அவைகளுக்கு
நீ ஊற்றுதலையும் ஊற்றிக்காணிக்கையை
யுஞ் செலுத்துகிறாய், இவைகளின் மேற்
7 பிரியப்படுவோமோ?—நீ மேட்டிமையு
ம் உயரமுமான பருவதங்களின் மேல்
உன் மஞ்சத்தை வைக்கிறாய், அங்கேயும்
8 பலியிட ஏறுகிறாய்.-கதவுகளுக்கும் நிலை
களுக்கும் பின்னாக உன் நினைப்படையா
ளங்களை வைக்கிறாய், ஏனெனில் நீ நம்
மை விட்டு வேறேபேர்களுக்குத் திறப்
பாக்கியேற,உன் மஞ்சத்தை அகலமாக்கி
அவர்களோடே உடன்படிக்கையாகிறாய்
அவர்களுடைய மஞ்சத்தைக் காண்கிற
எல்லாவிடத்திலும் அதைச் சிநேகிக்கிறா
9 ய்.—நீ இராசாவுக்குக் காணிக்கையாக
எண்ணெயைக் கொண்டுபோகிறாய், உ

Digitized by Google

ன் பரிமள தயிலங்களைத் திரளாக்கி, உன்
தானாபதிகளைத் தூரத்துக்கு அனுப்பி,
உன்னைப் பாதாளமட்டுந் தாழ்த்துகிறா 10
ய்.—உன் மார்க்கத்தின் விஸ்தாரத்தினு
ழன்றுக்கிறாய் அவை விரதாவென்று
நீ சொல்லுகிறதில்லை. உன் கைக்கான பி 11
ழைப்பைக் கண்டுபிடித்தாய். ஆகையால்
நீ வேசாரப்படுகிறதில்லை.—நீ ஆருக்கு ஐ
யமும் பயமுமாயிருக்கிறாய், நீ புளுகுகி
றாயே, நீ நம்மை நினையாமலும் உன்ம
னதிலே வையாமலும் போகிறாயே, நா
ம் வெகுகாலம்வரையாய் மவுனமாயிருந்
தோமல்லவோ. ஆகையால் நமக்குப் ப
யப்படாதே போகிறாய்,— உனக்குதவா 12
திருக்கும் உன் நீதியையும் உன் கிரியைக
ளையும் நாம் அறியப்படுத்துவோம்.

நீ கூப்பிடும்பொழுது, உன் கூட்டங்க 13
ள் உன்னைத் தப்புவிக்கட்டும், ஆனாலுங்
காற்று அவைகளை எல்லாம் பறக்கடித்து
மாய்கை அவைகளைக் கொண்டுபோம். ந
ம்மை நம்பியிருக்கிறவனோ தேசத்தைச்
சுதந்தரித்து நமது பரிசுத்த பருவதத்தி
லே காணியாட்சிக்காரனாயிருப்பான்.—

Digitized by Google

14 வழியை யுயர்த்தி உயர்த்தி, அதைச்செவ்
வைப்படுத்தி இடறல்களை நம்முடைய ச
னத்தின் வழியிலிருந்து எடுத்துப்போடு
15 ங்களென்னப்படும்.- ஏனெனில் நித்திய
வாசரும் பரிசுத்தரென்று நாமமுள்ள
வருமாகிய உயரமும் உன்னதமுமானவ
ர் சொல்லுகிறதாவது, பணிந்தவர்களின்
ஆவியை உயிர்ப்பிக்கவும், நருங்குண்டவ
ர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கவும் நா
மே உன்னதத்திலும் பரிசுத்தஸ்தலத்திலு
ம் நருங்குண்ட பணிந்த ஆவியுள்ளவர்களி
16 டத்திலும் வாசம்பண்ணுகிறோம்.- ஏனெ
ன்றால் நாஞ் சதாகாலமாய் வழக்காடுவ
தில்லை நாமென்றென்றைக்குங் கோப
மாயிருப்பதுமில்லை. அதேதெனில் ஆவி
யும் நாம் உண்டுபண்ணின ஆத்துமங்க
ளும் நம்முடைய முகத்துக்கு முன்பாக
17 த் தொய்ந்து போவதாயிருக்கும்.— நா
ம் அவர்கள் பொருளாசையினுடைய அ
க்கிரத்தின் நிமித்தியங் கடுங்கோபமாகி,
அவர்களை யடித்தோம் நாம் மறைந்து
கடுங் கோபமாயிருந்தோம். ஆனாலுந்
தங்கள் மனம் போகிற போக்கிலே மா



Digitized by Google

றுபாடாய் நடந்தார்கள்.-அவர்கள் வழி 18
களை நாம் பார்த்து அவர்களைக் குணமா
க்குவோம், அவர்களை நடத்தி அவர்களு
க்குத் திரும்ப ஆறுதல்களை அளிப்போ
ம் அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்
குத்தானே.-சமாதானஞ் சமாதானமெ
ன்று தூரமாய் இருக்கிறவர்களுக்குஞ் ச 19
மீபமாய் இருக்கிறவர்களுக்குங் கூறும்
உதடுகளின் பலனைச் சிருஷ்டிக்கிறோம்,
அவர்களைக்குணமாக்குவோமென்று யெ
கோவாச் சொல்லுகிறார். — ஆகாதவர்க 20
ளோ கொந்தளிப்பான கடலைப்போலிரு
க்கிறார்கள், ஏனென்றால் அது அமர்ந்திரு
க்கக் கூடாமல் அதின் சலங்கள் சேற்றை
யும் அழுக்கையுங் கரையிலொதுக்குகின்
றது.—ஆகாதவர்களுக்குச் சமாதானமில் 21
லையென்று என் தேவன் சொல்லுகிறார்.

---

## ௫௮. அதிகாரம்.

தேவனுக்குப் பிரியமான உபவாசத்துக்கும் ஓ
ய்வுநாளின் ஆசரிப்புக்குமான புத்தி.

அடக்கிக்கொள்ளாமற் சத்தமாய்க் கூ 1
ப்பிடு நீ உன் சத்தத்தை எக்காளத்தைப்

போல் உயர்த்தி, நம்முடைய சனத்துக்
கவர்கள் மீறுதலையும் யாக்கோபின் வீட்
டாருக்கு அவர்கள் பாவங்களையும் அறி
௨ வி.—அவர்களோ நீதியைச் செய்துவரு
கிறதும் தங்கள் தேவனுடைய நியாயத்
தை விடாததுமான சாதியைப் போல் ந
ம்மைத் தினந்தினந் தேடி நம்முடைய வ
ழிகளை அறிய விரும்பி நாங்கள் உபவாச
ம்பண்ணக்கொள்ள நீர் அதைப் பாராம
லும் நாங்கள் எங்கள் ஆத்துமங்களை ஒடு
க்கக்கொள்ள நீர் அதை அறியாமலும்
போகிறதேதென்று நம்மிடத்தில் நீதி நி
யாயத்தைக் கேட்டுத் தேவன் கிட்டிச்சே
ரவேணுமென்று விரும்புகிறார்கள்.
3 இதோ நீங்கள் உபவாசிக்கும் நாளிலே
இச்சைக்கானத்தைக் கண்டுபிடித்து உங்
கள் கடன்களையெல்லாந் தண்டுகிறீர்கள்.-
4 இதோ வழக்குக்கும் வாதுக்கும் ஆகாமி
யமான குட்டுதலுக்குமாக உபவாசிக்கிறீ
ர்கள், நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்தி
ற் கேட்கப்பண்ணும்படியாய் இந்நாளில்
உபவாசிக்குமாப்போலே உபவாசியாதி
5 ருப்பீர்களாக.—மனுஷன் ஒருநாள் தன்

Digitized by Google

ஆத்துமத்தை ஒடுக்கிறதுந் தன் தலையை
நாணலைப் போல் மடக்கி இரட்டையுஞ்
சாம்பலையுங் கீழே போட்டுக்கொள்ளுகி
றதும் நாந் தெரிந்துகொள்ளும் உபவா
சமாயிருக்குமோ அதைத்தான் உபவாச
மும் யெகோவாவுக்குப் பொருந்திய நா
ளுமென்பாயோ?—நீ ஆகாமியத்தின் க 6
ட்டுகளை அவிழ்த்து நுகத்தடியின் பிணை
யல்களை நெகிழ்த்தி நெரிசலாயிருக்கிறவர்
களை விடுதலையாக அனுப்பிச் சகல நுக
த்தடியையும் உடைத்துப்போட்டு,—ப 7
சியுள்ளவனுக்கு உன் அப்பத்தைப் பிட்
டுக்கொடுத்துத் துரத்துண்ட சிறுமை
யானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொ
ண்டு அம்மணமானவனைக் கண்டாளு
ல் அவனுக்கு வஸ்திரங்கொடுத்து, உன்
மாம்சமானவனுக்கு உன்னை ஒளியாம
ல் இருந்தால் அதுவல்லோ நாந் தெரிந்
துகொள்ளுகிற உபவாசம்.

அப்போது உன் வெளிச்சம் விடியற் 8
கால வெளுப்பைப்போல் எழும்பி உன்
குணமாகுதல் சீக்கிரமாய்த் துளிர்த்து
உன் நீதி உன் குணமாகுதல் சீக்கிரமாய்

Digitized by Google

ந் துளிர்த்து உன் நீதி உன்முன்னடக்கு
ம் யெகோவாவுடைய மகிமை உன் பிற்
9 புறத்தைக் காக்கும்.— அப்போது கூப்
பிடுவாய், யெகோவா மறுஉத்தரவு கொடு
ப்பார், சத்தமிடுவாய் இதோ நாமிருக்கி
றேனென்றுஞ் சொல்லுவார் நீ நுகத்த
டியையும் விரல் நீட்டுதலையும் வியச்சொ
10 ல்லையும் உன் நடுவிலிருந்தகற்றி,—பசியு
ள்ளவனண்டைக்கு உன் ஆத்துமத்தை
ச் சாய்த்துச் சிறுமைப்பட்ட ஆத்துமத்
தைத் திருத்தியாக்கினால் அப்போது உ
ன் வெளிச்சம் இருளிலுதித்து உன் அந்
தகாரம் மத்தியானத்தைப்போலாகும்.
11 —அப்போது யெகோவா உன்னை நித்த
நடத்தி மகா வரட்சியான காலங்களில்
உன் ஆத்துமத்தைத் திருத்தியாக்கி உ
ன் எலும்புகளைப் புஷ்டியாக்குவார், நீ நீ
ர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போ
லேயுஞ் சலங்கள் வற்றாத நீரூற்றைப்
12 போலேயுமிருப்பாய்.— சதாகாலமாய்
ப் பாழாய்க்கிடந்த தலங்களை உன்னைத்
தொட்டுக் கட்டுவார்கள், தலைமுறை தலை
முறையாகவிருக்கும் அஸ்திபாரங்களைப்

Digitized by Google

போட்டெழுப்புவாய் திறப்பானதை அ
டைக்கிறவனென்றுங் குடியிருக்கும்படி
யாகப் பாதைகளைத் திருத்துகிறவனென்
றும் நீ அழைக்கப்படுவாய்.
நீ நம்முடைய பரிசுத்த நாளிலே உ 13
னக்கு இச்சையானதைச் செய்யாதபடி
க்கு உன் காலை ஓய்வுநாளுக்கு இடைஞ்ச
லாய் விலக்கி ஓய்வுநாளை மனமகிழ்ச்சியெ
ன்றும் யெகோவாவுடைய பரிசுத்தநா
ளை மகிமையுள்ள நாளென்றுஞ் சொல்லி
உன் வழிகளின்படி செய்யாமலும் உன
க்கிச்சையானதைக் கண்டு பிடியாமலும்
உன் பேச்சைப் பேசாமலும் அதை மகி
மையாக எண்ணினையானால், - அப்போது 14
யெகோவாவின் பேரிலே மனமகிழ்ச்சி
யாயிருப்பாய், நாம் பூமியினுடைய உயர
ங்களின் மேல் உன்னை ஏறிப்போகவும்ப
ண்ணி உன் தகப்பனாகிய யாக்கோபுடை
ய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்
போம், ஏனெனில் யெகோவாவுடைய
வாய் அதைச் சொல்லிற்று.

Digitized by Google

## ௫௯. அதிகாரம்.

யூதரைச் சுருக்காய்க் கடிந்துகொண்ட பிரச
ங்கமுந் தங்கள் பாவங்களை உணர்ந்து அறிக்
கைவிடுகிறவர்களுக்குத் தேவனாலுண்டான கி
ருபையுள்ளவாக்குத்தத்தமும்.

1 இதோ இரட்சிக்கக்கூடாத படிக்கு
யெகோவாவுடைய கை குறுகிப்போன
தில்லை. கேட்கக்கூடாதபடிக்கு அவரு
2 டைய செவி மந்தமானதுமில்லை — உங்
கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்க
ள் தேவனுக்குந் நடுவாகப் பிரிவினையுண்
டாக்குகின்றது உங்களைக்கேளாதபடிக்கு
உங்கள்பாவங்களேஅவருடைய முகத்தை
3 உங்களுக்கு மறைக்கின்றது.- ஏனென்று
ல் உங்கள் கைகள் இரத்தத்தாலும்,உங்கள்
விரல்கள் அக்கிரமத்தாலுங் கறைப்பட்
டிருக்கின்றதுஉங்கள்உதடுகள்பொய்யை
ப்பேசி உங்கள் நாவு நியாயக்கேட்டை
4 வசனிக்கின்றது -நீதிக்காகக்கூப்பிடுகிறவ
னுமில்லை சத்தியத்துக்காக நியாயஞ்சொ
ல்லுகிறவனுமில்லை. மாய்மையை நம்பி
அவத்தமானதைப்பேசுகிறார்கள் தீவினை

யைக் கருப்பந்தரித்து அக்கிரமத்தைப்
பெறுகிறார்கள்.-கட்டுவிரியனின்முட்டை 5
களை அடைகாத்துச் சிலந்தியின் நெசவுக
ளை நெய்கிறார்கள், அவர்களுடைய முட்
டைகளைச் சாப்பிடுகிறவன் சாவான், அ
வைகள் நெரிக்கப்பட்டதேயானால் விரிய
ன் புறப்படும்.-அவர்கள் நெசவுகள் உடு 6
ப்புக்கானதல்லத் தங்கள் கிரியைகளாலே
தங்களை மூடமாட்டார்கள், அவர்கள் கிரி
யைகள் அக்கிரமக் கிரியைகளாயின. கொ
டுமையின் செய்கை அவர்கள் கைகளிலிரு
க்கின்றது.-அவர்கள் கால்கள் பொல்லா 7
ப்புக்கோடிக் குற்றமில்லாதஇரத்தத்தை
ச் சிந்தத் தீவரிக்கின்றன, அவர்கள் நினைவு
கள் அக்கிரம நினைவுகளாயின பாழ்க்கடி
ப்பும் அழிவும் அவர்கள் வழிகளிலிருக்கி
ன்றன.—சமாதானத்தின் வழியையறியா 8
ர்கள் அவர்கள் நடைகளில் நியாயமில்லை
தங்கள் பாதைகளைத் தங்களுக்குக் கோ
ணலாக்கினார்கள். அவைகளில் நடக்கிற
ஒருத்தனுஞ் சமாதானத்தையறியான்.
ஆனபடியால் நியாயம் எங்களுக்குத் 9
தூரமாயிருக்கின்றது நீதி எங்களைத்

Digitized by Google

தொடர்ந்துபிடியாது வெளிச்சத்துக்கு
க்காத்திருந்தோம், ஆனாலும் இதோ இ
ருள் பிரகாசத்துக்குக் காத்திருந்தோம்,
ஆனாலும் அந்தகாரத்திலே நடக்கிறோம்.
10 —நாங்கள் குருடரைப்போலே சுவரை
ப்பிடித்துக் கண்ணில்லாதவர்களைப்போ
லே தடவுகிறோம், இராவிருளில் இடறு
கிறாப்போலே மத்தியானத்திலே இடறு
கிறோம், செத்தவர்களைப்போலே பாழ்
11 த்தலங்களில் இருக்கிறோம்.—நாங்களனை
வருங் கரடிகளைப்போலே உறுமிப் புறாக்
களைப்போலே கூவிக்கொண்டேயிருக்கி
றோம். நியாயத்துக்குக்காத்திருந்தோம்.
அதைக்காணோம், இரட்சிப்புக்குக் காத்
திருந்தோம் அது எங்களுக்குத் தூரமா
12 யிற்று.-ஏனெனில் எங்கள் மீறுதல்கள் உ
மக்கு முன்பாகமிகுதியாயிருந்து எங்கள்
பாவங்கள் எங்களுக்கு விரோதமாக உத்த
ரவுசொல்லுகின்றன ஏனெனில் எங்கள்மீ
றுதல்கள் எங்களுடனேயிருக்கின்றன எ
ங்கள் அக்கிரமங்களை அறிந்திருக்கிறோம்.
13 —யெகோவாவுக்கு விரோதமாய்த் து
ரோகம்பண்ணுகிறதும் புளுகுகிறதும்ஏ

Digitized by Google

ங்கள் தேவனைவிட்டுப் பின்வாங்குகிறதும்
ஒடுக்குதலாகவுங் கலகமாகவும் பேசுகிற
துங் கள்ளவார்த்தைகளைக் கருப்பந்தரித்
து இருதயத்திலிருந்து புறப்படப்பண்
ணுகிறதுமுண்டே.-நியாயம் பின்னிட்டு 14
அகன்றது. நீதி தூரமாகநிற்கிறது ஏனெ
னிற் சத்தியம் வீதியிலே இடறி நிதானம்
வந்து சேரமாட்டாதேபோகின்றது.-
சத்தியந்தவறுபடியாயிற்று பொல்லாங் 15
கைவிட்டுவிலகுகிறவன் சூறையாகிறான்.
இதை யெகோவா பார்த்து நியாயமில்
லை என்று விசனப்பார்வையாகி,

ஒருத்தருமில்லையென்று கண்டு விண் 16
ணப்பம்பண்ணுகிறவனில்லையென்று ஆ
ச்சரியப்படுகிறார். ஆனதுகொண்டு அவ
ருடைய புயமே அவருக்கிரட்சிப்பாகி அ
வருடைய நீதியே அவரைத்தாங்கும்.—
அவர் நீதியை மார்க்கவசமாகவணிந்து 17
இரட்சிப்பின் தலைச்சோட்டைத் தமது
சிரசில்வைத்து நீதிசரிக்கட்டுதலின் வஸ்தி
ரங்களை உடுப்பாக உடுத்து எரிச்சலைச்
சால்வையாகப் போர்த்துக்கொள்ளுகிறா
ர்.—கிரியைகளுக்கெப்படித்தகுமோ, அ 18

Digitized by Google

ப்படியே அவர் தம்முடைய சத்துருக்க
ளுக்கு உக்கிரத்தைச் சரிக்கட்டித் தம்மு
டைய பகைஞருக்குத்தக்கதையுந் தீவுக
19 ளுக்குத்தக்கதையுஞ் சரிக்கட்டுவார்.—அ
ப்போது அஸ்தமிக்குந் திசை துவக்கி
யெகோவாவின் நாமத்துக்குஞ் சூரியனு
திக்குந்திசைதுவக்கி அவருடைய மகிமை
க்கும் பயப்படுவார்கள். வெள்ளப்பிரள
யமாய்ச் சத்துருவரும்போது யெகோ
வாவுடைய ஆவி அவனுக்குவிரோதமாக
க் கொடியை யேற்றுவார்.
20 சீயோனுக்கும் யாக்கோப்பிலே தங்
கள் மீறுதலைவிட்டுத் திரும்புகிறவர்களுக்
கும் மீட்கிறவர் வருவாரென்று யெகோ
21 வா சொல்லுகிறார்.—உம்முடையமேலி
ருக்கிற நம்முடைய ஆவியும் நாம் உம
துவாயிலே வைத்த நமமுடைய வார்த்
தைகளும் இதுமுதலாய் என்றென்றைக்
கும் உமது வாயையும் உமது வித்தின்
வாயையும் உமது வித்தினுடைய வித்தி
ன் வாயையும் விட்டுப்பிரிவதில்லையென்
று யெகோவா சொல்லுகிறார். இது ந
மக்கு அவர்களோடிருக்கும் நம்முடை—

Digitized by Google

ய உடன்படிக்கையென்று யெகோவா
சொல்லுகிறார்.

---

## ௬௰. அதிகாரம்.

யூதர்களிலும் புறச்சாதிகளிலும் விசுவாசிகளா
கப்போகிறவர்களின் மகிமையுள்ளசீர்.

நீ எழும்பி வெளிச்சமாகு ஏனெனில் 1
உன் வெளிச்சம் வருகின்றது யெகோவா
வுடைய மகிமை உன்மேலே உதிக்கின்ற
து.—ஏனெனில் இதோ இருள் பூமியை 2
யும் அந்தகாரஞ் சனசதளங்களையும் மூ
டும் ஆனாலும் உன்மேலே யெகோவா உ
திக்கிறார் உன்மேலே அவருடைய மகி
மைகாணப்படும்.— உன் வெளிச்சத்த 3
ண்டைக்குச் சாதிகளும் உனக்குதிக்கிற
ஒளியண்டைக்கு இராசாக்களும் நடந்து
வருவார்கள். —சுற்றிலும் உன் கண்களை 4
யேறெடுத்துப்பார் இவர்களெல்லாருங்
கூட்டப்பட்டுவருகிறார்கள் உன் குமாரர்
தூரத்திலிருந்துவந்து, உன் குமாரத்திக
ள் உன்பக்கத்திலே வளர்க்கப்படுவார்க
ள்.—அப்போது நீ அதைக்கண்டு ஓடிவ 5

Digitized by Google

ருவாய் உன்னிருதயம் அதிசயப்பட்டுவிரி
வாகும் ஏனெனிற்கடற்கரையின் திரளா
ன கும்பு உன் வசமாகத்திரும்பிச் சாதி
களின் பலத்தசேனை உன்னண்டைக்குவ
6 ரும்.—ஒட்டகங்களின் ஏராளமும் மீதி
யான் ஏப்பாத்தேசங்களின் வேகமான ஒ
ட்டைகளும் உன்னை மூடும். சேபாவிலி
ருந்து அனைவரும் வந்து பொன்னையுந்
தூபவருக்கத்தையுங்கொண்டு வந்து யெ
கோவாவின் துதிகளைச் சுவிசேஷமாய்ச்
7 சொல்லுவார்கள்.—கேதாரின் ஆடுகளெ
ல்லாம் உன்னைச் சேர்ந்துகொண்டு நெப்
யோத்தின் கடாக்கள் உன்னைச்சேவித்து
விருப்பமாக நமது பலிபீடத்தின்மே
லேறும் நம்முடைய மகிமையின் வீட்டை
8 மகிமையாக்குவோம். — மேகங்களைப்
போலவுந் தங்கள் பலகணித்துவாரங்களு
க்குத் தீவரிக்கிற புறாக்களைப்போலவும்
9 பறந்துவருகிற இவர்களார்?—ஏனெனில்
தீவுகள் நமக்குக்காத்திருக்கும் அவர் உ
ன்னை மகிமைப்படுத்தினாரென்று உன் பி
ள்ளைகளையும் அவர்களோடேகூட அவர்
கள்பொன்னையும் அவர்கள் வெள்ளியை



Digitized by Google

யும் உன் தேவனாகிய யெகோவாவின் நா
மத்துக்கென்றும் இஸ்ரவேலுடைய பரி
சுத்தருக்கென்றுந் தூரத்திலிருந்து கொ
ண்டுவர முதலே தர்சீசின் கப்பல்களும் ந
மக்குக் காத்திருக்கும் —அன்னியரின் பு 10
த்திரர் உன் மதில்களைக்கட்டி அவர்களு
டைய இராசாக்கள் உன்னைச் சேவிப்பா
ர்கள் ஏனெனில் நம்முடைய கடுங்கோப
த்தில் உன்னை அடித்தோம் ஆனாலும் நம்
முடைய கிருபையினாலுனக்கிரங்குகிறோ
ம்.—உன்னண்டைக்குச் சாதிகளின் பல 11
த்தசேனையைக் கொண்டுவரும்படிக்கும்
அவர்களுடைய இராசாக்கள் அழைத்துவ
ரப்படும்படிக்கும் உன் வாசல்கள் இரா
வும்பகலும் பூட்டப்படாமல் நித்தந் திற
ந்திருக்கும்.—ஏனெனில் உன்னைச் சே 12
வியாத சாதியும் இராச்சியமும் அழியு
யும், அப்படிக்கொத்தசாதிகள் பாழாக
வே பாழாகும்.—நம்முடைய பரிசுத்த 13
ஸ்தலத்தின் தானத்தைச் சிங்காரிக்கும்ப
டிக்கு, லீபனோனின்மகிமையையுந் தே
வதாரிவிருட்சங்களும், பிசின்மரங்களும்
புன்னைமரங்களுங்கூட உன்னண்டைக்கு

Digitized by Google

வரும். அப்படி நம்முடைய பாதங்களி
ன் தானத்தை மகிமைப்படுத்துவோம்.
14 —உன்னை ஒடுக்கினவர்களின் பிள்ளைகளு
ம் உன்னண்டைக்குக் குனிந்துவந்து உ
ன்னை அசட்டைபண்ணினயாவரும் உன்
உள்ளங்கால்களருகே பணிந்து உன்னை
யெகோவாவுடைய பட்டணமென்றும்
இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் சீயோன்
15 என்றும் அழைப்பார்கள்.—நீ நெகிழப்
பட்டதும் பகைக்கப்பட்டதும், ஒருத
ருங் கடந்து நடவாததுக்குப்பதிலாக உ
ன்னை நித்திய முக்கியமாகவுந், தலைமு
றை தலைமுறையாகவிருக்கும் மகிழ்ச்சி
16 யாகவும் வைப்போம்.—நீ சாதிகளின்பா
லையும் உண்டு இராசாக்களின் முலைப்பா
லையுமுண்டு யெகோவாவும் யாக்கோபி
லே வல்லவருமாகிய நாம் உன் இரட்சகரு
ம் உன் மீட்பருமாய் இருக்கிறதை அறிந்
17 துகொள்ளுவாய்.—நாம் வெண்கலத்து
க்குப்பதிலாகப் பொன்னைவரப்பண்ணி
இரும்புக்குப் பதிலாக வெள்ளியையும்
மரங்களுக்குப்பதிலாக வெண்கலத்தையு
ங் கல்லுக்குப்பதிலாக இரும்பையும் வ

Digitized by Google

ரப்பண்ணி உன் கண்காணிகளைச் சமா
தானமும் உன் தண்டற்காரரை நீதியுமு
ள்ளவர்களாக்குவோம்.-இனிக்கொடுமை 18
உன் தேசத்திலும் அழிப்பும் நொருக்கு
தலும் உன் எல்லைகளிலுங் கேட்கப்படா
து, உன் மதில்களை இரட்சிப்பும் உன்வா
சல்களைத் துதியுமென்றழைப்பாய்.—இ 19
னிச் சூரியன் உனக்குப்பகலிலே வெளி
ச்சமாயிராமலும், சந்திரன் தன் வெளிச்
சத்தால் உனக்குப் பிரகாசியாமலும்,
யெகோவாவே உனக்கு நித்தியவெளிச்
சமும், உன் தேவனே உன்னுடைய
அலங்காரமுமாய் இருப்பார். —உன் சூ 20
ரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை, உன்
சந்திரன் மறைவதுமில்லை. ஏனெனி
ல் யெகோவா உனக்கு நித்திய வெளிச்
ச்சமாயிருப்பார். உன் துக்க நாட்கள்
முடிந்திருக்கும்.—உன் சனம் எல்லாம் 21
நீதிமான்களும், என்றைக்கும் பூமியின்
சுதந்தரக் குடிகளும் நாம் நட்டகிளைகளு
ம், நாம் மகிமைப்படும்படிக்கு, நம்மு
டைய கரங்களின் கிரியையுமாயிருப்பார்
கள்.—சின்னவன் ஆயிரமுஞ் சிறியவன் 22

Digitized by Google

பலத்தசாதியுமாவான். யெகோவாவாகி
ய நாம் அதை அதின் காலத்திலே தீவிர
மாக நடப்பிப்போம்.

### ௬௰௧. அதிகாரம்.

மேசியாவினாலே சபைக்குண்டாகும் பாக்
கியமான சீரும் மகிழ்ச்சியும்.

1 யெகோவாவாகிய தேவனுடைய ஆவி
யென்மேலிருக்கிறார். ஏனெனிற் சிறு
மையானவர்களுக்குச் சுவிசேஷத்தை அ
றிவிக்க யெகோவா என்னை அபிஷேகம்
பண்ணினார். இருதயந் நருங்குண்டவர்
களைக் காயங்கட்டவுஞ் சிறைப்பட்டவர்
களுக்கு விடுதலையையுங் கட்டுண்டவர்க
ளுக்குக் காவல் நீங்குதலையுங் கூறவும்,—
2 யெகோவாவுடைய பிரியத்தின் வருஷத்
தையும், நம்முடைய தேவன் நீதியைச் ச
ரிக்கட்டும் நாளையுங் கூறவுந், துயரப்பட்
ட அனைவரையுந் தேற்றரவுபண்ணவுஞ்,
சியோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்
ப்படுத்தவும் அவர் என்னை அனுப்பினார்.
3 —அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதி
லாகச் சிங்காரத்தையுந் துயரத்துக்கு

Digitized by Google

பதிலாகச் சந்தோஷத்தின் எண்ணெய்
யையும் ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத்
துதியினுடையையுங் கொடுப்பதற்கும்
அவர்கள் யெகோவாத் தம்முடைய மகி
மைக்கென்று நாட்டின நீதியின் விருட்
சங்களென்னப் படுவதற்குமாகத்தானே.
அவர்கள் சதாகாலமாய்ப் பாழாய்க் 4
கிடந்தவைகளைக் கட்டி, முந்தி நிர்மூல
மானவைகளை எடுப்பித்துத் தலைமுறை த
லைமுறையாய் இடிந்து கிடந்த பாழான
பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்க
ள்.—மறு சாதியார் நின்றுகொண்டு உங் 5
கள் மந்தைகளை மேய்த்து அன்னியபுத்
திரர் உங்கள் பண்ணையாட்களும் உங்க
ள் திராட்சத் தோட்டக்காரருமாயிருப்
பார்கள்.—நீங்களோ யெகோவாவின் ஆ 6
சாரியரென்றழைக்கப்படுவீர்கள். உங்க
ளை நமது தேவனுடைய ஊழியக்கார
ரென்பார்கள். நீங்கள் சாதிகளின் ஆஸ்தி
யைப் புசித்து அவர்கள் மகிமையாலே
மேன்மை பாராட்டுவீர்கள்.
உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இ 7
ரண்டத்தனையாய் வரும் இலச்சைக்குப்

Digitized by Google

பதிலாகத் தங்கள் வீதத்திலே கம்பீரிப்
பார்கள், அதின் நிமித்தியந் தங்கள் தேச
த்தில் இரட்டிப்பாகச் சுதந்தரிப்பார்கள்
நித்திய மகிழ்ச்சி அவர்களுக்குண்டாம்,
8 —ஏனெனில் யெகோவாவாகிய நாம் நி
யாயத்தைச் சிநேகித்துத் தகனப்பலியி
லே கொள்ளையைப் பகைக்கிறவர் நாம்.
அவர்கள் கிரியையை யுண்மையாக்கி அவ
ர்களோடே நித்திய உடன்படிக்கையை
9 ப்பண்ணுவோம். — அவர்கள் வித்துச்
சாதிகளிலும் அவர்கள் சந்தானங்கள் ச
னசதளங்களின் நடுவிலும் அறியப்பட்டி
ருக்கும். அவர்களைப் பார்க்கிற யாவரும்
அவர்களை யெகோவா ஆசீர்வதித்தவித்
10 தென்று அறிந்துகொள்ளுவார்கள்.—யெ
கோவாவுக்குட் பூரிப்பாய் மகிழுகிறேன்.
என் தேவனுக்குள் என் ஆத்துமங் களி
கூர்ந்திருக்கின்றது. ஏனெனில் மண
வாளன் ஆசாரியனடவாய்ச் சிங்காரித்து
க்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி தன்
ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்ளு
கிறதற்கும் ஒப்பாக அவர் இரட்சிப்பின்
வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின்

Digitized by Google

சால்வையை எனக்குத் தரித்தார்.—ஏ 11
னெனிற் பூமி தன் முளைகளைப் புறப்பட
ப்பண்ணுமாப்போலேயுந், தோட்டந் த
ன்னில் விதைக்கப்பட்டவைகளை முளைப்
பிக்குமாப்போலே யெகோவாவாகிய ஆ
ண்டவர் எல்லாச்சாதிகளுக்கு முன்பாக
நீதியையுந் துதியையும் முளைக்கப்பண்
ணுவார்.

---

## ௬௨. அதிகாரம்.

கிறிஸ்துவினுடைய சபையின் பாக்கியமும் பி
ரபலியமும்.

சீயோனின் நிமித்தியமும், யெருசலே 1
மின் நிமித்தியமும், நாம் மவுனப்படாம
லும் அதின் நீதி பிரகாசத்தைப்போலும்
அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப்
போலும் வெளிப்படுமட்டாக அமராம
லுமிருப்போம்.—சாதிகள் உன் நீதியை 2
யுஞ், சகல இராசாக்கள் உன் மகிமையை
யுங் காண்பார்கள் யெகோவாயிடும் புது
நாமமாய் அழைக்கப்படுவாய்.—நீ யெ 3
கோவாவுடைய கையில் அலங்காரமான
கிரீடமும் உன் தேவனுடைய கரத்தில்இ

Digitized by Google

4 ராசமுடியுமாயிருப்பாய்.—நீ இனி நெ
கிழப்பட்டவளென்னப்படாமலும், உன்
தேசம் இனிப் பாழானதென்னப்படாம
லும், இனி நாம் பிரியம் வைத்தவரென்
றும், உன் தேசம் வாழ்க்கைப்பட்டதெ
ன்றும் அழைக்கப்படுவதுண்டு, ஏனெ
னில் யெகோவா உன்மேற் பிரியம்வைக்
கிறார். உன் தேசம் வாழ்க்கைப்படும்.—
5 ஏனெனில் வாலிபன் கன்னியாஸ்திரியை
விவாகம்பண்ணுகிறதுபோல, உன் கு
மாரர் உன்னை விவாகம் பண்ணுவார்கள்,
மணவாளன் மணவாட்டியின்பேரில் மகி
ழ்ச்சியாயிருக்கிறதுபோல, உன் தேவன்
உன்பேரிலே மகிழ்ச்சியாயிருப்பார்.—
6 யெருசலேமே, உன் மதில்களின்மேற்
பகல் முழுதும் இராமுழுதும் ஒருக்கா
லும் மவுனமாயிராத சாமக்காரரைக் க
ட்டளையிடுகிறோம் யெகோவாவைப் பிர
ஸ்தாபம்பண்ணுகிறவர்களே, உங்களில்
7 அமரிக்கையில்லாதிருப்பதாக. — அவர்
எருசலேமைத் திடப்படுத்திப் பூமியி
லே புகழ்ச்சியாகவைக்குமட்டாக அ
வரை அமர்ந்திருக்கவொட்டாதிருங்கள்.

Digitized by Google

—இனி நாம் உன் சத்துருக்களுக்கு உ 8
ன் தானியத்தை ஆகாரமாகக்கொடோம்.
நீ பிரயாசப்பட்ட உன் கொடி முந்திரி
கைப்பழ இரசத்தை அன்னியபுத்திரர்கு
டிப்பதுமில்லையென்று யெகோவாத் த
மது வலது கரத்தில் பேரிலுந் தமது வ
ல்லமையினுடைய புயத்தின் பேரிலும்
ஆணையிட்டார்.—அதைச் சேர்ந்தவர்கள் 9
தானே அதைப் புசித்து யெகோவாவை
த் துதிப்பார்கள் அதைக் கூட்டி வைத்த
வர்கள்தானே அதை நமது பரிசுத்த ஸ்த
லத்தின் பிரகாரங்களிலே குடிப்பார்கள்.
வாசல்களாற் பிரவேசியுங்கள், பிரவே 10
சியுங்கள் சனத்துக்கு வழியைச் செவ்
வைப்படுத்துங்கள். பாதையை உயரமா
யுயர்த்துங்கள், அதைக் கற்பொறுக்கிச்
சனசதளங்களுக்குக் கொடியேற்றுங்கள்.
-இதோ உன் இரட்சிப்புவருகின்றது இ 11
தோ அவருடைய பலன் அவரோடும் அ
வருடைய கூலி அவர்முன்பாகவும் வருகி
ன்றதென்று நீங்கள் சீயோன் குமாரத்தி
க்குச்சொல்லுங்களென்பதை இதோ யெ
கோவா பூமியின் கடையாந்தரமட்டாக

Digitized by Google

12 க்கூறுகிறார்.—அவர்களைப் பரிசுத்தசன மென்றும் யெகோவாவால் மீட்கப்பட் டவர்களென்றும் அழைப்பார்கள். நீ யோவெனில் தேடிக்கொள்ளப் பட்ட தென்றும், நெகிழப்படாத பட்டணமெ ன்றும் அழைக்கப்படுவாய்.

---

## ௬௩. அதிகாரம்.

*கிறிஸ்து தமது சபையின் சத்துருக்களை ஆக் கினையிட்டு மிதிப்பது.*

1 ஏதோமிலும் அதிலுள்ள பொஸ்றாப ட்டணத்திலும் இருந்து சாயந்தீரப்பட் ட வஸ்திரங்களுடையவராகவும் மகத்து வமாய் உடுத்தியிருக்கிறவராகவுந் தமது மகா சத்துவத்திலே நடந்தேறுகிறவரா கவும் வருகிற இவரார்? நீதியாய்ப் பேசி
2 இரட்சிக்கவல்லவராகிய நாந்தானே,—உ ம்முடைய உடுப்புச் சிவப்பாகவும் உம் முடைய வஸ்திரங்கள் ஆலையை மிதிக்கிற வன் வஸ்திரங்களடவாகவும் இருக்கிறதே
3 து?—நாம் ஒருத்தராய் ஆலையை மிதித் தோம். சனசதளங்களில் ஒருத்தரும் ந ம்மோடிருந்ததில்லை. நாம் நம்முடைய

Digitized by Google

கோபத்திலே அவர்களை மிதித்து நம்மு
டைய உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்
போட்டோம். ஆனதுகொண்டு அவர்க
ள் இரத்தம் நமது வஸ்திரங்களின் மேலே
தெறித்து நமது உடுப்பையெல்லாங் க
றைப்படுத்திக்கொண்டோம்.—என்னி 4
ல் நீதியைச்சரிக்கட்டும் நாள் நம்முடை
ய மனதிலிருந்தது. நம்முடையவர்களை
மீட்கும் வருஷமும் வந்திருந்தது.—நாம் 5
பார்த்தோம் ஆனாலும் ஒத்தாசை செ
ய்கிறவனில்லை தாங்குகிறவனில்லையென்
றாச்சரியப்பட்டோம் ஆனதுகொண்டு
நமதுபுயமே நமக்கிரட்சிப்பாகி நம்மு
டைய உக்கிரமே நம்மைத்தாங்கிற்று.—
நாம் நமது கோபத்திலே சனசதளங்களை 6
மிதித்துப்போட்டு நம்முடைய உக்கிரத்
தில் அவர்களை வெறியாக்கி, அவர்கள் சார
த்தைத் தரையில் இறங்கப்பண்ணினோம்.

தள்ளுண்ட இஸ்ரவேல் சாதியார் பண்ணப்போ
கிற விண்ணப்பம்.

யெகோவா எங்களுக்குச் செய்தருளி 7
னதெல்லாத்துக்குந் தக்கதாகவும் அவர்
தம்முடைய இரக்கங்களின் படியேயும்

தம்முடைய திரளான தயவுகளின்படி
யேயும் இஸ்ரவேல் வீட்டாருக்குச்செய்
த மகா நன்மைக்குத்தக்கதாகவும் யெ
கோவாவுடைய கிரிகைகளையும், யெகோ
வாவுடைய துதிகளையும் பிரஸ்தாபம்ப
8 ண்ணுவேன்.-ஏனெனில் அவர்கள் நம்மு
முடைய சனந்தானென்றும், அவர்கள் க
படுசெய்யாதிருக்கப்போகிற பிள்ளைகள்
என்றுஞ்சொல்லி அவர்களுக்கிரட்சகரா
9 ஞர்.—அவர்களுடைய எல்லாநெருக்கத்
திலும் அவர் நெருக்கப்பட்டார். ஆன
துகொண்டு அவருடைய முகத்தின் தூ
தனானவர் அவர்களை இரட்சித்தார், அவ
ர் தமது அன்பின் நிமித்தியமுந் தமது
பரதாபத்தின் நிமித்தியமும் அவர்களை
மீட்டுப் பூருவநாட்களெல்லாம் அவர்க
ளைத் தூக்கிச் சுமந்துவந்தார்.
10 அவர்களோ கலகம்பண்ணி அவருடை
ய பரிசுத்த ஆவிக்கு நோக நடந்தார்கள்.
ஆகையால் அவர்களுக்குச் சத்துருவா
ய் மாறி அவரே அவர்களுக்கு விரோதமா
11 ய் யுத்தம்பண்ணினார்.—ஆகிலும் பூரு
வநாட்களையும், மோசேயையும், தம்மு


Digitized by Google

டைய சனத்தையும் நினைவுகூர்ந்தாரே. ஆ
னாலும் அவர்களையுந் தமது மந்தையி
ன் மேய்ப்பனையுஞ் சமுத்திரத்திலிருந்து
ஏறப்பண்ணினவர் இப்போதெங்கே?—
அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்த 12
ஆவியை இருக்கக் கட்டளையிட்டு அவர்க
ளை மோசேயின் வலதுபக்கத்திலுள்ள த
மது மகிமையின் புயத்தினாலே நடத்தி
த் தமக்கு நித்திய கீர்த்தியை உண்டாக்
க அவர்களுக்குமுன்பாகத் தண்ணீர்களை
ப் பிளந்து,—ஒரு குதிரை வனாந்தரவெ 13
ளியில் நடக்கும்போல அவர்களை ஆழங்க
ளில் இடறாதபடிக்கு நடக்கப்பண்ணின
வரெங்கே?—யெகோவாவுடைய ஆவி அ 14
வர்களைப் பள்ளத்தாக்கிலே போயிறங்கு
கிற மிருகஜீவன்களைப்போல இளைப்பா
றப்பண்ணினார். அப்படியே தேவரீர் ம
கிமையுள்ள கீர்த்தியையுண்டாக்க உம்மு
டைய சனத்தை நடத்தினீரே.
தேவரீர் பரமண்டலங்களிலிருந்து க 15
ண்ணோக்கி உம்முடைய பரிசுத்தமும் உ
மது மகிமையுமான வாசஸ்தலத்திலிரு
ந்து பாரும். உம்முடைய வயிராக்கியமும்

Digitized by Google

உம்முடைய வல்லமைகளுமெங்கே? உ
ம்முடைய குடல்களின் இரைபுதலும், உ
ம்முடைய மனவுருக்கமும் எனக்குமுன்
பாகத் தன்னை அடக்கிக்கொள்ளுகிறது.-
16 தேவரீர் எங்கள் பிதாவாமே, ஏனெனில்
ஆபிரகாம் எங்களை அறியான் இஸ்ரவேலு
க்கும் நாங்கள் அறியப்பட்டவர்களுமல்
ல, யெகோவாவே தேவரீர் எங்கள் பிதா
வும் எங்கள் மீட்பருந்தானே, இது பூரு
வகாலமுதல் உம்முடைய நாமம்.
17 யெகோவாவே தேவரீர் எங்களை உமது
வழிகளைத் தப்பிப்போகவிட்டு எங்கள் இ
ருதயத்தை உமக்குப் பயப்படாதபடிக்
குக் கடினப்படுத்துவானேன்? உம்முடை
ய ஊழியக்காரனின் நிமித்தியமும், உம்
முடைய சுதந்தரமான கோத்திரங்களின்
18 நிமித்தியமுந் திரும்பும்.—உம்முடைய
பரிசுத்தசனத்தைக் கொஞ்சக்குறைய சு
ந்தரமாக வசப்படுத்திக்கொண்டிருக்கி
றார்கள். எங்கள் சத்துருக்கள் உம்முடை
ய பரிசுத்தஸ்தலத்தை மிதித்துப் போ
19 ட்டார்கள்.-ஒருக்காலுந் தேவரீர் ஆண்டு

Digitized by Google

ளாதவர்களைப்போலும், உமதுநாமம்
விளங்காதவர்களைப்போலுமானோம்.

---

## ௬௪. அதிகாரம்.

*அப்பாலும் அவர்களுடைய விண்ணப்பம்.*

ஆ! உமது நாமத்தைச் சத்துருக்களு 1
க்கு அறியப்பண்ணுவதற்குஞ் சாதிகள்
உம்முடைய சன்னிதிக்கு முன் தத்தளிப்
பதற்குமாக,—தேவரீர் வானங்களைக் கி ௨
ழித்திறங்கி உருக்குகிற அக்கினி எரியுமா
ப்போலேயும் அக்கினி தண்ணீரைப் பொ
ங்கப்பண்ணுமாப்போலேயும் பருவதங்
கள் உமக்கு முன்பாகக் கரைந்தால் நல்ல தா
யிருக்கும் —நாங்கள் வரப்பார்த்திராத பயங் 3
கரமான காரியங்களைத் தேவரீர் செய்து
இறங்குகிற போது உமக்கு முன்பாக
ப் பருவதங்கள் கரைந்தது போலேதா
னே.-தேவனே உமக்குக் காத்திருக்கிறவ 4
ர்களுக்கு நீர் செய்பவைகளைத் தேவரீரை
யல்லாமல் லோகத்தோற்ற முதற்கொண்
டு ஒருத்தருங் கேட்டதுமில்லைச் செவி
ால் உணர்ந்ததுமில்லை அவைகளைக் க

Digitized by Google

5 ண்டாகுமில்லை.— மகிழ்ச்சியாய் நீதியை
ச் செய்கிறவர்களையும் உம்முடையவழி
களில் உம்மை நினைக்கிறவர்களையுஞ் சந்
தித்தீர், நாங்களோ இதோ அவைகளுக்கு
விரோதமாகச் சதாகாலமும் பாவஞ்செ
ய்தபடியினாலே தேவரீர் கடுங்கோபம
டைந்தீர், இன்னந் தப்பியும் இருக்கிறோ
6 ம்,— ஆனாலும் நாங்கள் அனைவருந் தீட்
டானவனைப்போலிருக்கிறோம். எங்களு
டைய நீதிகளெல்லாந் தீட்டானவஸ்திரத்
தைப்போலும் இருக்கின்றது, நாங்கள் அ
னைவரும் இலைகளைப் போல உதிருகிறோ
ம் எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போ
ல எங்களை அடித்துக்கொண்டுபோம்,—
7 உமது நாமத்தைநோக்கிக் கூப்பிடுகிறவ
னும் உம்மைப் பற்றிக்கொள்ளும்படி வி
ழித்துக்கொள்ளுகிறவனுமில்லை, ஏனெ
னில் தேவரீர் உம்முடைய முகத்தை எ
ங்களை விட்டு மறைத்து எங்களை எங்கள்
அக்கிரமங்களின் நிமித்தியங் கரையப்ப
8 ண்ணுகிறீர்.— இப்போதும் யெகோவா
வே தேவரீர் எங்களுடைய பிதா. நாங்க
ள் களிமண், தேவரீர் எங்களை உருவாக்

திறவர் நாங்கள் அனைவரும் உமது கரத்
தின் கிரியைதானே.
யெகோவாவே இத்தனையாய்க் கடுங் 9
கோபம் வைத்துக்கொண்டிராமலும் எ
ன்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக்
கொள்ளாமலும் இருப்பீராக, இதோ
நாங்கள் அனைவரும் உம்முடைய சனமெ
ன்று பாருமே.— உமது பரிசுத்தபட்ட
ணங்கள் வனாந்தரமாயிற்று, சீயோன் வ 10
னாந்தரமாயிற்று. எருசலேம் பாழாய்க்
கிடக்கின்றது.-எங்கள் பிதாக்கள் உம்மை
த் துதித்த எங்களுடைய பரிசுத்தமும் எ 11
ங்கள் மகிமையுமான வீடு அக்கினிக்கிரை
யாகி இச்சிக்கப்படத்தக்க எங்களுடைய
தானங்கள் எல்லாம் பாழாயிற்று.—யெ 12
கோவாவே இவைகள் இப்படியிருந்தும்
அடக்கிக்கொண்டிருப்பீரோ? மவுனமா
ய் இருந்து இத்தனையாய் எங்களைச் சிறு
மைப்படுத்துவீரோ?

---

## ௬௫. அதிகாரம்.

குணப்படாதவர்களின் நிற்பாக்கியத்தையுங்குண
ப்பட்டவர்களின் பாக்கியத்தையுங் காட்டினது.

[illegible] விசாரித்துக்கேளாதிருந்தவ 1

Digitized by Google

ர்களால் தேடப்பட்டோம். நம்மை
த் தேடாதிருந்தவர்களாற் கண்டுபிடிக்க
ப்பட்டோம், நம்முடைய நாமம் விளங்
காதிருந்த சாதியுடனே இதோ, இங்கே
2 இருக்கிறோமென்கிறோம்.—நலமல்லாத
வழியிலே தங்கள் நினைவுகளைப் பின்பற்
றி நடக்கிற முரட்டாட்டமான சனத்த
ண்டைக்கு நாள் முழுதும் நம்முடைய
3 கைகளை நீட்டினோம். - நம்முடைய சன்
னிதியிலே நித்தம் நமக்குக் கோபமுண்
டாக்கித் தோப்புகளிலே பலியிட்டுச் செ
4 ங்கல்களின்மேல் தூபங்காட்டி,-பிரேதக்
குழிகளண்டையில் உளுக்கார்ந்து பாழ்
த்தலங்களில் இராத்தங்கிப் பன்றி இறை
ச்சியைத் தின்று தங்கள் பாத்திரங்களில்
அருவருப்பான சீவன்களின் ஆணத்தை
5 வைத்திருந்து,-நீ உன் மடியிலிரு என்ன
ண்டைக்குச் சேராதே, உன்னைப்பார்க்கி
லும் பரிசுத்தனாய் இருக்கிறேனென்கிற
சனத்தண்டைக்குத்தானே இவர்கள் நம்
முடைய கோபத்திலே புகையும் நாளெ
ல்லாம் எரிகிற அக்கினியுமாயிருப்பார்க
6 ள்.—இதோ அது நமக்கு முன்பாக எ

Digitized by Google

தியிருக்கிறது நாம் மவுனமாயிராமற் சரி
க்குச் சரிகட்டுவோம், அவர்கள் மடியிலே
சரிக்கட்டுவோம். — உங்கள் அக்கிரமங்க 7
ளுக்கும் மலைகளில் தூபங்காட்டி, மே
டைகளில் நம்மை நிந்தித்த உங்கள் பிதா
க்களுடைய அக்கிரமங்களுக்குக் கூடத்
தானே, நாம் அவர்கள் முந்தினசெய்கையி
ன்பலனை அவர்கள் மடியிலே அளப்போ
மென்று யெகோவாச் சொல்லுகிறார்.
யெகோவா சொல்லுகிறதாவது ஒரு தி 8
ராட்சக் குலையில் இரசங் காணப்படும்
போது அதை அழியாதே, ஏனெனில்
அதிலே ஆசீர்வாதமுண்டென்று சொல்
லப்படுகிறபடி, நாம் நமது ஊழியக்கா
ரரின் நிமித்தியமாக அனைத்தையும் அழி
யாதபடிக்குச் செய்து, — யாக்கோபிலி 9
ருந்து ஒரு வித்தையும், யூதாவிலிருந்து
நம்முடைய பருவதங்களைச் சுதந்தரிப்
பவரையும் எழும்பப்பண்ணுவோம், நா
ந் தெரிந்துகொண்டவர்கள் அதைச் சுத
ந்தரித்துக்கொண்டு நம்முடைய ஊழி
யக்காரர் அங்கே வாசம்பண்ணுவார்கள்.
— நம்மைத் தேடுகிற நமது சனத்துக் 10

Digitized by Google

குச் சாரோன் ஆட்டுத் தொழுவமாகவும்,
ஆகோரின் பள்ளத்தாக்கும் ஆட்டுக்கி
டையாகவுமிருக்கும்.
11 ஆனாலும் யெகோவாவைவிட்டு நமது
பரிசுத்த பருவதத்தை மறந்து, காதெ
ன்றதற்குப் பந்தியை ஆயத்தம்பண்ணி,
மேனியென்றதற்கு ஊற்றுதலை நிறைப
12 வார்க்கிறவர்களே,— உங்களைநாம் பட்
டயத்துக்குக்கெண்ணிக் கொடுப்போ
ம், நீங்கள் அனைவருங் கொலைப்படக் கு
னிவீர்கள். ஏனென்றால் நாங் கூப்பிட்டு
ம் நீங்கள் மறுவுத்தரவு சொல்லாமலும்
நாம் பேசியும் நீங்கள் கேளாமலிருந்து,
நம்முடையபார்வைக்குப் பொல்லாங்கா
னதைச் செய்து, நமக்குப் பிரியமாயிரா
13 ததைத் தெரிந்துகொண்டீர்கள்.— ஆன
படியினாலே யெகோவாவாகிய ஆண்டவ
ர் சொல்லுகிறதாவது, இதோ, நம்முடை
ய ஊழியகாரர் புசிப்பார்கள், நீங்க
ளோ பசியாய் இருப்பீர்கள். இதோ,நம்
முடைய ஊழியக்காரர்குடிப்பார்கள். நீ
ங்களோ தாகமாயிருப்பீர்கள், இதோ, ந
ம்முடைய ஊழியகாரர் சந்தோஷிப் ப

Digitized by Google

டுவார்கள், நீங்களோ வெட்கப் படுவீர்க
ள். —இதோ நம்முடைய ஊழியக்காரர் 14
மனத் திடனாலே கம்பீரிப்பார்கள், நீங்
களோ மன நோவினாலே கூப்பிட்டு, ஆ
வியின் முறிவினாலே அலறுவீர்கள். —நா 15
ந் தெரிந்துகொண்டவர்களுக்கு நீங்கள்
உங்கள் நாமத்தைச் சாபப்பிரமாணமா
கப் பின்வைத்துப் போவீர்கள் யெகோ
வாவாகிய ஆண்டவர் உன்னைக்கொன்று
போட்டுத் தம்முடைய ஊழியக்காரருக்
கு வேறே நாமத்தைத்தரிப்பார். —ஆன 16
துகொண்டு, பூமியிலே தன்னை ஆசீர்வதி
க்கிறவன் சத்தியதேவன்பேரிலே ஆணையி
டுவான், ஏனெனில் முந்தின இடுக்கண்க
ள் மறக்கப்பட்டு அவைகள் நமது கண்
களுக்கு மறைந்துபோய்விட்டது.
ஏனெனில் இதோ, நாம் புதுவானத் 17
தையும் புதுப் பூமியையும் சிருஷ்டிக்கி
றோம், முந்தினவைகள் இனி நினைக்கப்ப
டுவதுமில்லை மனதில் கிளம்புவதுமில்லை.
— நாஞ் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் எ 18
ன்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்
கள், ஏனெனில் இதோ, யெருசலேமை

Digitized by Google

களிகூருதலுண்டாகவும், அதின் சனத்
தை மகிழ்ச்சியுண்டாகவும் சிருட்டிக்கி
19 றேம்.—நாம் யெருசலேமின்மேற் க
ளிகூர்ந்து,நமது சனத்தில்மேல் மகிழ்ச்
சியாயிருப்போம். அழுகையின் சத்தமுங்
கூக்குரலின்சத்தமும் அதில் இனிக் கேட்
20 கப்படுவதுமில்லே. — அங்கேயினிக்கொ
ஞ்ச நாள்மட்டிருக்கும் பாலகனுந் தன்
நாட்களே நிறைவேற்ருத கிழவனுமுண்
டாயிராமல், சாகிறவாலிபன் நூறுவயது
ள்ளவனுயிருப்பான், நூறுவயதுள்ளபா
21 வியோ சபிக்கப்படுவான். —வீடுகளேக்க
ட்டி அவைகளிற் குடியிருப்பார்கள் தி
ராட்சத் தோட்டங்களே நாட்டி, அவைக
22 ளின் கனியையும் புசிப்பார்கள். —அ
வர்கள் கட்டுகிறதும் வேருெருத்தர் கு
டியிருக்கிறதும் அவர்கள் நாட்டுகிறதும்
வேருெருத்தர் கனி புசிக்கிறதுமாயி
ருப்பதில்லே. ஏனெனில் விருட்சத்தின்நா
ட்களேப் போலே நமதுசனத்தின் நாட்
களிருக்கும், நாற் தெரிந்துகொண்டவர்
கள் தங்கள் கைகளின்கிரியைகளே அவை
கள் பழசாய்ப் போகுந்தனிலும் அநு

Digitized by Google

பலிப்பார்கள். —அவர்கள் விருதாவாக 23
உழைப்பதில்லை அவர்கள் கலங்கலாகப்
பிள்ளைகளைப் பெறுவதுமில்லை எனெனி
ல் அவர்களும் அவர்களோடேகூட அவர்
கள் சந்தானமும் யெகோவாத் தெரிந்து
கொள்ளப்பட்ட வித்தாயிருப்பார்கள்.
—சம்பவிப்பதேதெனில், அவர்கள் கூப் 24
பிடுகிறதுக்குமுன்னே நாம் மறுவுத்தர
வுகொடுப்போம். அவர்கள் இன்னம் பே
சக்கொள்ள நாங்கேட்போம். — ஓநாயு 25
ம் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்,
சிங்கம் மாட்டைப்போலே வைக்கோலை
த்தின்னும், தூள் சருப்பத்தினுடையபோ
சனமாயிருக்கும் நம்முடைய பரிசுத்த
பருவதமெங்கும் தீங்குசெய்வதுமில்லை
கேடுண்டாக்குவதுமில்லையென்று யெ
கோவாச் சொல்லுகிறார்.

---

## சாசா. அதிகாரம்

யூதருடைய புறம்பான தேவ ஆராதனை தள்ளப்படுவது.

யெகோவா சொல்லுகிறதாவது, பர 1
மண்டலங்கள் நம்முடைய ஆசனமும்
பூமி நம்முடைய பாதபடியுமாய் இருக்

Digitized by Google

கக்கொள்ள நீங்கள் நமக்குக் கட்டும் வீ
டெப்படிக்கொத்ததும் நாந் தாபரிக்கு
ம் இடம் எப்படிக்கொத்ததுமாயிருக்கு
2 ம்.-நம்முடைய கரம் இவைகளையெல்லா
ம் படைத்ததினால் இவைகளெல்லாம் உ
ண்டாயிற்றேயென்று யெகோவாச் சொ
ல்லுகிறார். ஆனாலும் சிறுமைப்பட்டு ஆ
வியில் நொறுங்குண்டு நமது வசனத்து
க்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்
3 போம்.– மாட்டைக் குரவளையறுக்கிறவ
ன் மனுஷனை வெட்டுகிறவனாகவும், ஆட்
டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்த
றுக்கிறவனாகவும், காணிக்கையைப் படை
க்கிறவன்பன்றியிரத்தத்தைப் படைக்கிற
வனாகவும், நினைப்புண்டாகத் தூபங்காட்
டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்திரிக்கி
றவனாகவுமிருக்கிறான், இவர்களுந் தங்க
ளுடைய வழிகளைத் தெரிந்துகொள்ளுகி
றார்கள் இவர்களுடைய ஆத்துமந் தங்க
ள் அருவருப்புகளின் பேரிலே விருப்பமு
4 மாயிருக்கின்றது.-நாமும் அவர்கள் பரி
காசங்களுக்குத்தக்கதைத் தெரிந்துகொ
ண்டு அவர்களுக்குத்தக்க திகில்களை அ


Digitized by Google

யர்கள்மேல் வரப்பண்ணுவோம், நாங்
கூப்பிட்டாலும் மறுஉத்தரவு கொடுக்கி
றவன் இல்லாமலும் நாம் பேசினாலும் அ
வர்கள் கேளாமலும் அவர்கள் நமது பா
ர்வைக்குப் பொல்லாங்கானதைச் செய்
து நாம் விரும்பாததைத் தெரிந்துகொ
ண்டதின் நிமித்தியமாகத்தானே.
யெகோவாவுடைய வசனத்துக்கு நடு 5
ங்குகிறவர்களே, அவருடைய வார்த்தை
யைக்கேளுங்கள், உங்களைப் பகைத்தநம்
முடைய நாமத்தின் நிமித்தியம் உங்களைத்
தூரப்படுத்துகிற உங்கள் சகோதரர் யெ
கோவா மகிமைப்படுவாராகவென்கிறார்க
ளே, ஆனாலும் அவர் உங்கள் சந்தோஷத்
துக்காகக் காணப்படுவார். அவர்களோ
வெட்கப்படுவார்கள்.-பட்டணத்திலிருந் ௬
து அமளியின் இரைச்சலுந் தேவாலயத்தி
லிருந்து சத்தமுங் கேட்கப்படுந் தம்மு
டைய சத்துருக்களுக்குச் சரிக்குச்சரிகட்
டுகிற யெகோவாவுடைய சத்தந்தானே.

மெய்ச்சபை பிரபலியமாவதும், அதைத்தடு
த்த சத்துருக்கள் ஆக்கினைசெய்யப்படுவதும்.

அம்பாயப்படாததுக்கு முன்பெற்று 7

ள். அவளுக்கு வேதனைவராததுக்குமுன்
8 அவள் ஆண்பிள்ளையைப் பெற்றாள்.—இ
ப்படிக்கொத்ததைக் கேட்டதார்? இப்ப
டிக்கொத்ததைக் கண்டதார்? ஒரேநாளி
லே ஒரு தேசத்துக்குப் பிள்ளைப்பேறு
வருமோ? ஒருமிக்க ஒருசாதி பிறக்கு
மோ? சீயோனோவெனில் ஒருமிக்க வே
தனைப்பட்டுந் தன் குமாரரைப் பெற்று
9 மிருக்கிறது.- பெறப்பண்ணுகிறவராகிய
நாம் பெறுதிருப்போமோவென்று யெ
கோவாச் சொல்லுகிறார்.பிறக்கப்பண்ணு
கிறவராகிய நாம் அடைபட்டிருப்போ
மோவென்று உன் தேவன் சொல்லுகிறா
10 ர்.—எருசலேமைச் சிநேகிக்கிற நீங்கள் எ
ல்லாரும் அத்தோடே கூடச் சந்தோஷி
ப்பட்டு, அத்தாலே களிகூருங்கள். அதி
னுடைய நிமித்தியந் துக்கித்திருந்த நீங்க
ள் எல்லாரும் அத்தோடே கூட மிகவும்
11 மகிழுங்கள்.—நீங்கள் அதினுடைய ஆறு
தல்களின் முலைப்பாலை உண்டு திருத்தியா
கவும், நீங்கள் சூப்பிக்குடித்து, அதினு
டைய மகிமையின் மினுக்கினால் மனமகி
12 ழ்ச்சியாகவுந்தானே.-ஏனெனில் யெகோ

Digitized by Google

வாச் சொல்லுகிறதாவது, இதோ, நாஞ்
சமாதானத்தை ஒரு நதியைப் போலவு
ஞ், சாதிகளின் மகிமையைப் புரண்டோ
டுகிற ஆற்றைப்போலவும் அதினிடமாகப்
பாய்ச்சுகிறேரும். அப்பொழுது முலையுண்
பீர்கள். நீங்கள் பக்கத்திலே சுமக்கப்படு
வீர்கள். முழங்கால்களில் வைக்கப்பட்டு
மனமகிழ்ச்சியாக்கப்படுவீர்கள்.—ஒருத் 13
தனை அவன் தாய் தேற்றரவுபண்ணுமாப்
போலே நாம் உங்களைத் தேற்றரவுபண்
ணுவோம். நீங்கள் யெருசலேமைத்தொ
ட்டுத் தேற்றப்படுவீர்கள்.-நீங்கள் அதை 14
க் காண்பீர்கள். உங்கள் இருதயம் மகிழ்ந்
து,உங்கள் எலும்புகள் பச்சைமுளையைப்
போலச் செழிக்கும். அப்பொழுது யெ
கோவாவுடைய ஊழியகாரரிடத்தில் அவ
ருடைய கரமும் அவருடைய சத்துருக்க
ளிடத்தில் அவருடைய சினமும் அறியப்
படும்.—ஏனெனில் இதோ, தம்முடைய 15
கோபத்தை யுக்கிரமாகவுந் தம்முடைய
உதம்புதலை அக்கினிச் சுவாலைகளாகவும்
மாறப்பண்ண யெகோவா அக்கினியோ
டே வருவார். அவருடைய இரதங்கள் பெ

16 ருங்காற்றைப்போல வரும்.—ஏனெனில்
யெகோவா அக்கினியாலுந் தமது பட்
டயத்தாலும் எல்லா மாம்சத்தோடும்
நியாயத்துக்குட் பிறவேசிப்பார். யெ
கோவாவாற் கொலையுண்டவர்கள் அநே
17 கராயிருப்பார்கள்.—தங்களைத்தானே ப
ரிசுத்தமாக்குகிறவர்களுந், தோப்புகளின்
நடுவிலே தங்களைத்தானே ஒருத்தரின் பி
றகாலே ஒருத்தராய்ச் சுத்திகரிக்கிறவர்க
ளும், பன்றி இறைச்சியையும் அருவருப்
பானதையும் எலிகளையுஞ் சாப்பிடுகிறவ
ர்களும் ஏகமாய்ச் சங்கரிப்படுவார்களெ
18 ன்று யெகோவாச் சொல்லுகிறார்.—நாம்
அவர்கள் கிரியைகளையும் அவர்கள் நினை
வுகளையும் அறிவோம். நாஞ் சகல சாதி
யாரையும் பாஷைக்காரரையுங் கூட்டிச்
சேர்க்குங் காலம் வரும். இவர்கள் வந்து
நம்முடைய மகிமையைக் காண்பார்கள்.
19 —நாம் அவர்களில் ஒரு அடையாளத்
தைக் கட்டளையிட்டு, அவர்களில் தப்பி
னவர்களை நம்முடைய கீர்த்தியைக் கே
ளாமலும் நம்முடைய மகிமையைக்
காணாமலுமிருக்கிற சாதிகளின் தேசங்க

Digitized by Google

ளாகிய தர்சீசுக்கும் வில்காரரிருக்கிற பூ
லுக்கும், லூதுக்கும், தூபாலுக்கும், யா
வானுக்குந், தூரத்திலுள்ள தீவுகளுக்கும்
அனுப்புவோம். அவர்கள் நமது மகிமை
யைச் சாதிகளுக்குள்ளே அறிவித்து,—
உங்களுடைய எல்லாச் சகோதரரையுஞ் 20
சகல சாதிகளிடத்திலுமிருந்து குதிரைக
ளின்மேலும்,இரதங்களின்மேலுங், குலா
ரி பண்டிகளின் மேலுங், கோவேறுகழு
தைகளின்மேலும், வேகமான ஒட்டகங்
களின்மேலும் எருசலேமிலுள்ள நம்மு
டைய பரிசுத்த பருவதத்துக்கு யெகோ
வாவுக்குக் காணிக்கையாகக் கொண்டுவரு
வார்கள். இஸ்ரவேற்புத்திரர் காணிக்கை
யைச் சுத்தமான பாத்திரங்களில் யெ
கோவாவுடைய வீட்டுக்குக்கொண்டுவரு
கிறதற்குச் சமானமாகத்தானேயென்று
யெகோவா சொல்லுகிறார்.—அவர்களி 21
லுஞ் சிலரை ஆசாரியர்களாகவும் லேவி
யராகவும் எடுப்போமென்று யெகோ
வா சொல்லுகிறார்.—ஏனெனில் நாம் ப 22
டைக்கப்போகிற புதுவானமும், புதுப்
பூமியும்

Digitized by Google

றவைகளாயிருக்குமோ அப்படியுங்கள் வி
த்தும் உங்கள் நாமமும் நிற்குமென்று
23 யெகோவா சொல்லுகிறார்.—சம்பவிப்ப
தேதெனில் மாசத்துக்குமாசமும் ஓய்வு
நாளுக்கோய்வுநாளும் எல்லாமாம்சமு
ம் நமக்குமுன்பாகப் பணியவருமென்
24 று யெகோவா சொல்லுகிறார்.—அவர்க
ள் வெளியேபோய் நமக்கு விரோதமாய்
ப் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரே
தங்களைப் பார்ப்பார்கள். ஏனெனில் அவ
ர்களுடையபூச்சி சாகாமலும் அவர்களு
டைய அக்கினி அவியாமலுமிருக்கும்,
அவர்கள் எல்லா மாமசத்துக்கும் அரோ
சியமாயிருப்பார்கள்.

---

முற்றிற்று.

Digitized by Google